சிவாகம கட்டுரைத் திரட்டு

(ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரி)

(பாகம்-5)

வெளியீடு
சிவாசார்யர் அறக்கட்டளை
207/101, தம்பு செட்டி தெரு, சென்னை-1

CENTRE FOR SHAIVA STUDIES

உ
காளிகாம்பாள் துணை

சிவாகம கட்டுரைத் திரட்டு

(பாகம்-5)

2011-ம் ஆண்டின்
சைவாகம சிறப்புச் சொற்பொழிவுகள்
(6 ஆய்வாளர்களின் கட்டுரைத் தொகுப்பு)

வெளியீடு
சிவாசார்யர் அறக்கட்டளை - சென்னை-1.
சிவஸ்ரீ ஸாம்பமூர்த்தி சிவாசார்யார் டிரஸ்ட் - சென்னை-1.

தொகுப்பாசிரியர்
ஆகம ப்ரவீணர், வ்யாகரண சிரோமணி, சைவாகமக்ஞ சூடாமணி, சைவாகம வித்வான், வ்யாகரண விசாரதா, சிவாகம ஸார்வபௌம:, சிவஸம்வித் ஸபர்யா பாராவாரீணர், சிவாகம அருட்செல்வர், ஸம்ஸ்க்ருத சேவாரத்தினம், சிவாகம வாசஸ்பதி, வாஸ்து வித்தகர், சைவாகமஸ்ரீ: , ஆகம கல்பத்ரும:, ஆகம வித்தகர், சிவாகம வித்யாரத்னம், சாக்தயாக சாம்ராட், வைதிகசைவ ரக்ஷாமணி, சிவபாத பத்மபூஷணம், சிவாகமக் கலாநிதி, சைவாகம துரந்தர:, சைவாகம பரீக்ஷாதிகாரீ, யாக ஸர்வஸாதக திலகம், சாஸ்தா உபாஸகர், அகோரசிவம் என்கிற
சிவஸ்ரீ. விஜய. சோமசேகர சிவாசார்யார் M.A.,
குருமுதல்வர். சைவாகம கலாசார வித்யாகேந்திரம், சென்னை-1.

சென்னை 1 தம்புசெட்டித்தெரு புது எண் 207ல் இயங்கிவரும் சைவாகம கலாசார வித்யாகேந்திரத்தில் சிவாசார்யர் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசார்யர் பவுண்டேஷன் இணைந்து மாதந்தோறும் நடத்திவந்த சிவாகம சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சிகளில் 2011ம் ஆண்டில் ஆகம அறிஞர்களால் அளிக்கப்பட்ட சிவாகம கட்டுரைகளைத் தொகுத்து லோகோபகாரகமாய் சென்னையில் 25.12.2011-ல் நடத்தப்பட்ட சிவாகமவித்வத்சதஸ் மற்றும் சிவாகம் கலாசாரதீபிகோத்ஸவத்தில் கட்டுரையாளர்களுக்கு சிவாகம வாசஸ்பதி எனும் விருதளித்துப் பாராட்டி இந்நூல் வெளியிடப்பட்டது.

CENTRE FOR SAIVA STUDIES

நூல் வெளியீட்டுக் குறிப்பு

நூலின் பெயர்	: ஆகமார்த்த ப்ரபந்த மஞ்ஜரீ (பாகம்5) (சிவாகம கட்டுரைத் திரட்டு பாகம்-5)
நூலின் மொழி	: தமிழ் மற்றும் சமஸ்கிருதம்
நூலின் எழுத்து	: தமிழ் மற்றும் தேவநாகரி
நூலின் அளவு	: 8.5 X 5.5 inch
நூலின் எண்ணிக்கை	: 100
வெளியீடு வரிசை எண்	: 4
நூலின் பதிப்பு எண்	: முதற்பதிப்பு
தொகுப்பு ஆசிரியர் நூல் வடிவமைப்பு	: சிவஸ்ரீ வி. சோமசேகர சிவாசார்யார்
நூல் உரிமை	: சிவஸ்ரீ டி. எஸ். காளிதாஸ் சிவாசார்யார்
நூலின் பக்கங்கள்	: 182 பக்கங்கள்
வெளியீட்டு நாள்	: 13.07.2014
அச்சிட்டோர் சௌமியா	: ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை 14
கணிணி பதிவு அச்சகம்	: ராஜம்ஸ் டிஜிட்டல், சென்னை 14
வெளியீடு	: மேதா சக்ரிணீ கோஷ்டம்
தொகுத்த நிறுவனம்	: சிவாசார்யார் அறக்கட்டளை
வெளியிடுவோர்	: சிவஸ்ரீ தி.ஸா. ஸ்வாமி சதாசிவோம் சிவஸ்ரீ தி.ஸா. காளிதாஸ் சிவாசார்யர் சிவஸ்ரீ தி.ஸா. ஷண்முக சிவாசார்யர்
புத்தகத்தின் விலை	: **விலை ரூ.200/-**
புத்தகம் கிடைக்கும் இடம்	: அறக்கட்டளை & நூலாசிரியர்அகம்.
நூலைபெறத் தொடர்புக்கு	: 98402 99352 | 99402 01849

உரிமை : © இந்த புத்தகத்திலுள்ள எந்த ஒரு பகுதியையும் நூலாசிரியர் அனுமதியை எழுத்து மூலம் பெறாமல் பதிப்பிக் கூடாது.

Copyright © All reserved including the rights of reproduction in whole or in part in any form.

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள்

CENTRE FOR SAIVA SIDDHANTA STUDIES

ஞானதீப நமஸ்காரம்

(காலை மாலை இருவேளையும், தீபம்ஏற்றிவைத்து, இந்த ஸ்லோகத்தைக் கூறி நமஸ்காரம் செய்தால் சகல ஸௌபாக்யங்களும் ஏற்படும்.)

ஸுவர்ண வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
ஸுதான்ய வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
கல்யாண வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:
விபூதி வ்ருத்திம் குரு மே க்ருஹே ஸ்ரீ:

***

சுபம் பவது கல்யாணி! ஆயு ராரோக்ய ஸம்பத: |
சத்ருபுத்தி விநாசாய தீபஜ்யோதிர்! நமோ(அ)ஸ்து தே ||

***

கோமாதா ஸ்துதி. (பசுவணக்கத் துதிகள்)

இந்த அபூர்வமான ஸ்தோத்திரத்தைச் சொல்லி கோபூஜையைச் செய்து, பிரதக்ஷிணம் செய்தால், அளவற்ற புண்யங்களும், சகலபாக்யங்களும் ஏற்படும். இதனைக்கூறிப் பணிந்து வாசகர்கள் பயன்பெற வேண்டும்.

நமோ தேவ்யை மஹாதேவ்யை ஸுரப்யை ச நமோ நம:.
கவாம் பீஜ ஸ்வரூபாயை நமஸ் தே ஜகதம்பிகே. 1

நமோ ராதா ப்ரியாயை ச பத்மாம்சாயை நமோ நம:.
நம: கிருஷ்ண ப்ரியாயை ச கவாம் மாத்ரே நமோ நம:. 2

கல்பவ்ருக்ஷ ஸ்வரூபாயை ஸர்வேஷாம் ஸந்ததம் பரம்:
ஸ்ரீதாயை தனதாயை ச வ்ருத்திதாயை நமோ நம: 3

சுபதாயை ப்ரஸன்னாயை கோபதாயை நமோ நம:.
யசோதாயை கீர்த்திதாயை தர்மக்ஞாயை நமோநம:. 4

இதம் ஸ்தோத்ரம் மஹத்புண்யம் பக்தியுக்தச்ச யப்படேத்.
ஸ கோமான் தனவான் சைவ கீர்திமான் புத்ரவான் பவேத். 5

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry



ப்ராதஸ்மரணம் (காலைஇறைவணக்கம்)

ப்ராதர் நமாமி கணநாத மநாத பந்தும் –
சிந்தூர பூர பரிசோபித கண்ட யுக்மம் |
உத்தண்ட விக்ன பரிகண்டன சண்டதண்டம் –
ஆகண்டலாதி சுரநாயக ப்ருந்த வந்த்யம் || 1

ப்ரஹ்மா முராரிஸ் த்ரிபுராந்தகாரி –
பானுஸ் சசீ பூமி சுதோ புதஸ் ச |
குருஸ் ச சுக்ரஸ் சனி ராகு கேதவ: –
குர்வந்து ஸர்வே மம சுப்ரபாதம் || 2

ப்ராதஸ் ஸ்மராமி சரதிந்து கரோஜ்வலாபாம் –
ஸத்ரத்னவன் மகர குண்டல ஹாரபூஷாம் |
திவ்யா யுதோர்ஜித ஸுநீல ஸஹஸ்ர ஹஸ்தாம் –
ரக்தோத்பலாப சரணாம் பவதீம் பரேசாம் || 3

ப்ராதர் நமாமி மஹிஷாஸுர சண்டமுண்ட –
சும்பாஸுர ப்ரமுக தைத்ய விநாச தக்ஷாம் |
ப்ரஹ்மேந்த்ர ருத்ர முனி மோஹநசீல லீலாம் –
சண்டீம் ஸமஸ்த ஸுரமூர்த்தி மனேக ரூபாம் || 4

ப்ராதர் பஜாமி பவதா மபிலாஷ த^{3}த்ரீம் –
த^{4}த்ரீம் ஸமஸ்த ஜகதாம் துரிதாப ஹந்த்ரீம் |
ஸம்ஸார ப^{3}ந்தன விமோசன ஹேது பூதாம் –
மாயாம் பராம் ஸமதி^{4}கம்ய பரஸ்ய விஷ்ணோ: || 5

சைவாகம பத்ததிகளின் ஆசார்ய வந்தனம்



18பத்ததி ஆசார்ய ப்ரணதி: ஸ்ரீ குருப்யோ நம:

தூர்வாஸாப் பிங்களஸ் சைவ உக்ரஜ்யோதிஸ் ஸுபோதக:.
ஸ்ரீகண்டோ விஷ்ணுகண்டஸ் ச வித்யாகண்டஸ் ததைவ ச.
ராமகண்டோ ஞானசிவோ ஞானசங்கர ஏவச.
ஸோம சம்புர் ப்ரம்ம சம்புஸ் த்ரிலோசன சிவஸ் ததா.
அகோர சிவ ஏவா(அ)த ப்ராஸாத சிவ ஏவச.
ராமநாத சிவஸ் சைவ ஈசான சிவ ஏவச.
வாருணாக்ய சிவஸ் சைவா(அ)ஷ்டாதசா சார்ய புங்கவா:.
ஏதைர் திவ்யைர் சிவாசார்யைர் பத்ததிப் பரிபாஷிதா.
தேப்யோ நித்யம் நமோ திவ்ய தேசிகேந்த்ரேப்ய ஏவச.
ஸித்தாந்த மார்க்க தர்சிப்யோ ஆசார்யேப்யோ (அ)ஸ்து மே நதி:.

பக்தசுந்தரமூர்த்திஸ்தவ:- கேயூர குண்டல கிரீட விபூஷி தாங்கம் -
ஹஸ்தோத்பலம் கடிகரம் த்ருத ராஜவேஷம் |
ருத்ராக்ஷ ருத்ரஜப பூதி லலாட பாஜம் -
த்யாயேத் த்ரிபங்க சிவசுந்தர மூர்த்தி ரூபம் ||



சைவ ஸந்தான ஆசார்யர்கள்

இஷ்டதேவதாவந்தனம்

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry



ஓம் கணேசாய நம:

குணாதீத மாத்யம் சிதானந்த ரூபம் –
சிதாபாஸகம் ஸர்வகம் ஞானகம்யம்.
முனித்யேய மாகாச ரூபம் பரேசம் –
பரப்ரஹ்ம ரூபம் கணேசம் பஜே(அ)ஹம்.

ஓம் ஷண்முகாய நம:

குந்தேந்து மந்த ஸ்மித சுந்தரா ஸ்யம் –
வந்தாரு பூதேவ வரை ருபா ஸ்யம்.
ப்ருந்தாரகா ராதி ஜனை ரசா ஸ்யம் –
வந்தே பவானீ தநயம் ஷடா ஸ்யம்.

ஓம் சங்கராய நம:

தவள மய சரீரம் ஸர்ப்ப சூலஞ் ச பாசம் –
பரசு மனல கட்கம் கேடகம் வஜ்ர ஹஸ்தம்.
அபய வரத ஹஸ்தம் பஞ்சவக்த்ரம் த்ரிநேத்ரம் –
பணி சசி ஜல மௌளிம் தேவதேவம் நமாமி.

ஓம் தக்ஷிணாமூர்த்தயே நம:

கபர்திநம் சந்த்ர கலா வதம்ஸம் –
த்ரிநேத்ர மிந்து ப்ரதிமா நநோ ஜ்வலம்.
சதுர் புஜம் ஞானத மக்ஷ ஸூத்ரம் –
புஸ்தாக்னி ஹஸ்தம் ஹ்ருதி பாவயேத் சிவம்.

ஓம் நடேசாய நம:

க்ருபா ஸமுத்ரம் சுமுகம் த்ரிநேத்ரம் –
ஜடாதரம் பார்வதி வாம பாகம்.
ஸதாசிவம் ருத்ர மனந்த ரூபம் –
சிதம்ப ரேசம் ஹ்ருதி பாவயாமி.

ஓம் லலிதாம்பாயை நம:

ஸ்ரீம் பதபூர்ண மஹா மநு ரூபே –
ஸ்ரீ சிவகாமி மஹேச்வர ஜாயே .
ஸ்ரீ குஹ வந்தித பாத பயோஜே –
ஸ்ரீ லலிதா பர மேசி நமஸ்தே.

ஓம் க்ருஷ்ணாய நம:

இந்தீவர ச்யாமள கோமலாங்கம் –
இந்த்ராதி தேவார்ச் சித பாத பத்மம்.
ஸந்தான கல்ப த்ருமம் ஆச்ரிதானாம் –
பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி .

ஓம் விஷ்ணவே நம:



மேக ச்யாமம் பீத கௌசேய வாஸம் –
ஸ்ரீவத் ஸாங்கம் கௌஸ்துபோத் பாஸிதாங்கம்.
புண்யோ பேதம் புண்டரீகாய தாக்ஷம் –
விஷ்ணும் வந்தே ஸர்வ லோகைக நாதம்.

ஓம் மஹாலக்ஷ்மியை நம:

ஸரஸிஜ நயனே ஸரோஜ ஹஸ்தே –
தவளதரா ம்சுக கந்த மால்ய சோபே.
பகவதி ஹரி வல்லபே மனோக்ஞே –
த்ரிபுவன பூதிகரி ப்ரஸீத மஹ்யம்.

ஓம் துர்க்காயை நம:

நமஸ்தே சரண்யே சிவே ஸாநுகம்பே –
நமஸ்தே ஜகத் வ்யாபிகே விச்வரூபே.
நமஸ்தே ஜகத் வந்த்ய பாதாரவிந்தே –
நமஸ்தே ஜகத் தாரிணி த்ராஹி துர்கே.

ஓம் ஸரஸ்வத்யை நம:

சுராசுர சேவித பாத பங்கஜா–
கரே விராஜத் கமநீய புஸ்தகா.
விரிஞ்சி பத்னீ கமலாஸந ஸ்திதா–
ஸரஸ்வதீ ந்ருத்யது வாசி மே ஸதா.

ஓம் ஹயக்ரீவாய நம:

ஞானா னந்த மயம் தேவம் –
நிர்மல ஸ்படிகா க்ருதிம்.
ஆதாரம் ஸர்வ வித்யானாம் –
ஹயக்ரீவம் உபாஸ்மஹே.

ஓம் லக்ஷ்மீந்ருஸிம்ஹாய நம:

யஸ்யா (அ)பவத் பக்தஜனா (ஆ)ர்த்தி ஹந்து: –
பித்ருத்வம் அன்யேஷு அவிசார்ய தூர்ணம்.
ஸ்தம்பே (அ)வதாரம் தம் அநந்ய லப்யம் –
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே.

ஓம் மஹாசாஸ்த்ரே நம:

ஹரிவரா ஸநம் விச்வ மோஹனம் –
ஹரிததீ ச்வரம் ஆராத்ய பாதுகம்.
அரிவிம ர்தநம் நித்ய நர்த்தனம் –
ஹரிஹரா த்மஜம் தேவ மாச்ரயே.

ஓம் பைரவாய நம:

கட்கம் கபாலம் டமரும் த்ரிசூலம் –
கராம் புஜைஸ் ஸந்ததம் த்ரிநேத்ரம்.
திகம் பரம் பஸ்ம விபூஷி தாங்கம் –
நமாம் யஹம் பைரவ மிந்து சூடம்.

ஓம் ஹநுமதே நம:

அசேஷ லங்கா பதி ஸைன்ய ஹந்தா –
ஸ்ரீராம ஸேவா சரணைக கர்த்தா.
அசேஷ துக்காஹத லோக கோப்தா –
த்வஸௌ ஹநூமான் தவ ஸௌக்ய கர்த்தா.

திருமுறைத்துதிகள்

விநாயகர் துதி (உமாபதிசிவம் அருளியது)

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

சிவனார்துதி (தேவாரம்) (திருஞானசம்பந்தர் அருளிது)

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே

பூவார் மலர் கொண்டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங் கள் எரித்த அன்று மூவர்க் கருள் செய்தார்
தூமா மழை நின் றதிர வெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணை வந் தணையும் சாரல் அண்ணா மலையாரே.

திருவாசகம் – (மாணிக்கவாசகர் அருளியது)

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழ் அளிக்கும் தண் பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையா னைப் பாடுதுங்காண் அம்மானாய்.

திருவிசைப்பா – திருமுறை–9 (சேந்தனார்)

பண் : பஞ்சமம் தாளம் : ஆதிதாளம்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.

திருப்பல்லாண்டு – திருமுறை–9 (சேந்தனார்)

பண் : பஞ்சமம் தாளம் : ரூபகம்

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சிலதேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேருவிடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதம் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம் – திருமுறை–12 (சேக்கிழார்)

ராகம் : மத்யமாவதி விருத்தம்

மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப்பொலிவு கண்டுஆர்தல்
உண்மையாம் எனில் உலகர் முன் வருக என உரைப்பார்.

ஆசியுரை

ஸ்ரீ சிவசைவாச்சாரியராகிய

ஸ்ரீ சீர்காழி சட்டநாத சுவாமிகள் மடம்

கோமளீஸ்வரன்பேட்டை கோயில் தெரு

மவுண்ட்ரோடு, சென்னை-600 002.

போன் : 65180106

சிவஸ்ரீ. **T.S.**சதாசிவோம் சிவாசாரியர்

சிவஸ்ரீ. **T.S.**காளிதாஸ் சிவாசாரியர்

சிவஸ்ரீ. **T.S.**சண்முக சிவாசாரியர் அவர்களுக்கு

ஸ்ரீ காமாக்ஷி அகஸ்தீஸ்வரர் கிருபா கடாக்ஷத்தினால் என்றும் அநேக ஆசீர்வாதங்களை தெரிவித்துக்கொள்கிறோம். தங்களின் சிவாச்சாரியர் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாச்சார்யர் பௌண்டேஷன் மூலமாக கடந்த இரண்டு வருடங்களாக சிவாகமத்திற்கும் வரும்கால சிவாச்சார்ய இளைஞர்களின் பூஜா விஷயங்களுக்கு உதவியாக நடைபெற்று வரும் ஆகம சொற்பொழிவுக்கும் பேரறிஞர்களின் வருகை தரும் நம்முடைய சமுதாயத்திற்கும் பேருதவியாக அமைந்து என்றும் நம்முடைய ஆதிசைவ சமூகத்திற்கும் இவ்வுலகத்திற்கும் என்றும் துணை நிற்க ஸ்ரீ காமாக்ஷி அகஸ்தீஸ்வரர் பேரருள் துணை நிற்க ஆசீர்வாதம் செய்கின்றோம்.

15/12/11

இப்படிக்கு

தி. பாலசுப்பிரமணிய சிவாச்சாரியர்

மீமாம்ஸ், வ்யாகரண சிரோமணி **சிவஸ்ரீ தி.ஷ. ஸச்சிதானந்த சிவாசார்யர்**
பரம்பரை பூஜை ஸ்தானீகர்
அருள்மிகு குளிர்ந்த நாயகி உடனுறை ஒத்தான்டேஸ்வரர் திருக்கோயில்
திருமழிசை, சென்னை, தொலைபேசி 044 26496007

வாழ்த்துரை

எனது ஸஹோதரர் தெய்வத்திரு. தி.ஷ.ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் அவர்களின் லக்ஷியங்களை நிறைவேற்றும் விதமாக அவரது திருக்குமாரர்கள் தந்தையாரின் பெயரில் அறக்கட்டளைகள் அமைத்து பொதுநலத் தொண்டுகளையும், சிவாகமசொற்பொழிவுகளையும் இன்னும் பல நற்காரியங்களையும் செய்து வருவது எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ காளிகாம்பிகையின் பேரருளே. மாதந்தோறும் சிறந்த ஆகம வல்லுனர்களை கொண்டு அவர்களின் சொற்பொழிவுகளை பதிவு செய்ததோடு மட்டுமல்லாமல், கட்டுரைகளாகவும் பெற்று வருங்கால சந்ததியினருக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையுமாறு இந்த புத்தகத்தினை தொகுத்து அளித்திருக்கிறார்கள். "சூத்ரே மணிகணா இவ" என்றபடி பல மணிகளை ஒரு நூல் இணைத்திருப்பது போல், இதுபோன்ற பல நறுமலர்களை சிறந்த முறையில் தொகுத்து அளித்த சிவஸ்ரீ ஸோமசேகர சிவாசார்யர் அவர்களுக்கும், புத்தகத்தை பதிப்பித்த அறக்கட்டளை நிர்வாகத்தினருக்கும் எனது அன்பான வாழ்த்துகள். இது போன்று பல மலர்கள் இந்த அகண்ட ஞானவ்ருக்ஷத்தில் இருந்து பூத்து, இருளால் சூழப்பட்டிருக்கும் இவ்வுலக மக்களுக்கு ஒளிதர எல்லாம் வல்ல எனது ஈசன் குளிந்த நாயகி உடனுறை ஒத்தாண்டேச்வர சுவாமியை வேண்டி பணிகின்றேன்.

அன்புடன்
தி.ஷ. ஸச்சிதானந்த சிவாசார்யர்

ஸாஹித்ய சிரோமணி. ஆகமப்பிரவீனர். சைவாகம வித்யா ரத்னம்

சிவஸ்ரீ. வி. சந்திரசேகர சிவாசார்யர்

சைவாகமப் பேராசிரியர் (ஓய்வு)
ஸ்ரீ வெங்கடேஸ்வர வேதசாஸ்த்திர ஆகமவித்யாகேந்திரம்
திருமலை திருப்பதி தேவஸ்தானம்
ஏ2, ஆனந்தி அடுக்ககம், 33/17, சாலைத் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004.

தேதி : 21-12-2011

ஓம் ஸ்ரீ குருப்யோ நம:
நமோ வாமார்த ஜானயே.

சென்னை, தம்புச்செட்டி தெருவில் கோயில் கொண்டு எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்துவரும் **அருள்மிகு. ஸ்ரீ காளிகாம்பாள் கோயில் பிராதான அர்ச்சகரும், "சிவாசார்ய குல திலகம்", "சாக்த ரத்னாகரம்"** போன்ற விருதுகளைப் பெற்றவரும், இந்து மதத்தின் குரு என்கிற முறையில் அயல்நாட்டுக்கு சென்று ஐக்கிய நாடுகளின் சபையில் நமது இந்துமதத்தின் சிறப்பையும், சைவ-சமயத்தின் மேன்மையையும் எடுத்துரைத்துப் பெரும்புகழ் பெற்றவருமான சிவாசார்ய குல பூஷணம் **சிவஸ்ரீ. ஸாம்பமூர்த்தி சிவாசார்யர்** அவர்களுடைய அருளாசியுடன் அவருடைய குமாரர்களால் சிறப்புடன் நடத்தப்பட்டு வரும் சைவாகம கலாசார வித்யா கேந்திரத்தில், கடந்த இரண்டு வருடங்களாக பிரதிமாதம் சைவாகம விற்பன்னரான ஒரு சிவாசாரியார், **சைவாகம ஞான, கிரியா, சர்யா, யோக** பாதங்களில் கூறப்பட்ட விஷயங்களை சிறப்பாக உரையாற்றியவற்றை கட்டுரைகளாக எழுதி அவை தொகுக்கப்பட்டு மலராக வெளியிடப்படுகிறது.

இந்த விழாவில், இரண்டு ஆண்டுகளில் பிரதிமாதம் உரையாற்றிய சிவாசார்யர்களைப் பாராட்டி அவர்களுக்கு விருதும் வழங்கப்படுகிறது.

பொது ஜனங்களுக்கு ஆன்மிகத்தில் அதிகப்பற்று உண்டாக வேண்டுமென்பதும், ஆதிசைவ குலத்தில் பிறந்த சிவாசார்ய சிறுவர்களுக்கு சிவாகமங்களைக் கற்பதிலும், ஆலயத்தில் அர்ச்சகராக பணிபுரிவதில் ஆர்வம் உண்டாகவேண்டுமென்பதுமே இதுபோன்ற விழாக்களின் நோக்கமாகும்.

எனவே இதுபோன்ற ஆன்மிக விழாக்கள் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று எல்லாம் வல்ல பரம்பொருளாகிய அருள்மிகு. ஸ்ரீ காளிகாம்பாள் திருவடிகளை வணங்கி பிரார்த்திக்கிறேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!"

இப்படிக்கு,
ஸாஹித்திய சிரோமணி ஆகமப்பிரவீணர்
சைவாகம வித்யா ரத்னம்
V. சந்திரசேகர சிவாசார்யர்

Phone : 2498042

The Madras Sanskrit College & S.S.V. Patasala

(Affiliated to University of Madras)
[Recognised by Rashtriya Sanskrit Sansthan, The Ministry of Human Resource Development, Govt. of India, New Delhi, Under Adarsh Sanskrit Mahavidyalaya Scheme]

Dr. N.V. DEVIPRASAD
Principal

84, ROYAPETTAH HIGH ROAD,
MYLAPORE, CHENNAI - 600 004.
E-mail : mds.sanskritcollege@gmail.co

மதிப்புரை

மனிதனுடைய வாழ்க்கையில் அடைய வேண்டியவை நான்கு - தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம். மனிதனால் அடையப்படவேண்டியவை என்பதினால் இவை நான்கும் புருஷார்த்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த நான்கு புருஷார்த்தங்களை அடைவதிலும் ஆன்மீகம் நிறைந்திருக்க வேண்டும். புனிதத் தன்மையுடன் போற்றப்படவேண்டும். இந்த நான்கு வகைகளிலும் கடைசியாக கூறப்பட்டுள்ள மோக்ஷம்தான் மனித வாழ்க்கையின் லக்ஷியம். மற்றநாட்டவர்களை விட நம் நாட்டவர்களுக்கு இதுதான் சிறப்பு. "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்பது பெரியோர்களின் வாக்கு. நமது பிறவியைத் தொடங்கி அனைத்து கார்யங்களும் பரமேஸ்வரனுடைய அருளால் தான் நிகழ்கின்றன. எவ்வாறு உயிரினங்கள் பிறவியிலிருந்து கடைசி வரை ப்ராண வாயுவை ஸ்வாசிக்கின்றனவோ அதுபோல் ஈசனிடம் பக்தி, ஆன்மீக சிந்தனை வாழ்க்கை முழுவதும் நிறைந்திருக்கவேண்டும். இது தான் வேதங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

இத்தகைய ஆன்மீக சிந்தனை செழித்தோங்கி நிற்கத்தான் அனாதி காலமாக கோயில்கள் கட்டப்பட்டு வேதாகம சாஸ்த்ரங்கள் அறிந்த சிவாசார்ய பெருமக்களால் சாஸ்த்ரவிதிகளின்படி செவ்வனே பூஜை செய்யப்பட்டு வருகின்றன. வேதவிதிகளின் படியும், சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டவையான ஆகமங்களின் விதிமுறைகளின் படியும் பூஜை முதலான சடங்குகள் நடத்தப்படுவதனால் மட்டுமே கோவில்களும், அங்கிருக்கு மூர்த்திகளும் சிறப்பு மிக்கவையாகவும், மகிமைக்கொண்டவையாகவும், நாட்டு மக்களுக்கு நலம் தருபவையாகவும் அமையும். நாட்டில் அமைதி, மகிழ்ச்சி, சுகபோகங்கள், தர்மம், ஆன்மீக சிந்தனை செழிக்க முறைதவறாது நடக்கும் பூஜைகளோடு விளங்கும் ஆலயங்கள்தான் காரணம். ஈசன் அருள் இல்லையென்றால் நம் மனதில் பக்தியே தோன்றாது.

"திவஸம் திவாஸார்தம் வா முஹுர்த்தம் வா க்ஷணம் லவம்
நஹி அலப்த ப்ரஸாதஸ்ய பக்திர்பவதி சங்கரே!!

ஒரு நாளோ அல்லது அரை நாளோ கடைசி பக்ஷமாக ஒரு கணமோ, சிவபெருமானிடம் பக்தி ஏற்படவேண்டுமென்றால் இறையருள் இன்றி ஏற்படாது என்று மஹாபாரதம் கூறுகின்றது. பூஜை முறைகளும் சிவஞானமும் சைவாகமங்களை அறிவதன் மூலமாகத்தான் உண்டாகும்.

"பரமாப்த பரமேஸ்வர ப்ரணீதத்வேனைவ வேதாகமானாஞ்ச
ப்ராமாண்யம்

என சைவாகமங்களின் மகிமை சைவபரிபாஷை என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. சைவாகமங்கள் பல இருந்தாலும் வேத் வழியை பின்பற்றுகின்ற ஆகமங்களைத்தான் சான்றாக எடுத்துக்கொள்ள வேண்டுமென காமிகாகமத்தின் கூற்று.

சைவாகமோபி த்விவித: ச்ரேளதோ (அ)ஸ்ரெளதஸ் ஸஸ்ம்ருத:
ச்ருதிஸாரமய: ச்ரெளத: ஸ்வதந்த்ர இதரோமத:

நாளடைவில் சர்யா, க்ரியா, யோக, ஞான என்ற பாதங்கள் அடங்கிய சைவாகமத்தின் நுணுக்கங்களை அறிந்த சிவாசார்ய பெருமக்களும், சான்றோர்களும் குறைந்து கொண்டே இருக்கின்ற இச்சூழ்நிலையில் ஆலயங்களுக்கு ஜீர்ணோத்தாரணம் போல் புத்துணர்ச்சி மிகமிக அவசியமான ஒன்று.

கல்லூரிகளிலும், பல்கலைகழகங்களிலும், புத்துணர்வு பயிற்சி என்னும் கருத்தரங்குகள் என்றும், சொற்பொழிவுகள் என்று பல நடத்தப்படுவது போல் சிவாசார்யர்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்கும் வகையில் பல கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், இளம் மாணாக்கர்களுக்கு பயிற்சி முதலியவை நடத்தப்படவேண்டும்.

இப்பெரும் முயற்சியில் மஹேஸ்வரனின் இச்சாசக்தி, ஞானசக்தி, க்ரியாசக்தி ஸ்ருரூபினியான, சென்னையில் எழுந்தருளி பக்தர்களின் கற்பக வ்ருக்ஷமாக விளங்கும் ஸ்ரீகாளிகாம்பாளின் பரம பக்தரும், அம்பாளுக்காகவே தன்னை அர்பணித்துக்கொண்டவரும், சிவாசார்ய குல திலகம், சைவாகமக்கடல் சிவஸ்ரீ தி.ஸா. ஸாம்பமூர்த்தி சிவாசார்யர் அவர்களுடைய புத்திரமாமணிகள் சிவஸ்ரீ தி.ஸா. ஸதாசிவோம் சிவாசார்யர், சிவஸ்ரீ தி.ஸா.காளிதாச சிவாசார்யர் மற்றும் சிவஸ்ரீ டாக்டர் தி.ஸா. ஷண்முக சிவாசார்யர் அவர்களும், மிகுந்த ஆர்வம் கொண்டு ஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாசார்யர் அறக்கட்டளை மற்றும் சைவாகம சொற்பொழிவுகளையும் கருத்தரங்குகளையும் நடத்துவது மட்டுமல்லாமல் பல சைவாகம நூல்களையும் அச்சிட்டு சைவாகம வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றி வருகின்றனர் என்பது மிகவும் போற்றத்தக்கது. வெறும் சொற்பொழிவுகள் அமைப்பதோடு நின்று விடாமல், காலம் காலமாய் நிலைத்து நிற்கவும் தலைச்சிறந்த சிவாசார்ய சைவாகம புலவர்களின் ஞானத்தாலும் கருத்துக்கட்டுரைகளாலும் இளையத்தலைமுறை மற்றும் பொதுமக்கள் அறிவதன் பொருட்டும் புத்தக வடிவமாக அச்சிட்டிருப்பது தங்கத்திற்கு வாசமும் சேர்வது போலாகும். சொற்பொழிவாற்றிய பன்னிரெண்டு புலவர்களும் பன்னிரெண்டு சிவாகம ஞான்சூரியர்கள் ஆவர். இவர்களின் சொற்பொழிவுகள் கட்டுரைகள் ஆகிய கதிர்களின் ஒளியினால் இளம் சிவாசார்யர்களின் நெஞ்சத்தில் மலமாகிய அக்ஞானம் நீக்கப்பட்டு ஞானஒளி பிரகாசிக்கும் என நினைக்கிறேன்.

இவ்வனைத்து கட்டுரைகளையும் மிகவும் சிரமப்பட்டு தொகுத்து வழங்கிய ஆகமப்ரவீன, சிவாகமசார்வபௌம, வ்யாகரண சிரோமணி முதலிய பிருதங்களால் போற்றப்பட்ட தன்னிகரற்ற சைவாகம வித்வான் சைவாகம கலாசார கேந்திரத்தின் முதல்வர் ப்ரம்ம ஸ்ரீ சோமசேகர சிவாசார்யர் அவர்களின் இறைப்பணி மிக மிக பாராட்டத்தக்கதாகும். இந்நிறுவனங்களின் நிர்வாகிகளும் பரமேஸ்வரனின் அருள் பெற்று மேன்மேலும் தொண்டுபுரிய வேண்டும் என ஈஸ்வரனை ப்ரார்த்திக்றேன்.

சுபமஸ்து

அன்புடன்

Dr. N.V. தேவி பிரசாத் M.A., Phd.

Dr. N.V. Devi Prasad
Sahitya Siromani, M.A.,Ph.D.
PRINCIPAL
The Madras Sanskrit College
Mylapore, Chennai-600 004.

நூல் முகவுரை

சிவனருளால் சிவபுண்ணியச்செயல்கள் தழைத்திடும்பொருட்டு, சென்னை சிவாசார்யார் அறக்கட்டளை பல சமயத்தொண்டுகளைச் செய்வதுடன், ஞானவேள்வி-யாகிய ஆகமஞான உபதேசரூபமான சிறப்புச்சொற்பொழிவுஒன்றை மாதந்தோறும் நிகழ்த்திவருவது காலத்திற்குத் தேவையானதும், எதிர்காலத்திற்கு உதவக்கூயதுமாக உள்ளதால் போற்றுதற்கு உரியதாகஉள்ளது. சிவாசாரியர் குலபூஷணமாகவிளங்கிய ஸ்ரீ ஸாம்பமூர்த்திசிவாசார்யர் அவர்களின் குமாரர்கள் மாதம் ஒரு சிவாகமஅறிஞர்களை அறிமுகப்படுத்தி, கௌரவித்துவருவது சாலப்பொருத்தமான சிறப்புப்பணியாகஉள்ளது. இத்துடன் மாதந்தோறும் பேசப்படும் சிவாகமகருத்துக்களை ஆண்டுதோறும் மலராகத் தொகுத்து வெளியிட்டுவருவது எதிர்காலத்திற்கு உதவக்கூடிய, செயற்கரிய அறப்பணியாகிறது. இவ்விதம் நடப்பதில் மூன்றாம்ஆண்டான 2011-ல் நடைபெற்ற பன்னிருமாதபேச்சுகளின் கட்டுரைகளைவெளியிட, நூல்வடிவில் தொகுத்தளித்திடு-வதற்கு என்னைத்தேர்வுசெய்து பேச்சுக்கட்டுரைகளை அளித்தனர். அவைகள் கிரந்தம், நாகரம், தமிழ் ஆகியவற்றில் பலவகை எழுத்துக்களில் கைஏடுகளாகவும், ஒரு சிலகட்டுரைகள் மூலசான்றுகள் மட்டுமாகவும், சிலகட்டுரை தமிழ்உரை மட்டுமாகவும், சிலகட்டுரை கலந்தும்விளங்கின. மேலும், ஓரேவடிவில்இல்லாமல், பேச்சுப்பொருள்கள் பலவாறாக கருத்துசேமித்தவண்ணமாக, சிறுகுறிப்புகளாக முறைமாறியும் இருந்தன. இக்கேந்திரத்தில் முழுநேரபணியாளர்கள், கணினிஅறிந்தவர்கள், பணியில் இல்லாத-தாலும், சிலர் ஈடுபாடுஇல்லாமல் இருந்தமையாலும் இவற்றை, இருமொழியையும் ஓரேதமிழ்எழுத்தில் தட்டச்சுசெய்துஉள்ளோம். இதனால் சமஸ்கிருதம் அறிந்தவர்களும், அதனை அறியாதவர்களும், இதிலுள்ள சான்றுகளை எளிதில் அறிந்துகொள்ளமுடியும். மேலும், ஒரு தலைப்பில் விரிவாக பேசப்பட்டமையால், இக்கட்டுரைகள் பலநூல்களின் மேற்கோள்களையும், சான்றுகளையும் பெற்றுஇருப்பது, கல்விபயில்வோருக்கு மிகவும் பயனுள்ளதாக, அமைந்துஉள்ளது. இம்மலரில் ஒவ்வொரு கட்டுரைக்கான பேச்சுப்-பொருளும், சிறுசிறுஉட்பிரிகளின்கீழ், சிறுசிறுபகுகளில் சமயம் பற்றி அறிய ஆர்வமுள்ள-வர்களுக்கு ஏற்றவகையிலும், எளிதில் யாவரும் விளங்கிக்கொள்ளுமாறும், கட்டுரை-யாளரின்கருத்தும், நோக்கமும் சிதைவுறாமலும், கருத்துமாறாமலும், தலைப்புத்தொடர்பு உடையதாகவும், பலதலையங்கங்களில் தொகுத்து, பிரித்து, முறைப்படுத்திஉள்ளது சிறப்புஅம்சமாகும். இந்த வடிவஅமைப்பு ஆகமபாடசாலை மாணவர்களுக்கும்,

போதிக்கும்ஆசிரியர்களுக்கும், தமிழில் ஆகமகருத்துக்களின் எழுத்துத்தேர்வு, பேச்சுப்-போட்டி இவற்றிற்கு, வினாக்களை தயாரிக்கவும், விடைகளைஅறியவும், எளிதில் செய்தியை எடுத்துக்கையாளவும், பகுத்து, மனதில்பதித்துக்கொள்ளவும் மிகவும் ஏற்ற அமைப்பாகும் எனலாம். இந்துசமய ஆகமகருத்துக்களை எளியமுறையில் தமிழில் அறிய விரும்புவோருக்கு, இக்கட்டுரைத் தொப்புநூலானது அரியபலகருத்துக்களைப் பல்வேறு சான்றுகளுடன் அறியபெரிதும்உதவும் என்பதில் வேறுகருத்து இருக்கமுடியாது. கட்டுரையைஎழுதிஅளிக்காதவர்களின் பேச்சுப்பொருளும், பதிவிலிருந்து குறிப்பு எடுக்கப்பட்டு, குறைபடாவண்ணம், ஆண்டின் பன்னிருமாதகட்டுரைகளும் ஒரேவடிவில் பொருத்தமாகதொகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டுரையும் மும்முறை பிழைநீக்கத் திருத்தம் செய்யப்பட்டப்போதிலும், கணினிப்பதிப்பில் ஏற்படும் குறைகளால் ஏற்படும் சிலகுறைகளைக்காண்போர், பிழைநீக்கிப்பொருத்தருள வேண்டுகிறேன். சமஸ்கிருதத்திலும், ஆங்கிலம், பிரஞ்ச்சு முதலிய பிறமொழிகளிலும், பெரியநூல்கள் பல இருப்பினும் அவற்றின்பொருளை பட்டப்படிப்பு இல்லாத பாமரமக்களும், இந்துசமயத்தின் பலதரப்பட்டபொதுமக்களும் அவற்றை எளிதில் அறிந்திடஇயலாது. சமயநூலின்படியான சடங்குகளின் விளக்கத்தை நிகழ்ச்சிகளில் மட்டுமே அவ்வப்பொழுது விளக்கப்-படுவதால் அறியமுடியும். இக்குறையைப் போக்கிடவும், அறியபல ஆகமகருத்துக்களை தலையங்கமாகக்கொண்டு மூன்றுஆண்டுகளாக முற்றிலும், எளியதமிழில் கட்டுரை வடிவிலேயே இந்நூல் திட்டமிட்டுநடத்தப்பட்ட கட்டுரைகளின் திரட்டாக வெளியிடப்பட்டு உள்ளதால், இது இந்துசமயமக்கள் அனைவருக்கும் உதவிடும் எனலாம். ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய, அறியவேண்டிய சமயசெய்திகள்நிறைந்த சிவஞானமாகிய அறிவுக்களஞ்சியமாக இந்தநூல்திகழும் என்பதில் ஐயமில்லை. இந்நூலை வடிவமைத்துத் தொகுத்திட்டதில் பெருமிதமும், மகிழ்ச்சியும் கொண்டு, நூலும், சமயமும் சிறக்க வாழ்த்தி, நன்றி தெரிவித்து வணங்குகிறேன்.

இங்ஙனம்,
சமயப்பணியில் உள்ள,
வி. சோமசேகர சிவாசார்யர்
முதல்வர், S.K.V.K.சென்னை.

வாழ்க சீர்அடியாரெல்லாம்

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

பொருளடக்கம்

கட்டுரையின் தலைப்பு & ஆய்வாளர்கள்

1.	சைவ தீக்ஷா வகைகளின் கிரியை முறைகள் சிவஸ்ரீ தி.வே. ஞானசம்பந்த சிவாசார்யர்	20
2.	சித்தாந்த ஷடத்வாதீதசிவ அனுபூதிக்ரமம் சிவஸ்ரீ செ.கொ. மங்களேச்வர சிவாசார்யர் M.A.,Ph.D.,	50
3.	நட்சத்ரதேவதைகளின் உருவஇயல்பும் சாந்தி வேள்வியும் சிவஸ்ரீ சி. கீதாராம சிவாசார்யர்	79
4.	ஆலய தேவதா பிரதிஷ்டா கிரியாவளி சிவஸ்ரீ பட்டம் தி. கார்த்திகேய சிவாசார்யர் M.A,M.Phil.,	95
5.	ஆதிசைவ ஸதாசார விளக்கம் புலவர் ஏ.பு. சந்தான குருக்கள் M.A.,B.Ed.,	140
6.	ஆகமங்களில் பத்ர புஷ்பவகைகளும் பயன்களும் சிவஸ்ரீ G. கோட்டீஸ்வர குருக்கள் M.A.,	160

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

ஓம் சிவகுஹ சக்திப்யோ நம:

சைவ தீக்ஷாவகைகளின் கிரியை முறைகள்

கட்டுரை ஆசிரியர்
ஆகம ப்ரவீணர், சிவாகம வித்ய சரஸ்வதி,
சிவாகமச் செம்மல், வித்வான்,
ஸ்ரீ. தி.வே. ஞானசம்பந்த சிவாசார்யர்
சித்தூர், ஆந்திர மாநிலம்.

சிவத்விஜ குலோத்பூதாம் சாரதாம் மம மாதரம்.
ஆகம ஞான லாபாய சிரஸா ப்ரணமாம்யஹம்.
சிவத்விஜ குலோத்பூதம் சுப்ரம்மண்ய குரூத்தமம்.
அதீத சைவசாஸ்த்ரக்ஞம் பிதரம் ப்ரணமாம்யஹம்.

ஸபாரத்னம் ச ஸம்பந்தம் வேங்கடேச மத:பரம்.
சுவாமிநாதகுரும் வந்தே சைவாகம ப்ரபோதம்.

அன்னையும், பிதாவும் முன்னெறி தெய்வம் எனும் அவ்வை பிராட்டியின் வாக்கிற்கும், ஹமாத்ருதேவோ பவ" என்ற உபநிஷத்வாக்கியத்திற்கும் இணங்கும் வகையில் எனது அன்னை சாரதாம்பாளையும், அப்பன் வேங்கட சுப்ரமணிய சிவாசாரியரையும் முதற்கண் வணங்கி, சிவா-கமங்களைப் பயிற்றுவித்த சென்னை, A.V. சபாரத்தின சிவாசாரியார், சித்தர்காடு, சம்பந்த சிவாசாரியார், ஆரணி, வேங்கடேச குருக்கள், தருமபுரம் பாடசாலை, சிவபுரம் சுவாமிநாத சிவாசாரியார், முதலிய சான்றோர்கள் அளித்த அறிவைக்கொண்டு, பெற்றோர் இட்ட பெயரைக் காக்குந்துணையால் தீக்ஷாவகைகளையும், அவற்றின் கிரியைமுறைகளையும் விளக்குகின்றேன்.

வடவேங்கடந்தென்குமரியாயிடை தமிழ் கூறும் நல்லுலகு. இது மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும், காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்றும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்றும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தம் என்றும், நால்வகைப் பெயரைப் பெற்றமையால் நானிலம் எனச் சான்றோர்களால் வழங்கப்பட்டு வருவது இவ்வுலகு.

இவ்வுலகில் மனிதர்களாய் பிறந்த நாமெல்லோரும் உடல், உயிர் ஆகிய இரண்டையும் "நாம்" என்றே சொல்லுகின்றோம். நம்மவருள் சிலர் உடல் உயிர் இரண்டிற்கும் உழைக்கின்றனர். நம்மவருள்ளும் இன்னுஞ்சிலர் உயிருக்கே உழைக்கின்றனர். உயிரே எனில் நித்தியமானது (அழியாதது) எனத் தெரியவருகிறது.

அழியத்தக்க உடலுக்கே உழைப்போரைக் காட்டிலும் நித்தியமான அழியாத உயிருக்கு உழைப்பவர்கள் மேலானவர்கள். உடல் (1) பசி, (2) காமம் (ஆசை) ஆகிய இரண்டு துன்பங்களை உடையதாகும். உயிர் (1) ஆணவம், (2) கன்மம், (3) மாயை ஆகிய மூன்று துன்பங்களை உடையதாகும். முதலில் கூறிய உடலின் துன்பங்களான பசி, காமம் (விருப்பு) ஆகிய இரு துன்பங்களைப் போக்குவதற்காக பொருள் தேடுதல் முதலிய சிரமங்கள் (கஷ்டங்கள்) உள்ளன. பின்னர் கூறப்பட்ட உயிர்க்கோ என்றால் ஆணவாதி மும்மலங்களைப் போக்க 1) சரியை, 2) கிரியை, 3) யோகம், 4) ஞானம் ஆகிய தவப்பயன்கள் வேண்டும். பொருள் ஈட்டுதல் எளிது. ஆணவம், கன்மம், மாயை இவற்றைப் போக்குவது கடினம். சரியை முதல் ஞானமீறாக நால்வகைத் தவப்பயன்களைக் காட்டவல்ல வழிகளைக் கூறுபவையும், உள்ளதை உள்ளவாறு உணர்த்தவல்ல ஆற்றல் உள்ளவையும் வேதசிவாகமங்களேயாகும். இவற்றுள் வேதம் சுருக்கமாய்க் கூறுகின்றது. சிவாகமங்களோ என்றால் விரிவாகக் கூறுகின்றன. வேதம் மூலம் போலவும், சிவாகமங்கள் பாஷ்யம் போன்றவைகளாகும். சிவாகமங்கள் இல்லையேல் வேதங்களின் உட்பொருள் விளங்காது. வேதமும், சிவாகமங்களும் இரண்டு கண்கள் போன்றவையாகும். இரண்டும் ஒரே பொருளை உணர்த்துவதால் பேதம் கிடையாது. மேலும் இவ்விரண்டு நூல்களையும் கூறியவர் மஹாசதாசிவமூர்த்தியாகும். இம் மஹாசதாசிவ மூர்த்திக்கு 25 முகங்கள் உள்ளன. அந்த இருபத்தைந்து முகங்களுள் ஈசான முகங்கள் ஐந்து, தத்புருஷ முகங்கள் ஐந்து, அகோர முகங்கள் ஐந்து, வாமதேவ முகங்கள் ஐந்து, ஸத்யோஜாத முகங்கள் ஐந்து, ஆக மஹாசதாசிவமூர்த்திக்கு இருபத்தைந்து முகங்கள் இருக்கின்றன. இவற்றுள் காணப்படும் ஈசான முகங்களில் இருந்து இருபத்தெட்டாகமங்களும் சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம் என்ற முகங்களில் இருந்து, [1]இருக்கு- வேதம், [2]யஜுர்வேதம், [3]சாமவேதம், [4]அதர்வணவேதம் இவை நான்கும் முறையாகத் தோன்றின என்று சிவாகமங்களுள் கூறப்பட்டுள்ளன.

அஷ்டாதசாநாம் ஏதாஸாம் வித்யாநாம் பின்னவர்த்மநாம் I
ஆதிகர்த்தா கவிஸ் ஸாக்ஷாத் சூலபாணி ரிதிசுருதி: I
ஸத்யோஜாதஸ்து ருக்வேதோ லாமதேவோ யஜுஸ் ஸ்மிருத:I
அகோரோ ஸாமவேதஸ்து புருஷோ அதர்வ உச்யதேI
ஈசானச்ச சுரச்ரேஷ்ட: ஸர்வ வித்யாத்மகஸ் ஸ்மிருத:II என்று

ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் காணப்படுகின்றது. மேலும் ஆகமங்கள் 1) காமிகம், 2) யோகஜம், 3) சிந்தியம், 4) காரணம், 5) அஜிதம் இவை ஐந்து ஆகமங்கள் ஸத்யோகஜாத ஈசான முகத்திலிருந்து தோன்றின. 6) தீப்தம், 7) சூக்ஷ்மம், 8) ஸஹஸ்ரம், 9) அம்ஸுமான், 10) சுப்பிரபேதம் இவை ஐந்து ஆகமங்கள் வாமதேவ ஈசான முகத்திலிருந்து தோன்றின. 11) விஜயம், 12) நிஸ்வாஸம், 13) ஸ்வாயம்புவம், 14) அநிலம், 15) வீரம் இவை ஐந்து ஆகமங்கள் அகோர ஈசான முகத்தில் இருந்து தோன்றின. 16) ரௌரவம், 17) மகுடம்,

18) விமலம், 19) சந்திர ஞானம், 20) முகபிம்பம் இவை ஐந்து ஆகமங்கள் தத்புருஷ ஈசான முகத்திலிருந்து தோன்றின. 21) ப்ரோத்கீதம், 22) லளிதம், 23) ஸித்தம், 24) ஸந்தானம், 25) ஸர்வோக்தம், 26) பாரமேஸ்வரம், 27) கிரணம், 28) வாதுளம் இவை எட்டு ஆகமங்கள் ஈசானத்திலிருந்து, அதன் ஈசான முகத்திலிருந்து தோன்றின என்று காமிக ஆகமத்தில் காணப்படுகின்றன. மஹன்நியாஸத்தில் பஞ்சமுகங்கள் கூறும் முகத்தால் வேதாகமங்கள் தோன்றியதை உணரலாம். வேதங்களைப் படிக்க வேண்டுமாயின் உபநயன ப்ரம்மோபதேச சடங்கு எவ்வாறு முக்கியமோ அதுபோல சிவாகமங்களைப் படிக்க சிவதீக்ஷையைச் சார்ந்த சடங்குகள் அவசியமானது என்று சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் என்னிடமுள்ள, காமிகம், காரணம், மிருகேந்திரம், வாதுளம் போன்ற மூலாகமங்கள், குமார தந்திரம், உபாகமம், ஸோமசம்பு பத்ததி, அகோரசிவாசார்ய பத்ததி, ஈசானகுருதேவ பத்ததி, வாமதேவபத்ததி, வருணபத்ததி, கிரியாக்ரம த்யோதிகா, முதலிய நூல்களின் துணைக்கொண்டும், கையேட்டு பிரதி கொண்டும் அடியேன் சிவாதீக்ஷா வகைகளையும், கிரியா முறைகளையும் கூறுகின்றேன். குறைகளை நீக்கி குணங்களைக் காணுமாறு சிவாசாரியச் சான்றோர்களைச் சிரம் தாழ்த்தி வணங்கி வேண்டுகின்றேன்.

தீக்ஷாபத விளக்கம்

ஸுப்ரபோதாகமத்தில், அத ஊர்த்துவம் ப்ரவக்ஷ்யாமி தீக்ஷாமார்க்கம் விசேஷத: I

தீயதே தத் சிவத்வம் ஹி க்ஷீயதே பாப பஞ்ஜரம் I

க்ஷய தான விசேஷத்வாத் தீக்ஷா சேத் யபிதீயதேII

பாவஉடல் அழிக்கப்பட்டு, சிவத்வத்தைக் கொடுக்கிறபடியால் ஹதீக்ஷா" என்று கூறப்படுகின்றது. தீக்ஷை என்பது சமயத்தின் நுழைவு வாயிலாக, ஆத்மாக்கள் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலம் நீங்கி சிவஞானம் பெற்று, போகமோக்ஷத்தை அடைவதற்காக சமயத்தைச் சார்ந்த அசார்ய புருஷர்களால் சிஷ்யனுக்கு செய்யப்படுகின்ற ஆன்மீக சடங்கு ஆகும். இவை பற்றி சிவாகமங்களில் விரிவாகக் காணலாம். தீக்ஷை என்பது ஞானத்தைப் பெற்றிட உயிருக்குச் செய்யப்படுவதாகையால், இச்செயல் முற்றிலும் சமயதத்துவஞான அடிப்படையான சடங்குகளை கொண்டதாகும். இது ஆண், பெண் இருபாலார்க்கும் தனித்தனியாகச் செய்யப்படுவதாகும். இந்த சிவதீக்ஷை 1) சமயதீக்ஷை, 2) விசேஷதீசை, 3) நிர்வாணதீசை என முவ்வகையாகப் பழக்கத்தில் உள்ளவற்றை, முதற்கண் அறிந்து கொண்டு, அவற்றின் செய்முறைகளையும் அறிவதற்காகவே, சிவாசாரியார் டிரஸ்ட்டு என்ற இந்த நிறுவனம் இக்கூட்டத்தை ஏற்பாடு செய்து உள்ளதை உளமார வாழ்த்தி, வணங்கி சமயதீக்ஷையைப் பற்றி அறிந்து கொள்ள கேட்டுக்கொள்கின்றேன்.

1) <u>சமயதீக்ஷை</u>

சமயம் என்ற சொல்லுக்கு ஒழுக்கம், மதம் என இருபொருள்படும். **"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்"** எனத் திருவள்ளுவர் திருக்குறளில் கூறியுள்ளார். மானிடராய்ப் பிறந்தவர் உயிரை எவ்வாறு பாதுகாக்கின்றார்களோ, அவர்கள் ஒழுக்கத்துடன் நடப்பதால் சிறப்பு அடைவர். எனவே உயிரைக் காட்டிலும் ஒழுக்கம் சிறந்ததாகும். ஒழுங்கு முறையை அறிவதற்கும், **"கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக"** என்பதும் வள்ளுவர் வாக்கு. எந்த நூல்களையும் குற்றமில்லாமல் படிக்க வேண்டும். படித்த பிறகு அந்த நூல் கூறிய வழியில் நடந்து கொள்ள வேண்டும் என்பது இங்கு நோக்கற்பாலது.

சிவம் என்ற சொல்லுக்கு மங்களம் என்று பொருள். பரஞ்சுடரென்று திரிலோசன சிவாசாரியாரின் சித்தாந்த சாராவளி என்ற நூலில், ஞானபாதத்தில், ஓதம்யேன எனத்துவங்கும் சுலோகத்தால், சிவம் என்ற சொல்லுக்கு பொருள் கொண்டார். சிவபெருமான் சம்பந்தமான மதம் **சைவமதம்**. இது பற்றி சைவத்தின் மிக்கதோர் சமயமில்லை, சிவத்தின் மேல் ஓர் தெய்வமில்லை எனச் **சைவசித்தாந்தம்** கூறுகிறது. இச்சைவ சமயநூல்களைப் படிக்க வேண்டுமாயின், முதலில் **சமயதீக்ஷை** என்ற சடங்கு செய்தல் வேண்டும். வேதம் ஓதுவதற்கு உபநயன பிரம்மோபதேசம் எவ்வாறு முக்கியமாய்ச் செய்யப்படுகின்றதோ அவ்வாறு சைவ மதத்தில் நுழைவதற்கும் அம்மத வழி ஒழுகுவதற்கும் செய்யப்படுகின்ற **தீக்ஷை சமயதீக்ஷை** எனப்படும். இது சாதாரண தீக்ஷையாகும். **இச்சமயதீக்ஷை** என்பது சைவ மதத்தினர் சிவபெருமானிடத்தில் நிலையான பக்தியைப் பெறுவதற்கும், சைவ சம்பந்தமான நூல்களை ஓதுவதற்கும், ஓதியவழி ஒழுகுவதற்கும், சைவசின்னங்களான விபூதி, ருத்திராக்ஷம், சிகை, முப்புரிநூல் அணிவதற்கும், ஆசாரியரால் முதலில் சிஷ்யனுக்குச் செய்யப்படும் **தீக்ஷை சமயதீக்ஷை** ஆகும். இத்தீக்ஷை பெற்றவர்களே சைவராவர். இவர்கள் சூரியன் உதிப்பதற்கு முன்னர், விடியற்காலை 4 மணிக்கு எழுந்திருந்து, நித்தியகடன்களைச் செய்தபின்னர், நைமித்திகமான பிராதக்கால சைவசந்தியாவந்தனம் ஒரு வேளை மட்டும் செய்பவராய், ஸ்தூல பஞ்சாக்ஷரம் ஒன்றை ஜபிப்பவராய், ஆலயம் முதலியவற்றில் எடுபிடி வேலை செய்பவர்களாய், சைவசமய பிரசாரம், சமயத்தொண்டு செய்பவர்களாய் இருப்பதற்காக, சிவாசாரியர்களால் அனைத்து ஜாதியைச் சார்ந்தவர்களுடைய சிவபக்தியின் பக்குவநிலை முதலானவற்றை அறிந்த பின்னரே தகுந்த சிஷ்யனுக்கு, தீக்ஷை செய்வதற்காக, யாகசாலை அமைத்து, நடுவில் வேதிகையில் மண்டலம் அமைத்து, அதில் அத்வமூர்த்தியையும், ஈசானதிக்கில் சப்தவிம்சதி கலசத்துடனும், ஸோமநாதனுடனும், யாகேஸ்வரி யாகேஸ்வரர்களை அஸ்திரதேவனையும், அஸ்திரசக்தியையும் பூஜித்து குண்டம் அமைத்து, அதில் பாலாக்னிவரை பூஜைசெய்து, அதில் சிஷ்யனுக்காகச் செய்யப்படும் **தீக்ஷையே சமயதீக்ஷையாகும்**. சமயிகளுக்கும் சம்ஹிதா மந்திரம் உபதேசம் செய்ய வேண்டும். இந்த **தீக்ஷை விசேஷதீக்ஷை** பெறுவதற்கு அங்கமாய்ச் செய்யப்படுவதாகும். இச்சமயதீக்ஷை செய்த பின்னரே விசேஷதீக்ஷை

செய்யப்படுகின்றது. இதை சிலர் விசேஷ சமய தீக்ஷை என்றும் கூறுவர். இனி விசேஷதீக்ஷையைப் பார்ப்போம்.

2. விசேஷ தீக்ஷை

சமயதீக்ஷை பெற்றவர்களை நன்கு ஆராய்ந்தபின்னர், காலம்கடந்து செய்யப்-படுவதினால், மறுபடியும் சமயதீக்ஷை செய்துகொண்ட பிறகே விசேஷதீக்ஷை செய்யத்-தக்கதால், சமயதீக்ஷைக்கு செய்யப்படுகின்ற அனைத்து சடங்குகளையும் செய்து முடித்த பின்னர்தான் விசேஷதீக்ஷையின் சடங்குகளைச் செய்தல் வேண்டும் என்பது ஆகம விதிமுறை ஆகும். அதாவது முன்பு போலவே மண்டலம், குண்டம், வேதிகைகளை அமைத்து, ஸோமகும்பம் 27, சப்தவிம்சதி சுற்றுகலசங்கள், யாகேஸ்வரன், யாகேஸ்வரீ முதலியவர்களுக்கான கலசங்களையும் வைத்து, முறைப்படி பூஜித்து, குண்டத்தில் வாகீஸ்வரீ, வாகீஸ்வரர்களை அர்ச்சித்து, அவர்களது கர்ப்பத்திலிருந்து சிவாக்னியை உண்டாக்கி, அதில் பாலாக்னியைப் பூஜித்து, மண்டலேஸ்வரரை அர்ச்சித்து, சருஹோமம் வரை செய்து, பின்னர் யாகசாலைக்குள் சிஷ்யபிரவேசம் செய்து, மண்டலத்தில் சமயதீக்ஷையில் சிஷ்யன் எந்த லிங்கத்தில் பூவைப் போட்டு தீக்ஷா நாமம் பெற்றானோ, அந்த லிங்கத்திலேயே பூவைப் போடச்செய்து, பின்னர் ஆசாரியர் சிஷ்யனுக்கு ருத்ராம்சம்ஸித்திப்பதற்காக சிஷ்யனுடையஜீவனை ஸம்ஹிதாமந்திர-பிராணாயாமத்தால், அக்னியில் வாகீஸ்வரியின் கர்ப்பத்தில் வைத்தல் வேண்டும். பிறகே ஆத்மாவிற்கு (1) கர்பாதானம், (2) பும்ஸவனம், (3) சீமந்தம், (4) ஜனனம், (5) உபநிஷ்-கிராமணம், (6) அன்னப்ராசனம், (7) சௌளம், (8) உபநயனம், (9) விரதம், (10) கோ-தானம், (11) ஸ்நானம், (12) விவாஹம், (13) வானப்ரஸ்தம், (14) சந்நியாஸம் செய்யத்-தக்கது ஆகும். ஆசாரியர், சிஷ்யஆத்மாவை, பாவனாகிரமமாய், பிராணாயாமம் மூலம், தனது ஆத்மாவுடனும், ஷடாதாரதியானத்துடனும், தனது துவாதசாந்தத்திலுள்ள சிவபெருமானுடன் சேர்த்து, அதன்பின்பு போகமோக்ஷத்தின்பொருட்டு சிஷ்யனதுஜீவனை சிஷ்யனது உடலில் வைத்து (15) சிவனின் மகனாகச் செய்து, ஸம்ஹிதா மந்திரங்களை பீஜக்ஷரத்துடனும், சூக்ஷ்ம- பஞ்சாக்ஷரத்தை உபதேசம் செய்து (16) காலை மாலை இருவேளையும் சைவசந்தியாவந்தனம் செய்துவரச் செய்வதற்கும், சைவாசாராதி கிரியைகளைப் பெறவும். ஆன்மார்த்த பூஜை செய்து வரவும், விசேஷதீக்ஷை செய்யப்படுகிறது. (17) சிவமகனாகச் செய்தமையால் விசேஷதீக்ஷை பெற்றவர்களை புத்திரர்கள் என சிவாகமம் கூறுகிறது. சிவமகனாய் பிறந்தவிதத்தை நோக்குவோம்.

சிவாசாரியார் அக்னியில் விளங்கும் வாகீஸ்வரியினுடைய கர்ப்பத்தில் பிராணா-யாமத்தால், சிஷ்யனது ஆன்மாவை ருத்ரனாகும் நிமித்தம் சேர்த்தலே (1) கர்பாதானமாகும். ஸ்வதந்திரமான ஆத்மகுணத்தோற்றமே (2) பும்ஸவனமாகும். மாயை மற்றும் ஆன்மா இவற்றின் ஆராய்ச்சி ஞானமே (3) சீமந்தமாகும். சிவம் முதலிய வஸ்துவை ஸ்வீகரித்தலே

(4) ஜனனம் ஆகும். சிவத்தன்மையின் பிரவேசமே (5) உபநிஷ்கிரமணமாகும். பரமான்னத்தை அனுபவிக்கும் தன்மையே (6) அன்னப்ராஸனமாகும். சிவபெருமானது அனுக்கிரஹ மேம்பாடே (7) சௌளமாகும். சிவஞானசாத்திரநூலறிவு சம்பந்தமே (8) உபநயனமாகும். ஐம்புலனடக்கச் செயல்களே (9) விரதமாகும். மறுபிறவி நீக்கமே (10) கோதானமாகும். எல்லாவற்றிலும் பற்று இல்லாது இருத்தலே (11) ஸ்நானமாகும். எண்ணிறைந்த சக்திகளுடன் சேருதலே (12) விவாஹமாகும். அச்சக்திகளின் நீக்கமே (13) வானப்ரஸ்தமாகும். தனிச்சிவமாக இருத்தலே (14) ஸந்நியாஸமாகும். இவ்வாறு ஆசாரியன் மந்திராஹுதிகளால் சிஷ்யனுடைய ஆத்மாவிற்கு பாவனையால் சரீரஸம்ஸ்காரமில்லாமல், ஆன்மாவிற்குமட்டும் கர்பாதானாதிஸம்ஸ்காரங்களைச் செய்து, பிராணாயாமத்தால், சிஷ்யனுடைய ஆத்மாவை தன்னுடைய ஆன்மாவுடனும் ஷடாதார தியானத்துடன், பிராணாயாமத்தால், துவாதசாந்தப்பெருவெளியில் உள்ள சிவபெருமானுடன் சேர்த்து மறுபடியும் சிஷ்யனது உடலில், சிஷ்யனது ஜீவனை (உயிரை) வைத்து சிஷ்யனை சிவனது (15) மகனாகவும் செய்தலாகும். பிறகு பல்லவம், பீஜம், ஸம்ஹிதாமந்திரம் ஹ்ரஸ்வ-பிராஸாதத்துடன், சூக்ஷ்மபஞ்சாக்ஷரத்தை உபதேசித்து, சிவபூஜையை செய்துவர விசேஷமான அதிகாரத்தைத் தருவதால், இது விசேஷதீக்ஷை என்ற பெயரைப் பெறுகிறது. இந்த தீக்ஷையைப் பெற்றோர் தனது ஆயுள் முடிந்ததும் ஈச்வரபதத்தை அடைவர்.

3. நிருவாண தீக்ஷை

நிருவாணம் என்ற சொல்லிற்கு முக்தி என்பது பொருள். இது முக்தியடைவதற்குச் செய்யப்படும் தீக்ஷையாகையால் இது நிருவாண தீக்ஷை எனப் பெயர் பெறுவதாகும். இதற்கு எதிலும் விருப்பு வெறுப்பு இன்றி, உலக வாழ்விலும் பொருளிலும், புற இன்பங்களிலும், பற்றில்லாமல் இருத்தல் சிறந்த தகுதியாகும். எனவே, இந்த நிருவாண தீக்ஷையானது சிஷ்யர்களின் பரிபக்குவ நிலைக்கு ஏற்றதாகவும், போகத்தை விரும்பும் ஹபுபுக்ஷுக்களுக்கும், மோக்ஷத்தை விரும்பும் முமுக்ஷுக்களுக்கும், சமயாசாரங்களைக் கடைபிடிக்கும் மனிதர்-களுக்கும், சமயாசாரங்களைக் கடைபிடிக்காதவர்களுக்கும், இல்லறத்தோருக்கும் துறவறத்-தோருக்கும் ஏற்ப, குருமுகமாய், பூஜாஹோமங்களுடன், சிவாசாரியப்பெருந்தகையோர்களால், சமயதீக்ஷையுடன், விசேஷதீக்ஷை பெற்ற, சிஷ்யர்களுக்கு மட்டுமே செய்யப்படும் தீக்ஷை நிருவாண தீக்ஷை ஆகும். இந்த நிருவாண தீக்ஷையின் வகைகளை, சிஷ்யர்களுக்கு ஏற்ப விசேஷதீக்ஷை விதிப்படி அனுஷ்டித்த விரதத்தை, கைவிடுதலாகிய விரதோத்தாரம் என்பதைச் செய்தபின்னர் செய்திடல் வேண்டும். அதாவது ஸபீஜதீக்ஷையானது புபுக்ஷுகளான சிஷ்யர்-களுக்கும், நிர்பீஜ தீக்ஷையானது முமுக்ஷுகளான சிஷ்யர்களுக்கும் செய்யத்தக்கது. பௌதிக தீக்ஷை எனும் லோகதர்மிணீ தீக்ஷையானது இல்லறத்தவர்களுக்கும், போககாமிக்கும், நைஷ்டிக தீக்ஷை எனும் "சிவதர்மிணீ தீக்ஷை" துறவறத்தவர்களுக்கும், மோக்ஷகாமிக்கும் செய்யப்-படுவதாகும். சைவசமயாசாரங்களை காலை, மதியம், மாலை ஆகிய மூன்று வேளையும்

சைவ-சந்தியாவந்தனம் செய்யவும். ஆசாரக்கொள்கைகளைக் கடைபிடிக்கும் சக்தியுள்ளவர்களுக்கு ஸாபேக்ஷதீக்ஷையினையும், மேற்கூறியவற்றைக் கடைபிடிக்க சக்தியில்லாதவர்களுக்கு நிர-பேக்ஷதீக்ஷையினையும், சிஷ்யர்களுக்கு ஏற்ப ஆசாரியரால் செய்யத்தக்கது. (1) ஸபீஜநிர்வாண-தீக்ஷையானது, சமய, விசேஷ, தீக்ஷையானவர்களுக்கு ஆசாரியர் யாகசாலை, கும்பம், குண்டம், மண்டலம் அமைத்து, அர்ச்சித்து, அக்னிகாரியம் இவற்றை முறைப்படி செய்து, சிஷ்யனது ஜீவனை பாசக்கயிற்றில் இரக்கி ஷடத்வ நியாஸம் செய்து, ஷடத்வசுத்தி செய்து, பிறப்பின் காரணங்களை வினைகளான மும்மலங்களையும், சுத்தி செய்து, பாசக்கயிற்றை ஆகுதி செய்வதாலும், ஒரேகாலத்தில் அனுபவிக்கச் செய்வதாலும், வினைகளை அழியச்செய்து பிறப்பறுத்து மோக்ஷத்தை அளிப்பதேயாகும். உடலுக்குக் காரணமான பிராரப்தம் என்கிற பிராரப்தகர்மா தீட்சையில் அழிக்கப்படாமையால், இவ்வுடலைப் பிரிந்த பின்பு முக்தியை அடைவார்கள். இந்த நிருவாண தீக்ஷையானது சைவசித்தாந்தக் கருத்துகளுடனும், பொருள் விவேகத்துடனும், ஆசாரியர ஞானசிவயோகப்பயிற்சியுடன், உணர்ந்து செய்யத்தக்க, அறிய பல, ஆன்மீகச்சடங்குகளைக் கொண்டு, செய்யப்படுவதாகும். (2) நிர்பீஜ நிருவாண தீக்ஷ-யானது **ஸத்யோ நிருவாணம்,** **அஸத்யோ நிருவாணம்** என இருவகைப்படும். ஸத்யோ நிருவாணம் என்பது தீக்ஷ பெற்ற உடனே அப்பொழுதே உயிர் உடலைப்பிரித்து முக்தியை தருவதாகும். அஸத்யோ நிருவாணம் என்பது தீக்ஷ பெற்றபின் உயிர்வாழ்ந்து உடலைப் பிரிந்த பின் முக்தியைக் கொடுப்பதாகும். ஸத்யோ நிருவாண தீக்ஷயில் ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் ஆகிய மூன்று கன்மங்களையும் அப்பொழுதே சுத்தி செய்து அப்பொழுதே வினைப்-பயன்கள் அனுபவித்து முடிக்கப்படுவதால், வினைகள் யாவும் நசித்து இல்லாமையால், உடனே முக்தி பெறுவர். அஸத்யோ நிருவாண தீக்ஷையில், சஞ்சிதம் ஆகாமியம் எனப்படும் இருவகைக் கன்மங்கள் மட்டுமே சுத்தி செய்யப்பட்டு அழிக்கப்படுகின்றபடியால், இனி பிறப்பு இல்லாமலும், இருக்கின்ற உடலுக்கு காரணமான பிராரப்தகன் மம் சோதிக்கப்படாமையால் அனுபவிப்பதற்கு சரீரம் நிற்பதற்குக் காரணமாகிவிட்டமையால் ஆயுள் முடிவில் உடல்நீக்கி முக்தியை அடைவார்கள். இத்தகைய தீக்ஷகள் இருபாலாருக்கும் செய்யத்தக்கன. லோகதர்மினி எனும் **பௌதிக தீக்ஷ** என்பது போககாமிகளுக்கு, திரோதானசக்திரூபமாகிய **"சிகாச்சேதம்"** என்கின்ற சடங்கு மட்டும் இல்லாமல், மற்ற சடங்குகளைப் பெற்றவர்கள் சாதகர்கள் என அழைக்கப்படுவர். சிவதர்மினீ எனும் நைஷ்டிக **தீக்ஷயானது,** மோக்ஷகாமிகளுக்கு திரோதான சக்திரூமாகிய **"சிகாச்சேதத்துடன்"** செய்யபடுவதாகும். மேலும் தீக்ஷக்குப்பின் உரிய அதிகாரத்தைக் கொடுக்கக்கூடியதாக செய்யப்படுவது **ஸாதிகார தீக்ஷ** என்றும், தீக்ஷக்குப் பிறகு உரிய அதிகாரத்தைச் சீடனுக்கு கொடுக்காதவாறு, இயலாதவர்களுக்குச் செய்யப்படுவது **நிரதிகார தீக்ஷ** என்றும் பெயர் பெறும். இவ்வாறு ஆகம முறைப்படி சிறந்த ஆசாரியர்கள் வாயிலாக சிஷ்யர்களான ஆன்மாக்கள் முறைப்படி தீக்ஷ பெற்று இவ்வுலகில் சிறந்த போகத்தையும், மேலுலகில் மோக்ஷத்தையும் பெறுவர். இவ்வாறு ஆன்மாக்களுக்கு போகம், மோக்ஷம்

இரண்டையும் அடைவிக்கவல்லது தீக்ஷையே ஆகும். நிருவாண தீக்ஷையைப் பெற்றவர்கள் உடலைப் பிரிந்தபின் மறுபிறப்பு இல்லாத முக்தியெனப்படுகிற சிவபதத்தை அடைவார்கள் என சிவாகமங்கள் கூறுகின்றன.

"சைவ தீக்ஷயின் வகைகள்"

பெரிய புராணத்தில், சேக்கிழார் சுவாமிகள், சுந்தரரின் தடுத்தாட்கொண்ட புராணத்தில், கிழப்பிராம்மணர் ஒருவர் ஆரூரனாகிய சுந்தரரின் திருமணத்தில், ஓலையொன்று காட்டினார் அதில்

அருமறை நாவல் ஆதிசைவன் ஆரூரன்செய்கை
பெருமுனி வெண்ணை நல்லூர் பித்தனுக்கு யானும்என்பால்
வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கு
இருமையால் எழுதநேர்ந்தது இவை என் எழுத்து

என இருந்தது. இதன்படி சுந்தரர் எனக்கு அடிமை எனக்கூறி வாதிடும் போது, சுந்தரர் அவ்வோலையை வாங்கி கிழத்தெறிந்தார். இதனைக் கண்ட கிழவேதியர் கூறுகின்றார். இவன் இவ்வாறு செய்வான் என்பதை யாம் முன்பே அறிவோம். இவன் கிழித்த ஓலை படிவோலை-ஆகும். மூலவோலையைக் காட்டி அடிமையாக்கிக் கொண்டார் என்று குறிப்பிட்டு உள்ளார். அன்று முதல் இன்று வரை சிவனுக்கே தொண்டுசெய்யும் ஆதிசைவமரபினர்களுக்கு, [1]ஆமர்த்தகீ, [2]கோளகீ, [3]புஷ்பகிரி [4]சந்தானகாளேஸ்வரம், [5]ரணபத்திரம் என்ற ஐந்து ஆதிசைவ-மடங்கள் உள்ளன. அவ்வைந்து மடங்களுள் கோளகீமடத்தைச் சார்ந்தவர் ஈசான சிவாசார்யர். அவரது சிஷ்யன் விமலேஸ்வர சிவாசாரியார். அவருடைய சிஷ்யன் அஸ்திர சிவாசார்யர். அஸ்திர சிவாசாரியரின் சிஷ்யரான சோமசம்பு சிவாசாரியாரால் இயற்றப்பட்ட நூல் சோமசம்பு பத்ததியாகும். அதில் சமய தீக்ஷையைப் பற்றி 115 சுலோகங்களும், விசேஷ திக்ஷையைப் பற்றி 28 சுலோகங்களும், நிருவாண தீக்ஷயைப் பற்றி 244 சுலோகங்களும், திரிதத்துவ தீக்ஷயைப் பற்றி 52 சுலோகங்களும், ஏகதத்வ தீக்ஷையைப் பற்றி 6 சுலோகங்களும், ஆசார்யபிஷேகம் பற்றி 27 சுலோகங்களும், சாதகாபிஷேகம் பற்றி 13 சுலோகங்களும், அஸ்திராபிஷேகம் பற்றி 15 சுலோகங்களும் ஆக 500 சுலோகங்கள் தீக்ஷயைப் பற்றி கூறப்பட்டுள்ளன. அவற்றை ஆதாரமாய்க் கொண்டு தீக்ஷயின் வகைகளையும், அதன் செய்முறைகளையும் கூறுகின்றேன்.

உயிர்களுக்கு ஞானத்தைத் தருவதும், அஞ்ஞானத்தைப் போக்குவதும் தீக்ஷ. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை அழிப்பது தீக்ஷ. ஆகமங்களில் ஞானகண்டத்தின் ஸாரமாய் விளங்குவது தீக்ஷ. இறைவனை உணர்த்தி, வழிபட நல்வழி

காட்டுவது தீக்ஷை. பதி, பசு, பாசம் இவற்றை உணரச் செய்வது தீக்ஷை. நல்லாசிரியர் நல்ல மாணாக்கரின் ஆன்மாவின் பக்குவ நிலைக்கு ஏற்ப, சிஷ்யனுடைய உயிர்க்குச் செய்யப்படும் சடங்கு, தீக்ஷை. சிஷ்யனுடைய ஆன்மாவின் ஐவகைப் பாசங்களைப் போக்குவது தீக்ஷை. இறைவனது பதித்தன்மையை தரவல்லது தீக்ஷை. வைதிகசைவமதமாகிய காணாபத்தியம், சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், சௌரம் என்ற ஆறுவகை சமயங்களுக்கும் நுழைவுவாயிலாக விளங்குவது தீக்ஷை. தீக்ஷா என்ற சம்ஸ்கிருத சொல், தீ + க்ஷா என இரண்டெழுத்துகளால் ஆகிய சொல். தமிழில் தீக்ஷை எனக் கூறப்படுகிறது. தீ என்ற எழுத்து, தீயதே என்ற தாதுவின் பொருளாகிய கொடுப்பதையும், க்ஷா என்ற எழுத்து, க்ஷீயதெ என்ற தாதுவின் பொருளாகிய அழிப்பதையும் தெரிவிக்கின்றது. தீக்ஷை என்ற சொல்லின் பொருள் சிவத்தன்மையைக் கொடுத்து பசுத்தன்மையை அழிப்பதால் (பாபக்கூட்டத்தை அழிப்பதால்) தீக்ஷை என்று சான்றோர் கூறுவர். தீக்ஷையினால் ஞானமும், ஞானத்தால் மோக்ஷமும் பெறச்செய்வது தீக்ஷை. ஞானம் ஒளிமயமானது. பாசம் இருள்மயமானது. ஒளி தோன்றிய போது, இருள் அகன்றுவிடும். அஞ்ஞான இருளைப்போக்கி ஞானஒளியைத் தரவல்லது தீக்ஷை. பற்றற்றான் பற்றினைப் பெறச்செய்வது தீக்ஷை. இருவினை ஒப்பாகிய பக்குவநிலைக்கும், விருப்பத்திற்கும் ஏற்பச்செய்யப்படும் சடங்கு, தீக்ஷை. பிறவாப்பேரின்ப நிலையைத்தரவல்லது சிவதீக்ஷை ஆகும். இவற்றின் வகைகள் வருமாறு.

1) நிராதாரதீக்ஷை

சிவதீக்ஷையானது சிவாகமங்களில் (1) நிராதாரதீக்ஷை, (2) சாதாரதீக்ஷை என இரு வகைப்படும். முதலாவதான நிராதாரதீக்ஷை என்பது யாதெனில், ஆதாரம் என்றால் ஒன்றைப் பற்றி இருத்தல் என்று பொருள்படும். நிராதாரம் என்றால் எதையும் பற்றிக்கொள்ளாது, சிவபெருமான் நேரில் தானாகவே, ஸ்வதந்திரனாம் ஆன்மாவிற்கு தீக்ஷை செய்தல் நிராதார தீக்ஷை எனப்படும். இந்த நிராதார தீக்ஷையானது மும்வகை ஆன்மாக்களுள் ஆணவமலம் ஒன்றை மட்டும் உடையவர்களாய், சிவதத்துவமான, சுத்தபுவனத்தில் வாஸம் செய்பவர்களான, "விஞ்ஞான கலர்" என்றழைக்கப்படும் ஆத்மாக்களுக்கு, சிவனாலேயே, சக்திநிபாதத்திற்கு ஏற்ப செய்யப்படுவது. ஆசாரியனை அதிஷ்டிக்காமல் (குருமுகமாகச் செய்யாமல் சிவபெரு-மானாலேயே இருவினை ஒப்பிற்குஏற்ப ஆதாரமில்லாமல்) செய்யப்படுவதால் இது முதலாவதான நிராதார தீக்ஷை எனப்படும்.

2. சாதாரதீக்ஷை

ஆதாரம் எனும் ஒன்றைப் பற்றிக் கொண்டிருத்தலாகும். குரு எனப்படுகிற ஒருவரை ஆதாரமாய்க் கொண்டு சிவபெருமானால் ஆசாரியர் வாயிலாக ஆத்மாவிற்குச் செய்யப்படும் தீக்ஷையே சாதாரதீக்ஷை ஆகும். இந்த சாதாரதீக்ஷையானது (1) ஆணவம், (2) கன்மம், (3) மாயை எனும் மும்மலத்தோடு கூடினவர்களான, ஆத்மதத்துவ அசுத்தபுவனவாசிகளான,

"சகலர்" என்கிற ஆத்மாகளுக்கு, சிவபெருமான் குருவடிவில் இருந்துகொண்டு (சிஷ்யர்களுக்கு குருவை ஆதாரமாய்க் கொண்டு) செய்யப்படுவதால் இது சாதார **தீக்ஷை** எனப்படும். சிவபெருமான் தாமே நேராகச் செய்யாமல், ஆசாரியரை ஆதாரமாய் கொண்டு இத்தீக்ஷை செய்யப்படுவதால் இது சாதார தீக்ஷை எனப்படும். சிவாகமங்களில் தீக்ஷை நிராதாரம் சாதாரம் என இருபெயரில் தான் முதலில் கூறப்பட்டுள்ளது. 1) நிராதாரதீக்ஷைக்கு ஓர் எடுத்துக்காட்டு, வேலூரைச்சார்ந்த விரஞ்சீபுரத்தில், ஆதிசைவச் சிறுவனுக்கு இறைவனே முப்புரிநூலணிவித்து, தானே சிவதீக்ஷை செய்து, தனக்கு அவனைக் கொண்டே தன்வழிப்பாட்டை ஆலய சிவ-பூஜையை செய்வித்துக் கொண்டார் என்பது வரலாறு. இங்கு இன்றும் கடைசி ஞாயிற்றுக்கிழமை இந்த ஐதீகவிழா மூலம் நிராதாரதீக்ஷையை அறிந்து கொள்வோமாக. இரண்டாவதாக கூறப்-பட்டுள்ள சாதாரதீக்ஷையானது (1) **சமயதீக்ஷை**, **(2) விசேஷதீக்ஷை, (3) நிருவாணதீக்ஷை** என முவ்வகையானதை முன்னர் பார்த்தோம். மூன்றாவதாகக் கூறப்பட்ட நிருவாண தீக்ஷையானது (1) சபீஜ தீக்ஷை, (2) நிர்பீஜ தீக்ஷை, (3) சாதிகார தீக்ஷை, (4) நிரதிகார **தீக்ஷை** என நான்கு வகைப்படும்.

<u>(1) ஸபீஜதீக்ஷை : -</u> பீஜம் என்ற சொல்லுக்கு காரணம் என்று பொருள். ஸபீஜம் என்ற சொல்லுக்கு காரணத்துடன் கூடியது என்று பொருள். ஸபீஜதீக்ஷை என்பது சைவ சமயம், சைவ சமயாசாரம் இவற்றைக் கடைபிடிக்கக்கூடிய மலபரிபாகத்துடன் சமயக்கல்வி அறிவும், ஆற்றலும் மிக்கவர்களான, சமயதீக்ஷையைப் பெற்ற சமயிகள், சமயதீக்ஷையுடன், விசேஷதீக்ஷையைப் பெற்ற புத்திரர்கள், பௌதிகதீக்ஷையைப் பெற்ற சாதகர்கள், ஆகிய முவ்வகைப்பட்டவர்- களுக்கு ஆசாரியரால் செய்யத்தக்கதாகும். ஆசாரியரால் குண்டமண்டலங்களுடன் யாகசாலை அமைத்து முறையாக பூஜாஹோமங்களுடன் சிஷ்யனுடைய ஆகாமியம், சஞ்சிதம், ப்ராரப்தம் எனும் முவ்வகை கன்மங்களுள் ஆகாமியம், சஞ்சிதம் எனும் இருவகைக்கன்மங்களைச் சுத்தி செய்து, ஆகுதிகளால் அழித்து, ப்ராரப்தம்என்ற கன்மத்தை மட்டும் ஆயுள்வரை சமயாசாரங்-களைக் கடைபிடிப்பதற்காக விட்டுவைத்து நித்யகன்மங்களில் பேரதிகாரம் உடையதாகச் செய்வதாகும். இவ்வாறு உயிர் உள்ளவரை ஆசார அனுஷ்டானத்திற்காக, வினையை காரணமாக விட்டுவைத்து அதன் காரணமாக அதிகாரத்தை பெறுவதன் காரணமாக செய்யப்-படுவதால் இது ஸபீஜதீக்ஷை எனப் பெயர் உடையதாயிற்று. இது தீக்ஷைக்குப் பின் சிஷ்யனுக்கு அதிகாரத்தைத் தருவதாகச் செய்யப்படுவதினால் இந்த ஸபீஜதீக்ஷையே சாதிகாரதீக்ஷை என்றும் பெயர் பெறும்.

<u>2. நிர்பீஜதீக்ஷை : -</u> பீஜம் என்பது காரணம், நிர்பீஜம் என்பது காரணம் இல்லாதது எனப் பொருள்படும். நிர்பீஜதீக்ஷை என்பது சமயம், ஆசாரம் இவற்றைக் கடைபிடிக்க முடியாதவர்களுக்கும், பரிபக்குவம் இல்லாதவருமான முதியோர்கள், பெண்கள், நோயாளிகள், சிறுவர்கள் ஆகியவர்களுக்கும் செய்யத்தக்கதாகும். இந்த நிர்பீஜதீக்ஷை மற்ற கன்மங்களைச் சுத்தி செய்வதுடன் தீக்ஷை செய்தபின்பு கடைபிடிக்க வேண்டிய

சைவசந்தியாவந்தனம். சிவத்-தொண்டு, சிவலிங்கார்ச்சனம் முதலிய சைவ சமயாசாரங்களையும், தீக்ஷை செய்யும் பொழுதே சோதித்து, ஆஹுதிகளால் சுத்தி செய்து, அழித்து, நைமித்திகாதி கன்மங்களில் அதிகாரம் அளிக்கப்படாமல் செய்யப்படுவதாகும். இவ்வாறு தீக்ஷையிலேயே சமயாசாரங்களை சுத்தி செய்து ஒழிக்கப்பட்டமையின் காரணமாக நைமித்திக மற்றும் காம்மிய கன்மங்களில் அதிகாரம் கொடுக்கப்படாமையால் இந்த நிர்பீஜ தீக்ஷையே நிரதிகார தீக்ஷை என்றும் பெயர் பெறும்.

3. ஸாதிகார தீக்ஷை :- ஸாதாரதீக்ஷாவகைகளுள் ஒன்றான இந்த ஸாதிகாரதீக்ஷையை ஸபீஜ தீக்ஷை என்றே கூறலாம். இங்கு அதிகாரம் என்பது சைவாகம கிரியைகளைச் செய்திடத் தகுதி உடையவராக ஆதல் என்பது பொருள். தீக்ஷைக்குப்பின் சிஷ்யனுக்கு அளிக்கக்கூடிய அதிகாரத்தோடு கூடியதனால் இது **ஸாதிகாரதீக்ஷை** எனப் பெயர் பெறும். இந்த தீக்ஷையானது மலபரிபாகம் உள்ளவர்களுக்கும், சமயாசாரத்தைக் கடைபிடிப்பவர்களுக்கும், அறிவு ஆற்றல், உடல் வன்மை உள்ளவர்களுக்கும் செய்யத்தக்கதாகும். இது ஆசாரியரால் யாகசாலையில் குண்டமண்டல பூஜைகளுடன், சமயாசாரத்தை அனுஷ்டிப்பதற்காக பிராப்தம் என்ற கன்மாவை மட்டும் விட்டு வைத்து மற்ற இருகன்மங்களை மட்டுமே ஆஹுதி அளித்தலால் சுத்தி செய்துப் போக்கி, நித்திய, நைமித்திக, காம்யபூஜை, இருகிரியைகளில் அதிகாரம் அளிப்பதற்காக சாதகர், புத்ரகர், ஆசாரியர், இவர்களுக்குச் செய்யப்படுவதாகும். ஆசாரியரால், தீக்ஷைக்குப் பின்பு சிஷ்யர்களுக்கு சமயாசாரங்களில் அதிகாரம் அளிக்கும் வகையில் செய்யப்-படுவதால் இது **ஸாதிகார தீக்ஷை** என்ற பெயருடையதாகும்.

4. நிரதிகார தீக்ஷை :- ஸாதிகாரதீக்ஷா வகைகளுள் ஒன்றான, இந்த நிரதிகார தீக்ஷையை நிர்பீஜதீக்ஷை என்றே கூறலாம். நிரதிகாரம் என்ற சொல்லுக்கு, சைவசமய ஆசாரங்களை அனுஷ்டிக்கவும், ஆலயாதிகளில் நைமித்திக, காம்யகிரியைகளைச் செய்யவும் அதிகாரத்தகுதி இல்லை என்பது பொருள். **நிரதிகாரதீக்ஷை** என்பது, சமய ஆசாரங்களைக் கடைபிடிக்க இயலாதவர்களுக்கும், பதிபக்தியில் பக்குவ நிலையுடையவர்களுக்கும், ஆற்றல், உடல் வலிமை இல்லாதவர்களுக்கும், வயோதிகர், பெண்கள், சிறியவர்கள், நோயாளிகள் முதலானோரக்குச் செய்யத்தக்கது. இது யாகசாலையில் ஆசாரியரால் குண்ட, மண்டல, ஹோம, பூஜைகளுடன் அமைத்து, அக்னியில் அனைத்து கன்மங்களையும் சுத்தி செய்து அழிக்கும் பொழுதில் தீக்ஷையிலேயே சமயாசாரங்களைச் சேர்த்து அழிக்கும் பொழுதில், தீக்ஷையிலேயே கடைபிடிக்க வேண்டிய வினையாகிய சமயாசாரங்களைச் சேர்த்து ஆகுதி செய்து, முற்றிலும் அழிக்கப்பட்டு தீக்ஷைக்குப்பின்பு, சிஷ்யனுக்கு சமயாசாரங்களில் அதிகாரம் அளிக்காதவாறு செய்யப்-படுவதாகும். தீக்ஷாகாலத்திலேயே சுத்தி செய்யப்பட்டுவிட்டமையால் பிறகு ஆலயாதிகளில் நைமித்திக மற்றும் காமிய கிரியைகளைச் செய்திட சீடர்களுக்கு அதிகாரம் அளிக்கப்-படாமையால் நிரதிகாரதீக்ஷை எனப் பெயர் பெறும். இதனை நிர்பீஜ தீக்ஷை என்றும் கூறுவர். சைவாகமங்களில் சிவதீக்ஷையானது

மேலும் முவ்வகைப்படும். அவை (1) **சாம்பவீதீக்ஷை**, (2) **சக்திதீக்ஷை**, (3) **மாந்திரீதீக்ஷை** எனும் ஹௌத்ரீதீக்ஷை என்பன ஆகும்.

(1) சாம்பவீ தீக்ஷை

சம்பரம் என்ற சொல்லுக்கு மந்திரம் என்பது பொருள். எனவே மந்திரத்தால் மட்டும் ஆசாரியரானவர் குண்டம், மண்டலம், பூஜைகள், எதுவுமின்றி, தானே சிஷ்யனை, மந்திரத்தால் நியசிக்கப்பட்ட, தனது சூரியஸோமாக்னியாகிய, ஞானக்கண்களின் நோக்கினால் (1) ஆணவம், (2) கன்மம், (3) மாயை, (4) பிந்து, (5) திரோதானம் என்ற ஐவகைப் பாசங்களை நீக்குதலே சாம்பவீ தீக்ஷையாகும். இவ்வாறு குரு கடாக்ஷத்தினாலேயே ஐவகைப்பாசங்களும், ஆகாமியம் சஞ்சிதம், பிராப்தம் என்ற மூன்று கன்மங்களும் விலகி, சிஷ்யன் சிவஞானம் பெறுவதாகும். எனவே, இது ஆசாரியனுடைய மந்திரபலத்தால், விசேஷ ஞானத்தால், எவ்வித புறக்கிரியை-களும் இன்றி, செய்யப்படுவதால் **சாம்பவீ தீக்ஷை** எனப் பெயர் பெறும். இந்த தீக்ஷை விஞ்ஞானவதீ என்று மற்றும் ஒரு பெயரை உடையதாகும்.

(2) சக்தி தீக்ஷை

சக்தி என்ற சொல்லுக்கு வல்லமை என்பது பொருளாகும். **சக்தி தீக்ஷை** என்பது, குருவானவர், தனது மனத்தின்கண், அகவழிபாடு செய்து, மனோபாவனாசக்தியால் குண்ட மண்டலங்களை தன் மனதுள் கற்பித்து, அவற்றில், வெளியில் செய்யப்படுவது போலவே அனைத்துக் கிரியைகளையும் செய்து, தனது மந்திரவல்லமையால், ஞானத்தால், சிஷ்யனை சுத்தி செய்து, சிஷ்யனது பாசத்தை நீக்குவதாகும். பாசம் நீங்கியதனால் அவன் ஞானவான் ஆகின்றான். குருவானவர் தன்னுடைய தவசக்தியைக்கொண்டு செய்வதால் இது **சக்திதீக்ஷை** எனப் பெயர் பெறும். இச்**சக்தி தீக்ஷையே ஞானவதீ** என்று மற்றும் ஒரு பெயரை உடையதாகும்.

(3) மாந்த்ரீ தீக்ஷை

மாந்த்ரீ தீக்ஷை என்பது ஆசாரியர் யாக சாலை, வேதிகை, மண்டலம், குண்டம் இவற்றை முறைப்படி புறத்தே அமைத்து, பூஜை ஹோமம் முதலிய உரிய சடங்குகளைச் செய்து, சிஷ்யனுடைய பாசத்தை அழிப்பது ஆகும். இந்த **மாந்த்ரீ தீக்ஷை** என்பதே **ஹௌத்ரீ தீக்ஷை** என்றும் கூறப்படும். இந்த **ஹௌத்ரீ தீக்ஷை** என்பது மேலும் (1) ஞானவதி, (2) கிரியாவதி என்று இருவகைப்படும். முதலாவதான ஞானவதி என்பது ஆசாரியர் மனோவியாபாரத்தால் செய்யப்படுவதாகும். இரண்டாவதான கிரியாவதியோ என்றால் குண்டமண்டலங்களோடு ஆகம மந்திரபூர்வ கிரியைகளால் செய்யப்படுவதாகும். இந்த மாந்த்ரீ தீக்ஷையில் பலவகை தீக்ஷைகள் உள்ளடங்கினவாகவும், அங்கங்களாகவும்

உள்ளன. அவையாவன, (1) சாக்ஷுஷீ தீக்ஷை, (2) ஸ்பர்ஸ தீக்ஷை, (3) வாசிக தீக்ஷை, (4) மானஸி தீக்ஷை, (5) சாஸ்திர தீக்ஷை, (6) யோக தீக்ஷை என ஆறுவகைப்படும். இந்த மாந்த்ரீ தீக்ஷையே (1) சமய தீக்ஷை, (2) விசேஷ தீக்ஷை, (3) நிருவாணதீக்ஷை என மூன்றாகவும், பௌதிக தீக்ஷை, நைஷ்டிக தீக்ஷை என இருவகையாகவும் உள்ள தீக்ஷையாகும்.

(1) சாக்ஷுஷீ தீக்ஷை

(1) சாக்ஷுஷீ தீக்ஷை என்பதன் பொருள் யாதெனின், ஞானக்கண்களின் பார்வையால் செய்யப்படுவதாகும். (சக்ஷு = கண்) இந்த தீக்ஷை, ஆசாரியர் சிவபாவனையால், மந்திரம் நியசிக்கப்பட்ட தனது சோமசூர்யாக்னிகளாகிய கண்களால் சிஷ்யனைப்பார்த்து, சிஷ்யனுக்கு பாசவிமோசனம் செய்தலாகும். நிரீக்ஷணம் என்றால் பார்த்தல் என்பது பொருள். ஆகவே ஆசாரியருடைய அனுக்ரஹமான அருட்பார்வையாலேயே செய்யப்படுவதினால் இது நிரீக்ஷண தீக்ஷை என்றும் சாக்ஷுஷீ தீக்ஷை என்றும் பெயருடையதாகும். இந்த சாக்ஷுஷீ தீக்ஷைக்கு எடுத்துக்காட்டாக சான்றோர்கள் மீனைக்கூறுவர். மீன்கள் தண்ணீரில் முட்டையிட்டுக் கொண்டே வெகுதூரம் சென்று, பின்பு தான் இட்ட முட்டைகளைத் திரும்பிப் பார்த்த உடன், அந்த பார்வையினாலேயே மீன் முட்டைகள் யாவும் குஞ்சுகளாகும். அதுபோலவே ஆசாரியரின் அருள்நோக்காலேயே சிஷ்யன் மாசு நீங்கி ஞானம் பெறுகிறான் என்பதாகும்.

(2) ஸ்பர்ச தீக்ஷை

ஸ்பர்சம் என்ற சொல்லுக்கு தொடுதல் என்பது பொருள். ஸ்பர்ச தீக்ஷை என்பது, ஆசாரியர் சிஷ்யனை அருள்பார்வையால் பார்த்து, பாசவிமோசனம் செய்தபின்பு, தனது கைகளை சிவஹஸ்தங்களாய் செய்துகொண்டு, அத்தகைய சிவக்கரங்களால், சிஷ்யனை, சிஷ்யனின் தலை முதல் கால் வரை உடல் முழுவதும் தொடுவதால், பாசத்ரயத்தை நீக்கி சிவவடிவாகச் செய்வதாகும். ஆசாரியர் தனது சிவஹஸ்தத்தினால் சிஷ்யனது தலையில் கை வைத்து, பின்னர் சிஷ்யனது உடல் முழுமையும் ஸ்பர்சனம் (தொடுதல்) செய்யப்படுவதினால் இது ஸ்பர்சதீக்ஷை எனக் கூறப்படுகின்றது. இந்த ஸ்பர்ச தீக்ஷைக்கு எடுத்துக்காட்டாக கோழியைக் கூறுவர் சான்றோர்கள். கோழியானது தான் இட்ட முட்டைகளைத், தொட்டுத் தழுவி, அதனை அடைகாத்து, எவ்வாறு குஞ்சாக மாற்றுகிறதோ அதைப் போலவே ஆசாரியர் சிஷ்யனைத் தொட்டு, பாசம் நீக்கி, பதியாம் சிவத்தன்மையை ஏற்படுத்துகிறார் என்பது பொருளாகும்.

(3) வாசக தீக்ஷை

வாசகம் என்ற சொல்லிற்கு சொற்கூற்று என்பது பொருள். ஆகவே வாசக தீக்ஷை என்பது ஆசாரியரின் வாயினால் உபதேசித்து செய்யப்படுவதாகும். அதாவது ஆசாரியர் சிஷ்யனை புனிதனாக்கி, ஆகமசாரமான கருத்துக்களையும், பஞ்சாக்ஷரம், ஸம்ஹிதா மந்திரங்கள், கலாட்யப்ராஸாத மந்திரங்கள், மூலமந்திரங்கள், காயத்ரீ மந்திரங்கள், முதலான மந்திரங்களை முறையோடு சிஷ்யனுக்கு உபதேசித்தலாகும். இவ்வாறு உபதேசம் பெற்ற பின்பு அதில் பயிற்சி செய்து உபாசிப்பதால் மட்டுமே மந்திரங்கள் பயனளிக்கத்தக்கவையாகும். அவ்வாறு உபதேசம் பெறாத மந்திரங்கள் சித்தி அளிக்காதவை ஆகும்.

(4) மானஸதீக்ஷை

ஆசாரியர் மனதால் சிஷ்யனுக்கு தீக்ஷை செய்தலே **மானஸதீக்ஷை** எனப்படும். அதாவது ஆசாரியர், தனது தவயோக சித்திகளால், அகவழிபாடு செய்து, தனது சிஷ்யனை ரேசக, பூரக கும்பகங்களால் பிராணயாம விதிமுறையால் சுத்தி செய்து, தனது தலைஉச்சித் துவாதசாந்தம் வரை உச்சரித்த, ப்ராஸாத மந்திரோச்சாரணத்தால் சிஷ்யனுக்கு சைதன்யத்தை உண்டுபண்ணி, பதித்தன்மையை அடைவித்தலாகும். ஆசாரியர் தனது மனோவியாபாரத்தால் மட்டுமே செய்வதால் இது **மானஸதீக்ஷை** எனப்பெயருடையதாகும். இந்த மானஸதீக்ஷைக்கு சான்றோர்கள் ஆமையை எடுத்துக்காட்டாக கூறுவர். ஆமையானது முட்டையிட்ட பின்பு, சிலகாலம் கழித்து எப்பொழுது தனது முட்டைகளை நினைத்துக் கொள்கிறதோ அப்பொழுதே அந்த முட்டைகள் குஞ்சுகளாக மாறுவது போல ஆசாரியர் சீடனை சுத்தி செய்து மனதில் நினைப்பதினால் பாசவிமோசனம் செய்கிறார் என்பது கருத்து.

(5) சாஸ்த்ர தீக்ஷை

சாஸ்த்ரதீக்ஷை என்பது ஆசாரியர் சிஷ்யனுக்கு வேதாகமப் பொருளை சைவ சாஸ்திரங்- களில் தெள்ளிய உட்கருத்தை முறையாக உபதேசித்து, சைவசித்தாந்த விளக்க உரைகளைத் தந்து, அதாவது பதி, பசு, பாசம், எனும் முப்பொருளை உணர்த்தி, பக்குவ நிலைக்கு சிஷ்யனை உயர்த்துவதாகும். சாஸ்திரங்களைக் கூறி விளக்குவதாக செய்யப்படுவதால் இது **சாஸ்த்ர-தீக்ஷை** என்ற பெயரை உடையதாகும்.

(6) யோக தீக்ஷை

யோகம் என்ற சொல்லுக்கு இணைதல் என்பது பொருள். அதாவது ஜீவாத்மா பரமாத்மா உடன் முறையாகச்சேருதலே யோகம்எனப்படும். **யோக தீக்ஷை** என்பது ஆசாரியர் சிஷ்யனுக்கு யோகமுறைகளைக்கூறி, யோகஅங்கங்களை விளக்கி, [1]மூலாதாரம்,

[2]சுவாதிஷ்டானம், [3]மணி-பூரகம், [4]அநாஹதம், [5]விசுத்தி, [6]ப்ரம்மாந்திரம் என்கின்ற இந்த ஆறுநிலைகளான, ஷடாதார நிலைகளை உணர்த்தி, யோக மார்க்கத்தால் பிராணாயாமக் கிரமத்தால், சிவனை அடையும் வழிமுறைகளைக் கூறி, யோக அப்யாசம் செய்து வைத்து, யோகத்தால் முக்தி பெறச் செய்வதேயாகும். இவ்வாறு செய்த சிவயோகத்தால் சிஷ்யர்கள் பக்குவ நிலையில் பாச-விமோசனம் அடைவர்.

(1) <u>த்ரிதத்வ தீக்ஷாவிதி</u>

த்ரிதத்வ தீக்ஷாவிதி என்பது நிருவாண தீக்ஷையை விரிவாக இல்லாமல், சுருக்கி வேறு-வகையில் செய்வதாகும். அதாவது [1]ஆத்ம தத்துவம், [2]வித்யா தத்துவம், [3]சிவ தத்துவம் ஆகிய மூன்று தத்துவங்களையும், அவற்றிற்கு முறையே அதிபர்களான [1]பிரம்மா, [2]விஷ்ணு, [3]ருத்திரன் ஆகிய மூன்று தத்வஅதிபதிகளையும், முன்பு போலவே பாசசூத்திரத்தில் நியாசம் செய்து, பின்பு சுத்தி செய்து, ஆகுதி செய்து, முன்பு போல யாவும் செய்வதே த்ரிதத்வதீக்ஷா எனப்படுவதன் செய்முறை ஆகும்.

(2) <u>ஏகதத்தவ தீக்ஷா விதி</u>

ஏகதத்வதீக்ஷா விதி என்பது நிர்வாணதீக்ஷையைப்போல் சுருக்கிச் செய்வதாகும். (1) சாந்தியதீத கலை, (2) சாந்தி கலை, (3) வித்யா கலை, (4) ப்ரதிஷ்டா கலை, (5) நிவிர்த்தி கலை ஆகிய ஐந்து கலைகளையும், (1) வர்ணம், (2) பதம், (3) மந்திரம், (4) புவனம், (5) தத்வம், (6) கலை. மேற்கூறிய ஐந்து கலைகளையும், ஆறு அத்வாக்களையும் உள்ளடக்கிய (1) ஆத்ம தத்துவம், (2) வித்யாதத்துவம், (3) சிவதத்வம் ஆகிய மூன்றையும் உள்ளடக்கியதாக, எல்லா-வற்றையும் சிவதத்துவம் ஒன்றில் அடக்கி, அதாவது நூலில் கோர்க்கப்பட்ட ரத்னங்களைப் போல் சேர்த்து, உள்ளடங்கி இருப்பதாய் பாவித்து, பாசசூத்திரத்தில் ஆவாஹித்து, சோதித்து, ஆகுதி செய்து, சுத்திசெய்து, சப்தவிஷுவதியானத்துடன் முன்புபோல் பூர்ணாஹுதி கொடுத்து, சீடனுக்கு சிவதத்துவத்தை அடைவித்து, சிவகும்பமாகிய யாகேஸ்வரகும்பத்தால் அபிஷேகித்தல் ஏகதத்வ தீக்ஷையின் செய்முறையாகும்.

(3) <u>ஆகமங்களில் தீக்ஷை</u>

சைவசமயத்தில் அவசியமாக, முப்பொருள் விளக்கம். மும்மல விளக்கம், முக்கன்ம விளக்கம், சக்திநிபாத விளக்கம், சப்தவிஷுவ நியாஸம், ஆசார்ய லக்ஷணம், சிஷ்ய லக்ஷணம், யாகசாலை அமைப்பு, மண்டல அமைப்பு, குண்ட அமைப்பு, வேதிகை அமைப்பு, சாதகாபிஷேகம், ஆசார்யாபிஷேகம், அஸ்த்ராபிஷேகம் முதலியவற்றை முதலில் நன்கு புரிந்துகொண்டு சிவ-தீக்ஷையை செய்யவேண்டும், என்பதற்காகவே, ஆன்றோர்கள்,

ஆகமநூல்கள் வாயிலாகவும், பத்ததிகாரர்கள் காட்டிய வழிமுறைப்படியும், தனது அனுபவமூலமாகவும், சிவாசாரிய குழந்தை-களுக்கும், ஏனைய அனைத்து இனத்தவர்க்கு ஆத்மார்த்தபூஜை மட்டும் செய்வதற்கும், பரார்த்த ஆலயங்களில் பூஜையைத் தவிர மற்றைய தொண்டுகளைச் செய்து வருவதற்காகவும், சிவபரம்பொருளை இமைப்பொழுதும் மறவாமல் இருப்பதற்கும், சைவசமயாசாரங்களை பாமர-மக்களையும் புரிந்துக்கொள்ளச் செய்வதற்கும், ஆஸ்திகத்தை நிலைநிறுத்தவும், நாஸ்திகத்தில் நுழையாதிருப்பதற்கும், வழிமுறைகளைக் காட்டுவதே, சைவசமய தீக்ஷா வகைகளும், கிரியை முறைகளும் ஆகும். சிவதீக்ஷையானது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளை அறியச் செய்கிறது. மேலும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் உணர்த்தவல்லது. எனவே (1) பதி, (2) பசு, (3) பாசம், (4) ஆணவம், (5) கன்மம், (6) மாயை இவை ஆறும் அழியாத நித்தியப்பொருள்களாகும். இவற்றைப் பதிப்பொருள் என்றும் கூறுவர். மனோ-வாக்காயங்களுக்கு எட்டாத இறைவன் வெளிப்பட்டபோதே அவனுள் உள்ள இவ்வறு பொருள்-களையும் வெளிப்படுத்தியமையால் அவன் கடவுள் எனப் போற்றப்படுகின்றான். இனி இவற்றின் ஸாரமாகிய பொருளை அறிவோமாக.

(1) பதி விளக்கம்

அநாதிமலமுத்தனாகிய பதியானவர், மனாதிகளைக்கடந்த, தனிப்பெருங்கருணை வள்ளல் ஆவரர். காணப்படும் இந்த உலகம் தோன்றுவதற்கு ஒரு கர்த்தா வேண்டும். ஒரு குடத்தை நாம் பார்க்கும் பொழுதே அதைச்செய்த, குயவன் ஒருவன் இருத்தல் வேண்டும், என்று நினைக்கின்றோம். அவ்வாறே பல்வேறு வகையாலும், வியக்கத்தக்க அமைப்புகளை உடைய இந்த உலகமும், பேராற்றல் உடைய ஒரு சக்தியால்தான், படைக்கப்பட்டு இருத்தல் வேண்டும். ஒரு சிறிதும் பிழை நேரிடாமல் காலக்கணிப்பில், தவறாமல், ஆயிரக்கணக்கான அண்டங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்றால், பேராற்றலும், பேறறிவும் படைத்த ஒரு பரம்பொருள் இருந்தாக வேண்டும். அந்த பரம்பொருளைத் தான் பெரியோர்கள் பதி என்று கூறுவர். இங்கு பதி எனக்கூறப்படுவது சிவபரஞ்ஜோதியாம் சிவபெருமானைக் குறிப்பதாகும். ரிக் வேதத்தில் கூறப்பட்டாதவது :

நாஸதாஸீந் நோஸதாஸீது I ததேக மாஸீது !
காமஸ் ததக்ரே ஸமவர்த்தத I யதாதமஸ் தன் நதிவா
நராத்ரிர் நன்நவாஸந் சிவ ஏவ கெவல: I ததக்ஷரம் I
தத்ஸவிதுர் வரேண்ம் I ப்ரக்ஞாச தஸ்மாத் ப்ரஸ்ருதா புராணி I (ரிக் வேதம்)

இதன் பொருள். மஹாப்ரளயகாலத்தில் அஸத்தும் இல்லை, ஸத்தும் இல்லை. அந்த ஒன்று இருந்தது. அதனின்று முதற்கண் காமம் எனப்படும் பராசக்தி உளதாயிற்று. எப்பொழுது இருள் உளதாய்ப் பகலும் இன்றி, இரவும் இன்றி, ஸத்தும் இன்றி, அஸத்தும் இன்றி

இருந்ததோ அப்போது சிவன் ஒருவரே இருந்தார். அந்த சிவசூரியனுடைய, அந்த அழியாத முக்கியப் பொருளாகிய, பிரஞ்ஞை எனப்படும் பழைய பராசக்தி உதித்தார் என சுவேதாஸ்வதர உபநிஷதம் கூறுவதால், வேதம், உபநிஷதம் எனும் இரண்டும் ஏகம் எனக் குறிப்பட்டது, சிவபெருமான் ஒருவனையே என்பது தெரிகிறது, அச்சிவபெருமானே பதி எனப்படுவர்.

2) பசு விளக்கம்

இந்த பூவுலகில் கணக்கற்ற உயிர் வகைகளைக் காண்கின்றோம். அவைகள் அனைத்தும் ஒன்றைப்போல மற்றொன்று இல்லாததோடு, ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாகக் காணப்-படுகின்றது. "இஹ கலு ஜகதி சராசராத்மிகே சு துரசீதிலக்ஷபரிமிதா: ஜீவராசயோ வர்த்தந்தே" எனும் வசனத்தால் உலகில் காணப்படுகின்ற உயிர்கள் எல்லாம், 84 லக்ஷம் யோனிகளில் அடங்குகின்றன. அவைகள் எல்லாம் 4 நால்வகைகளாகப் பிரிகின்றன. அவை (1) அண்டஜம், (2) ஸ்வேதஜம், (3) உத்பிஜம், (4) ஜராயுஜம் என்பன. இவற்றுள்(1) அண்டஜம் என்பது முட்டைகளில் இருந்து தோன்றுவனவாகிய மயில், கோழி, பாம்பு, பல்லி, ஆமை, மீன், வாத்து, காக்கை போன்ற ஜீவராசிகள். (2) சுவேதஜம் என்பது காலமாற்றத்தினாலும், புழுக்கத்- தினாலும், வியர்வையில் உண்டாகும் உயிர் வகைகளான ஈசல், பேன், தேள் முதலான இனங்கள். (3) உத்பிஜம் என்பது வேர், விதை, கிழங்கு வகை முதலானவைகளில் இருந்து மீண்டும், மீண்டும் உண்டாகும் மரம்,செடி, கொடி முதலிய ஜீவராசிகள். (4) ஜராயுஜம் தாயாருடைய வயிறாகிய உதரத்தில் (கருப்பையில்) 10 மாதம் இருந்து பிறக்கின்ற மாடு, மனிதர்கள் முதலான ஜீவராசிகள். இந்த நால்வகை ஜீவராசிகள் (1) ஊர்வன, (2) நடப்பன, (3) பறப்பன, (4) கிடப்பன, (5) நீர் வாழ்வன, (6) ஸ்தாவரம், (7) ஜங்கமம் என்று ஏழுவகை பிறவியை உடையன. இவ்வுயிர்கள் எல்லாம் ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நான்றிவு, ஐந்தறிவு, ஆறறிவு உடையதாய் விளங்குகின்றன. அவைகளுள் ஆண்பலவாகவும், பெண்பலவாகவும், அலிசிலவாகவும் காணப்படுகின்றன. இந்த உயிரினங்களை பசு என்று பகுத்தறிவாளர் கூறுவர். இங்கு பசு என்பது ஜீவாத்மா, பதி என்பது பரமாத்மா என்று சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன. வேதத்தில் தைத்திரீய ஆரண்யகத்தில் "அம்பிகாபதயே, உமாபதயே, பசுபதயே, நமோநம": என்று கூறப்படுவதாலும், யஜுர் வேதத்தில் "ஏஷாம் ஈசே பசுபதி: பசூநாம். சதுஷ்பதா முதசத் விபதாம்" என்பதாலும் பதியார்? என்பதும், பசுயார்? என்பதும், நன்கு கூறப்பட்டு உள்ளது.

3) பாசம்

உயிரினங்கள் சில நாட்கள் வாழ்வன, பல நாட்கள் வாழ்வன, பிறந்த உடனே இறப்பன, பால்யத்தில் இறப்பன, யௌவனத்தில் இறப்பன, முதுமையில் இறப்பன எனப்பலவாறாகும். இவற்றுள், சில உயிர்கள், பிறந்தவுடன் துன்பம் அடைந்து, இறுதியில் இன்பம் அடைகின்றன.

சில ஜீவராசிகள் பிறந்தவுடன் இன்பம் அடைந்து, இறுதியில் துன்பம் அடைகின்றன. ஒரு சில உயிரினங்கள், இன்பத்தை அதிகமாகவும், துன்பத்தை கொஞ்சமாகவும் நுகர்கின்றன. சில உயிர்கள் துன்பத்தை அதிகமாகவும், இன்பத்தை கொஞ்சமாகவும் அனுபவிக்கின்றன. இன்ப துன்பங்கள் மாறி மாறி வருகின்றன. இவ்வுயிர்களிடத்து, விருப்பு, வெறுப்பு என்ற உணர்ச்சிகள் இருப்பதைப் பார்க்கிறோம். இதனால் இன்பம் வந்தால் மகிழ்கின்றன, துன்பம் வந்தால் வருந்துகின்றன. சில நாட்களிலோ, சில ஆண்டுகளிலோ நிலைகெட்டு அழிந்துபோகக்கூடிய உடலை, என்றும் நிலைத்து இருக்கக் கூடியதாகக்கருதி, ஏமாற்றம் அடையும் உயிர்கள், பொய்யை மெய்யாகக் கருதுகின்றன. விரும்பக்கூடாதனவற்றை விரும்புகின்றன. இத்தகைய தவறான வழியில் இழுத்துச் செல்லுகின்ற சக்தியை உயிர்கள் பற்றிக்கொண்டு இருப்பது தான் பாசம் என்று சைவசித்தாந்திகள் கூறுவர். இதை ஜீவராசிகள் விரும்பவில்லை என்றாலும், துன்பங்கள் தோன்றுகின்றன. எதிர்பாராமலேயே இன்பங்கள் வருகின்றன. முயன்றாலும் சில பயன்கள் கூடுவதில்லை, முயற்சி இல்லாமலேயே சில பயன்கள் கைகூடுகின்றன. இவற்றிற்கு எல்லாம் அடிப்படையான காரணம் பாசம் ஆகும். இப்பாசமானது (1) ஆணவம், (2) கன்மம், (3) மாயை என மூன்று மலங்களாகக் கூறப்பட்டுள்ளன. இனி இம்மலங்களைப் பற்றி அறிவோம்.

(1) <u>ஆணவ மலம் : -</u> உயிர்களிடத்தில் ஆணவமலமானது "தானே வல்லவன்", "எனக்கு எல்லாம் தெரியும்", என்று நினைப்பதுடன், என் வீடு, என் மனைவி, என் மக்கள் என்று நீக்காத பற்றுதலைக் ரொண்டுள்ளது. இது ஆன்மாவை சிற்றறிவும், சிறுதொழிலும் செய்யத்தூண்டுவது. அஞ்ஞானத்தையும், அறியாமையையும் உண்டாக்குவது எதுவோ, அதுவே ஆணவமலம் ஆகும். இதற்கு உதாரணம் கூறுவர். ஒரு சிஷ்யன், குருவிடம் சென்று, "நான் எல்லாம் கற்றவன், இருப்பினும், தங்களிடம் சைவசித்தாந்தம் படிக்க வந்துள்ளேன், எனக்கு உபதேசம் செய்ய வேண்டும்" என்று கேட்டான். அதற்கு குருவானவர் கூறினார், நான் செத்தபிறகு வா உனக்கு உபசேம் செய்கின்றேன் என்றார். அதற்கு சீடன் "ஐயா, தாங்கள் இறந்த பிறகு, எனக்கு எவ்வாறு உபதேசம் செய்வீர் என்று கேட்டான். அதற்கு ஆசாரியர், சீடனைப் பார்த்துக் கூறுகின்றார். எல்லாம் படித்த உனக்கு இது புரியவில்லையா? கூறுகின்றேன் கேள். "நான் என்ற ஆணவம் உன்னிடமிருந்து நீங்குமாயின் உபதேசம் செய்கின்றேன்" என்றார். மேலும் ஆணவ-மலமானது அழியாதது. ஆன்மா பிறக்கும் போதே, அதோடு கூடவே ஆணவமலம் செம்பில் களிம்புபோல அநாதியாகவே இருப்பதால் சிறப்புடைத்து, மற்றைய கன்மமலம், மாயாமலம் இரண்டும் நெல்லில் முளை, உமி, தவிடு, போல கூடவே இருப்பதாகும். கர்மமலமும் அனாதியானது. இக்கன்மமலத்தைப் பார்ப்போம்.

2) <u>கன்ம மலம் : -</u> அனைத்து உயிர்களையும் படைத்த ஆண்டவன் ஒருவனாக இருக்கும் போது, பலவகையாக ஏன் உயிர்களைப் படைக்க வேண்டும். அப்படி படைப்பது ஆண்டவனின் விருப்பம் என்றால், அவன் விருப்பு, வெறுப்பு, பக்ஷபாதம், உடையவனாக

அல்லவோ ஆகி-விடுவான் என்றால், வேண்டுதலும், வேண்டாமையும், பேரருளுடைமையும், பெருங்கருணையும் அல்லவா இறைவனின் குணங்கள். ஆதலினாலே மேற்கூறிய விருப்பு, வெறுப்பு, பக்ஷபாதங்கள், காரணமாக அதற்கு வேறு காரணம் இருக்க வேண்டும் என்ற வினா எழுகின்றது. உடனே ஆன்மா செய்யும் கர்மவினைகள் தான் எல்லாவற்றிற்கும் மூலகாரணம் என்ற பதில் கிடைத்து விடுகின்றது. உயிரினங்கள் தனக்கு கிடைத்த சரீரத்தைத்தழுவி செய்யும் புண்ணிய பாவங்-களுக்கு ஈடாக தனு, கரண புவனங்களை கடவுள் தருகிறார். இதனை சிவபிரகாசர் கூறுகின்றார்.

படைத்ததொரு படியின்றி பறவை - பசு நாராய்ப்
பண்ணியதென் முன்வினைப் பான்மை என்றுரைக்கிறார்.

ஆன்மாக்கள் புண்ணிய பாபங்களை அனுபவிப்பதற்காக மாயா சரீரங்களைக் கடவுள் தந்தார் என்று சொன்னால், உயிர்கள் முதலில் அடைவது வினையா? அல்லது மாயையா? என்ற கேள்வி உண்டாகும். இதற்கு பதில், "வினைப் போகமே ஒரு தேகம் கண்டாய் - வினை தான் ஒழிந்தால்தினைப்போதளவும் நில்லாதுகாண்". வினைகளுக்கு அனுசரித்த சரீரத்தைப் பெற்று, உயிர் அந்த சரீரத்தோடு சுகதுக்கங்களை அனுபவித்து முடிக்கும். கர்மமலமும் அநாதியானது. இக்கன்மமலமானது, ஜாதி, ஆயுள், போகம் என்ற முவ்வகையாக இருக்கும். இம்மூன்றும் ஆன்மா என்று இருக்கிறதோ அன்றே அநாதியாய் ஆன்மாவுடன் இருக்கும். ஆன்மாவுடன் ஒன்றியுள்ள ஜாதியும், ஆயுளும், போகமும், ஊழ்வினைப்படி கிடைப்பதுவே அல்லாது, இப்போது செய்யும் முயற்சியால் கிடைப்பது அல்ல. மனம், வாக்கு, காயங்களால், புத்தி தத்துவத்தை அடைந்து, தான் செய்த புண்ணிய, பாப வடிவம் பெற்றுக்கொண்டு இருப்பது, இறைவனின் சம்ஹாரகாலத்தில் மாயையில் ஒடுங்கி இருப்பது, கன்மமலமாகும். இது ஊழ்வினையால் உண்டாவது. கர்மபலன் முன்செய்த வரிசைக்கிரமத்தில் முறையே வந்தடைந்தாலும், அடையும் வன்மை, மென்மை எப்படியோ அதை அனுசரித்து, இன்ப துன்பங்கள் மாறி மாறி வரும். ஊழ்வினை எனும் கர்மவினைகள் (1) ஆதி தெய்விகம், (2) ஆதி பௌதிகம், (3) ஆத்யாத்மிகம், (4) மனம், (5) வாக்கு, (6) காயம் இவைகளால் ஏற்படும் வினைகள் ஆகும். 1) ஆதி தெய்விகம் என்பது தெய்வத்தால் ஆன்மாவை வந்தடையும் வினைகள். 2) ஆதி பௌதிகம் என்பது மண், நீர், நெருப்பு, வளி (காற்று), ஆகாயம் எனும் பஞ்சபூதங்களால் ஆன்மாவை வந்தடையும் வினைகள். 3) ஆத்யாத்மிகம் என்பது ஆன்மாவால் உயிர்களுக்கு வந்தடையும் வினைகள். 4) மனம் என்பது மனதினால் அருளுடைமை, பொறை, பிறர்பொருள் விரும்பாமை முதலான-வற்றால் வந்தடையும் வினைகள். 5) வாக்கு என்பது புறஞ்சொல்லல், உண்மையுரைத்தல், இனியவை கூறல் முதலியவற்றால் ஏற்படும் வினைகள். 6) காயம் என்பது சரீரம், பூஜை, தவம், ஹோமம், புஷ்ப நந்தவனம் அமைத்தல் முதலியவைகளால் வந்து கூடும் வினைகள். இவ்வினை-களுக்கு எல்லாம் மூலகாரணம் ஒன்று உண்டு என்பர். அந்த காரணமே

மூலக்கன்மம் எனப்படும். மூலக்கன்மமாவது ஆன்மாவின் இச்சாசக்தியின் காரியமாகிய, விருப்பு வெறுப்புகள் ஆகும்.

(3) <u>மாயை (பாசம்) : -</u> மாயை என்பது, நித்தியமாய், உருவமற்றதாய், ஒன்றாய், உலகம் உண்டாவதற்கு ஒரு வித்தாய், ஜடமாய், எங்கும் நிறைந்ததாய், முதல்வனுக்கு ஒரு பரிக்கிரக சக்தியாய், புவனமும், போகமும், தனுவும், கரணமும் ஆக உயிர்களின் பொருட்டு, விரிந்த ஓர் மலமாய், விபரீத உண்மையை உண்டாக்குவதாய், இருக்கும் இலக்கணங்களை உடையது. இதை உபசரிப்பாக, பதிப்பொருள் என்றும் சிறப்பித்துக் கூறுவர். மனோவாக்காயங்களால் சம்பாதிக்கப்- பட்ட வினைகளுக்கு **ஆகாமியம்** என்று பெயர். இப்பிறவியில் சம்பாதித்துக் கொண்டிருக்கும் வினை **ஆகாம்யவினை.** இது ஆன்மாவிடம் வந்துசேரும் காலம் வரை, பரிபாக காலமாகும் வரை, சூக்ஷ்மமாக புத்திதத்துவத்தைச் சார்ந்து, மாயையில் லயித்திருக்கும். அதுசமயம் **சஞ்சிதவினை** என்று பெயர் பெறும். இதனை இருப்புவினை என்றும் கூறுவர். மேலே சொன்ன சஞ்சிதவினை புசிப்பதற்காக (அனுபவிப்பதற்காக) ஆன்மாவை வந்தடையும் போது ப்ராரப்த-வினை எனப்பெயர் பெறுகிறது. தெரியாமல் செய்யும் புண்ணிய பாபங்கள், தெரிந்து செய்யும் புண்ணிய பாபங்கள் என்ற வகைகளாலும், வினைகள் உயிரினங்களை கலந்து பற்றுகின்றன. <u>சஞ்சிதம்</u> எனும் இருப்பு வினைகள், ஞானாசாரியரின் அருள்நோக்கால் சாக்ஷுஷ தீக்ஷையால் ஒழியும். <u>ஆகாம்யம்</u> இப்பொழுது அன்றாடம் செய்துக்கொண்டு இருக்கும் வினைகள். இவ்வுடலை விட்டு உயிர் பிரிந்து போகும்போது உடன்போகும., "நம் செயல் ஒன்றுமில்லை, எல்லாம் சிவன் செயல்" என உணர்ந்து கொண்டால், புண்ணிய பாப கர்மாக்கள் ஆன்மாவை வந்தடையாது. ஆகாமியம், சஞ்சிதம், ப்ராரப்தம் என்ற மூன்று கன்மாக்களுள், ப்ராப்தம் என்பது, சஞ்சித கன்மாவுக்குள் பக்குவப்பட்டவை. மேல் எடுக்கும் உடம்பையும், அது கொண்டு அனுபவிக்கும் இன்ப துன்பங்களையும் தந்து, பயன்படும் பொழுது, அனுபவிப்பது பிராப்த-கன்மமாகும். இவ்வாறு முவ்வகை கன்மங்களுள் **பிராப்தகன்மம்** என்பது சரரீம் உள்ளவரை இருக்கக்கூடியது. இத்தகைய கன்மமே பிறப்பிற்குக் காரணமாகும். வினை அழிந்து, பிறவாப்-பேரின்பம் அடைய, உயிர்களுக்கு நான்கு வழிகள் உள்ளன. அவை ஞானம், யோகம், சந்நியாஸம், போகம் என நால்வகைப்படுகின்றன. தீக்ஷையில் ஞானத்தின் வாயிலாக, கன்மம் நசித்துவிடுகிறது. எனவே கன்மங்களை நன்கு வளர்த்து அவ்வளர்ச்சிக்கு ஏற்ற தீக்ஷை-களினால் கன்மங்களை அழித்துவிடவேண்டும் என்பதை நிருவாணதீக்ஷை உணர்த்துகின்றது. எனவே, ஆசாரியர் கன்மங்களை நன்கு உணர்ந்து தீக்ஷை செய்தல் வேண்டும்.

<u>சக்தி நிபாதம் : -</u> ஆன்மாக்களிடத்து இயற்கையாக உள்ள (1) ஆணவம், (2) கன்மியம், (3) மாயேயம், (4) பைந்தவம், (5) திரோதான சக்தி எனும் ஐவகை பாசக்கட்டத்தில் **திரோதான-சக்தி** என்பது ஆன்மாவின் இயற்கையான, சர்வக்ஞத்துவம் முதலிய

குணங்களை மறைத்துக் கொண்டு எப்பொழுதும் சூழ்ந்து நிற்கிறது. திரோதானம் = என்பதற்கு மறைத்தல் என்பது பொருள். ஆவாரகம் = என்பதற்கு சூழ்ந்திருத்தல் என்பது பொருள். எனவே திரோதான சக்தி-யானது ஆவாரகசக்தி என்றும் கூறப்படும். இந்த சக்தியானது மலபரிபாகம் வரும் பொழுது, அதாவது நல்வினை, தீவினை இரண்டிற்கும் சமநிலை ஏற்படும்பொழுது, இது தனது மறைத்தலை விடுத்து, அனுக்ரஹம் செய்யும் சத்தியாக உள்ளதால் **அனுக்ரஹசக்தி** என்றும் பெயர் பெறுகிறது. இவ்வாறு **திரோதானசக்தி** அனுக்ரஹசக்தியாக மாறுதலே சக்தி நிபாதம் எனப்படும். இதனையே சைவசித்தாந்திகள் **இருவினை ஒப்பு** என்று தமிழில் கூறுவர். அதாவது பாபபுண்ணியம் செய்து வருகையில், அறநூல்களைக் கேட்பதால் பாவத்தை நீக்கி புண்ணியம் செய்வதே சரிஎன்றும், ஞானநூல்களைக்கேட்டவிடத்து அப்புண்ணியமும், ஜனனமரணத்திற்குக் காரணமாக உள்ளதால் அதனையும் விடுத்து, ஞானத்தை அடைவதே சரி என்றும், பின்னர் இவ்விரண்டிடத்தும் விருப்பும், வெறுப்பும் இன்றி இருத்தலே இருவினை ஒப்பு என்றறிக. புண்ணியத்தால் நற்பயனும், பாவத்தால் தீயபயனும் அனுபவிக்க வேண்டியதாகிறது. எனவே, இவை இரண்டும் ஏற்றத்தாழ்வுடன் இல்லாது சமஅளவாகப் பெற்றிருத்தல், ஞானத்தை அடைவதற்கு காரணமாகும். எனவே இந்த இருவினையொப்பினை ஆசாரியானவர் சிஷ்யன் இடத்தில் கண்டு உணர்ந்து, பக்குவ நிலைக்கேற்ப, தீக்ஷை முறைகளைக் கையாண்டு, தீக்ஷை செய்வித்தல் வேண்டும்.

சப்த விஷுவங்கள் : - ஆசாரியர் மோக்ஷமளிக்கும் நிருவாணதீக்ஷையில், சிஷ்யனை, சப்த விஷுவத்தியானத்தால். சிவனோடு சேர்த்து, சிவத்தன்மையினை சிஷ்யனுக்கு அடைவிக்- கின்றார். இது சிவயோக முறையில், பிராணாயாமத்துடன், மந்திர உச்சாரணம் வாயிலாக, தியானிக்கத்தக்கது. இது (1) பிராண விஷுவம், (2) மந்திர விஷுவம், (3) நாடி விஷுவம், (4) பிராசாத விஷுவம், (5) சக்தி விஷுவம், (6) கால விஷுவம், (7) தத்துவ விஷுவம் என ஏழுவகையான விஷுவங்களாக சோம சம்பு பதத்தியில் கூறப்பட்டுள்ளது. இவற்றை அறியலாம்.

1) பிராண விஷுவம் : சிஷ்யனுடைய ஆன்மாவிற்கும், ஆசாரியனுடைய மனம், பிராணன் இவற்றிற்கும் உண்டான சேர்க்கை பிராண விஷுவமாகும். 2) மந்திர விஷுவம் : இதயம் முதலிய ஸ்தானங்களில் அகாரம், ஔகாரம் முதலியவற்றின் மாத்திரைகளுடைய சேர்க்கை, பிரித்தல் ஆகிய முறையுடன் பிராசாத மந்திரத்தை உச்சரித்தல் மந்திர விஷுவமாகும். 3) நாடி விஷுவம் : (1) மூலாதாரம், (2) சுவாதிஷ்டாணம், (3) மணிபூரகம், (4) அநாஹதம், (5) கழுத்து, (6) கண்டிகை, (7) புருவ நடுவு, (8) நெற்றி, (9) பிரம்மரந்திரம், (10) துவாதசாந்தம் என்னும் பத்து இடங்களில் உள்ள, பத்து முடிச்சுகளை மூலமந்திரமாகிய திரிசூலத்தால் பிளந்து சுழு முனை நாடியை அனுசரித்துச்செல்லும் (ஓசை) நாதத்தின் பிரவாஹத்தை, சிந்தித்தல் நாடி விஷுவம் ஆகும். நாதம் சுஷும்னாநாடி இவற்றின் சேர்க்கையாம் நாடி விஷுவம் எனப் பெயர் பெற்றது. 4) பிராஸாத விஷுவம் : ஐந்தொழிலதிபர்களாகிய,

காரணேஸ்வரர்களான பிரம்மன் முதலானவர்களால் அதிஷ்டிக்கப்பட்ட அகாரம், ஔகாரம், மகாரம், பிந்து, நாதம், நாதாந்தம் ஆகிய ஆறு அக்ஷரங்களின் ஸ்தானங்களைக் (இடத்தை) கடந்து, ஏழாவதான சக்தி ஸ்தானத்தில், நாதம் லயித்து இருப்பது பிராஸாத விஷுவமாகும். 5) சக்தி விஷுவம் : ப்ராசாத கலைகளில் ஒன்றான சக்தியின் நடுவில் இருக்கும் மந்திர ரூப்நாதமானது, சிஷ்யனுடைய ஆன்மாவுடன் கூடி எவ்வளவு நேரம் சமனை ஈறாகிய இடத்திற்கு, மேலே செல்கிறதோ அந்த காலம் சக்தி விஷுவமாகும். 6) கால விஷுவம்: (1) பராபரம், (2) அபரம், (3) பரம் என காலம் மூவகை. இம்மூவகைக்காலமும் அற்ற கலையாகிய உன்மனையில் சிஷ்யனை சேர்த்து, லயத்தை அடைந்தவனாக பாவித்தல் கால விஷுவமாகும். 7) தத்துவ விஷுவம் : உன்மனை எனும் சக்திக்கு அப்பால் விளங்கும் பரசிவத்துடன், (சிவபெருமானுடன்) சிஷ்யனை சேர்த்தல் தத்துவவிஷுவம் ஆகும். இவ்வேழு விஷுவங்களைப்பற்றி விரிவாக சித்தாந்த சேகரத்திலும் கூறப்பட்டுள்ளது. இனி ஆசார்யாபிஷேகத்தைப் பற்றி சோமசம்பு பத்ததியில் விசேஷமாய் கூறியுள்ளதைப் பார்ப்போமாக.

ஆசார்ய அபிஷேகம் : - சமயம், விசேஷம், நிருவாணம் என்ற தீக்ஷைகளைப் பெற்றவர்களே ஆசாரிய அபிஷேகம் செய்து கொள்ள தகுதியுடையவர்களாவர். நிருவாணதீக்ஷையானது, யாகேஸ்வரர் யாகேஸ்வரீ கும்பாபிஷேகங்களுடன் பூர்த்தியாகின்றது. அதற்குப் பிறகு ஆசாரியர் யாகசாலையின் வெளியே ஈசான பாகத்தில், ஸ்நானமண்டபத்தில், சிஷ்யனுக்கு ஆசார்யா-பிஷேகத்தை முன்னிட்டு, மறுபடியும் யாகசாலையில் 9 கும்பங்கள், அல்லது 5 கும்பங்கள் அல்லது ஒரு கும்பம் வைத்து யாகசாலையில் விதிப்படி பூஜை செய்து, வேள்வி இயற்றி, கும்பஜலத்தால் சிஷ்யனுக்கு அபிஷேகம் செய்வது ஆசார்யாபிஷேகம் ஆகும். அதன்பிறகு சங்கத்தில் விசேஷார்க்யபூஜை செய்ததை அபிஷேகம் செய்வித்தல் வேண்டும். ஆசார்யா-பிஷேகம், 9 கலச ஸ்நபனாபிஷேகம் போல் செய்யப்படலாம். நடுவில் சிவனையும், எட்டு கலசங்களில் அஷ்டவித்யேஸ்வரர்களையும், பிரதானமாக வைத்து பூஜித்து, செய்வது ஒருமுறை (பக்ஷம்). சோமசம்புபத்ததியில், கிழக்கு முதலான எட்டு திக்கில் [1]லவண சமுத்திரம், [2]க்ஷீர சமுத்திரம், [3]ததி சமுத்திரம், [4]க்ருத சமுத்திரம், [5]இக்ஷு சமுத்திரம், [6]காதம்பர சமுத்திரம், என்ற சுரா சமுத்திரம், [7]சுவாதூதக சமுத்திரம் என்ற சுத்தார்ணவம், எட்டாவதாக [8]கர்ப்போதக சமுத்திரம் என்ற சமுத்திரம். ஏழு சமுத்திரங்களை அனைவரும் அறிவோம். எட்டாவதாக கர்ப்போதக சமுத்திரம் என்றும், நடுவில் சிவ சமுத்திரம் என்றும் ஒன்பது சமுத்திரங்களை பூஜை செய்து அபிஷேகம் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. 5 கலசாபிஷேகத்தில், நடுவில் சிவசமுத்திரம், கிழக்கில் லவண, இக்ஷு எனும் இருசமுத்திரங்கள், தெற்கில் சுரா, சர்ப்பி எனும் இரண்டு சமுத்திரங்கள், மேற்கில் ததி, க்ஷீர எனும் இரண்டு சமுத்திரங்கள், வடக்கே சுத்தோதகம், கர்போதகம் எனும் இரண்டு சமுத்திரங்கள் என்று பூஜை செய்து, அபிஷேகம் செய்ய வேண்டும் என்று விசேஷமாகக் காணப்படுகின்றது. சில ஆகமங்களில் முமுக்ஷுகளுக்கு கலைகள் ஐந்தையும்,

புபுக்ஷுகளுக்கு ஸத்யாதி பஞ்சபிரமங்களையும் பூஜை செய்து அபிஷேகம் செய்ய வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. ஒரே கும்ப முறையாகில் அதில் சிவனை பூஜை செய்து அபிஷேகம் செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டு உள்ளது. இவ்வாறு பூஜை செய்யப்பட்டதை, யாகசாலையின் வெளியில் முறைப்படி சிவனுக்கு அபிஷேகம் செய்வதைப்போல அபிஷேகம் செய்தலே ஆசார்யாபிஷேகம் எனப்படும். இதனால் சிஷ்யனாக இருந்தவர் ஆசார்யராக இருக்க தகுதியுடையவர் ஆவர். இவர்களுக்கு 45 நாள், 30 நாள், 15 நாள் ஆகிய மண்டலகால பூர்த்தியன்று அஸ்திராபிஷேகம் செய்ய வேண்டும். அப்பொழுது தான் ஆசார்யர் ஆவர். அஸ்த்ராபிஷேகத்திற்கு முன் ஆசார்யாபிஷேகம் நடந்து இருந்தாலும், அவர்கள் அர்ச்சகர் ஆவாரே தவிர, ஆசார்யர் ஆகமாட்டார் எனக்காமிகாகமம் கூறுகின்றது. ஏனெனில் ஆசாரியருக்கு (1) சமயம், (2) விசேஷம், (3) நிருவாணம், (4) அஸ்திராபிஷேகம், (5) ஆசார்யா அபிஷேகம், (6) சிகாச்சேதம், (7) விஷுவங்களின் (ஏழு) சோதனங்கள் என ஏழுசம்ஸ்காரங்கள் கூறப்பட்டுள்ளன. இவருக்கு மஹாகாரண பஞ்சாக்ஷரம் உபதேசிக்குமாறு கூறுகின்றது.

1) <u>"ஆசாரியாதிகளின் அதிகாரத்தகுதி" :</u>- 1) ஆசாரியார், நித்தியம், நைமித்திகம், காமியம் முதலிய அனைத்துப்பூஜைக்கும் தகுதியுடையராவர்.

2) <u>அர்ச்சகனுக்கு</u> ஏழு விஷுவசோதனங்கள் இல்லாத ஆறு சம்ஸ்காரங்கள் மட்டுமே செய்யத்-தக்கது. அவை சமயம், விசேஷம், நிருவாணம், அஸ்திராபிஷேகம், சிகாச்சேதனம் என்ற சம்ஸ்காரங்கள் ஆறு ஆகும். இவ்வர்ச்சகர் நித்யபூஜைக்கு தகுதியுடையவர் ஆவர். இவர்கள் நைமித்திகம், காமியம் இப்பூஜை வகைகளைச் செய்யக்கூடாது. விபூதி கொடுப்பதில் இவ்வர்ச்சகர் பிரதானமாவார். ஆசார்யர் இல்லாதபொழுது அர்ச்சகர்களும் விபூதி கொடுக்கலாம். இவர்கள் குடீச்சகர், பஹீச்சகர், ஹம்ஸர், பரமஹம்ஸர் ஆகிய நால்வகை சன்னியாசிகளுக்கும் விபூதி கொடுக்கும் அதிகாரம் பெறுவர். சன்னியாசிகள் கோவிலில் தனது கையால் ஒருகாலும் விபூதியை கிரஹிக்கக் கூடாது. மீறி நடப்பாராயின் பிராணி நாசம் உண்டாகும். ஆசார்யர், அர்ச்சகர் இவர்கள் தான் நான்கு வர்ணத்தார்க்கும் விபூதி கொடுத்தல் வேண்டும்.

3) <u>ஸதானிகர் :</u> சமயம், விசேஷம், நிருவாணம், அஸ்திராபிஷேகம், ஆசார்யாபிஷேகம் என்று ஐந்து சம்ஸ்காரங்களை மட்டும் உடையவர் ஸ்தானீகர் எனப்படுவர் இவர்களுக்கு அதிசூக்ஷ்ம பஞ்சாக்ஷரம் உபதேசிக்கத்தக்கது. இவர் உத்ஸவபேரங்களுக்கு அலங்காரம் மாத்திரம் செய்தல் வேண்டும். மூலலிங்கத்தைத் தீண்டுதல் கூடாது, தீண்டினால் தோஷம் உண்டாகும்.

4) <u>பாசகர்</u> : சமயம், விசேஷம், நிருவாணம், அஸ்திராபிஷேகம் எனும் நான்கு சம்ஸ்காரங்-களை மட்டும் உடையவர் பாசகர் எனப்படுவர். இவர்களுக்கு சூக்ஷ்மபஞ்சாக்ஷரம்

உபதேசிக்கத்-தக்கது. இவர்கள் மடைப்பள்ளியில் ஹவிர்பாகம் எனும் சமையல் செய்யத்தகுதி உடையவர்- களாவர். சுவாமிக்கு நிவேதிக்கும் பொருளைக் கொண்டு வருபவர் ஆவர்.

5) <u>பரிசாரகர்</u> : சமயம், விசேஷம், நிருவாணம் என்ற மூன்று சம்ஸ்காரங்களை மட்டும் உடையவர் பரிசாரகர் ஆவர். இவர்களுக்கு **ஸ்தூல பஞ்சாக்ஷரம்** உபதேசிக்கத்தக்கது. இவர்கள் சிவ கைங்கர்யங்களைச் செய்தல் வேண்டும். (1) ஆசாரியர், (2) அர்ச்சகர், (3) ஸ்தானீகர், (4) பாசகர், (5) பரிசாரகர் எனும் இவ்வைவரும் சம்ஸ்காரங்களால் ஏற்றத்-தாழ்வு பெறுகின்றனர். இவர்களே ஏழு சம்ஸ்காரங்களையும் பெற்றிருப்பின் சர்வதந்திரஸ்வ-தந்திரர் ஆவர். சமயதீக்ஷிதர்களுக்கு ஸ்தூல பஞ்சாக்ஷரம் (நமசிவாய), விசேஷ தீஷிதர்-களுக்கு சூக்ஷ்ம பஞ்சாஷரம், (சிவாயநம:) நிருவாண தீஷிதர்களுக்கு அதிசூஷ்ம பஞ்சாக்ஷரம், (ஓம்ஹும்ஹாம் சிவாயநம:) ஆசார்யாபிஷிக்தர்களுக்கு (அர்ச்சகர்களுக்கு) காரண பஞ்சா-க்ஷரம், (ஓம்ஹாம்ஹௌம் சிவாயநம:) ஆசார்யர்களுக்கு மஹாகாரண பஞ்சாக்ஷரம் (ஓம்ஹும்-ஸம் சிவாயநம:) விதிக்கப்பட்டுள்ளன. (1) தீக்ஷை செய்வதற்கு உரிய ஆசார்ய லக்ஷணம், (2) சிஷ்ய லக்ஷணம், (3) தீக்ஷை செய்வதற்கு உரிய காலம், (4) தீக்ஷை செய்வதற்கு உரிய மண்டலங்கள், (5) தீக்ஷைக்கு உரிய யாகசாலை அமைப்பு, (6) தீக்ஷை செய்வதற்கு ஏற்ற இடம், (7) தீக்ஷையின் சிறப்பு, (8) தீக்ஷையின் பயன் இவற்றைத் தெரிந்து கொள்வோமாக.

<u>(1) ஆசார்ய லக்ஷணம்</u>

சிவதீக்ஷையை முறையுடன் செய்வதற்கும், இறைவன் அருளையும், முக்தி வழியையும், கூட்டி வைப்பதற்கும் சிறந்த ஆசாரியர் தேவை. அசுத்தபுவனமாகிய இவ்வுலகிலும், மும்-மலத்தோடும் உள்ளசகலர் எனப்படுகிற ஆன்மாக்களுக்கு இறைவன் சத்குருவின் வாயிலாகவே அருளைப்பொழிந்து ஞானமார்க்கத்தை அடைவிப்பார். அத்தகைய ஆசாரியர் நல்லதேசத்தில் அதாவது, மான்கள் இயற்கையாக வசிக்கும் இடம், தேவலாயங்கள், வேதஒலி முழங்கும் இடம் இதுபோன்ற உயரிய இடத்தில் பிறந்தவராகவும், அழகான வடிவு உடையவராயும், நல்ல சுபாவம் உடையவராயும், கோபம், கடிந்துரைத்தல், முரட்டுத்தன்மை போன்றவையில்லாதவராயும், ஆகம-நூல்களைக் கற்று, கேட்டு, கடைபிடிப்பவராகவும், சைவசித்தாந்த ஞானம் பெற்றவராயும், ஒழுக்கம் உள்ளவராகவும், பொறுமை, தெளிந்த மனம், பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளை நன்கு ஆராய்ந்து தெளிந்த விவேகியாகவும், ஆகமங்களில் சரியை, கிரியை, யோகம், ஞானம் இவற்றை முறையுடன் பெற்று விளங்குபவராகவும், சமயநெறியில் வழுவாது வழிபாடு, அனுஷ்டானம், ஜபம், ஹோமம், மந்திரோபதேசம், பிராணாயாமம் முதலியவற்றைச் செய்ப-வராகவும், பொன்னால் ஆகிய மோதிரம், கைவளை எனும் தோடா, இடைக்கயிறு, காதில் குண்டலம், பூணூல் என்ற

பஞ்சாங்கபூஷணபூஷிதராகவும், ருத்ராக்ஷம், உபவீதம், உஷ்ணீஷம் (துணியாலாகிய தலைப்பாகை) உத்தரீயம், விபூதிப்பை ஆகிய பஞ்சமுத்திரைகளை உடையவரா-கவும், உயிர்களிடத்து தயை உள்ளவராயும், கொல்லாமை, புலனடக்கம், பெருமை, இரக்கம், ஞானம் உள்ளவராயும், உண்மை பேசுதல், நல்லெண்ணம் இவற்றைப் பெற்றுள்ளவராயும்,கிரீடம், குடை, சாமரம், பாதுகை, பல்லக்கு, யானை முதலிய ராஜாங்க சின்னங்களை உடையவராகவும், தீக்கடைக்கோல், கத்தரிக்கோல், ஹோமக்கரண்டிகள், புஸ்தகம், ஜபமாலை, கமண்டலம், யோக தண்டம், மான்தோல் இவற்றை உடையவராகவும், சிஷ்யனின் மனப்பக்குவம், பக்தியின் தன்மை, ஒழுக்கம், குணம் ஆகியவற்றைச் சோதிக்கும் ஆற்றல் உள்ளவராயும், சாத்திர உபதேசங்கள், தீக்ஷைகள் செய்பவராகவும், ஆலயங்களில் நித்திய நைமித்திக காம்யமாகிய முவ்வகைப் பூஜை-களையும், உத்ஸவம், பிரதிஷ்டை, பிராயச்சித்தம் முதலியவற்றைச் செவ்வன செய்பவராயும், சைவசித்தாந்தப் பொருளை அரசன், சிஷ்யன் முதலானவர்களுக்கு உபதேசிப்பவராகவும் இருத்தலே ஆசாரியராய் விளங்குவதற்கு தகுதி உடையவர் என்று ஆசாரிய லஷணம் சிவாகமங்களில் காணக்கிடைக்கின்றன.

(1) சிஷ்ய லஷணம்

நல்லதேசத்தில் ஜனித்தவனாகவும், நல்லசுபாவம், நற்குணம், நல்லொழுக்கம், குருபக்தி, தெய்வ பக்தி, வேதசிவாகமங்கள் மீது மாறாத நம்பிக்கை இவற்றை உடையவனாகவும், தினசரி இறைவழிபாடு, தேவாரம், திருவாசம், திருவிசைப்பா பல்லாண்டு, பெரிய புராணம், தலபுராணம் முதலியவற்றை ஓதுதல், தாய், தந்தை, குரு, பெரியோர்களை வணங்குதல், நற்செயல்களைச் செய்தல் இவற்றை உடையவனாகவும், தீயஒழுக்கம், குருநிந்தை, சாத்திரநிந்தை, தெய்வநிந்தை, பெரியோர்களைப்பழித்தல் ஆகிய தீயபழக்கங்கள் இல்லாதவனாகவும், இருக்கின்றவனே சிவ-தீக்ஷை செய்து கொள்ள தகுதியுடையவனாவான். புலன் இன்பத்தை அளிக்கும் உலகப்பொருள்-களைக் காட்டிலும், இறைவன்பால் மேலான மதிப்பும், ஆர்வமும் உள்ளவனாக இருத்தல், எதிலும் விருப்பு, வெறுப்பு இன்றி இருத்தல் ஆகியவை, தீக்ஷைக்கு விசேஷ தகுதியாக கூறப்படுகின்றது. ஆண், பெண், அலி, பேடி முதலிய பேதமின்றி அனைத்து உயிர்களுக்கும், இல்லறத்தவர்-களுக்கும், துறவறத்தவர்களுக்கும், பாலர், குமரன், முதியோர் முதலிய பருவங்கள், பிரம்மசாரி, கிரஹஸ்தன், வானப்ரஸ்தன், சன்னியாசி முதலிய ஆச்ரமங்கள், ஜாதி, மதம், இனம் இவைகள் தடையாகாது. மேற்கூறியவர்களின் பக்குவநிலைக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப தீக்ஷை செய்து கொள்ளலாம்.

(3) தீக்ஷை செய்துக் கொள்ளுவதற்கு உரிய காலம்

மோக்ஷகாமிகளுக்குஎக்காலத்தும் தீக்ஷை செய்யப்படலாம். உலகபோகத்தை விரும்புகிற புபுக்ஷுககளுக்கு, காலம், நேரம் பார்த்துதான் தீக்ஷை செய்தல் வேண்டும். உத்தராயணம், தக்ஷிணாயனம், சித்திரை, ஆவனி, புரட்டாசி, தை ஆகிய மாதங்கள் நீங்கலான மற்ற

மாதங்கள் நன்று. கிரஹணம், விஷுபுண்யகாலங்கள், தமனோத்ஸவம் பவித்ரோதஸ்வம் ஆகிய காலங்களில் தீக்ஷை செய்யலாம் என்பதனால் 12 மாதங்களிலும் செய்யலாம் என்று தெரிகிறது. இருப்பினும் அவற்றுள், ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் உத்தமம். ஆனி, மார்கழி மாதங்கள் மத்திமம். மற்றய மாதங்கள் அதமமாகும். சுக்ல கிருஷ்ண பக்ஷங்களில் சதுர்த்தி, அஷ்டமி, நவமி, சதுர்த்தசி, அமாவாசை, பவுர்ணமி, பிரதமை நீங்கலாக மற்றய திதிகளில் தீக்ஷை செய்தல் உத்தமம். சனி, ஞாயிறு, செவ்வாய் நீங்கலாக மற்றய புதன், வியாழன், வெள்ளி, திங்கள் நான்கு கிழமைகள் கூறப்பட்டுள்ளன. சுபநக்ஷத்திரங்களும், ஸ்திரராசியும் உத்தமம் என்று தீக்ஷைக்கு உரிய காலங்கள் புபுக்ஷுக்களுக்கு கூறப்பட்டுள்ளன. முமுக்ஷுக்களுக்கு எல்லாக்காலமும் உத்தமாகும். தீக்ஷையை ஆசாரியர் விரும்பும் காலத்திலும் செய்யலாம்.

(4) தீக்ஷா மண்டலங்கள்

தீக்ஷைக்கு உரிய யாகசாலையின் நடுவில் உள்ள வேதிகையின் மீது, புதிய துணியில் தீக்ஷைக்கு உரியதான (1) லிங்க மண்டலம், (2) நவநாப மண்டலம், (3) அனந்த விஜய மண்டலம், (4) பத்ர மண்டலம், (5) சுபத்ர மண்டலம், (6) உமாகாந்த மண்டலம், (7) கௌரீலதாலிங்க மண்டலம், (8) ஸ்வஸ்திக மண்டலம், (9) விசேஷ லதாலிங்க மண்டலம் போன்ற பல மண்டலங்கள் பல ஆகமங்களில் கூறப்பட்டுள்ளவற்றுள் ஏதேனும் ஓர் மண்டலத்தை வரைந்து, வண்ணம் தீட்டி, அதில் மண்டலேஸ்வரரை பூஜித்தல் வேண்டும். (1) சண்டிகேஸ்வரருக்கு டங்க மண்டலம் என்று ஒன்று கூறப்பட்டுள்ளது. இதுவரை கூறப்பட்டுள்ள மண்டலங்களை பின்னர் காண்பீராக.

(5) தீக்ஷைக்கு உரிய யாகசாலை அமைப்பு

தீக்ஷைக்கு உரிய யாகசாலையினை, தீக்ஷைசெய்பவரான ஆசாரியரின் கைமுழ அளவினால் மட்டுமே அமைக்க வேண்டும். ஆசாரியனின் கைமுழ அளவு 16 முழம், 15 முழம், 14 முழம், 13 முழம், 12 முழம், 11 முழம், 10 முழம், 9 முழம், 8 முழம், என 9 வகையாலான அகலநீளமுடைய சமசதுரவடிவில் மண்டபத்தை அமைக்கலாம். 14 முழம் முதல் 16 முழம் வரை உள்ளவை உத்தம மண்டபமாகும். 11 முழம் முதல் 13 முழம் வரை உள்ளவை மத்திம மண்டபம் ஆகும். 8 முழம் முதல் 10 முழம் வரை உள்ளவை அதம மண்டபமாகும். மண்டபத்தின் நடுவில் வேதிகையின் அளவு கூறப்படுகின்றது. மண்டபத்தின் சமசதுர பரப்பளவில் மூன்றில் ஒரு பங்கு அளவுடையதாக வேதிகை அமைத்தல் வேண்டும். வேதிகையின் உயரம் 1/4, 1/2, 3/4, 1 பங்கு-களில் அமைக்கலாம். இந்த வேதிகை சதுர வடிவாகவும், சமமாகவும் இருக்கும்படி செய்தல் வேண்டும். வேதிகைக்கு கிழக்கில் சதுரஸ்ர குண்டம் ஒன்று மட்டும் அமைப்பது அதமபக்ஷமாகும். வேதிகைக்கு கிழக்கில் சதுரஸ்ரம், தெற்கில் அர்தசந்தின், மேற்கில் விருத்தம், வடக்கில் பத்மம், கிழக்கிற்கும், வடகிழக்கிற்கும் நடுவில் பிரதான குண்டம் விருத்தம் அல்லது சதுரஸ்ரம் என 5 அமைத்து, பஞ்சகுண்டம்

போடுவது மத்திம பக்ஷமாகும். வேதிகையின் எண் திசையிலும் முறையே (1) சதுரஸ்ரம், (2) யோனி, (3) அர்த்தசந்திரன், (4) த்ரிகோணம், (5) விருத்தம், (6) ஷட்கோணம் / ஷ்டஸ்ரம், (7) பத்மம், (8) எண் கோணம் / அஷ்டாஸ்ரம், (9) பிரதானம் கிழக்கிற்கும், வடகிழக்கிற்கும் நடுவில் விருத்தம் அல்லது சதுரஸ்ரம் என 9 அமைத்து நவகுண்டம் போடுவது உத்தமமாகும். குண்டங்கள் ஆசாரியரின் கைமுழம் இரண்டு அகலம் உடையதாகவும், உயரம் 9 அங்குலம் உள்ளதாகவும், கீழ்மேலகலை 2 அங்குலம் உயரம் 2 அங்குலம் அகலம் உள்ளதாகவும், நடுமேகலை 3 அங்குலம் உயரம், 3 அங்குலம் அகலம் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும். மேல்மேகலை 4 அங்குலம் உயரம், 4 அங்குலம் அகலம் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும். எனவே குண்டத்தின் உயரம் 9 அங்குலம், ஆழம் 9 அங்குலம். இவற்றின் நடுவில் உள்பகுதியில் 1 அங்குலத்தில் கண்டம் அமைத்தல் வேண்டும். நெய் வைப்பதற்கு ஆசாரியருக்கு எதிரில் மேல்மேகலையின் நடுபாகத்தில் யோனியை அரசிலைப் போல் அமைக்க வேண்டும். யோனியின் முனை கண்டத்தை தொடவேண்டும். குண்டத்தின் உள்ளே நடுவில் பத்மம் போட வேண்டும். அதன் நாளமும் கண்டத்தைத் தொடல் வேண்டும். எனவே, குண்டம் என்பது மேகலை, யோனி, கண்டம், பத்மம் என்ற நான்கினை உடையதாக இருத்தல் வேண்டும். பத்மகுண்டத்திற்கு நடுவில் உள்ளே பத்மம் போடக்கூடாது. யோனி குண்டத்திற்கு மேல்மேகலையில் நடுவில் யோனி போடக்கூடாது. எனவே இந்த இரண்டு குண்டங்களும் மேகலை, கண்டம், யோனி போன்ற மூன்றினையும், பத்ம குண்டமும், யோனிகுண்டம், மேகலை, கண்டம், பத்மம் என்ற மூன்றினையும் பெற்று விளங்குகின்றன. கிழக்கு முதலான நாற்றிசையிலும், நான்கு வாயில்களுடனும், யாகசாலையின் மண்டப-ஸ்தம்பங்கள் முறையே உத்தமத்திற்கு 16 ஸ்தம்பங்களும், மத்யமத்திற்கு 12 ஸ்தம்பங்களும், அதமத்திற்கு 8 ஸ்தம்பங்களாகவும் அமைத்தல் வேண்டும். மண்டபத்தின் உயரம், மண்டபத்தின் அகலத்தைப் போன்றதாகும். நான்கு வாயில்களின் இருபுறமும் உள்பகுதியில் அஷ்டவித்யேச கலசங்கள் வைப்பதற்காக சிறுமேடை அமைத்தல் வேண்டும். 3/4 அடி உயரம், 1 அடி அகலம் இருத்தல் வேண்டும். வேதியைச் சுற்றிலும் இதுபோல் உபவேதிகை, அஷ்டமங்களம் வைப்பதற்காக அமைத்தல் வேண்டும். தென்மேற்கு பகுதியில் பஞ்சகவ்யத்திற்காக ஒரு முழம் அகலத்தில் மேடையும், வடமேற்கில் பாலிகை பூஜைக்காக 1 1/2 முழம் அகலத்தில் மேடையும், வடகிழக்கில் யாகேஸ்வரீ யாகேஸ்வரருக்காக ஒரு முழம் அகலம், 3/4 அடி உயரத்தில் மேடையும் உள்ளதாக யாக மண்டபம் அமைத்தல் வேண்டும். நடுவேதிகைக்கு மேற்கூரையை வெட்டிவேரால் அமைத்தல் வேண்டும். எட்டுதிசை-களிலும் எட்டு சிகப்புநிறக்கொடிகளும், வாசற்படியின் மேல் இருபுறமும், சிகப்பு பதாகைகளும் கட்டுதல் வேண்டும். வாசற்படியின் மேற்புறம் தோரணங்கள் கட்ட வேண்டும். கோமயத்தால் மெழுகி கோலம் போடல் வேண்டும். இவ்வாறு யாகசாலை அமைப்பு முறை கூறப்பட்டுள்ளது.

(6) தீக்ஷை செய்வதற்கு ஏற்ற இடம் :- தீக்ஷை செய்வதற்கு ஏற்ற இடமானது ஆசாரியரின் விருப்பப்படியே இருக்கத்தக்கது. ஆசாரியனின் வீடு அல்லது சிஷ்யரின் வீடு. ஆசாரியர் இஷ்டப்- படின் தேவாலயங்கள், க்ஷேத்திர மஹாத்மியம் கோண்ட 108 சிவாலயங்களுள் ஒன்று, பஞ்சபூத க்ஷேத்திரங்களுள் ஒன்று. 12 ஜோதிர்லிங்க க்ஷேத்திரங்கள் முதலானவை ஏற்ற இடங்களாகும். கோயில்கள் உள்ளதாயும், வேதகோஷங்கள் ஒலிப்பதாயும், மான்கள் இயற்கையாய் வசிப்பதாயும், வேதியர்கள் வசிப்பதாயும், புகழ்வாய்ந்த இடமாயும் உள்ள இடத்தில் யாக மண்டபம், யாக வேதிகை, யாக குண்டம், தீக்ஷா மண்டலம் முதலியவற்றை அமைத்து செய்தல் முறை. ஆசாரியருக்குப் பிடித்தமான இடமே தீக்ஷை செய்வதற்கு ஏற்ற இடமாகும்.

(7) தீக்ஷையின் சிறப்பு :- ஆன்மாக்களுக்கு அடையக்கூடிய பிறவிப்பயனாக இருப்பது முக்தி பெறுதலே ஆகும். மோக்ஷம், கைவல்யம், அபவர்கம், சாயுஜ்யம், முக்தி, வீடுபேறு என்பது ஒரே பொருள் கொண்ட சொற்களாகும். முக்தியானது ஞானத்தால் அடையத்தக்கது. அத்தகைய ஞானம், ஆத்மாக்களை அஞ்ஞான இருளாம் பாவத்தை நீக்கி, ஞானமாம் உள்ளொளியை வெளிப்படுத்தி, பரகதியை அளிக்கவல்ல ஒரே சடங்கு சிவாகமங்களுள் உள்ள தீக்ஷையே ஆகும். மேலான ஞானத்தை அளிக்கவல்ல இறைவழிபாட்டிற்கு, நல்வழியை காட்டி அருள்வது சைவதீக்ஷையே ஆகும். உலகில் நாம் கண்டு நுகர்கின்ற யாவும், உறவினர்களும், நமது உடலுக்கு மட்டுமே நன்மையும், இன்பமும் பயக்கத்தக்கவையாகும். நமது உயிரைப் பற்றி நிற்பவை நாம் செய்கின்ற புண்ணிய பாவங்கள் தான். இந்த வினைகளால் பிறவிகள் தொடர்கின்றன. வினைகளை மாய்ப்பது தீக்ஷையே. எனவே, உண்மையில் இறைவன் ஒருவன் தான். நம்முயிருக்கு நற்பயனைக் கூட்டுவிக்க இயலும். ஆகவே கிடைத்தற்கரிய மானிடப்பிறவி எய்திய நாம் உண்மையான ஆன்மநலம் பயக்கவல்ல, ஆப்தரான இறைவனை, வழிபடுதலும், அவன் நம்மை உய்விக்கக் கூறிய சாஸ்திர விதிமுறைகளை பின்பற்றுதலும், நமது தலையாய கடமையாகும் என்பதை ஆய்ந்து உணரலாம். அவ்வாறு இறைவழிபாடு செய்யவும், நன்மார்க்கத்தை அறியவும், ஆகமங்களில் கூறியுள்ளதும், சத்குருவின் வாயிலாகப் பெறத்தக்கது மானசைவதீக்ஷையே ஆகும். தீக்ஷை என்பது உடலுக்கோ, ஜாதிக்கோ, கன்ம- மலத்துக்கோ, புவனங்களுக்கோ செய்யப்படுகிற சடங்கு அல்ல,தீக்ஷை என்பது, முற்றிலும் உடலைக் காட்டிலும் வேறாக உள்ள ஆன்மாவிற்கு செய்யப்படுவதாகும். எனவே உயிருக்குச் செய்யப்படுகிற ஒரே சடங்கு இந்த தீக்ஷையே. இதுவே ஆன்மாவிற்கு முக்தியை தரவல்லது. தீக்ஷை பெறாமல் செய்யும் பூஜை பயனற்றது. எனவே தீக்ஷையினால் மாசற்ற மனம், தூயசெயல், புனித உடல், நல்லொழுக்கம், முக்தி அளிக்கும் ஞானம் ஆகியவை கிட்டும். ராமர், கிருஷ்ணர் போன்றோர், தீக்ஷை பெற்று பூஜை புரிந்து, முக்தி அடைந்ததை ஆகமம், புராணம் இவை உணர்த்துகின்றன. கல்லாலின்கீழ் அமர்ந்தபிரான், சண்டேசானுக்ரஹர், சக்ரப்ரதான-மூர்த்தி, விக்னப்ரசாதமூர்த்தி முதலிய மாகேச்வரபதுமை கோலங்களாலும், திருமுறைகள்

வாயிலாகவும், பெரிய புராணத்தில் பக்தியால் விளைந்த ஞானக்கூற்றாலும், தீசைஷயின் சிறப்பினை நன்கு உணரலாம்.

(8) தீசைஷயின் பயன் :- தீசைஷகள் சீடனின் மனப்பக்குவநிலைக்கு ஏற்ப, பலவகையில் கூறப்பட்டமையால், அவற்றின் பயன்களும், தீக்ஷாவகைக்கு ஏற்பவும், தீசைஷக்குப்பின் கடைபிடிக்கும் சமய ஆசாரத்திற்கு ஏற்பவும், மாறுபடுகின்றன. தீசைஷ செய்து கொண்டபின் ஆசாரத்தில் வழுவினால் புத்திபூர்வமாகச் செய்த பாவம், பிராயச்சித்தம் செய்துக் கொள்வதாலும், மந்திராதி திரவியங்களின் உபாயங்களாலும், பவித்திரவிதியாலும் சுத்தியாகிறது. அபுத்திபூர்வமாக (அறியாமல்) ஆசாரத்தில் வழுவினால் அந்தியேஷ்டிக் கிரியையால் சுத்தியாகிறது என்று ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது. சைவசித்தாந்த முக்தி என்பது சிவதீசைஷயினால், மும்மலங்களின் வலிமை நீங்கி, சிருஷ்டி காலத்தில் மீண்டும் கீழே திரும்பாமல், அருளோடு, சிவனைப் போல், (1) சர்வக்ஞத்துவம், (2) நித்யத்ருப்தித்வம், (3) அனாதி போதத்துவம், (4) ஸ்வதந்திரத்துவம், (5) அலுப்த சக்தித்வம், (6) அனந்தசக்தித்துவம், (7) நிராமயமான்மத்வம், (8) விசுத்ததேஹத்துவம் எனும் எண் குணங்களும் கூடிய பரமானந்த பெருங்கடலிற்படிவதேயாகும். சிவம் உயிரோடு அத்துவிதமாய் நிற்கும். இதுவே சுத்தாத்வைதம் அல்லது சிவாத்வைதம் என்பதாகும். தீசைஷகளால் பெறப்படும் முக்திகளின் தரம் ஆகமங்களில் கூறப்படுவதாவது. லௌகிக, தீசைஷ பெற்று ஆசாரம் அனுஷ்டித்தவர்கள் புவனேஸ்வரபதம் பெறுவர். சைவத்திற்குள் புகுந்து (1) சமய தீசைஷ பெற்று சரியை அனுஷ்டித்தவர்கள் சாலோகபதம் அதாவது சிவனது உலகமான சிவலோகத்தில் போய் இருப்பதாகிய சிவலோகபதம் அடைவர். (2) விசேஷ தீசைஷ பெற்று கிரியையையும் அனுஷ்டித்தவர்கள் சாமீபபதம் அதாவது பரமசிவனுக்கு சமீபத்தில் இருப்பதாகிய சாமீபபதம் அடைவர். (3) நிர்வாண தீசைஷ பெற்று யோகம் அனுஷ்டித்தவர்கள் சாரூபபதம் அதாவது பரமசிவனைப் போல் ஜடைமுடி, காள கண்டம், சதுர்புஜம், திரிநேத்திரம், பிறைச்சந்திரனை தலையில் கொண்டு விளங்கும் உருவம் பெற்று, அருகில் இருப்பதாகிய சாரூபபதம் அடைவர். (4) ஆசாரிய அபிஷேகம் செய்து ஞானம் பெற்று அனுஷ்டானத்துடன் கூடியவர் சாயுஜ்யம் அதாவது பரமசிவனுடன் கலந்து இருத்தல் ஆகிய பிறவாப்பேரின்ப நிலையை அடைவர். மேலும் சமயதீசைஷயால் ருத்திரபதம், விசேஷ தீசைஷயால் மஹேஸ்வரபதம், நிர்வாணதீசைஷயால் சதாசிவபதம், ஆசார்யாபிஷேகத்தால் சிவபதம் இவற்றை அடைதலே தீசைஷயின் பயனாகும். இவ்வாறு தீசைஷ பெற்று, விதிப்படி அனுஷ்டித்த உத்தமனாகிய ஆன்மாவிற்கு, ஆணவம், கன்மம், மாயேயம், வைந்தவம், திரோதான சக்தி எனும் ஐவகைப் பாசங்களில் இருந்து நீங்குதல், முடிவில் சிவனைப் போல் (1) முழுவதும் உணர்தல், (2) முழுதுஞ் செய்தல், (3) சித்த மகிழ்ச்சி, (4) அனாதியாகிய சுதந்திரத் தன்மை, (5) கெடாத சக்தி உடைமை, (6) அளவற்ற சக்தியுடைமை ஆகிய ஷாட்குணத்தின் சுரூபத்தைப் பெறுதல பயன். எண்குணங்களுள் நிராமயமான்மாவை அநாதிபோதத்திலும், விசுத்ததேகத்தினை அலுப்த சத்தித்வத்திலுமாக அடக்கி இறைவனை

ஆறுகுணத்தோன் என்றும் கூறுவர். இந்த ஆறுகுணங்களும் (1) சத்து, (2) சித்து, (3) ஆனந்தம் என்ற மூன்றில் அடங்கும். எனவே தீக்ஷையின் பயன் சச்சிதானந்த ஸ்வரூபியாய் விளங்குவதேயாகும். நாமும் சிவநெறியில் வாழ்ந்து சிவபதம் பெறுவோம்.

****

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

****

சுபம்

****

<u>ஓம் உமா மஹேச்வராப்யாம் நம :</u>

<u>திருச்சிற்றம்பலம்</u>

சித்தாந்த ஷடத்வாதீதசிவ அனுபூதிக்ரமம்

(சிவாகமநெறியில் ஷடத்வாகடந்த இறையை நுகரும்முறை)

கட்டுரையாசிரியர்
சிவஸ்ரீ செ.கோ.மங்களேச்வர சிவாசார்யர் M.A.,Ph.D.,
புதுவை.

வந்தே விச்வாதிகம் சாந்தம் அனாதிநிதனம் சிவம்.
நிஷ்களம் நிஷ்களங்கஞ்ச சக்திம் ஞான க்ரியாத்மிகாம்.

குரும் கணபதிம் ஸ்கந்தம் ஸாம்பம்ச பரமேச்வரம்.
வந்தே வாணீம் மஹாலக்ஷ்மீம் இஷ்டகாம்யார்த்த ஸித்தயே.

கற்பனை கடந்த ஜோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம்நீடி அருமறை சிரத்தின் மேலாம்.
சிற்பர வ்யோம மாகும் திருச்சிற் றம் பலத்துள்
பொற்புடன் நடம் செய்கின்ற புங்கழல் போற்றி போற்றி.

சிவநேயச்செல்வர்காள்! வணக்கம், யான் பெற்றுள்ள "சித்தாந்த ஷடத்வாதீத சிவானுபூதி கிரமம்" என்ற தலையங்கப்பொருள் பற்றி, சித்தாந்தம், ஷடத்துவா, சிவானுபூதி என்று முப்பகுதிகளாக விளக்கிட எனது குருவருளையும், திருவருளையும் துணைகொண்டு முயல்கிறேன்.

உலக உயிர்கள் உய்யும் பொருட்டு பசுபதியாகிய சிவபெருமாள் அருளிச்செய்த சிவஞானநூல்களே, சிவாகமங்கள் எனப்படும் ஸித்தாந்த நூல்களாகும். ஸித்தாந்தம் என்ற சொல்லுக்கு தெளிவாகி முடிந்தமுடிவு என்பது பொருளாகும். சித்தாந்தம் முப்பொருளை விளக்குவது. அவை இறை, உயிர், உலகம் எனும் பசு, பதி, பாசம் என்பவை. முப்பொருள் விளக்கம் பற்றி இனி காண்போம்.

<u>முப்பொருள் விளக்கம் :-</u> அவன் என்றும், அவள் என்றும், அது என்றும் இவ்வாறு பகுத்து பலவாக சுட்டி அறியப்படுகிற அவயப்பகுப்புடைய இவ்வுலகமானது, கண்கூடாக

காணப்படுவதால், இல்லை என்று கூற முடியாததாய், உள்ளபொருளாய் விளங்குவதாகும். உலகம் நிலைபெற்று இருக்கும் இந்த ஸ்திதிகாலத்திலும், முன்கூறியபடி பலவாய் சுட்டி அறியப்படும். அவயவப்பகுப்பு உடையவைகளாய் இருக்கிற பஞ்சபூதகாரியங்கள் தோற்றம் மற்றும் நாசங்களைத் துணையாகக்கொண்டே நிலைபெற்று வருவதால், இந்த இலக்கணங்-களோடு கூடியுள்ளதாகிய உலகம் முழுவதும் தோற்ற நாசங்களை உடையதாகும். தனக்கெனச் சுதந்திர அறிவில்லாத சேதனப்பொருள்களும், அறிவேயில்லாத அசேதனப்பொருள்களும் கூடிய உலகமானது மேற்கூறியபடி முத்தொழிற்படக் காணுதலால், அவ்வாறு செய்யப்படுவதற்கு சுதந்திர அறிவு முதலியனவுடைய ஒரு முதல்வன் தேவைப்படும். அம்முதல்வன், ஓர் உள்ள-பொருளை இவ்வாறாக படைத்தல், காத்தல், ஒடுக்குதல் எனும் முத்தொழிற்படுத்துவது எதற்காக? என்றால், முதல்வனுக்கும், அசேதன உலகத்திற்கும் வேறாயுள்ள சேதனம் எனப்படும் எண்ணில்லாத உயிர்களின் பொருட்டே ஆகும். இந்த ஆன்மாக்கள் என்று உள்ளதோ, அன்று தொட்டே, அனாதியாகவே, பாசபந்தம் உற்றுத் துன்புறுவதாகும். அவைகள் பொருட்டு கருணைமிக்க முதல்வன் அவைகளை அப்பாசப் பிணைப்பிலிருந்து நீக்கி, அவைகள் இன்புறும்படி செய்வதற்கு அவைகளுக்கு உதவியாக உலகத்தை அளித்து உதவினார் என்று அறியவும்.

சேதன உயிர்கள் இல்லையேல், இந்த அசேதன உலகத்தை உண்டாக்கியது வெறுஞ் செயலாய் முடியும். உயிர்களையும், கடவுளே படைத்தாரென்றால், அவ்வுயிர்கள் பலவாய் பல-வகையான சுகதுக்கங்களை அனுபவித்து வருவதைப் பிரத்யக்ஷமாகக் காணுதலால் உயிர்-களாகிய நம்மை, கடவுளே சிருஷ்டித்தாரென்பது அக்கடவுளின் பெருங்கருணைக்கும், நடுநிலை-மைக்கும் இழுக்காகி, காரணசூனியமாய் முடியும். அவர் தன் பொருட்டு சிருஷ்டித்தாரெனில், "வேண்டுதல் வேண்டாமையில்லாத" முதல்வனுக்கு அது இழுக்காய் முடியும். அக்கடவுளே இவ்வாறு பலவகைப்பட்டாரென்று கூறினால், அது அவரது அனாதிமுத்தத் தன்மைக்கு வழுவுதல் ஆகும். அவைகள் கானல்நீர் போலத் தோற்றம் மட்டுமே யன்றி, உண்மையில் இல்லை, என்றால், நீராகிய உள்ளஒருபொருளை, முன்னர் அதை அறிந்த ஒருவனே, பின்னர் கானலாகிய உள்ளபொருளைக் காணும் போது, இது நீரென மயங்கிக்கண்டது போல, இவைகளையும் மயங்கிக் காண்பதற்கு, இவற்றின் வேறாகிய ஒருவன் வேண்டப்படும். அம்மயக்கத்துக்குக் காரணமும் வேண்டும், அதுவல்லாமல் இல்லாத பொருளைக்காண்பது என்றும் இயலாத ஒன்றே. ஆகையால் அனாதிமலஸஹித ஆன்மாக்கள் பொருட்டே, கடவுள், உள்ள பொருளாகிய இந்த உலகத்தைப் படைத்து உதவினார் என்பது சித்தாந்தம். இவ்வாறாக இவ்வுலகத்தைச் சங்கரித்து மீளத்தோற்றுவிக்கும் சம்ஹாரகிருத்யகாரணனே, இந்த உலகத்திற்கு, நிமித்தகாரணனாகிய பதி என்று அறிக. யாவர்க்கும் இவரே தலைவர் ஆதலினால் பதியே கடவுள் என்று சொல்லப்படுகிறார்.

<u>கடவுள் இலக்கணம் (பதிப்பொருள்) : -</u> கடவுள் முற்கூறிய பசு, பதி, பாசம், என்னும் மூன்றினுள் மேலானவராய், உருவம், அருவம், உருவாருவமில்லாதவராய், அவை உள்ளவராய், நித்தியராய், ஒருவராய், ஒப்பற்றவராய், பரிபூரணராய், அசையவற்றவராய், சாந்தராய், நிர்க்குணராய், தன்வயம், தூயவுடம்பு, இயற்கையுணர்வு, முற்றுணர்வு, இயல்பாகவே பாசங்களின் நீக்கம், வரம்பு இல்லாத இன்பம் ஆகிய எண்வகைச் சிறப்புகுணங்களுடையவராய், பாசஞானம் மற்றும் பசுஞானங்களால் அறியப்படாதவராய், சுட்டுணர்விறந்தறிதலாகிய பதிஞானம் ஒன்றா-லேயே அறியப்படும் ஞானசூரியராய், விளங்குபவரே கடவுள். கடவுன் என்பது கட + உள் எனப் பிரிக்கப்பட்டுக் கடத்தலையுடையவர் எனப்பொருள் தரும். கடத்தல் என்னும் பொருளுடைய கட என்பது பகுதி, உள் என்பது தொழிற் பெயர் விகுதி, இதன்பொருள், எல்லாத் தத்துவங்களையும் கடந்தவர் என்பதாம். ஆகவே தத்துவாதீதர் (ஷடத்வாதீதர்) என்பதாக அறிக. மேற்கூறிய இலக்கணத்தை சிவபிரகாசம் கூறும்.

"பலகலை யாகம வேதம் யாவையினுங் கருத்துப்
பதி, பசு, பாசந் தெரித்தல் பதி பரமே யதுதா,
னிலவுமரு வுருவின்றிக் குணங் குறிக ளின்றி
நின்மலமா யேகமாய் நித்த மாகி
யலகி லுயிர்க் குணர் வாகி யசல மாகி
யகண்டிதமா யானந்த வுருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப்
பெரிதாய்த் திகழ் வதுதற் சிவமென்பர் தெளிந் துளோரே.

(சிவப்பிரகாசம்)

பதியெனும் சிவத்திற்கு, அக்னியில் சூடும், பூவில் மணமும், சூரியனில் கிரணமும் உள்ளது போலவே, பிரிவற்றுச் சமவாயமாயும், அனந்தசக்திரூபையாயுமுள்ள (1)பராசக்தி என்று ஒரு சக்தி உண்டு. இங்கு சக்திஎன்றது வல்லமையை என்றுஉணர்க. கடவுள், தனது அன்பினால் தனது சக்தியாகிய பராசக்தியை அதிஷ்டித்து, அனாதியே ஆவணமலசம்பந்தமுற்றும், அறிவற்றும், மூடமாய்க்கிடக்கும் ஆன்மாக்களை, காத்தருள்புரியத் திருவுள்ளம்கொண்டு, முதலில் பராசக்தியின் ஆயிரத்திலொரு கூற்றினின்றும் (2)ஆதிசக்தியைத் தோற்றுவிப்பார். ஆதிசக்தியின் ஆயிரத்திலொரு கூறு (3)இச்சாசக்தி ஆகும். இச்சாசக்தியின் ஆயிரத்திலொரு கூறு (4)ஞானசக்தி ஆகும். ஞானசக்தியின் ஆயிரத்திலொரு கூறு (5)கிரியாசக்தி ஆகும். இந்த பஞ்சக்திகளின் விளக்கமாவது யாதெனில்?

(1) பராசக்தி :- உயிர்களுக்கு அனுக்ரஹமாத்திரம் குறித்துப் பொதுவகையால், அறிந்தும், அறிவித்தும் நிற்பதாகிய ஹசித்" ஞானமொன்றே சிவசக்தியின் சொரூபம். அதுவே பராசக்தி எனப்படும்.

(2) ஆதிசக்தி :- இதுவே திரோதானசக்தி. இந்த திரோதம் அவதரசக்தியாகிய ஒர் (காலநிலையில்) அவதரத்திலே முதலில் தோன்றுகையால் ஆதிசக்தி எனப்பெயர் பெற்றது. இதற்கு அருட்சக்தி என்றும் பெயர். இதுதான் மற்ற நான்கு கிருத்யங்களுக்கும் காரணமானதும், ஆன்மாக்களுக்கு மலத்தைச் செலுத்திப்பக்குவப்படுத்துவதும் ஆகும்.

(3) இச்சாசக்தி :- சிவன் ஆன்மாக்களை ரக்ஷிக்கத் (விருப்பம்) திருவுள்ளம் கொண்ட பொழுது அந்த நினைவுஎழுந்த அவசரத்துக்கு இச்சாசக்தி என்று பெயர். (உயிர்களைக்காக்கும் விருப்பம்).

(4) ஞானசக்தி :- அப்படி ஆன்மாக்களை ரக்ஷிக்க, இச்சைகொண்டசிவன் அந்த ஆன்மாக்களுக்கு உரிய, வினைப்பயன்களை அறிந்த அவசரத்திற்கு ஞானசக்தி என்று பெயர்.

(5) கிரியாசக்தி :- அவ்வாறறிந்த வினைப்பயன்களை ஆத்மாக்களுக்கு ஊட்டும் நிமித்தம் அவர்களைப் பிரபஞ்சகாரியப்படுத்தும் அவசரத்துக்கு கிரியாசக்தி என்று பெயர். இவ்வாறு சிவன் தனது சக்தியால், இச்சாசக்தியால் விரும்பி, ஞானசக்தியால் அறிந்து, கிரியாசக்தியால் தாம் அசையாமலே தம்ஆற்றலால் அனைத்தையும் செய்கிறார் என்று அறிக. சிவனது பராசக்தி ஒன்றே வியாபாரபேதத்தால் பலவகையாக பெயர் மாற்றத்தை அடைகிறது.

அத்துவாக்கள் :- சைவசித்தாந்தில் சக்தியின் அம்சம் பெற்று, பலவகையில், உடலாய், கருவியாய் விளங்குவது அத்துவா. ஆத்துவா என்பது வழி. அதாவது மாயை தனது காரியங்களால் ஆன்மாக்களை பந்தித்து நிற்கும் வழி. அது சுத்தம், மிச்ரம், அசுத்தம் என மூவகைப்பட்டுப், பின்பு பொதுவாக (1) தத்துவம், (2) கலை, (3) புவனம், (4) வர்ணம், (5) பதம், (6) மந்திரம் என ஆறுவகைப்படும். இவையே ஷடத்துவா என்று கூறப்படும்.

ஏகத் ராத்வா ஷட் விதைகா தச ஸ்யு:
மந்த்ரா ண்யேகம் சாப் யசீதி:
பதாநி. ஷட் த்ரிம் சச்சாப் யத்ர தத்வாநி வர்ணா:
பஞ்சாசத் ஸ்யுர் பஞ்ச சங்கியா கலேதி.

மேற்கூறிய ஆறுவகை அத்துவாக்களில் தத்துவம், கலை, புவனம் ஆகிய மூன்றும் திரவிய (பொருள்) வடிவானவை. மற்றவை ஒலி வடிவானவை. இவற்றுள் புவனம் தத்துவத்தைப் பற்றி நிற்கும். தத்துவம் கலையைப் பற்றி நிற்கும். வர்ணம் (எழுத்து), பதம், மந்திரம் என்னும் மூன்று அத்துவாக்களும் புவனத்தில் தோன்றிய சரீரங்களைப் பற்றி நிற்கும். சுத்தாத்துவாக்கள் எனப்படுவன, சுத்தமாயையில்உள்ள, கலை தத்துவம், புவனம், வண்ணம்,

பதம், மந்திரங்கள் ஆகும். மிச்சிராத்துவாக்களாவன, அசுத்தமாயையிலுள்ள கலாதிகள் ஆறும் ஆகும். அசுத்தாத்-வாக்களாவன பிரகிருதிமாயையிலுள்ள கலா, தத்துவ, புவன, வண்ண, பத, மந்திரங்கள் ஆறும் ஆகும். இவ்வாறு ஆறு அத்துவாக்களும் மூன்று வகையாம்.

<u>1-வது தத்துவாத்வா :-</u>

தத்துவங்கள் = தாத்துவிகமாகிய சரீராதிகளைப் போல, உடனே அழிவதாக இல்லாமல், பிரளய காலம் வரையிலும் நிலைத்திருப்பதனால் இது தத்துவம் எனப்படும். பூதலயகாலத்தில் மரண-முறுந்தேவர்க்கு அமரர் என்னும் பெயர் ஏற்பட்டது போல, காரியக்கேடுடைய கருவிகட்கும் தத்துவம் என உபசரிப்பாய் பெயர்ஏற்பட்டது. தத்துவங்கள் அகக்கருவி முப்பத்தாறும், புறக்கருவி அறுபதும் ஆகும். புறக்கருவி அறுபதும் தாத்விகங்கள் எனப்படும். இவ்வாறாக தொண்ணூற்றாறும் தத்துவாத்வா ஆகும்.

<u>அகக்கருவிகள் :-</u> [1]பிருதிவி, [2]அப்பு, [3]தேயு, [4]வாயு, [5]ஆகாயம் என்னும் பூதம் ஐந்தும், [6]சத்தம், [7]பரிசம், [8]ரூபம், [9]ரசம், [10]கந்தம் என்னும் தன்மாத்திரை ஐந்தும், [11]வாக்கு, [12]பாத, [13]பாணி, [14]பாயு, [15]உபத்தம் என்னும் கன்மேந்திரியம் ஐந்தும், [16]சுரோத்திரம், [17]துவக்கு, [18]சட்சு, [19]சிஹ்வை, [20]ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியம் ஐந்தும், [21]மனம், [22]புத்தி, [23]அகங்காரம், [24]சித்தம் என்னும் அந்தக்கரணம் நான்கும், [25]புருஷன், [26]ராகம், [27]வித்தை, [28]கலை, [29]நியதி, [30]காலம், [31]மாயை என்னும் வித்தியாதத்துவம் ஏழும், [32]சுத்தவித்தை, [33]ஈச்சுவரம், [34]சாதாக்கியம், [35]விந்து, [36]நாதம் என்னும் சிவதத்துவம் ஐந்தும் ஆக முப்பத்தாறும் அகக்கருவிகள் எனப்படுகிற போக ஸாதனமான தத்துவங்கள் ஆகும்.

<u>புறக்கருவிகள் :-</u> பஞ்சபூதங்களின் காரியம் 25, வாக்கு முதலியவைகளின் தொழில் ஆகிய வசனம் முதலானவை 5, வாயுக்கள் 10, நாடிகள் 10, வாக்குகள் 4, ஏடனை (ஈஷணை) 3, குணம் 3, என்பவை 60ம் புறக்கருவிகள் ஆகும். இவை 60 தாத்விகம் எனப்படுபவை. 96ஐயும் தத்துவம் என்போரும் உள்ளனர். இதற்குச் சான்றியை "சிவப்பிரகாசகட்டளை" மற்றும் "தத்துவப்பிரகாசம்" எனும் நூல்களில் கண்டு அறியலாம்.

<u>தத்துவங்களின் தோற்றம் :-</u> பரசிவம், ஆன்மாக்களிடத்தில் வைத்த தயைமிக்க அருளினாலே, அவர்களை காக்கவிரும்பி, குடிலையின் ஒருபகுதியைக் கலக்கிட, அதிலிருந்து நாததத்துவமும், இதிலிருந்து விந்துதத்துவமும் தோன்றும். நாதமென்பது, இரண்டு எதிர்மறையான மின்சார சக்திகள். அதாவது, பாயும் சக்தியும், அதனைத் தாங்கும் சக்தியும் ஆகும். இவை ஒன்றோடு ஒன்று, சேரும்போது தொனியும் (ஓசை), பிரகாசமும் (ஒளி) தோன்றுகிறது போலவே, (இதற்கு இடியையும், மின்னலையும் எடுத்துக்காட்டாகக் கொள்ளவும்). சிவசூரியனுடைய கதிர் ஒளியானது மாயை (குடிலை)யில் வந்து பொருந்தியவுடன் உண்டாகியது தொனியே ஆகும். இந்த துவனி எனும் நாதத்திலிருந்து விந்து தோன்றும், என்றதும், தொனியானது ஆகாயத்தில் பரவும்போது உண்டாகிய

வட்டவடிவையே ஆகும். விந்து / பிந்து / புள்ளி / வட்டம் என்பது ஒரு பொருள். விந்துவிலிருந்து அக்ஷரங்கள் தோன்றுமென்பது, வரிவடிவில் புள்ளியிலிருந்தும், ஒலி வடிவில் தொனியின் வட்டத்திலிருந்தும், ஸகலஎழுத்துக்களும் தோன்றும். "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" எனும் திருக்குறளாலும் இதனை அறியலாம்.

அகரம் : விந்து : இவைகளை, ஊகித்து உணரவும்.

சிவ தத்துவே பரே சூக்ஷ்மே பிந்து ரூபம்து ஜாயதே.
பிந்தோர் நாதஸ் ஸமுத்பன்னோ நாதாத் சக்தி ரஜாயத.
சக்தேஸ்து ஜாயதே சப்த: சப்தாத் ஜாதம்து வாக்பவம்.
வாக்பவாத்ச கலாஜாதா: கலாப்யோ விகலாஸ் ததா.
தஸ்மாத் வை வாசகோ மந்த்ர: மந்த்ரஸ் தைரேவ பித்யதே.
ஏதத் சிருஷ்டி க்ரமப் புரோக்த: தேஷாம் லக்ஷண முச்யதே.
(வாதுளாகமம்)

தத்துவங்கள் யாவும், பல்வைத்தஇயந்திர, சக்ரங்களைப்போல, ஆரங்களையுடையதாய், ஒன்றினால் ஒன்று அசைக்கப்பட்டுத் தத்தம்தொழிலைச் செய்யும். இதற்கு சான்றாக தைத்திரீய ஆரண்ணியத்து 3வது பிரச்னம் 11வது மந்திரமாகிய "பஞ்சாரம் சக்ரம் பரிவர்த்ததே பிரது" என்பதை அறிக. இதன் பொருள், இவ்வைந்து சக்கரங்களுக்கும், சிருஷ்டியாதி ஐந்துஆதாரங்- களைஉடைய சக்கரம் மேலே விரிவாயுள்ளது என்பதாம். மேலும் "பாவாஷ்டகம்" ஆகிற, எட்டு ஆரங்களையுடைய புத்தியாகிற மகாசக்கரம் என்று, சைவாகம பௌஷ்கராகமம் 6வது பும்ஸ்த்வ-தத்வப்படலம் 128வது சுலோகங் கூறுவதாலும் அறிக. நாததத்துவமே [1]சிவதத்துவம் எனப்படும். இது தோற்றமுறையில் முதலாவது தத்துவமானாலும், ஒடுக்கமுறையில் இது 36வதுதத்துவம் என்று அறிக. இவ்வாறே மற்றவைக்கும் கண்டு கொள்க.

<u>6 சிவதத்துவ, விளக்கம் : -</u> நாததத்துவத்திற்கு சிவம் அதிபதியாதலால் இதற்கு பெயர் சிவதத்துவம் என்றது. எந்தெந்த பெயர்கள் எந்தெந்த தத்துவாதிபதிகளுக்கு உள்ளதோ, அவ்வப்பெயர்கள் அவரவர்களால் அதிஷ்டிக்கப்படும். தத்துவங்களுக்கும் ஆகும். விந்துதத்துவம் 35வதுதத்துவம். நாதமாவது - சர்வான்மாக்களுக்கும் அறிவை எழுப்புவித்து, நிற்கிற ஞானம் ஆகும். விந்துவிற்கு சக்தி என்றும் பெயர். விந்துதத்துவமான [2]சக்திதத்துவம்" என்பது விந்தாவது ஸர்வான்மாக்களுக்கும் உண்டாகிய தொழிலையெழுப்புவித்து நிற்கிற கிரியை ஆகும். விந்துத்துவத்திலிருந்து [3]சாதாக்கியம் தோன்றும். இதற்குச் சதாசிவதத்துவமென்றும் பெயர். இது 34வது தத்துவம் ஆகும். சதாக்கியமாவது ஞானக்கிரியைகளாகிய, நாதவிந்துக்கள் இரண்டும், சமஅளவாய் கூடியநிலை ஆகும். சாதாக்கியதத்துவத்திலிருந்து கிரியைமிகுந்து, ஞானம் சற்றுகுறைந்தாகிய நிலையில் [4]ஈச்வரதத்துவம் தோன்றும். இதற்கு மாகேச்வரம் என்றும் பெயர் இது 33வது தத்துவமாகும்.

ஈச்வரதத்துவத்திலிருந்து ஞானம்மிகுந்து கிரியை சற்று குறைந்ததாகிய நிலையில் [5]சுத்தவித்யாதத்துவம் தோன்றும். இது 32வது தத்துவமாகும். சாதாக்கியாதி மூன்று தத்துவங்களும் சிவதத்துவம் மற்றும் சக்திதத்துவம் இரண்டும் ஆகிய இவைஐந்தும் ஞானக்கிரியாசொரூபபேதங்களாகும். இதற்கு சித்தியாரின் 1-ம்சூத்திர 65ம் பாடல் சான்று.

ஞானமே யான போது சிவன் றொழின் ஞான மொக்கி
னீனமில் சதா சிவன்பே ரீசனாம் தொழில தேறி
னுனமேற் கிரியை வித்தை யுருத்திர னிலய போக
மானபே ரதிகா ரத்தோ டதிகர ணத்த னாமே. (சித்தியார்)

இவ்விதமாகத்தோன்றிய, இந்த, ஐந்துதத்துவங்களிலும், முதல்வன் ஞானக்கிரியைகளை அதிஷ்டிக்கையாலும், இவைகளிலுள்ள புவனாவாசிகளுக்குச் சர்வக்ஞத்துவ, சர்வகர்த்ருத்து-வங்களை விளக்குவதற்குச் சாதனங்களாகையாலும். இவை சுத்ததத்துவம் என்றும் சிவதத்துவம் என்றும், பிரேரகாண்டம் என்றும் பெயர் பெறும். இவைகளே மற்றவைகளைத் தொழிற்படுத்துதலினாலே இவை பிரேரகாண்டம் எனப்பெயர் பெற்றது. பிரேரித்தல் என்பதற்குத்-தூண்டிச்செலுத்தல் என்று பொருள். இவைகள் 5-ம் சிவபெருமானால் காரியப்படும். இவை-களுக்கு முறையே சிவம், சக்தி, சதாசிவன், மஹேசுவரன், உருத்திரன் எனும் ஐவரும் தத்துவ-கர்த்தாவாகுவார்கள். முன்னேகூறிய விந்துதத்துவத்திலிருந்து சூக்குமாதி நான்குவாக்குகள், ஐம்பத்தோர-க்ஷரங்கள், எண்பத்தொரு பதங்கள், சப்தகோடி மந்திரங்கள், வேதாகமபுராண சாத்திரங்களும், விஞ்ஞானகலர், பிரளயாகலருக்குத் தனு, கரண, புவன, போகங்களும் தோன்றும். இவைகள் சுத்தமாயையின் காரியங்களாகும். இதுவரை கூறியது (நேரடிப்படைப்பு) "சாக்ஷாத்சிருஷ்டி" எனப்படும். இனி கூறப்படுவது பரம்பராசிருஷ்டி ஆகும்.

<u>7வித்யாதத்துவ விளக்கம் : -</u> ஈச்வரதத்துவத்தில் வசிக்கிற அஷ்டவித்யேச்வரர்களில் முதல்வராகிய அனந்ததேவர் மகேசரின் அதிகாரத்தைப்பெற்று, வாயுவானது சமுத்திரத்தில் ஒரு பிரதேசத்தை விகாரப்படுத்துவதுபோல, அசுத்தமாயையின் ஏகதேசத்தை (ஒரு பகுதியை) கலக்க, அதிலிருந்து காரியமாயை என்னும் தத்துவம் தோன்றும். இதிலிருந்து காலம், நியதி, கலை, வித்தை, இராகம் என்னும் தத்துவங்கள் தோன்றும். இவற்றுள் கலையிலிருந்து வித்தையும், இதிலிருந்து இராகமும் தோன்றும் என்றும் கூறுவர். ராகமும் உடன் தோன்றும் என்பது சிலர் துணிபு (முடிவு). இவ்வைந்து தத்துவங்களின் சமூகமே புருஷதத்துவம் எனப்படும். இவைகளில் காரணமாகிய காரியமாயையையும் இவற்றுடன்கூட்டி, ஆக இந்த ஏழுதத்துவங்களும் வித்தியா-தத்துவம், சுத்தாசுத்த தத்துவம், போககாண்டம் அல்லது போஜயித்ருகாண்டம் என்றும் கூறப்படும். இவை ஏழும் ஆன்மாக்களுக்கு சிறிதுஅறிவை விளக்குவதற்குச் சாதனமாகையால் சுத்தமும், சூக்ஷ்மரூபவாயிலாக குணரூபமாகிய

சுகதுக்கமோகங்களை உண்டாக்குவதற்குச் சாதானமாகையால் அசுத்தமும், உடையவை ஆவதால் இவை 7ம் சுத்தாசுத்தம் / மிச்ரம் என்றது. இவை ஆன்மாக்களுக்குச் சகாயமாய் நின்று, போகங்களையுண்டாக்குவதால் போக- காண்டம் என்றும், அவைகளைப் புசிப்பிக்கையால் போஜயித்திருகாண்டமென்றும் கூறப்பட்டது. (போசயித்ரு = புசிப்பிக்கிறவை). (இவை ஏழில் காரியமாயையை நீக்கி, கலையில் தோன்றும் பிரகிருதியைக்கூட்டி உரைப்பாரும் உள்ளனர். அது பொருந்தாததாகும். ஏன்? எனில், தத்துவங்-களுக்குப் புவனங்களின் அடைவு (ஒடுக்கம்) கூறும் போது, ஏனையவற்றிற்கு உரைத்ததுபோல் பிரகிருதிக்கனெத்தனியே புவனங்கள் கூறப்படாமையாலும், பிரகிருதியைக்குணத்தத்து-வத்துடன்கூட்டி, அதற்குப் புவுனங்களைக்கூறி இருத்தலாலும், கலாசோதனை செய்யுமிடத்து பிரதிஷ்டாகலையில் பிரகிருதியையும், வித்தியாகலையில் மாயையையும் கூட்டி சோதிக்கப்-படுதலாலும், பிரகிருதிக்கு மேலிருக்கும் புருஷதத்துவத்தை இருபத்தைந்தாவதுதத்துவமென்று நூல்களிற்கூறியிருத்தலின், பிரகிருதியைத்தனியே ஒருதத்துவமாகக்கொள்ளின், புருஷதத்துவம் இருபத்தாறாவது தத்துவமெனப்பட்டு, அவற்றோடு மாறுபடுதலாலும், பிரகிருதிக்கும், குணதத்துவத்திற்கும் சிறிதே பேதங்கள் கூறப்படுதலாலும், மாயாதத்துவத்துக்குத் தனியே அஷ்டபுவனங்கள் கூறப்படுவதாலும், அவற்றின் அதிபதிகளாகிய மண்டலரெண்மரும் மாயையில் வசிக்கையாலும், மாயையை ஓர் தத்துவமாக்கொள்ளாவிடின் மாயாதத்துவத்திற்கு உரிய எட்டுபுவனங்களுக்கும் இடம் இன்மையாலும், அவற்றை வேறு தத்துவங்களில் அடக்குவது, பொருந்தாமையாலும், மாயையையும், பிரகிருதியையும் தனித்தனியே சேர்த்து இரண்டு தத்துவங்களாகக் கொண்டால் தத்துவம் முப்பத்தேழாகிறதாலும், தருக்கசங்கிரத்தில் (நியாயநூலில்) புரியட்டகத்துக்கு இலக்கணம் கூறுமிடத்து "புரியட்டகமாவது புருஷன்தோறும் நியதமாய்ச் சிருஷ்டிகாலம் துவக்கி மகாப்பிரளயம் வரையில் அல்லது மோட்சம் வரையில் இருக்கின்ற, பிருத்வி முதல் கலைவரையில் உள்ள முப்பது தத்துவரூபமான அசாதாரணமாகிய சூக்குமதேகம்" என்றதில் கலையை 30வது (இது உணர்த்து முறைமையில்) தத்துவமாகக் கொண்டிருப்பதால் 31வது தத்துவம் மாயை எனப்பெறுவதாலும், பிராசாதமாலை எனும் நூலில் பிராஸாதமந்திரத்தின் கலைகளுக்குரிய தத்துவங்களின் எல்லைகுரிப்பதில் மேதைகலைக்கு மண் முதல் பிரகிருதி வரை என்றும் விஷகலைக்கு மாயை என்றும் கூறப்படுவதாகலாலும், பிரகிருதியை வித்யாதத்துவத்தில் சேர்க்கமுடியாது என்பதையும், காரியமாயை என்று ஒரு தத்துவம் அவசியம் கொள்ளவேண்டும் என்பதையும் அறிக). வித்தியாதத்துவங்கள் ஏழும் காரியமாயையை முதலாகக் கொண்டு தோன்றியவை. இவை ஏழு தத்துவங்களில் கலை, வித்தை, இராகம் ஆகிய மூன்று தத்துவங்களும் உள் அந்தக்கரணம் எனப்படும். இவை அனந்த-தேவரால் காரியப்படும். இவர் அசுத்தமாயாகாரியத்திற்கு அதிகாரி.

24ஆத்மதத்துவ விளக்கம் :- இனி, பிரகிருதிமாயாகாரியமாவது, மாயாகற்பத்தில் வசிக்கிற பிரளயாகலராகிய ருத்திரர்களில் முதல்வாரான ஸ்ரீகண்டருத்திரர் அனந்ததேவரின் அதிகாரத்தைப் பெற்று, முன்னேகூறிய கலை என்னும் தத்துவத்தைக் கலக்க, மூலப்பிரகிருதி எனப்படுகிற, முக்குணசொரூபங்களாகிற மூலப்பகுதி தோன்றும். இந்த ஸ்ரீகண்டதேவர் பிரகிருதிமாயாகாரிய அதிகாரி. (இந்த பிரகிருதிமாயா அதிகாரியாகிய ஸ்ரீகண்டரை, குணதத்துவநிலையராகிய ஸ்ரீகண்டர் என எண்ணி மயங்கிடவேண்டாம். தத்துவவாசிகளுக்கு தத்தமது வாசஸ்தானம் முதல், கீழேஉள்ள ஸ்தானங்களுக்கே அதிகாரம் உண்டு என்பதாலும், கீழ்தத்துவவாசிகளுக்கு, மேல்தத்துவாசிகள் உயர்ந்தவர்கள் ஆகையாலும், பிரகிருதிக்குமேல் உயர்ந்த மூன்றாவது தத்துவமான கலையைப் பிரகிருதிகுணதத்துவநிலையராகியஸ்ரீகண்டகர் கலக்கிட எவ்விதத்திலும் முடியாது என்பதை அறிக. ஆதலால் மாயாதத்துவநிலையராகிய ஸ்ரீகண்கடரே கலாதத்துவ க்ஷோபகரர் என்பது முடிவு. ஆகவே ஈச்வரதத்துவநிலையராகும் அஷ்டவித்தியேசரில் ஒருவரான, ஸ்ரீகண்டர், மாயாதத்துவநிலையராகிய, ஸ்ரீகண்டர், பிரகிருதி குணதத்துவநிலையராகிய ஸ்ரீகண்டர், பிரம்மாண்டத்துள் நிலையராகிய ஸ்ரீகண்டர், என்று ஸ்ரீகண்டர் என்ற பெயரில் நால்வர் உண்டு என்பதை அறிவது அவசியம்). இங்ஙனம் மாயாதத்துவ நிலையராகிய ஸ்ரீகண்டரால், கலாதத்துவத்திற்தோன்றிய பிரகிருதி என்பது முக்குணங்களின்சொரூபம், வியக்தமாகாத (வெளியில் புலப்படாத) நிலையிலிருப்பதாகும். இதுவே 24வதுதத்துவமாகும். மேற்கண்ட முக்குணங்களும் பிரிந்து சமஅளவில் தம்முள் சமமாய் நின்ற அவசரம் சித்தம் என்றும், ஒருகுணம் மிகுந்த அவசரம் அதாவது சாத்துவிகம் மிகுந்து, மற்றவை குறைந்த அவதரம் புத்தி என்றும் பெயர் பெறும். குணத்தத்துவத்தின் கூறே சித்தமாகும். (சித்தம் மனதில் தோன்றுவது என்று கூறுவர், பௌஷ்கரம், சித்தியார், சிவப்பிரகாசம் முதலியவைகளில் குணதத்துவத்துக்குத் தோற்றங்கூறி சித்தத்துக்குத் தோற்றமே கூறாமையாலும், சித்தியாரில் "சித்தமா மவ்வியயத் தஞ்சிந் தனையது வுஞ் செய்யு" மெனக்கூறியிருத்தலாலும், தத்துவ விளக்கத்தில் "முக்குணங்களும் சமமாய் ஒத்ததே சித்தம்" என்பதாலும், புவனங்களின் அடைவு (இருப்பிடம் & ஒடுக்கம்) கூறும்போது, ஏனையவற்றிற்குக் கூறியதுபோல, மனத்துக்குப்பின் சித்தத்துக்குப் புவனம் கூறாமையாலும், தத்துவங்களின் உயரமும், புவனங்களின் அடைவும் கூறுமிடத்து குணதத்துவத்துக்கு உயரமும், புவனமும் கூறுகையால், சித்தம் மனதில் தோன்றுவது எனக் கொள்வதாகில் குணதத்துவத்தைத் தனித்து, ஒருதத்துவமாக் கொள்ள வேண்டியதாகிறதாலும், அவ்வாறு கொண்டால் ஆன்மதத்துவம் 24 என்பதற்கு மாறாகி 25 ஆகிறதாலும், பௌஷ்கராகமம் 6வது பும்ஸ்தவதத்துவப்படலம் சுலோகம் 27½ ல் அகிருதர் முதலியோர்க்குக் குணதத்துவத்தில் இருப்பு எனக்கூறுகையாலும், புத்தியில் தோன்றிய அகங்காரத்தின் சத்துவ-குணாம்சமான மனதில், முக்குணசொரூபமான சித்தம் தோன்றும் என்பது எவ்வகையாலும் பொருந்தாமையாலும், தத்துவரூபம் முதலிய அனேக சாத்திரங்களிலும், ஆகமாந்தரங்களிலும், தத்துவங்களுக்கு நிறமும், தொழிலும் கூறுங்கால், மனதுக்குப்பின்சித்தத்துக்குக் கூறாமையாலும், மற்றும்

பலவற்றாலும், சித்தம் மனதில் தோன்றுமென்பது பொருந்தாமையும் குணதத்துவத்தின் கூறே சித்தமென்பதும் அறிக).

பிரகிருதிதத்துவம் குணசொரூபங்களாகத்தோன்ற, அந்தக்குணங்கள் தம்மிலொத்த-விடம் சித்தமென்பதற்கும், அதிலே ஒருகுணம் ஏறினவிடம் புத்தி என்பதற்கும் சான்று. தத்துவ-விளக்கத்தின் பாடல் ஆகும்.

கூறிய மூலப் பகுதியிற் தோன்றுங் குண மவைதான்.
றேறிய சாத்திக ராசத தாமத மென்று செப்பு.
மூறிய முக்குண மொத்தவை மூன்று முயர் விழிவற்.
றேறியக் காற்புத்தி தத்துவ மாமேன் றெண் ணுவரே. (தத்துவ விளக்கம்).

புத்திதத்துவத்திலிருந்து இரஜோகுணம் மிகுந்து மற்றவை குறைந்ததாகிய அஹங்காரம் தோன்றும். இது 22வதுதத்துவமாகும். இது, தைஜஸாஹங்காரம் வைகாரியஹங்காரம், பூதாதியஹங்காரம், என மூன்றாய்விரியும். அவைகள் முறையே சத்துவம் முதலான குணங்களை உடையதனால் அவ்வப்பெயர்பெற்றன. இவற்றுள் தைஜஸாஹங்காரம் அறிவானபடியாலே அதனோடு சாத்துவிககுணம் பொருந்த [21]மனமும், [1]சுரோத்திரம், [2]துவக்கு, [3]சக்ஷு, [4]ஜிஹ்வா, [5]ஆக்கிராணம் ஆகிய ஞானேந்திரியங்கள் (அறிவுப்புலன்கள்) ஐந்தும் தோன்றும். இவை தத்துவ எண்ணிக்கையில் 21 முதல் 16வது தத்துவம் வரையிலாம். இவ்விடத்தில் இந்திரியம் என்றது வெளியில் தோன்றும். காது முதலிய உறுப்புகளை அல்ல. அங்கங்குள்ள சூக்குமமன கண்ணுக்குப்புலப்படாத, இயக்கும்சக்தியையே கூறியதாகும். இது என்ன?வெனில் காது முதலிய உறுப்புகளிருக்கவும், சப்தம்முதலிய விஷயங்களைக்கிரகிக்கமாட்டாமல் குருடன், ஊமையன், செவிடன் இருப்பது கண்கூடன்றோ. விஷயமானது கண்ணால் பார்க்கப்படுமளவில் அதனால் பார்க்கப்பட்ட அர்த்தத்தைப் புத்திக்கு விஷயமாகச் செய்ய யாதொன்று நிற்கிறதோ அது மனம் எனப்படும். தொழிலான வைகாரிக அஹங்காரத்துடன் விகாரமான, இராஜஸகுணம்- பொருந்திட, [1]வாக்கு, [2]பாதம், [3]பாணி, [5]பாயுரு, [6]உபத்தம் என்னும் கன்மேந்திரியபஞ்சகம் தோன்றும். இவைகள் தத்துவஎண்ணிக்கை வரிசையில் 15 முதல் 11வது தத்துவம் வரையிலாம். உருவமான பூதாதியஹங்காரத்துடன், மயக்கமான, தாமஸகுணம்பொருந்திட, [1]சப்தம், [2]ஸ்பரிசம், [3]ரூபம், [4]ரஸம், [5]கந்தம் என்னும் தன்மாத்திரைகளைந்தும் தோன்றும். இவ்வற்றிக்கு சூக்ஷ்மபூதங்கள் என்ற பெயரும் உண்டு. இவைகள்ஐந்தும், தத்துவஎண்வரிசையில் 10 முதல் 6வது தத்துவம் வரையிலாகும். இந்த, தன்மாத்திரைகளாகிய, சத்தம் முதலானவைகள் பஞ்சபூதங்கள் தோன்றுவதற்குக் காரணமானவைகள். ஞானேந்திரியங்களின் விஷயங்களாகிய சத்தாதிகள் பஞ்சபூதங்களுடைய குணங்கள். பஞ்சபூதங்களோடு கூடிய தன்மாத்திரா-சத்தாதிகளால் ஞானேந்திரியங்களுக்கு ஞானசக்தியையும், கன்மேந்திரியங்களுக்குக் கிரியா-சக்தியையும் விளக்கும் அறிவு என்று உபசரிக்கப்படும்

சாமர்த்தியமுண்டாம். சித்தியார் 2ம்சூத்திர 64வது செய்யுளில் **"ஆசை சேர் மனாதி தன்மாத்திரை புரியட்டகந்தான்"** என்று புரியட்டகவுடம்புக்குத் தன்மாத்திரைகளைக் கூறியிருக்கின்றது. ஆகையால் கீழ்உள்ள பூதகாரணமான தன்மாத்திரை சப்தாதிகள் வேறு, பூதகுணமான சப்தாதிகள் வேறு என்று அறியவும். இனி இந்த தன்மாத்திரைகளுள் சபதத்திலிருந்து [1]ஆகாயமும், ஸ்பரிசத்திலிருந்து [2]வாயுவும், ரூபத்திலிருந்து [3]தேயுவும், ரசத்திலிருந்து [4]அப்புவும், கந்தத்திலிருந்து [5]பிருதுவியும் தோன்றும். இவைகளுக்குப் பஞ்சபூதங்கள் என்றும், ஸ்தூலபூதங்கள் என்றும் பெயர். இவைகள் தத்துவ எண்ணிக்கை வரிசையில் 5 முதல் 1 வரையாகும்.

<u>பஞ்சபூதங்களின் விளக்கம் : -</u> இவ்வாறு சப்தாதி தன்மாத்திரையிலே பஞ்சபூதங்களும் ஓரோர் தன்மாத்திரையில் ஓரோர் பூதமாகத்தோன்றவேண்டாம், ஆன்மாவிலே ஆகாயம் தோன்றி, ஆகாயத்தில் வாயுவும், அதிலிருந்து தேயுவும், அதிலிருந்து அப்புவும், அதிலிருந்து பிருதிவுயும் தோன்றும் என்றால் என்ன? எனில் **"காரியத்திலே உண்டான குணங்கள், யாவும் காரணத்திலே உண்டு"** என்ற நியாயத்தினால், பிருதிவிக்குள்ள, கந்தாதிஐந்துகுணங்களும், ஆகாயத்திற்கும் உண்டாகவேண்டும். அவ்விதம் உண்டுஎன்றால் பிருதிவிக்கும், ஆகாயத்துக்கும் வித்தியாசம் இல்லை என்றாகும். ஆகாயம் ஆன்மாவிலே தோன்றுமென்றால் **"அசித்து சித்தினிடத்தில் உதிக்காது"** என்ற நியாயத்தினால் ஆன்மாவும், ஆகாயம் போலச்-சடமாகும். ஆனால் ஆகாயத்திலே, வாயுவாதிபூதங்கள் ஒன்றிலே ஒன்றாய்த்தோன்றும் என்ற **ஆகாசாத்வாயுர். வாயோரக்னிர். அச்னேராப: . அத்பிய: பிருதிவீ.** என்ற வேதவாக்கியங்-களுக்கு விரோதமாகுமே என்றால், நிமித்தார்த்தத்தில் ஆகாசாதி ஒன்றிலேஒன்று தோன்றும் என்றது, ஆகாயம் முதலாக ஒன்றின்பின்ஒன்று என, உண்டாகும் கிரமத்தினாலும், பஞ்சீ-கரணத்தினாலுமே கூறியது ஆகும். ஆகையால் ஆகமகூற்று வேதவிரோதமில்லை என்றறிக. **பஞ்சீகரணம்** எனப்படுவது, ஒருபூதத்தின் ஸ்வரூபத்தை இரண்டாக்கி, ஒருபாதி அந்தப் பூதமாகவே இருக்க, (மீதம் நின்ற), மறுபாதி நாலாகி மற்ற நான்கு பூதங்களிலும் அந்யோந்யமாய் வியாபித்து இருப்பது ஆகும். பஞ்சபூதங்களும் [1]சூக்ஷ்மம், [2]ஆந்தரம், [3]பாஹ்யம் என்று மூவகையாகும். **சூக்ஷ்மம்** சூக்குமதேகத்தில் இருந்து இந்திரிய ஆதாரமாகும். **ஆந்தரம்** ஸ்தூலதேஹத்தில் இருந்து சரீரத்தை வளர்த்து உள்ளிடங்கொடுத்தல் முதலிய தொழிலை இயற்றும். பாஹ்யம் என்பது (வெளிப்புறத்தில்) அண்டபுவன போக்கியப் பொருள்களுக்கு ஆதாரமாய், இடங்கொடுத்தல் முதலிய தொழிலை இயற்றும். இங்ஙனம் சித்தம் முதல் பிருதிவீ ஈறாகக்கூறப்பட்ட தத்துவங்கள் இருபத்திநான்கும் ஆன்மதத்துவம் எனப்படும். இவற்றிற்கு **அசுத்த தத்துவம்** என்றும் **போக்கிய காண்டம்** என்றும் பெயர். இவற்றுள் சித்தம், புத்தி, அஹங்காரம், மனம் என்னும் நான்குதத்துவங்களும் அந்தக்கரணம் எனப்படும். இவையெல்லாம் ஸ்ரீகண்டருத்திரராலே காரியப்படும். இங்ஙனம் ஆத்மாக்களுக்கு போக-ஸாதனமாகிய அகக்கருவிகள் முப்பத்தாறும் தோன்றும். இவ்வாறு மாயையானது சுத்தம், சுத்தாசுத்தம்,

அசுத்தம் என மூவகைப்பட்டு தனது காரியங்களாலும் முக்காண்டமாகிய ஆன்மாக்களின்அறிவு, இச்சை, செயல்களைவிளக்கும். இதனை உபதேசவிளக்க 7ம்பாடல் கூறும்.

சுத்தமு மசுத்தஞ் சுத்தாசுத்த நித்திய மாய்த்தூய்தாந்.
தத்துவ மைந்தோ டேழுதகு மிருபத்து நான்கா
யொத்து முக் காண்ட மாகி யுயிருணர் விச்சையாதி
வித்தகக் கலாதி தன்னால் விளக்கிடு மலமா மாயை. (உபதேச விளக்கம்)

இவைகளுள் ஆத்மதத்துவம் கீழ்பாகத்திலும், வித்தியாதத்துவம் மத்தியபாகத்திலும், சிவ-தத்துவம் மேல்பாகத்திலுமாக, சிவலிங்கத்திலும், ஆசாரியரின் மானுடதேஹத்திலும் கூறப்பட்டு திரிகண்டமாக முப்பகுதியாக வளிங்குவதாக எதிலும் காண்பிக்கப்படும். இதற்குச் சான்று. "பிருஹத் ஜாபாலோப- நிஷதம்" ஆகும். ஆத்ம தத்துவ மதோ பாகே வித்யா தத்வஞ்ச மத்யமே. ததக்ரே சிவ தத்வஞ்ச க்ரமாத் தத்வாநி ஸந்திஹி. இதனையே திருவிளையாடற்-புராணத்தின் கீழ்காணும் பாடல் விளக்குகிறது. அப்பாடல்,

ஆதியி லான்ம தத்துவ மான வலர்மகன் பாகமு நடுவி
னீதியில் விச்சா தத்துவ மான நெடியவன் பாகமு முடிவி
லோதிய சிவதத் துவமென லான வுருத்திர பாகமு முதிக்கும்.
பேதியிம் மூன்றி லெண்ணி றத்துவங்கள் பிறக்கு மிம் மூன்றினு முறையால்.

இவைகளில் சப்தாதிதன்மாத்திரைகள், பிருதிவி முதலிய, ஐந்துதத்துவங்களிலும் சூக்குமம், அகங்காரதத்துவம், அவற்றினுஞ்சூக்குமம், அதினும் புத்திதத்துவம் அதிசூக்குமம், அதினும் பிரகிருதி அத்யந்தசூக்குமம், அதினும் கலாதிதத்துவங்கள்சூக்குமம், அவற்றினும் காரியமாயை அதிசூக்குமம் என்றஅறியவும். மேலும், இவை, பொதுவும், சிறப்பும், பொதுச்சிறப்பும் என முத்திறப்படும். புவனவடிவாகிய தத்துவங்கள், எல்லோருக்கும் பயன்தருதலில் பொதுவாம். சூக்குமதேகவடிவாகிய தத்துவங்கள், போகநுகர்ச்சியின் பொருட்டுத், தனக்குப்பயன்தருதலிற் சிறப்பாம். ஸ்தூலதேஹவடிவாகிய தத்துவங்கள், தனது போகநுகர்ச்சிக்கும், சந்தனம், பூமாலை போல மனைவி முதலியோர் அனுபவித்தற்கும் வாய்ந்தமையில் பொதுச்சிறப்பாம். இதனால் புவனவடிவாகிய தத்துவங்கள், முப்பத்தாறாய், பொதுவாய், ஸ்தூலமாய், புறத்தே நிற்றல்போல, அகத்தே ஆன்மாவைப்பற்றி, முப்பதாறுதத்துவங்களும் சூக்குமாய் நிற்கும் என்றுஉணர்க. இவற்றுள் புறத்தே நிற்கும் 36-ம், சாதாரணதத்துவங்களென்றும், ஆன்மாவைப்பற்றி அகத்தே நிற்கும் 36ம் அசாதாரணதத்துவங்களென்றும் கூறப்படும்.

சாதாரணதத்துவங்கள் முப்பத்தாறும், பதினாறுஅண்டங்கள் கூடிய ஒருபிறக்கிரியையாய் இருக்கும். இந்தப் பிறக்கிரியையே ஒரு பேரண்டமாகும்.

இப்பிறக்கிரியைகள் எவ்வளவு உண்டெனில் ஆன்மாக்களுக்கு அளவு உண்டானால் இவைகளுக்கும் அளவு உண்டாம். மாயா உலகஉருண்டையினுள் பதினாறு அண்டங்களையும், அவையாவும் நிவிருத்தியாதி ஐந்து கலைகளிலும் அடக்கி, சித்தாந்தஷடத்துவா விளக்கப்பட்டுள்ளது. (பதினாறு அண்டங்காளவன, (1) பிருதிவியண்டம், (2) அப்புஅண்டம், (3) தேயுஅண்டம், (4) வாயுஅண்டம், (5) ஆகாய-அண்டம், (6) அஹங்காரஅண்டம், (7) புத்திஅண்டம், (8) பிரகிருதிஅண்டம், (9) இராக-அண்டம், (10) வித்தியாஅண்டம், (11) கலாஅண்டம், (12) மாயாஅண்டம், (13) சுத்த-வித்யாஅண்டம், 14) ஈச்வரதத்வாண்டம், (15) சாதாக்யதத்வாண்டம், (16) விந்துதக்-வாண்டம் ஆகியன). இவற்றுள் அகங்காரஅண்டத்தில் தன்மாத்திரை 5, கன்மேந்திரியம் 5, ஞானேந்திரியம் 5, மனம் 1 ஆகிய தத்துவங்களும், இராகதத்வாண்டத்தில் புருஷதத்துவமும், கலாதத்வாண்டத்தில் நியதிகாலங்களும், விந்துதத்வாண்டத்தில் நாதத்துவமும் அடங்கும். புருஷனைப் பிரகிருதிதத்துவத்தில் கூட்டியுரைப்பாரும் உள்ளனர். முற்கூறியபடி பிரகிருதியானது பிரதிஷ்டாகலையில் சேர்க்கப்பட்டதால் புருஷன் வித்தியாகலையில் சேர்த்துச் சோதிக்கப்-படுகையால், பிரதிஷ்டாகலைக்குரிய பிரகிருதியில் புருஷனைக்கூட்டுவது பொருந்தாது. இனி இவற்றின் புறக்கருவிகள் அறபதும், அசாதாரண தத்துவங்களின் காரியங்களாகும். எனவே, இவற்றை தாத்விகம் என்பர். இவற்றை அறிந்து தெளிவது சிவயோகியற்கு பற்றுஅற்று வாழ்ந்து, ஜீவன்முக்தராய் வாழ்ந்திடவும், தம்முள் சிவத்தைத்தேடி மேல்தத்துவத்திற்கு சென்றடையவும், உதவும். கட்டுரை விரியுமாதலால் புறக்கருவிகளின்விளக்கம் இங்கு தவிர்க்கப்படுகிறது. இவ்விதம் தத்துவாத்வாவை அறிக. இனி கலாத்வா பற்றி காண்போம்.

<u>2வது கலாத்வா : -</u> கலாத்வாவில் கலை என்பது பாகம். துவாதசகலை, (12 கலை), அஷ்டத்ரிம்சத்கலை (38 கலை), முதலியன கலைகள் என்றும், காலஅளவு கூறுமிடத்து துடி முதலியன கலைகள்என்று கூறப்படுகையால் கலையென்பது பாகம் எனப்பட்டது. ஆனால் இதனை இங்கே பிரகாசத்தோடுகூடிய, அல்லது பிரகாசத்தைத்தருவதானபாகம் என்றுஅறியவும். "கல" என்னும் முதனிலைக்கு நீக்குதலும், நியமித்தலும், பொருள். ஆகையால் இருளைநீக்கி, போகநியமனத்தைச் செய்வது எனக் கலை என்ற பதத்திற்குப் பொருள் என்றுஉணர்க. மேற்கூறிய 36 தத்வங்களும் அடங்கிய மாயாகோளமானது (உலகம், உயிர், லிங்கம் இவை யாவும்) கீழிருந்து மேலாக முறையே [1]நிவிருத்தி, [2]பிரதிஷ்டை, [3]வித்தியா, [4]சாந்தி, [5]சாந்தியதீதா, என்று ஐந்து கலைகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. (1) பிருதிவீதத்துவம் ஒன்றைக்கொண்டது **I. நிவிருத்திகலை.** இதற்கு நிறம் வெண்மை. இதற்கு பிரம்மா அதிதேவதை, இவருக்கு [1]ஹிரண்யகர், [2]விராட், [3]புருஷர், [4]காலர் என நான்கு வியூஹர் உளர். இவர் நிவிருத்திகலையில் பஞ்சகிருத்தியமியற்றினாலும், இவருக்கு சிருஷ்டித் தொழிலே முக்கியம். இது பிருதிவீ (பூமி) மண்டலமாகும். (மானுடதேஹத்தில் முழுவதும் வியாபித்து இருப்பினும், தியானம் & சோதிக்கும் காலத்தில் பாதம் முதல் கால்முட்டி வரை

நிலப்பகுதியாகக் கருதத்தக்கது) (2) அப்புதத்துவம் முதல் பிரகிருதிகுணதத்துவம் ஈறாகவுள்ள தத்துவங்களில் 23-ஐக் கொண்டது, **II. பிரதிஷ்டா-கலை.** இதற்கு நிறம், (நீறின் இயல்பு நிறம்) ஸ்படிகம் போன்ற தூயவெண்மை (ஆயினும் கடல்- நீலமாகவும் கருதிடுவர்). இதற்கு அதிபதி விஷ்ணு, இவருக்கு வாசுதேவர், அனிருத்தர், பிரத்யும்னர், சங்கர்ஷனர் என நான்கு வியூஹம் உளர். இவர் பிரதிஷ்டாகலையில் பஞ்சகிருத்ய-மியற்றினாலும் இவருக்குத் ஸ்திதி எனும் காக்கும் தொழிலே முக்கியம். இது அப்பு (நீர்) மண்டலம், (மானுடதேஹத்தில் கால்முட்டிமுதல் தொப்புள்வரை எண்ணி பயிற்சி செய்யப்படும்). (3) புருஷத்துவம் முதல் காரியமாயை வரையிலான வித்யாதத்துவங்கள் ஏழும்கொண்டது. **III. வித்தியாகலை.** இதற்கு நிறம், அக்னியின் செந்நிறம், இதற்கு அதிபதி, உருத்திரன். இவருக்குச் சிவன், ஹரன், மிருடர், பவர் என நான்கு வியூகமூர்த்திகள் உளர். இவர் வித்தியாகலையில் பஞ்சகிருத்தியம்இயற்றினாலும் இவருக்கு சம்ஹாரமே முக்கியத்-தொழிலாகும். இது அக்னிமண்டலம் (மானுடதேஹத்தில் தொப்புள் முதல் இதயம் வரையிலாக கருதி பயிற்சிகளில் வியாப்த்தி சுருங்கி விளங்குவதாய் தியானிக்கப்படும்). (4) சுத்தவித்தை ஈச்வரம், சாதாக்யம் என்னும் மூன்று தத்துவங்களும் கொண்டது **IV. சாந்திகலை.** இதற்கு நிறம் வாயுவின் புகைநிறம் (கருமை கலந்த சாம்பல் நிறம்). இதற்கு அதிபதி மஹேசர். இவருக்கு ஈசர், விசுவேசர், பரமேசுவரர், சர்வேச்வரர் என நான்குவியூஹமூர்த்திகளுளர். இவர் சாந்திகலையில் பஞ்சகிருத்தியம் இயற்றினாலும், இவருக்குத் திரோதான கிருத்தியமே முக்கியமாம். இது வாயுமண்டலம் (பாவனையில், தேகத்தில் இதயம் முதல் புருவநடுவரை தியானிக்கப்படும் மண்டலமாம்). (5) விந்துதத்துவம் (சக்திதத்வம்), நாததத்துவம் (சிவதத்வம்) எனும் இரண்டும் கொண்டது **V. சாந்தியதீதகலை.** இதற்கு நிறம் சுத்தஸ்படிக நிறமான வெண்மை. இதற்கதிபதி ஸதாசிவர். இவருக்கு முன்கூறிய நிவிருத்தி முதலிய நான்கு கலைகளுக்கும் அதிபதியான பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசன் எனும் நால்வரும் வியூஹ-மூர்த்திகள் ஆவர். இவர் சாந்தியதீதகலையில் பஞ்சகிருத்தியாதிபதியானாலும், இவருக்கு அனுக்கிரஹகிருத்யமே முக்கியமாம். இது ஆகாயமண்டலம். இது புருவம் முதல் மேலே தலை- உச்சித்துளைவரை கருதி தியானிக்கப்படும். இவ்வைந்து கலாநாதர்களாய், பஞ்சபூதங்களின் மண்டேச்வரர்களாய் விளங்குபவர்களே பஞ்சாரணேச்வர்கள். ஐந்தொழில்களுக்கும் காரண-கர்த்தர்களாய் விளங்குவதால், இவர்கள் காரணேச்வரர்கள் என்றும், பஞ்சகிருதியாதிபதிகள் என்றும் கூறப்படுவர். இந்த பஞ்சகலைகளின் தோற்றம் முன்னரே கூறப்பட்டுள்ளது. தத்துவம் முதலாகிய பிற ஐந்துஅத்துவாக்களையும் தனக்குள் அடக்கிக்கொண்டு வியாபியாக சத்தி-அம்சமாய்விளங்குபவைகளே இந்த நிவிருத்தி முதலான பஞ்சகலைகள் ஆகும்.

(3) புவனாத்துவா : - பிரம்மாண்டத்தில் தத்துவங்கள் முப்பத்தாறிலும், எண்ணில்லாத (உலகங்கள்) புவனங்கள் இருந்தாலும், அவற்றுள் முக்கியமானவை 224 புவனங்கள் ஆகும். அவை 36 தத்துவங்களிலும் அடங்கிநிற்கும். தத்துவத்தில் இடம்பெற்றுள்ள புவனங்களின்

முறையை இனி சுருங்கக்காண்போம். பிருதிவீதத்துவத்தில் 108 புவனங்களும், அப்புதத்துவத்தில், 8 புவனங்களும், தேயுதத்துவத்தில் 8 புவனங்களும், ஆகாயத்தில் 8, அகங்காரத்தில் 8, புத்தியில் 8, சித்தத்தில் (மனம்) 8, புருஷனில் 6, இராகத்தில் 5, வித்யையில் 2, கலையில் 2, நியதியில் 2, காலத்தில் 2, மாயையில் 8, சுத்தவித்யையில் 9, ஈச்வரதத்துவத்தில் 8, சாதாக்யத்தில் 1, விந்துவில் 5, நாதத்தில் 10 என இவ்வாறாக 224 புவனங்கள் பொருந்தி விளங்கும். இந்த எண்ணிக்கையை விளக்கும் பாடல்.

மித்திகை நூற்றெட்டுச் சிவந்த சஞ்சுத்தவித்தை நவம் வெளிகானீர்தீ
புத்திபிர கிருதியீச் சுரமாயை யிவையெட்டாம் புருடனாறே
சத்தியிரா கம்மைந்து மாத்ரைசதுர் கலை நியதி காலமோரிரண்டே
வித்தைக்கா மொன்றொன்றே மற்றவைக்குப் புவனங்கள் விளம்புகாலே.

பிருதிவியிலுள்ள புவனங்கள் 108-ல் பிருதிவியின் கீழ்இருக்கிற காலாக்னியில் 6-ம், பிருதிவியின் கிழக்கு முதலிய எட்டும், கீழ்மேல்இருதிசையுடனாகிய பத்து திசைகளுக்கும், தனித்தனியே பத்தும், பிருதிவியின் மேல் இவைகளின் உயரத்தில் இரண்டும் ஆக இவ்விதமாய் 108 புவனங்கள் உள்ளதை அறிக. இவற்றை விரிவாயும், விளக்கமாயும், சைவாகம சிவபிரதிஷ்டையின் ஷடத்வநியாஸ செயல்முறையிலும், தீக்ஷாவிதிகளைக்கூறும், புவன-சோதனையை விதிக்கும் ஆகமநூல்களிலும் கண்டுஅறியலாம். 224 புவனங்கள் யாவும் புவனாதிபதிகளின் பெயரிலேயே விளங்குவன ஆகும். கூறிடின் கூற்று விரியுமாதலால் இவற்றை தவிர்க்கப்பட்டு உள்ளது. இவ்வாறு 224 புவனங்களை 36 தத்துவங்களுக்கு உள்ளே பகுத்து அறிந்துகொண்டு, தியானித்தல் சிவஞானமுறை ஆகும்.

இவ்வகையில் ஐந்துகலைகளுக்குள் நிவிருத்திகலைக்கு உரிய புவனங்கள் 108. பிரதிஷ்டாகலைக்கு உரியபுவனங்கள் 56, வித்தியாகலைக்கு உரிய புவனங்கள் 27, சாந்திகலைக்கு உரிய புவனங்கள் 18, சாந்தியதீதகலைக்குஉரிய புவுனங்கள் 15 ஆக, 5 கலைகளிலும் அடங்கிஉள்ள புவனங்கள் 224 ஆகும். இவற்றுள் மனோன்மணிபுவனத்தைச் சாதாக்கிய-தத்துவத்தில் சேர்த்து, சதாசிவபுவனத்துடன் அந்ததத்துவத்துக்குப் புவனம் இரண்டு என்றும், சுத்தவித்தியாதத்துவத்திற்குப் புவுனம் எட்டு என்றும் கூறும் ஒரு பக்ஷமும்உண்டு. இதுவே யுக்திக்குப் பொருத்தமாயிருந்தாலும், மிருகேந்திரம் முதலிய ஆகங்களிற்கண்டபடி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. இந்த பஞ்சகலாகிருத்திய விளக்கமாவது முறையே நிவிருத்தியென்னும் சக்தியானது ஆன்மாக்களைப் பதினான்குவிதபூதசர்க்கத்தையும், ஜனனமார்க்கத்தில் ஆசையையும் விட்டுத்திருப்பி கைவல்ய அபிமுகமாய் (முக்தியை நோக்கியதாய்) செய்யும். [2]பிரதிஷ்டாகலா சக்தியானது அவ்வாறு திரும்பினவனுக்கு மீண்டும் தாழ்ந்த சம்ஸார-மார்க்கத்தில் கதியில்லாமல் போக்கை தடுத்துநிறுத்தும். [3]வித்தியாகலா சக்தியானது, அவ்வாறு நிலைபெற்ற ஆன்மாவுக்கு, சப்தானுமானங்களை விட்டு ஞானம் நேரிட ஸ்வரூப சாக்ஷாத்-காரத்தை கொடுக்கும். சாந்தி

என்னும் சக்தியானது அங்ஙனம் சொரூப சாட்சாத்காரத்தைப்-பெற்ற ஜீவனுக்கு சகலதுக்கங்களையும், சாந்திசெய்யும். இதன் மேல் காந்தி, சிவை, யோசசினி, யோசசினாதி, சுப்பிரபை, இந்தினி, திரோதி, உருத்திரை, ஞானபோதை, தமோபஹா முதலியோர் இருப்பர். இவர் வசிக்கும் தலங்கள் பற்றி "பிராசாத தர்பணம்" என்கிற நூலில் காணலாம். நாததத்துவத்தில் இந்திகா, தீபிகா, ரோசிகா, மோசிகா, ஊர்த்துவகா என்று ஐந்து நாதகாலைகள் உள்ளன. இவை அபரநாதகலாபுவனங்கள். இவைகளின் அதிபர் முறையே [1]இந்திகாவான், [2]தீபிகாவான், [3]உரோசிகாவான், [4]மோசகர், [5]ஊர்த்துவகேசர் எனும் ஐவர். இவர்களின் சக்திகள் முறையே [1]இந்திகா, [2]தீபிகா, [3]ரோசிகா, [4]மோசிகா, [5]ஊர்த்துவகா என்பவர்கள். முமுக்ஷுவான ஆன்மாவிற்கு மேலும்கீழும் எங்குமுண்டாகும் பிரகாசமானது எந்தச்சக்திகளாலே பெரிதாகவும், மிகப்பெரியதாகவும், மிகமிகப்பெரியதாகவும் செய்யப்படுகிறதோ அந்தச்சக்திகள் மூன்றிற்கும் முறையே இந்திகை, தீபிகை, ரோசிகை என்று பெயர். வித்தியேசர் முதலான அதிகாரிகளுக்கு சர்வக்ஞத்துவம் முதலான 6 வகை குணம் இருந்த போதிலும், மலாம்சம் சிறிது இருப்பதாலுண்டான, பிரேரிக்கப்படும்தன்மை, யாதொருசக்தியாலே விடுவிக்கிப்படுகிறதோ அதற்கு மோசிகை என்று பெயர். எந்தச்சக்தியாலே அவ்வாறு அனுக்ரஹிக்கப்பட்ட ஆத்மாவை ஈச்வரனாகச் செய்கிறானோ அந்த சக்திக்கு ஊர்த்துவகை என்று பெயர். இதற்கு மேல் பரபிந்து. அதில் சக்தி எழுந்தருளியிருக்கும். அவளை சூக்குமை, அசூக்குமை, அமிருதை, மிருதை, வியாபினி என்னும் இவர்கள் சேவித்திருப்பர். இந்தச்சக்தி தான், பரவாகீஸ்வரீ, எனப்படுவள். பரநாதகலையில் வியாபினி, வியோமரூபை, அனந்தை, ஆனாதை, அனாசிருதை என ஐந்து. இவைகளின் அதிபர்கள் முறையே வியாபகர், வியோம-ரூபர், அனந்தர், அநாதர், அநாசிருதர் என்பவர்கள். இவர்களின் சக்திகள் முறையே வியாபினி, வியோமரூபை, அனந்தை, அனாதை, அனாசிருதை என்பவர்கள். இவர்களைப் பற்றி முன்னமே கூறியாயிற்று. இவர்களின் வியாபகருக்கு காரணவியாபகர் என்றும் பெயர். இந்தப்பரநாத கலையில் சிவர் இருப்பார். இவரே பரவாகீஸ்வரர். இவ்வாறு சாந்தியதீதகலைக்குப் புவனம் பதினைந்து என்று அறிக. புவனங்கள் பெரும்பாலும் ஒன்றின் மேல் ஒன்றாய் இருக்கும். "ஓதம் யேன ஜகத் சராசர மிதம் ப்ரோதம் ச ஸர்வம் ஸதா". என்று சித்தாந்தஸாராவளி கூறும். இதில் கூறப்படாத புவனங்களும், சிருஷ்டிபேதத்தால் வேறுபடும், பெயருள்ளபுவனங்களும், கூறப்படாத புடைபுவனங்களும், அவற்றின் உட்பிரிவுகளையும் ஆகமங்களால் அறிக. நாம் வசிக்கும் இவ்வண்டத்திற்குப் பிரம்மாண்டம் எனப்பெயர். இது நூறுகோடி யோசனை உயரமும், அவ்வளவே அகல நீளமும் உடையது. பூமியின் மேலே முறையே [1]புவர், [2]சுவர், [3]மகர், [4]ஜனர், [5]தபோ, [6]சத்ய, [7]பிரம்மலோகம், [8]விஷ்ணுலோகம், [9]சிவலோகம் என்று, மேலுலகங்கள், (மேலண்டங்கள்) அமைந்துள்ளன. பாவிகள் சென்றடைந்து, 28 கோடிவகையில் தண்டிக்கப்படும் நரகங்கள், 28 கோடியுண்டு. இவை நால்வகையாயும், அவை பலவகையாயும் உள்ளன. பாதாளஉலகம் ஏழும் கீழ் உள்ளவை. இனி பிரம்மாண்டத்தின் நடுவில் உள்ளது இந்த பூமி. இதுவே மத்யமலோகம் எனப்படும் மனிதர்கள் வாழும்

மர்த்தியலோகம். புவனாத்வா மிக விரிவாக விளக்கபடுகின்றன. இவ்விதம் பிரம்மாண்ட லக்ஷணங்களை ஆகமபுவனாத்துவா கொண்டு விரிவாகஅறிந்திடுக.

4வது வர்ணாத்வா (அக்ஷரமார்க்கம்) : - அக்ஷரங்கள் முன்னர் கூறியுள்ளபடி பிந்து சக்தியின் காரியங்களாகும். ஆவை அ முதல் அ: வரை 16 உயிரெழுத்தும், க முதல் க்ஷ வரை 35 மெய்- யெழுத்தும் ஆக 51 எழுத்துக்கள் ஆகும். அவற்றுள் உயிரெழுத்து16ம் சாந்தியதீதகலையிலும், க, 2ம்க, 3ம்க, ஆகிய மூன்றும் சாந்திகலையிலும், 4ம்க முதல், ஞவரை ஏழும் வித்யாகலையிலும், டமுதல், ளவரை 24ம் பிரதிஷ்டாகலையிலும், க்ஷஒன்று நிவிருத்திகலையிலும் அடங்கும். அகாரம் முதலிய உயிரெழுத்துக்கு அதிபதி சிவமும், ககாரம் முதலிய மெய்யெழுத்துக்களுக்கு அதிபதி சக்தியும் ஆவர். மேலும் அவைகள் எட்டுவர்க்கங்களாகப் பிரிக்கப்படின் 16 உயிரெழுத்துக்கும் அதிதேவதை கணேசர், ககாராதி க்ஷகாராந்தமான ஏழுவர்க்கங்களுக்கும், 1. பிராம்மீ, 1. மாஹேச்வரீ, 3. கௌமாரீ, 4. வைஷ்ணவீ, 5. வாராஹீ, 6. மாஹேந்திரீ, 7. சாமுண்டா என்கிற சப்தமாதாக்கள் 7, மாத்ருகா சக்திகளான அதிதேவதைகள். அகாராதி16ம் பராசக்திக்குக் சூக்ஷ்மரூபமென்றும், ககாராதி 35-ம் பராசக்தியின் ஸ்தூலரூபம் என்றும் கூறப்படுகிறது. "மந்திராக்ஷரமயீம் தேவீம் மாத்ருகா ரூபதாரிணீம்" என்கிறது சாக்தாகமம்.

5வது பதாத்வா (அருஞ்சொல்நெறி) : - மேலேகூறிய எழுத்துக்களின் சேர்க்கையாலானவை பதங்கள். அத்துவாவின்பாற்பட்ட பதங்கள், அதாவது சொற்கள், எண்பத்தொன்றுஆகும். அவை வியோமவ்யாபினே என்பது முதலாக ஓம்சிவாய நமோநம: ஓம் என்பது வரையிலானவை. இவை 81ம் வழக்கத்தில் அதிகமாக ஜபம், பாராயணத்தில் கையாளப்படுகின்றன. இவற்றில் சாந்தியதீதகலையில் ஓம் எனும் பதம் ஒன்று, சாந்திகலையில் வியோமவ்யாபிநே முதல் நித்யயோகிநே ஈறாகபதம் 11, வித்யாகலையில் தியானாஹாராய முதல் வியாபிந்வியாபிந் ஈறாக பதம் 20, பிரதிஷ்டாகலையில் அரூபிந்அரூபிந் முதல் மஹேச்வர ஈறாக பதம் 21, நிவிருத்தி-கலையில் மஹாதேவ முதல் ஓம் ஈறாக பதம் 28. இவ்விதமாக பதமந்திரங்கள் எண்பத்தி ஒன்றும் ஐந்துகலைகளில் அடங்கி உள்ளதாக அறிக..

6 மந்திராத்வா : - மந்திராத்துவாவிற்குரிய மந்திரங்கள் சிவ, ஈசாந, தத்புருஷ, அகோர, வாமதேவ, ஸத்யோஜாத, நேத்திர, அஸ்த்ர, கவச, சிகா, சிரோ, ஹ்ருதய மந்திரங்கள் எனும் பதினொன்று. இவற்றுள் சாந்தியதீதகலையில் சிவ, ஈசாந, அஸ்ரத்ரம் எனும் 3 மந்திரங்களும், சாந்தியில் தத்புருஷம், கவசம் எனும் 2 மந்திரங்களும், வித்யாகலையில் அகோரம், சிகா எனும் 2 மந்திரங்களும், பிரதிஷ்டாகலையில் வாமதேவ, சிரோ எனும் 2 மந்திரங்களும், நிவிருத்தி-கலையில் ஸத்யோஜாதம், ஹ்ருதம் எனும் 2 மந்திரங்களும் ஆக 11ம் பஞ்சகலையில் உள்ளது அறியத்தக்கது. இவ்விதமாக இதுவரை சைவசித்தாந்த நெறியில் ஆறுவகையில் உள்ள ஷடத்வாவை அறிந்தோம். கூறப்பட்ட ஆறுஅத்துவாக்களில்

வர்ணாத்துவா, பதாத்துவா, மந்திராத்துவா எனும் மூன்றும் சொற்பிரபஞ்சமாகவும், புவனாத்வா, தத்துவாத்துவா, கலாத்துவா எனும் மூன்றும் பொருட்பிரபஞ்சமாகவும் கொள்ளப்படும். இதுவரை ஷடத்வா விளக்கப்பட்டது. இனி நமது உடலில் இவற்றை கண்டுஉணர்ந்து சிவனைக்காணும் அனுபூதிதரும் அஜபாயோகத்தைப் பற்றி இனி காண்போம்.

மகாகவி காளிதாஸர் ரகுகுலமன்னர்களைப் பற்றி கூறுகையில் இளமையில் கல்வி பயின்றவர்கள், வாலிபத்தில் வாழ்க்கையை விரும்பியவர்கள், முதுமையில் முனிவர்களைப் போல் வாழ்ந்தவர்கள், முடிவில் யோகத்தால் உடலை விடுபவர்கள் என்ற வாழ்வியல் நெறிமுறையை "யோகேனாந்தேதனுத்யஜாம்" என்கிறார். இதனால் மக்கள் இறைவனோடு சேர யோகநெறி தேவை என அறியலாம். இதுவே சிவயோகம் ஆகும்.

<u>தேஹஇதயகமலம் :-</u> இங்ஙனம் கூறிய ஆறு அத்துவாக்களில் தத்துவாத்துவாவின்பாற்பட்ட முப்பத்தாறு தத்துவங்களும் சிவபெருமானை அகத்தே பூசித்தற்குரிய இதயதாமரையாய் அமைந்து நிற்கும். பிருதிவிதத்துவம் (தொப்புள்), நாபிஸ்தானத்திலே செந்நிறதாமரை (கந்தம்), கிழங்கு, அப்பு முதல் 29 தத்துவங்களும், நீலநிறமுடைய தாமரைக்கொடி (நாளம்) அது எட்டங்குல நீளமும், 9 துவாரமும் பொருந்தியது. புத்தியின் காரியமாகிய 50வித பாவனைகளும், அத்தாமரைதண்டின் நூல்கள். மாயை என்னும் தத்துவமானது அந்தநாளத்தின் நுணியிலே பூவின் அடியிலேபொருந்திய முடிச்சு. காலாக்னி முதல் புவனேசம் ஈறாகிய புவனம் 191ம் தாமரைத்தண்டின் மேலுள்ள பவளநிற 191 முட்கள். சுத்தவித்யாதத்துவம் சுவேதநிறத்தினை உடைய (சுத்தசாத்விகநிற) வெண்தாமரைப்பூ. கிழக்கு முதலாகக்கொண்டு ஓம் என்னும் எட்டு அக்ஷரங்களும் நாலுஅங்குலத்தினையுடைய எட்டுமுழுபூவிதழ்களாயுள்ளன. இந்திராதிதிக்-பாலகர்பீஜமான ய காரதி ஹகாராந்தம் 8ம் மொட்டுஅசஷரங்களென்று கூறலுமுண்டு. இவ்வெட்டிதழ்களையும் அஷ்டவித்தியேச்வரர்கள் அதிஷ்டித்துநிற்பர். இது மலர்ந்தபோது பன்னிரண்டங்குலம் விரிவினையுடையது ஆகும். இதற்கு உபதளங்கள் அனேகமுள. ஈச்வர-தத்துவமானது, உருக்கிஓடவைத்த பொன்போன்றதும், நுணியில், முத்துபோன்றதுமான, கேசரங்கள் (மகரந்தகாம்புகள்) 64ம் ஆகும், சாதாக்கிய தத்துவம், பூவின் நடுவிலுள்ள கர்ணிகை (தாமரைக்காய்) அது ஓரங்குலஉயரமுடையது, பொன்நிறமுடையது. பிந்துதத்துவ-மானது அந்தகர்ணகையிலுள்ள அ முதல் க்ஷ ஈறாகிய 51 அக்ஷரசொரூபமான 51 விதைகள். நாதத்துவமானது அவைகளுக்கு உள்ளிருக்கும் முளையும், அப்பூவின் மணமும் ஆகும். இவற்றுள் இதழ்முனைகளாகிய (வட்டம்) விருத்தம் சூரியமண்டலம், கேசரமுனைகளாலாகிய- விருத்தம் சந்திரமண்டலம், கர்ணிகையின் முனைவிருத்தம் அக்னிமண்டலம், நடுவே சக்தி-மண்டலம், அதன் நடுவே சிவனது இருக்கை. அதன் நடுவே சிவன் இருப்பதாக கருதவேண்டும் என்று நிச்வாசகாரிகையில் இதயகமலமானது இயல்பாகவே, சித்தாந்தரூபமாய் விளங்குவதாக, யாவருக்கும் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனக்குள் மூலதாரத்திலே

ஆதிகூர்மமும், அக்கூர்மத்தின் நடுவே ஆதாரசக்தியும், கூர்மத்தின் மேல் அனந்தனுக்குப் பலஇதழ்கொண்ட பத்மாசனமும், அதன்மேலே அனந்தன் நாபி வரையிலான அளவும், அவ்வனந்தன் சிரசிலே பிருதிவியாகிய தாமரைக்கிழங்கு முதலாகக் கொண்டும், சிவாசானத்தை பாவனைக்குக்கூறுவர். இத்தன்மை கொண்டதாகிய இதயகமலம் வாழைப்பூப் போல கீழ்நோக்கியமுகமாய் நாலங்குலம் தாழ்ந்து இருக்கும், அதனை உத்தமபீஜ மந்திரத்தால் பிராணாயாமத்தின் கும்பகத்தால் மேல்நோக்கியதாக மலரச்செய்து, அதன் நடுவே முன்கூறிய- வாறு ஷடத்துவசொருபமாக சிவாஸனத்தையும், அதில், நாம் காதுகள் பொத்தியபொழுது எழுகின்ற நாதம் ஒலியாகவும், அந்த நாதமே, தீபச்சுடர்உருவாய் விளங்கும்சிவலிங்கத்தில், ஈச்வரனை மனதால்பூசிப்பது நமது நித்தியகடமையாகும். இவ்விதம் சைவாகம சிவயோக- நெறியில் ஷடாதாரத்தில் ஒன்றான தனது ஆத்மாவில் ஆராதித்து, பயிற்சிபெற்று, நாளடைவில் குருஉபதேசித்த, பிராஸாதமந்திர உச்சாரணத்தை, முறைப்படி உரியபாவனையுடன்செய்துவர தத்தமது உடலினுள்ளேயே ஷடத்துவாதீத சிவனை யாவரும் தரிசித்து இகபரசுகம் யாவற்றையும், அஷ்டமாஸித்திகளையும் பெற இயலும்.

<u>அனுபூதி தரும் அஜபாயோகம் : -</u> மந்திரம் என்பது நினைப்பவனைக் காப்பது. தந்திரம் என்பது அம்மந்திரத்தை ஓதிப்பயன்படுத்தும் முறையை அறிவிக்கும் நூலைக்குறிப்பது. யந்திரம் என்பது சாதகன் அம்மந்திரத்தை முறைப்படி ஓதியும், உணர்ந்தும், வழிபடும் முறையையும், அதனால் எய்தும் பயனையும் குறிப்பது. உலகியலில் மருந்து எப்படி பிணியைத்தீர்க்கிறதோ, அதேபோல், மருந்தாகிய யந்திரவழிபாட்டு முறைகளும், உடற்பிணியைத் தீர்ப்பதோடு, உயிர்ப்பிணியாகிய பிறவிப்பிணியையும் நீக்குகிறது. இதனையே, அப்பர் சுவாமிகள் "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருளவல்லான்" என்று இறைவனைக் குறிப்பிடுகிறார். மந்திரங்களுக்கெல்லாம் மூலமாகிய ஓம் என்றும் பிரணவத்தையும், மந்திரராஜாவாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தையும், யந்திரக்கோட்டிற்குள் அமைத்துச் சந்தனம், மலர் கொண்டு முறையாக வழிபட்டால் கருதியபயன் கைகூடும். அதுபோலவே உடலினுள் நாடீ சக்கரங்களையும், ஷடத்துவாஷடாதார சக்ரங்களையும், யந்திரகமல சக்ரங்களாகக் கருதி அவற்றில் மனதால் சோஹம் பாவனையால் அகவழிபாட்டினை செய்வதாலும் பயன் கைகூடும். யோகத்தின் அடிநிலை பிராணாயாமம் ஆகும். யோகத்தின் முடிநிலை அஜபாமந்திரயோகமாகும். ஜெபம் என்றால் ஜபிப்பது, கணிப்பது என்பது பொருள். அஜபம் என்றால் ஜெபித்தல் இல்லாதது, அதாவது கணிப்பில்லாதது என்பது பொருள். அஜபாமந்திரம் என்றால் ஜெபிக்காமல், கணிக்காமல், இயல்பாய் எழும் மூச்சுக்காற்றில் இயங்கும் மந்திரம் என்பது பொருளாகும். ஊனில் உயிர் இருக்கவேண்டுமானால், பிராணவாயு, மூக்கின் வழியாக உட்சென்று, வெளியில் வந்தும் இயங்க வேண்டும். அப்படி இயங்கும்போது ஹம் (அம்) என்று மூச்சை உள்ளே இழுத்து பூரகத்தைச் செய்து, ஸம்: என்று அந்த மூச்சை வெளியே விட்டு, ரேசகம் செய்வது இயல்பாக நிகழும். ஹம்ஸ: என சுவாகிக்கும் இதுதான் அசைபையாகும். இது

ஹம்ஸமந்திரம் எனவும் சொல்லப்படும். அம் மற்றும் ஹம் இவை இரண்டுக்கும்பேதமில்லை. இச்செயல்முறை இயல்பாகவே எல்லோரிடத்திலும் நிகழ்வது. ஆனால் பலரும் இதன் உண்மையை உணராமலே இருக்கின்றனர். ஒருமுறை மூச்சை உள்ளே இழுத்து, ஒருமுறை வெளியே விடுதல் மூச்சு ஒன்று என்று கணக்கிடப்படும். இப்படி ஒவ்வொருவரும் ஒருநாளில் 21600 முறை மூச்சை உள்ளே இழுத்து, வெளியே விடுகிறோம். எனவே 21600 முறை ஹம்ஸமந்திரத்தை இயல்பாகத் தொடர்ந்து நினைவில் இருக்கச் செய்கிறோம். இந்த ஹம்ஸமந்திரத்தை முறையாகச் செய்யும்போது ஸம் என்பதை முன்வைத்து விஸர்கத்துடன் ஸ: என வைத்து ஹம் என்பதைப்-பின்னர் அஹம் என்று வேறுபடுத்தி வைத்து, உச்சரிக்க வருவது ஸோஹம் என்பதாகும். இதற்கு அவன் நான் ஆகிறேன் என்பது பொருளாகும். ஸம் என்பது ஓங்காரத்துடன் சேர்த்தே சொல்லப்பட வேண்டும். அப்படிச் சொல்லும் போது ஸம் + அஹம் இரண்டும் சேர்ந்து ஸோஹம் என்று ஆகிவிடும். இப்பாவனை தியானத்திற்கு இடமாகிய ஆக்ஞாசக்ரத்தில் புருவங்களின் நடுவில் நிகழும். "தாரணைச் சொதிதே தேஹே சிவஸ் ஸாக்ஷாத் பிரதிருச்யதே" என்கிறது ஆகமம். இந்நிலை எய்தியோன் பசுத்துவம் நீங்கி, பதிநிலை எய்தியவன் ஆவான். அப்படிப்பட்ட சிவயோகி, ஒருபடிமேலாக ஸ: = அவன் (ஸொ) என்று பொதுப்படையாக பாவிக்காமல், சிவோஹம் எனச்சிறப்பாகப் பாவிப்பான். இதுவே ஹம்ஸமந்திர செயற்பாட்டுமுறையாகும். அதனால் அவன், சிவமாய் நின்று, சிவானந்தத்தை அனுபவிப்பான்.

"ம்ஸ "ம்ஸேதி யோபுருயாத் "ம்ஸோ நாம ஸதாசிவ:

தியஜேத் அக்ஞான நிர்மால்யம் ஸோ"ம் பாவனே பூஜயேத் (சைவாகமம்) தத்துவமசி முதலிய ம"ாவாக்கியங்களும் "அவன் நான் ஆகின்றேன்" என்னும் இதே-நிலையைத் தான் ஆன்மாவிற்கு கைவரச்செய்கின்றன. ஆனால் அவன் நான் ஆகின்றேன் என்ற முறையை சிறிதே மாற்றி நான் அவன் ஆகின்றேன் என்பதே சைவத்தின் முறைப்பாடு. "ம்ஸம் என்பது அன்றி இச்"சிவோ"ம்" என்பதும், அஜபாமந்திரமாகவே சொல்லப்படும். எனவே பிரணவமாகிய ஓம் என்னும் தாரகமந்திரகாரியங்களுள் "ம்ஸம், ஸோ"ம், திருவைந்தெழுந்து, பிராஸாதம், ஆகிய மந்திரங்கள் முதன்மையுடையன. இந்த "ம்ஸ-மந்திரங்களை இணைத்து மூச்சுக்காற்றுடன் யோகப்பயிற்ச்சி செய்யும்போது மூன்றுமுறை சொல்லவேண்டும். இவ்வாறு மூன்றுமுறை சொல்லும் போது ""ம் ஸ்ஸோ"ம் ஸஸ்ஸோ"ம் ஸ:" என்றாகும். இது காயத்ரீசந்தஸ் என்பதாகும். இதுவேதத்தின் "சாந்திஸ் சாந்திஸ் சாந்தி:" என்பது போன்றதுஆகும். இவ்விதமாக சிவசிந்தனையே அஜபையோகமாகும் என்பது உணரத்தக்கது. அகத்தியர் முதலானோர் இம்முறை பயிலும் சிறந்த யோகியராக விளங்கினர். தனக்குள் தியானினக்கும் தவமுறையை அப்பர்சுவாமிகள் "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாதொரு போதும் இருந்தறியேன்" என்று கூறுவார். மனம், வாக்கு, காயம் மூன்றுமே முப்பொறி. மனிதஈடேற்றத்திற்கு இறைவன் முப்பத்தாறு தத்துவங்களோடுகூடிய உடம்பை நமக்குத் தந்திருக்கிறான். இவ்வுடம்பைக் கொண்டு

நல்லதை நாளும் தன்முனைப்- பின்றிச் செய்தால் நாம் விரைவில் வீடுபேற்றை அடையலாம். ஆனால் மனிதன் தனக்குக் கிடைத்த உடம்பைப் பெரும்பகுதி தீமைக்கே பயன்படுத்துகிறான். சிறிதே நன்மைக்குப் பயன்-படுத்துகிறான். எனவே, இவன் கரையேறுதற்குப் பலகோடி பிறவிகள் எடுக்க நேரிடுகிறது. நமது உடலை, ஷடாதார சக்ரங்களோடு விளங்கும் கோயிலாகக்கொண்டு, கோ = கடவுள், இல் = இல்லம் எனும் இறை உரையும், அதனுள் இறைவனை தியானித்தலால் இறைவனைக்காண இயலும். வெளிக்கோயிலை "நினைத்துத்தொழுவார் பாவம் தீர்க்கும் நிமலர் உறைகோயில்" என்று திருவண்ணாமலை கோயிலை எவ்வாறு திருஞானசம்பந்தர் குறிப்பிடுகிறாரோ, அவ்வாறு நமது உடலும் விளங்கும். இதனை அப்பர்சுவாமிகள் இறைவனை "மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான் வாயாராத்தன் அடியேபாடும் தொண்டர் இனத்தகத்தான் என்று காளத்திதாண்டதகத்தில் குறிப்பிட்டுஉள்ளார். ஆதலால் தமக்குள் மனதால் மந்திரத்தால் சிவனைக் கண்டிடலாம். மனம், மொழி, மெய் என்னும் முக்கரணங்களிலும், இறைவன் பிரிப்பின்றி இருந்து நம்மை இயக்குகின்றான் என்பதை அப்பர் குறிப்பிடுகிறார். மேலும் வாயானை மனத்தானை மனத்துள் நின்ற கருத்தானை என்று இறைவன் ஒன்றாயிருந்து அருள் செய்யும் சிறப்பை எடுத்து ஓதுகிறது இத்தாண்டகப்பாடல். ஆணவமலத்தின் சக்தி-மெலிவடையும் நிலையில், உயிர்கட்கு இருவினை ஒப்பு உண்டாகும். இன்பத்தில் விருப்பும், துன்பத்தில் வெறுப்பும் இன்றி, இரண்டையும் சமமாக எண்ணும் நிலையை எய்துதலே இருவினைஒப்பு எனப்பெறும். இருவினைஒப்பு வாய்ப்பின் சத்திநிபாதம் உண்டாகும். சத்தி-நிபாதம் என்பதற்கு அருட்சக்தியின் பதிவு என்பது பொருளாகும். இச்சத்திநிபாதம் உயிர்களின் பரிபாக நிலைகட்கேற்ப மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப்படும். உபதேசம் சீடருக்குப் பயனளிக்கும் நிலைகளை முறையே, கதலித்தண்டு, காஷ்டம், கரி, கற்பூரம் ஆகியனவற்றைப் பற்றவைத்தலோடு, இணைத்துக் கூறுவர். பிராஸாதம் முதலிய சைவமந்திரங்- களை தீட்சையில் பெறவேண்டும். இறையன்று, மந்திரசித்தி, யோகத்தில் உறுதிப்பாடு, அதனால் விளையும் அட்டமாசித்திகள், திரோதானசத்தியே, அருட்சத்தியாகி அருளும் சிவஞானம், முத்திப்பேறு, முதலியன யாவும் குருவருளால் கிடைப்பனவாகும். குருவருளாலன்றி இறைவனை யாரும் தாமே அறிதல் இயலாது. உயிர்கள் யாவும் சுதந்திரமற்றவைகளே. அனைத்திற்கு இறைஅருள் தேவைஆகும்.

"ஞான யோக கிரியா சர்யா: ஸம்யகா சாரயேத் யத: .
தஸ்மா தாசார்ய இத்யுக்த: ஸர்வபூத ீதாயவை. (அசிந்திய விசஸவாதாக்யம்).

சிவன் தன்னைப்போல் உயிர்களை உயர்த்துபவன். அவனை ஆகமங்களின் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை நெறிகளிலும் யாவரும் பலவகையாக வழிபட்டு பயன்பெற இயலும்.

பிராஸாதயோகம் :- சிவவழிபாடு ஒன்றே போகமோக்ஷங்களைத் தரவில்லது. லிங்கார்ச்சன ஸமோதர்மோ நாஸ்த்யத்ர புவனத்ரயே. போகமும், யோகமும் ஒன்றாகவே தோன்றும். ஆயினும் இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை அறிதல் அவசியமாகும். போகம் என்பது உருவத்தோடு உருவம் ஒன்றுபடுதல், யோகம் என்பது அருவங்கடந்த சிவபரம்பொருளோடு ஆன்மா ஒன்றுதல், நம் உடலின் முக்கிய மூன்று நாடிகளுள் ஒன்று சூரியகலை, மற்றொன்று சந்திரகலை, பிறிதொன்று நடுநாடியாகிய அக்கினிகலை எனப்படுகிறது. சூரியகலை, சந்திர-கலை இரண்டையும் மூச்சுப்பயிற்சியால் சுழுமுனையாகிய நடுநாடியில் செலுத்தினால் முதுகந்-தண்டில் தாமரைத்தண்டில் உள்ள நூல்போன்ற சன்னமான துவாரங்களின் வழியே உச்சித்-தலையில் உள்ள பிரம்மரமந்திரம் வரை செலுத்தி, அங்குள்ள ஆயிரம்இதழ்த்தாமரையில் எழுந்திருளியிக்கும் பரசிவம் பராசக்தியுடன் இரண்டறக்கலந்து, பேரின்பம் எய்தலாம். இந்த பிராஸாதயோகம் பற்றிய விளக்கத்தைப் படிநிலையில் திருமூலநாயனார் தமது திருமந்திரத்தில் ஏழாம்தந்திரத்தில் ஆறாதாரயோகத்தோடு பிராசாதயோகத்தைச் சிவாகமங்களின்படிக் கூறியுள்ளார்.

பிராசாதம் என்ற பெயரில் பிரா என்பது சிவஞானத்தையும், சா என்பது கதியையும், த என்பது தருவது என்பதையும் குறிக்கும். எனவே சிவஞானகதியைத் தருவது என்பது இப்பெயருக்குப் பொருளாகும். பிரணவத்தைப் பதினாறு கூறுகளாகப்பிரித்துத் தியானிப்பதே இதன் உட்பொருளாகும். இவ்யோகம் ஐங்கலைப்பிராசாதம், எண்கலைப்பிராசாதம், ஒன்பது கலைப்பிராசாதம், பன்னிருகலைப்பிராசாதம், பதினாறுகலைப்பிராசாதம், முதலியனவாகப் பல்-திறப்படும். இப்பிராசாதயோகம் தெரிந்த அனுபூதிமான்களே ஆசாரியராக இருக்கத்தக்கவர்கள் என்றும், பிராசாதநூல் கூறுகிறது.

சமயதீக்ஷையில் ஐங்கலைப்பிராசாதமும், விசேஷதீக்ஷையில் எண்கலைப்பிராசாதமும், நிர்வாணதீக்ஷையில் ஷோடசகலை எனப்படும் பதினாறுகலைப்பிராசாதமும் வேண்டப்படும் என பிராசாதஷட்சுலோகி உரையாலும், சித்தாந்தசாராவெளியாலும் அறியமுடிகிறது. மூலாதாரம் சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆறு ஆதாரயோகத்தை அடுத்து, ஏழாம்ஸ்தானமாகிய பிரம்மரந்திரத்தில் நிற்றல் வரை ஆதாரயோகம் எனப்படும். ஆறுஆதாரங்களிலும் தாரணை செய்யப்படுவதாய் இது ஆறுவகைப்படும். அதாவது, மூலதாரம் முதலிய இடத்தைப்பற்றி (சக்கரத்தில்) நிற்பதாகும். அதற்கு மேலும் பன்னிரெண்டு அங்குலம் வரை மேலே உயரே சென்று பற்றுவது நிராதாரயோகம் ஆகும். அதாவது இடம் ஏதும் இன்றி, அருவமாயும், அதிசூட்சுமநுட்பக்காரணமாயும் உள்ள ஸ்தானத்தை பற்றி நிற்பதாக உச்சியில் 12 அங்குலத்தின்மேல் விளங்குவது துவாதசாந்தநிலையாகும். இது அருவமும் அல்லாதநிலை. இது மீதானம் எனப்படும். இங்கு பரசிவத்தையும், பராசக்தியையும் தியானித்தல் பிராசாத-யோகமாகும். ஆறுஆதாரயோகம், தவயோகம் எனவும், பிரம்மரந்திரத்தில் நிற்றல் அருள்யோகம் எனவும், துவாதசாந்தத்தைக் கடந்து அங்கு

அம்மையப்பரின் அருட்காட்சியில் திளைத்தல் பிராசாதயோகமாகிய முடிநிலையோகம் எனவும் கூறப்படும். இதனைத் திருவந்தியார் எனும் நூல்,

> ஆதாரத் தாலே நிராதாரத் தே சென்று
> மீதானத் தே செல்க உந்தீபற,
> விமலற் கிடம் அதன் றுந்தீபற. (திருவுந்தியார்)

என்று கூறும். பிராதயோகநெறியைத் திருமூலர் பின்வரும் பாடலால் தெரிவிக்கின்றார்.

> ஆதார சோதனை யால்நாடி சுத்திகள்
> மேதாதி ஈரெண் கலாந்தந்து விண்ணொலி
> போதா லயத்துப் புலன்கர ணம்புந்தி
> சாதா ரணம்கெட்டால் தான்சக மார்க்கமே (திருமந்திரம் 1684)

இதனை "மூலமந்திரம் மேதாதி கலோபேதம் பிரசண்ட மார்த்தாண் டோபமம் பூரகபூர்வம் பிரம்மாதி காரணேச தியாககிரமேண துவாதசாந்தம் உச்சார்ய, ஸர்வகர்த்தாரம், நிஷ்களம், விபும், ஞானானந்தமயம், சொரூபபிரகாசம், ஸம்சிந்திய, தன்மயீபூத:" என்று சைவாகமபூஜா-பத்ததியில் ஆவாஹகாலத்தில், பிராஸாதமந்திரஉச்சாரண முறையும், தியானபாவனாமுறையும் கூறப்பட்டுள்ளது. மேதாகலை முதலான எல்லா கலைகளையும் தன்னகத்தே கொண்டு பெரும் பிரணவப்பொருளாக விளங்குவதே பரசிவம் ஆகும். பிராஸாதமந்திரத்தின் கலைகள் [1]மேதாகலை, [2]இரசகலை, [3]விஷகலை, [4]விந்துகலை, [5]அர்தசந்திரகலை, [6]நிரோதிகலை, [7]நாதகலை, [8]நாதாந்தகலை, [9]சக்திகலை, [10]வியாபினிகலை, [11]சமனாகலை, [12]உன்மனாகலை என்பன. இது பன்னிருகலைப்பிராசாதமாகும். இதனிடையே சக்திகலைக்கும், சமனா-கலைக்கும் நடுவே, வியாபினி, வியோமரூபினி, அநந்தை, அநாதை அநாசிருதை என்னும் ஐந்துகலைகளைக்கூட்டித்தியானிப்பது ஷோடசகலை எனப்படுகிற. பதினாறுகலைப்-பிராசாதமாகும். கோஷகலை நாதமாத்திரமாய் வியாபிப்பது. ஆதலால் இது இப்பெயர் பெற்றது. (கோஷம் = ஒலி) மூலாதாரத்தில் உதித்த சூக்குமநாதமாகிய ஹகாரத்தினுடைய மந்திர ஜபத்தைக் குறிக்கும் கலை இதுவேயாகும். மேதாகலை முதல் நிரோதினி வரை உள்ள கலை- களுக்கு இது அடிப்படைக்காரணமாயிருத்தலினால் இதனைத் தனியே எண்ணுவதில்லை. மேலும் நாதம் என்னும் பெயரை உடைய இக்கோஷகலையே பிரமரந்திரத்தில் நாதமாகக் கேட்கப்படுவதோடு பின்பு நாதாந்தத்தன்மையை அடைந்து, பிரம்மரந்திரத்திலே ஒடுங்குவது ஆகும். மணியின் ஓசையானது எவ்வாறு மணியிலிருந்து புறப்பட்டு செவிகட்குப்புலனாய் முடிவில் மணியில் எப்படி ஒடுங்குகின்றதோ அதுபோன்றது இந்த கோஷகலை எனக் கருதலாம். இக்கலைகளில் கோஷகலையின் ஸ்தானம், மூலாதாரம் முதல் நாபி வரையில் உள்ள இடமாகும். நாபி முதல் இருதயம் வரையில் மேதாகலையின்

தானமாகும். இதயம் முதல் கண்டம் வரையில் இரசகலையின் ஸ்தானமாகும். கண்டம் முதல் நாவடிவரையில் விஷகலையின் ஸ்தானமாகும். நாக்கின் அடிமுதல் புருவநடுவரை விந்துகலையின் ஸ்தானமாகும். நெற்றி முதல் பிரமரந்திரம் ஈறாக அர்தசந்திரன், நிரோதிநாதம், நாதாந்தம் ஆகிய நாற்கலைகளின் ஸ்தானமாகும். பிரம்மரந்திரத்தின் மேல் துவாதசாந்தம் வரை சக்தி, வியாபினி, சமனை உன்மனை என்பன- வாகிய நான்குகலைகளின் ஸ்தானங்களாகும். பிராஸாதகலைகளின் விளக்கமாவது= மேதா-கலை = ஆழ்ந்து, விரிந்து, தெளிந்த அறிவை உணர்த்துவது. இரசகலை = இது சுவையை அறிவதற்கு உதவுவது. விஷகலை = குற்றங்களை சீடனிடமிருந்து நீக்குவது. அர்தசந்திரகலை = ஏற்றத்தாழ்வற்ற நிலையை அளிப்பது, நிரோதிகலை = மனத்தைக் கட்டுப்படுத்துவது, நாதகலை = சூக்கும, அதிசூக்ஷ்ம ஓசைநிலை, நாதாந்தகலை = ஓசை ஒடுங்குமிடம்., சக்தி = ஆற்றல், வியாபினீ, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை, இவை பரநாத அபரநாதங்களை நடத்தும் சக்திகள். சமனை = சமனாக மனதுடன் எண்ணும் மனநிலை, உன்மனை = மனதைவிலக்கி மேலே ஆன்மா கடந்த சூக்குமநிலை. இதான "உன்மனாந்தம் பாசஜாலம் உன்மன்யந்தே பரச்சிவ" என்கிறது சைவாகமம். கலை என்ற சொல்லுக்கு ஒரு பிரிவு அல்லது ஒருகூறு, அல்லது ஒருபகுதி என்பது பொருளாகும். ஒவ்வொரு கலையையும் கடந்து, மேலே ஆன்மா போகப்போக உச்சரிக்கும் மந்திரங்களின் ஒலிஅளவு குறைந்து, கொண்டேபோகும். மேலும் அவ்வப்பகுதியில் கலைகளின் வடிவமும், ஒலியும், ஒளியும் வேறுபட்டுத்தோன்றும். முடிவில் உள்ள நான்குகலைகளும் பராசக்தியின் நேர்முக இயக்கமாய் திகழ்வனவாகும். பராசக்தியும், கலைகளும் வேறுபாடின்றி அன்னியமாய்த்திகழும். இவை யாவும் அநுபூதிமான்களிடத்தே தெரிந்து, தெளிந்து, கடைபிடிக்கவேண்டியவைஆகும். ஸத்குருவிடம் பிராசாத யோகத்திற்குஉரிய கலைகள், காலமாத்திரை, வடிவம், நிறம், ஸ்தானம், அங்குலம், தத்துவவியாப்தம், அதிபர், சூனியம், குணம், மலசோதனை, ஏழுவகைத்தோற்றம், அவஸ்தை, பகுப்பு, முதலானவற்றை தவறாது தெரிந்து கொண்டு, பிறகே மந்திரஸாதகனாக பயிற்ச்சியை மேற்கொள்ள வேண்டும். இந்த ஷோடசகலைகளைப்பற்றி பிராசாதவிளக்க நூல்களில் காணலாம். இதன் விளக்கங்களை எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் இலங்கை யாழ்பாணம், அச்சுவேலி, சிவஸ்ரீ. ச. குமாரசாமிகுருக்கள் அவர்கள் தமது பிராசாததீபம் என்ற நூலில் விளக்கியுள்ளார்கள்.

பிராசாதகலைகளை அறிந்த சிவயோகியே சிவனை காண்பார். நாம் தன்னகத்தே இயல்பாகவேஉள்ள, தேஜோரூபமான, ஞானசக்திமய ஜோதிர்லிங்கத்தில், சிவனை எண்ணி, வழிபட்டு, பிராசாத மந்திரத்தால் யோகமுறையில் முன்கூறியபடி துவாதசாந்த சிவஸ்தானம் வரை பயணம் செய்து அங்குள்ள சிவனைக்காண வேண்டும். "காணாத அருவினுக்கும், உருவினுக்கும் காரணமாய் நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்" என்பார் சேக்கிழார் சுவாமிகள். இவ்விதம் முதலில் சிவனை லிங்கத்தில் கண்டு, பின்பு அதில் ஒன்றிடுவது முறையாகும். கடவுளை வழிபடுவதற்குஉரிய இடங்கள் மூன்று. அவை,

[1]கோயில், [2]சிவஞானி, [3]தனது இதயம் ஆகியன. சிவபூசையில் தன்னைச்சிவமாகவே கருதிச் சிவோஹம் என பாவனைசெய்தல் வலியுறுத்தப்படுகிறது. எதை எண்ணுகிறோமோ நாம் அதுவாகஆகலாம் என்ற சிவாகம மரபின்படி சிவோஹம் என பாவித்து, இறைவனது எண்குணங்களும் நமக்கு இருப்பதாகப் பாவனைசெய்வது அவசியமாகும். திருமூலர் நம் உடலே சிவலிங்கம், இதுவே ஹம்ஸர் எனப்படும் சதாசிவரையும், ஆனந்தர் எனப்படும் நடேசரையும், உள்ளடக்கிய கோயில் நமது உடலே என்பதை பலபாடல்களால் விளக்கியுள்ளார். (எடுத்துக்காட்டு)

மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்.
மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்.
மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்.
மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே. (திருமந்திரம் பாடல் 1703)

இறைவன் உறையும் அஷ்டமூர்த்தம் எனும் 8 வடிவங்களில் ஒன்று உயிர் ஆகும். அதனைத் தன்வடிவாக்கிக்கொண்டு, உயிருக்கும்உயிராய் இறைவன் விளங்குவதையும், நம்மனத்தையே அவன் கோயிலாக் கொண்டு உள்ளதையும் அருளாளர்களின் திருமுறைநூல்கள் பலவும் தெரிவிக்கும். (எடுத்துக்காட்டு)

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.
உடம்பெனு மனையகத்து உள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனும்திரிமயக்கி
யிடம்படு, ஞானத்தீயா லெரிகொள விருந்துநோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே.

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியன்
உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுகவாங்கிக் கடையமுன் நிற்குமே. (அப்பர்பதிகம் 76 திருமுறை 4)

இவ்வாறு அகவழிபாட்டை சைவசமய ஆசாரியஅருளாளர்கள் பலரும் கூறி, விளக்கியும் உள்ளனர். செயத்தக்க செய்யாமையாலும் கெடும் என்றவாறு பூசை செய்யாத பிறப்பு கெடும்.

நமது இதயத்துள்ளே செய்யும் வழிப்பாட்டிலே கண் முதலிய பொறிகளேனும், தலை முதலிய அங்கங்களேனும், தொழில்படாது. இவைகள் சிவத்தொண்டிலே சென்றால்

மட்டுமே தீயவழியிலே செல்லாமல் நிற்கும். எனவே, எந்த அகப்புறக்கருவிகளையும் தீயவழியிலிருந்து விலக்குவதில் அவற்றை நேரே அடக்குவது மிக அரிது. அதற்கு நல்லவழியைக் காட்டுவதே நமது சைவசமயமுறைமை. இதனையே திருவள்ளுவநாயனார் தமது திருக்குறளில்

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்றுவிடற்கு. (திருக்குறள்)

அகவழிபாடு, புறவழிபாடு, ஆலயவழிபாடு ஆகிய மூவகை வழிபாடுகளுக்குள்ளே, நமக்கு ஏற்ற மிகப்பொருத்தமானது **கோயில்வழிபாடே** ஆகும். மற்றவை இதற்குத் துணையானவையே. எனவே மூவகைவழிபாடும் அவசியமே. புறவழிப்பாட்டிற்கு முன்னர், அதற்கும் தகுதியளிப்பது **அகவழிபாடே** ஆகும். இதுவே யாவருக்கும் பொது அடிப்படைமுறை. தமக்குள்ளே உடலைக் கோயிலாக்கி உயிரை சிவமாக்கி அனைத்தையும் அர்ப்பணிக்கும் அன்புநெறியே சிறந்தது. இதனாலேயே யாவரும் புனிதாரகி இறைவனைக் காண்பர். உடம்பேகோயில். மனமேஉயிர். வாய்மையே தூயநீர்மனமணியே லிங்கம், அன்பே நெய் பால் முதலிய அபிஷேகப்பொருட்கள். போற்றுதலே உணவு - நிவேதனம் என்று அகவழிபாட்டில் நாம் நமது உடல், பொருள், ஆவி, அகப்புறக்கருவியின்பயன்கள் யாவற்றையும் இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்பார் அப்பர். இதனையே சிவாகமங்கள் கூறுகின்றன. நவஆகமஸாரமாய் திருமந்திரம் இதனையே கீழ்காணும் பாடலால்,

உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே என்கிறது.

பிறவி அறவேண்டுமானால் முதலில் பிறப்பு எதனால், வருகிறது என்று, அதுவரும் வழியைக் காணவேண்டும். பிறவி ஆசையால் வருகிறது. ஆசைக்கு மூலம் ஆணவமலமாகிய பாசம். எனவே பிறவி அறவேண்டுமானால் அதற்கு மூலமலமாகிய ஆணவம் நீங்க வேண்டும். ஆணவக்கிழங்கை அகழ்ந்தெடுத்துவிட்டால் அத்தொண்டர் உள்ளத்தே இறைவன் பிரகாசிப்பார். இதனையே குமரகுருபரர் தேவியைத் துதிக்கையில் "அகந்தைக்கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கேற்றும் விளக்கே" என்கிறார். இதற்கு ஸோஹம் ணுபாவனை அவசியமாகிறது. நமது மானுட உடலே கோயிலாகும். அவ்வாறே தேவாலயம், தேவனின் ஸ்தூலத்திருமேனியாகும். கோயிலின் மேலே சிவலிங்கம், சூக்ஷ்மத்திருமேனியாகும். ஆதலால் நமது உடல் தேவனின்கோயில், சிவலிங்கம் பூஜ்யபிரதிமைகள், பதுமைகள் (தெய்வச்சிலைகள்) கோபுரவிமானங்கள், யாவும்,

பஞ்சகலாமயமாகவே சாந்தியதீதாதி பஞ்சகலாரூபமாகவும், ஷடத்துவாக்களின் ஒருமித்தரூபமாகவும், தியானித்துப் பயிற்சிபெறவேண்டும்.

முன்கூறிய இதயகமல இலக்கணத்துடன், சைவாகமங்கள், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகைநெறிகளிலும், உள்ளும் புறமும் சிவனை வழிபடத்தக்க வழிமுறை-களைத் தெளிவாக விளக்கி உள்ளன. அதன்படி தினமும் ஆன்மபூசையை அகவழிபாட்டைச் செய்து, ஷடத்துவாக்களைக் கடந்து, துவாதசாந்தப்பெருவெளியில்உள்ள, சிற்றம்பலத்தேஆடும் ஆனந்தக்கூத்தனைச் சிவனைக்கண்டு, பேரானந்தம் பெறலாம். இவ்விதமாக இடைவிடாத-பயிற்சியாலும், நாம் இறைவன்பால்கொள்ளும் பேரன்பாலும், இடைவிடாது வழிபடும் பெரு-முயற்சியாலும் நாம் அனைவரும் கடவுளைக்கண்டும், உணர்ந்தும், அனுபவித்தும் சிவானு- பூதியைப் பெற்று சிவபோகமாகிய நித்தியானந்த முக்தியை பெறலாம், என்பது திண்ணம்.

<u>சிவலிங்கம் : -</u> ஆத்மலிங்கம் & ஆலயலிங்கம். இனி முற்கூறிய ஆறுஅத்வாக்களும் சிவலிங்கத்தில் நிற்கும் முறைமையை சைவாகமங்களின்படி அறிவோம். நிவிருத்திகலை, பிரதிஷ்டாகலை இரண்டும் கொண்டது பிரம்மபாகம், வித்தியாகலை ஒன்று உடையது விஷ்ணு-பாகம், சாந்திகலை, சாந்தியதீதகலை இரண்டும் கொண்டது சிவலிங்கத்தின் பூஜ்யாம்சமான ருத்திரபாகம் ஆகும். இவ்விதம் லிங்கம் மூன்று பகுதிகளை உடையதாக விளங்கும். மேலும். இவ்வத்துவாக்கள் ஆறும் ஈச்வரனுக்குச் சரீரமாகும். எங்ஙனனெனில் சாந்திதீதகலை திருமுடி, சாந்திகலை திருமுகம், வித்தியாகலை மார்பு, பிரதிஷ்டாகலை குய்யம், நிவிருத்திகலை முழந்தாளும், பாதமுமாக இவ்வாறு பஞ்சகலைகளும் இறைவனின் அங்கமாகும். புவனங்கள் ரோமமாகவும், வர்ணங்கள் தோலாகவும், மந்திரங்கள் இரத்தமாகவும், பதங்கள் நரம்பாகவும், தத்துவங்கள் எலும்பு மற்றும் தசையாகவும் விளங்குவனவாகும். இவ்விதமாக ஷடத்துவாவே யாவுமாகி, முழுதேகமாகவும் விளங்குகின்றது. இவ்வாறு ஸ்தூலம், சூக்ஷ்மம், அதிசூக்ஷ்மம், ஆகிய நிலைகளில், உடல், பொருள், கோயில், லிங்கம், பிம்பம், பூசையின் இலக்குவடிவம். இவற்றில் முன்கூறியவாறு ஷடத்துவாவை அமைந்துள்ளாத எண்ணி, இதனைக் கடந்துஉள்ள கடவுளைப்பாவனை செய்தலே நமக்கு போகம், மோக்ஷம் என்கிற, இருவகையான, இம்மை, மறுமைப்பயன்களை, அளித்திடும் என்பது திண்ணம். இதனையே சிவாகமங்கள் பலவும் சிறப்பித்துக் கூறியுள்ளன. (எடுத்துக்காட்டு)

சாந்தியதீத கலாசீர்ஷம் சாந்திவக்த்ர ஸரோரு"ம்.
வித்யா விதத வக்ஷோஜம் ப்ரதிஷ்டா கு"யமண்டலம்.
நிவிருத்திர் ஜானு ஜங்காங்கிரிர் புவனாத்வா தனூரு"ம்.
வர்ண த்வக் மந்த்ர ருதிரம் பதம் மாம்ஸ ஸிராதிகம்.
தத்வாஸ்தி மஜ்ஜா சுக்லாதி தியானம் ஸத்போக மோக்ஷதம்.

சிவாந்த தத்துவ கர்பாத்வா வியாபினம்ஸர்வதா சிவம்.
(சைவாகமங்கள்)

அவயவங் கலைக ளாகு மாதிய புவன ரோமஞ்
சுவையுறு துவக்கு வன்னஞ் சோரிமந்திரம தாகுந்
தவமுறு பத நரம்பு தத்துவந் தாது வாகுஞ்
சிவமுயர் சதாசி வர்க்குச் சிறந்தவா றுறுப்புந்தானே. (சைவசித்தாந்தம்)

சைவசித்தாந்தத்தின்படி யாவரும் தத்துவங்களின் இயங்கும் முறைமையை நன்கு அறிந்து, அவற்றைத் துணையாகக் கொண்டு, உள்ளும் புறமும் சிவலிங்க பூசையைத் செய்திட்டால், மனுஷ்யரிலே சிவபூஜையின் தாரதம்மியத்தினாலே, ருத்திரர் முதலான பல்வேறு புவன-போகாதிகளும், அணிமாதி அஷ்டஐச்வர்யங்களும் கிட்டும். புறக்கருவிகளின் முறையான செயல்படுதலால் இஷ்டசித்தியை பெறலாம். எடுத்துக்காட்டாக, யோகவழிபாடு, பிராணவாயு-வானது, இடை, பிங்கலை சுழுமுனைகளைப் பொருந்தி, இடைபிங்கலை வழியாகச் சுழிமுனை- யையொட்டி, உச்வாசநிச்சுவாசங்களைச் (இழுத்தல் & வெளியேற்றல்) செய்து, நடுவேஉள்ள அக்னிரூப சுழுமுனை நாடியில் கும்பகம் செய்து, அக்கும்பகநிலையில் இருந்தாவாறே, அதில் அசபாமந்திரத்தால் ஜபமும், பூசையும் செய்திடல் யோகபூசைப் பயிற்ச்சிமுறையாகும். சூரிய-சந்திரநாடிகளைத்தவிர்த்து, சுழுமுனை நாடியில், கும்பத்தில், யோகநெறியில், பூசிப்பது, ஸித்திதரும் என்கின்றன சைவாகமங்கள். இதற்குச் சான்று,

யஜனே அர்கேந்து சஞ்சரே நிஷ்பலம் தத்அவாப்னுயாத்.
சந்திரார்க நாசநே பூஜா ஸர்வ ஸித்திகரீ ஸ்மிருதா. (காரணாகமம்)

வலப்புறத்தே "ம் என்றும், இடப்புறதே ஸம் என்றும் அசபாமந்திரம் ""ம்ஸ" என்று நிற்கும். பிராணவாயு சடமாயிருக்கவும், உள்ளும்வெளியுமாகப் போக்குவரத்தைச்செய்வது எப்படி? யெனில், அருள்சக்தியினாற் செலுத்தப்பட்ட கிரியாசக்தி மூலாதாரத்தின் முக்கோணத்தின் கீழ்க்கோணங்கள் இரண்டினுள்ளும் வலமிடமாகவிருக்கும் அசபாமந்திரத்தை ஒருகால் "ம் என்றும் ஒருகால் ஸம் என்றும் அசைத்தலினாலே இயந்திரத்துருத்திபோல், உள்ளும்வெளியுமாக வாங்கிவிடுகிறது எனவறிக. மேற்கூறிய தத்துவ, தாத்விகமாகிய அகப்புறக்கருவிகளுடன் கூடிய, ஆன்மாவானது கேவலம், சகலம், சுத்தமென மூவகை அவத்தைப்படும். இவை மூன்றும் ஐந்தாகக்காரியப்பட்டு, காரியாவஸ்தைப் பதினைந்தையும், முன்னதையும் கூட்டி ஆக பதினெட்டுஅவஸ்தைகளை ஆன்மா அனுபவிக்கும். அவஸ்தா பஞ்சகம். [1]ஜாக்கரம், [2]சொப்பனம், [3]சுழுத்தி, [4]துரியம், [5]துரியாதீதம் என்பனவாம். இவற்றில் ஆன்மா பலவாறு நிலை- பெறும். இவ்வாறு ஆன்மா கருவிகளுடன் கூடியும், பிரிந்தும் அவஸ்தைப்பட்டு வரும் காலத்திலே, புண்ணியமேலீட்டினாலே அநாதிபந்தமான மூலமலம்

தனது மறைக்குஞ்சக்தி தேய்தற்குரிய துணைக்காரணங்களுடன்கூடிப்பரிபாகம்வந்தவிடத்து, சக்திநிபாதம் நிகழப் பெற்று, அதனால் இருவினையொப்பை அடையும். இவ்வாறு மலபரிபாகம், சக்திபாதம், இருவினையொப்பு இவைகளைப்பெற்ற, பக்குவப்பட்ட, ஆன்மாக்கள், அவரவர்களுக்கு மட்டுமே நிகழ்ந்த, சக்திநிபாதத்திற்கு ஏற்ப, குருவினாலே தீட்சித்து அனுக்கிரஹிக்கப்பெற்று, சரியை, கிரியை, யோக, ஞானநெறிகளை அனுஷ்டித்து, முறையே அவற்றின் பயனாகிய சாலோக, சாமீப, சாரூப, சாயுஜ்ய பதமுக்திகளைப் பெறுவார்கள். இவை நாலு நெறிகளும், தமக்குள்ளும் மற்றதைப்பெற்று, ஒவ்வொன்றும் நாலுநெறிகளையும் கொண்டதாய் (4 X 4 =16) பதினாறு-வகையாகி சைவசமய உண்மைநெறியாகி, 30வகை முக்திகளைத் தருவனவாக சைவசமயம் சைவாகம சிறப்பு நூல்களால் விளக்கப்படுகிறது.

ஆன்மாக்களுக்கு குருவினாலே செய்யப்படும் தீட்சைகளால் ஆணவகன்மமயா மலங்கள் அவனைவிட்டு கழலும். சிவநெறியில் நின்று, நித்தமும் சிவபூசையைச்செய்து, சிவஞானம்பெற்று, தன்அகத்தேயும் புறத்தேயும் ஷடத்துவாதீதசிவனை சிவநெறியின் துணைக்-கொண்டு, தீக்ஷை அளித்த ஸத்குருவின் பிராஸாதமந்திரோச்சாரண முறைமையால், தீக்ஷிதர் சிவனைக்கண்டும், களித்தும், பிறவாப்பேரின்பநிலையைப் பெறலாம் என்பதே சைவசித்தாந்தம் ஆகும். நாமும் சிவயோக அருநெறியை அறிந்து, அதனை முறையே பின்பற்றி, பயன்பெறுவோமாக. இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழக. வாழ்க சீரடியாலெல்லாம்.

ஸ்வகாலவர்ஷீ பர்ஜன்ய: சுபிக்ஷம் விஜயீ நிருப: .
சாந்தாநி ஸர்வபூதாநி பயஸ்வின்ய: பயோபிருத: .

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

லோகாஸ் ஸமஸ்தாஸ் சுகினோ பவந்து

*************** சுபம் ***************

உ

ஸ்ரீ முருகன் துணை

நக்ஷத்திரதேவதைகளின் உருவஇயல்பும் சாந்திவேள்வியும்

நமஸ் சூர்யாய சோமாய மங்களாய புதாயச.
குரு சுக்ர சநிப்யச்ச ராஹவே கேதவே நம :

கட்டுரையாளர்
ஆகமசிரோமணி. ஸ்மார்த்தபிரயோக நிபுணர்.
சிவஸ்ரீ. சி. கீதாராம சிவாசார்யர்.
மொரட்டாண்டி பரிகாரக்ஷேத்ரம். புதுவை.

உலகில் உயிரினங்களை ஒளிதந்து வாழ்விக்கின்ற, விண்ணில் ஒளிரும் ஜோதிகளாகத் திகழ்வன சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், என்பவைகளே ஆகும். இவைகளின் இயல்புநிலை, செயல்பாடுகள், உருவம், இடைவெளித்தூரம், தொடர்பு, தோன்றி மறையும் காலமுறை, இவற்றைக் கணித்து, உயிர்களுக்குப் பயன்தரும் நல்லகாலங்களைக் குறிப்பிட்டு, நற்செயல்களையும், யாகாதிகளையும், தருமங்களையும், நாம்செய்து பயன்பெற்றிட நமக்கு உதவும் உன்னத நூல்களே ஜோதிஷநூல்கள் ஆகும். இவை வேதநெறிக்கு உதவும், காலவிதான சாஸ்திரமாக விளங்குவதால், வேதாகமங்களுக்கு கண் போன்று விளங்கிடும் முக்கிய அங்கமாவதால் இது வேதாங்கம் என கூறப்படுகிற ஒப்பற்ற சாஸ்திரமாகும்..

ஜோதிஷத்தில் நக்ஷத்திரம் : - ஜோதிஷ சாஸ்திரத்தில் பொதுவாகவும், சிறப்பாகவும் பேசப்படும் பொருள் பஞ்சாங்கம் என்ற சொல்லால் கூறப்படும். பஞ்சாங்கம் எனப்படுவது முறையே [1]திதி, [2]வாரம், [3]நக்ஷத்திரம், [4]யோகம், [5]கரணம் எனப்படுகிற ஐந்துமே ஆகும். இவற்றுள் மூன்றாவதாக இடம்பெற்று விளங்குவதே நக்ஷத்திரம். பொதுவாக நற்செயல்களுக்குஏற்ற, முகூர்த் நிர்ணய விஷயத்தில், நக்ஷத்திரங்களின் பங்கு மிகவும் முக்கியமானதாக கூறப்பட்டு உள்ளது.

நக்ஷத்திர சொல்விளக்கம் : - நக்ஷத்திரம் என்ற சொல்லுக்கு அழிவற்றது என்று பொருள். இதனை ந + க்ஷரதி இதி = நக்ஷத்திரம் என்று சமஸ்கிருத அறிக்ஷர் விளக்குவர். சமஸ்கிருத சொல் அகராதி நூல்களுள் ஒன்றான அமரகோசம் என்ற நூலில், நக்ஷத்திரத்திற்கு ஆறு பெயர்கள் மறுபெயராக கூறப்படுகின்றன. நக்ஷத்ரமிருக்ஷம் பம்தாரா தாரகாப்யுடு பர்ஸ்திரியாம். மேற்கண்ட வசனத்தின்படி 1) நக்ஷத்ரம், 2) ருக்ஷம், 3) பம், 4) தாரா, 5) தாரகா, 6) உடு / உடுபா என்பவை நக்ஷத்திரத்தைக் குறிப்பனவேயாகும்.

<u>நக்ஷத்திரமஹிமை : -</u> வானவீதியில் ஒளிரும் நக்ஷத்திரங்களை நாம் கண்டு வணங்கினாலும், அவைகளின் பெயர்களை தினமும் ஒருமுறைகூறினாலும், அன்றைய நக்ஷத்திரத்தை, அன்றைய தினம் அதிகாலையில் நினைப்பதாலும், நக்ஷத்திரங்கள் நமது பாவங்களை நீக்கி, நம்மை புண்ணியசீலர்களாக வாழவைக்கும். இதனை ஆன்றோர்கள் **"நக்ஷத்ரம் ஹரதே பாபம்"** என்று ஜோதிட சாஸ்திரத்தால் கூறுவார்கள்.

<u>வேதசாஸ்திரங்களில் நக்ஷத்திரகுறிப்புகள்: -</u> நமது தருமநூல்களின் அடிப்படை-நூல்களான நால்வகை வேதங்களில், ரிக்வேதம், சாமவேதம், அதர்வனவேதம் ஆகிய மூன்றை- விட, இரண்டாவதான யசுர்வேதத்தில், நக்ஷத்திரங்கள் இருபத்திஎட்டாக குறிப்பிடப்பட்டு உள்ளன. ஜோதிஷத்தில் கூறப்படும் இருபத்தேழு நக்ஷத்திரங்களுடன் கூடுதலாக கூறப்படும் ஒரு நக்ஷத்திரம் அபிஜித்நக்ஷத்திரம் என்ற பெயருடையதாகும். இந்த அபிஜித்நக்ஷத்திரம் ஜோதிஷத்தின் 27 நக்ஷத்திரத்திலிருந்து வேறுபட்டதா? அல்லது அவற்றுக்குள்ளேயே அடங்கியதா? என்று பலருக்கு ஐயம் எழுவது இயல்பே. இதற்கு ஜோதிடநூலின் விளக்கமாவது, உத்திராடநக்ஷத்திரத்தின் நான்காம்பாதமும், திருவோணநக்ஷத்திரத்தின் முதல் நான்கு- நாழிகைகளும், சேர்ந்ததே **அபிஜித்நக்ஷத்திரம்** என்றும், எனவே இந்த அபிஜித்நக்ஷத்திரம் ஜோதிஷத்தின் இருபத்திஏழு நக்ஷத்திரங்களிலேயே அடங்கியதுஎன்றும், நக்ஷத்திரம் 27என்றும் **ஜோதிஷ சாஸ்திரம்** விளக்கிஉள்ளது. இதற்கு சான்றாக, மற்றவைக்கு கூறிஉள்ளதுபோல் இதற்கு என தனியாக எதுவும், ஜோதிடத்தில் கூறப்படவும் இல்லை. மேலும் நக்ஷத்திர-சாந்திகளைக் கூறும்போதும், தனியே கூறப்படாமல், திருவோணநக்ஷத்திரத்துடனேயே அபிஜித் நக்ஷத்திரத்தையும், சேர்த்தேசாந்தி செய்யப்படவேண்டும் என்று கூறப்பட்டுஉள்ளது. அபிஜித் நக்ஷத்திரத்திற்கு பிரம்மதேவர் அதிதேவதைஆவதால், இதனைச்சிறப்பித்து பூசை செய்யப்பட- வேண்டும் என்று, வேதமும், ஆகமமும், 28 நக்ஷத்திரங்கள் என்றுகூறி, இவைகளை வணங்கி, பூசிக்கும் முறையைக்கூறிஉள்ளன. வேதாங்கமான ஜோதிஷம் என்பது காலமானத்தை விளக்கும் நூலாவதால், அது **"வைச்வ பிராந்தியாங்கிரி சுருதி திதிபாகதோ அபிஜித்ஸ்யாத்"** என்று அபிஜித்நக்ஷத்திரத்திற்கான காலஇலக்கணத்தைக் கூறுகிறது. வேதாகமங்களில் மேரு-மலையை மையமாகக்கொண்டு கிரஹங்களும், நக்ஷத்திரங்களும் வலம்வருவதாக கூறப்படுவதால், நக்ஷத்திரங்கள் நவகிரஹங்களின் அருகிலேயே சுற்றிலும், பரிவார தெய்வங்களாக பூசிக்கப்படுகின்றன. இதற்கு சான்றாக **"நஹிசேகுமிவ மஹாமேரும் கந்தும். அபச்யமஹ மேதத் சூர்யமண்டலம் பரிவர்த்தமானம்"** என்கிற வேதத்தின் அருணபாகத்தின்-படி ஒவ்வொருதிசையிலும் ஏழுநக்ஷத்திரங்கள் வீதமாக நான்கு திசையிலுமாக இருபத்திஎட்டு நக்ஷத்திரங்களின் **பூசைமுறை** காணப்படுகிறது.

<u>நக்ஷத்திர வரிசைமுறை : -</u> நக்ஷத்திரங்களை முறைப்படுத்தும்முறை, (கணிக்கும்முறை) இருவகையாக விளங்குகிறது என்பதை இனி காண்போம். ஜோதிஷசாஸ்திரத்தில், நக்ஷத்திரங்- களை வரிசைப்படுத்தி, முறையாககூறும்போது, **"அச்வின்யாதிருக்ஷம்"**

என்றபடி, அசுவினீ நக்ஷத்திரம் முதலாகவும், ரேவதீநக்ஷத்திரம் வரையிலுமாகவும், இருபத்திஏழு நக்ஷத்திரங்கள் கூறப்படுகின்றன. இம்முறை எங்கும் அதிகமாக நடைமுறையில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. மேலும், பலதருணங்களில் எக்காரியத்திற்கும் நக்ஷத்திரத்தைக்கணக்கிடும்பொழுதும், பொருத்தம் கணிக்கும்போதும், வாஸ்துவிற்கான ஆயாதிபொருத்தம்கணிக்கும்போதும், ஜோதிஷத்தின் இம்முறையே கையாளப்படுவதாய் எடுத்துக்கொள்ளப்பட்டுவருகிறது. ஆனால், யஜுர்வேதத்திலோ நக்ஷத்திரங்கள் 27-ன் வரிசைமுறை மாறுபட்டு, கிருத்திகைநக்ஷத்திரத்தை முதலாவதாகக் கொண்டு, பரணிநக்ஷத்திரத்துடன் முடிவதாக, முறைப்படுத்திக் கூறப்பட்டு உள்ளது. இவ்வாறே சைவஆகமங்களிலும் "கிருதிகாதி பரண்யந்தம்" என்பதாகவே கூறப்பட்டு பூசிக்கப்படுகின்றன. மேலும் ஆகமோத்த யாகசாலையில் சோமகும்ப அங்குரபூசையில் முதலில் கிருத்திகையையும், அடுத்ததான ரோஹிணியையும், சந்திரனின் இருநக்ஷத்திரசக்திகளாக, சந்திரனுடன் இணைத்து அனைத்துக்கிரியைகளிலும் முதலாவதாக பூசிக்கும் வழிமுறையும் காணப்படுகிறது. இதுவும் ஒருவகையில் வேதாங்கமான ஜோதிஷசாஸ்திரத்திற்கு ஏற்புடையதே ஆகும். அது எவ்வாறு? எனில், ஜோதிஷசாஸ்திரத்தில் விம்சோத்தரி தசாபாஷியத்தில் கிருத்திகை முதலாகத்தான் நக்ஷத்திர எண்ணிக்கை கூறப்பட்டுஉள்ளது. இருபத்திஏழு நக்ஷத்திரங்களும், ஒன்பது கிரகங்களின் ஆதிபத்தியத்தை ஏற்றுள்ளபோது, மூன்று நக்ஷத்திரங்கள் ஒருகிரஹத்திற்கு அடங்கியவையாக விளங்குகின்றன. ஜோதிடகால தசா-நாயகர்களின் வரிசையில் சூரியன் முதலாகவே ஒன்பது கிரஹங்கள் கூறப்படுகின்றனர். சூரியனின் நக்ஷத்திரங்கள் [1]கிருத்திகை, [2]உத்திரம், [3]உத்திராடம் ஆகிய மூன்றுமே ஆகும். இவ்விதமாகவே, ஒவ்வொரு நக்ஷத்திரத்திலிருந்தும், முறையே 10வதும், 19வதுமான நக்ஷத்திரத்தையும் சேர்த்துக் கொண்டதாகஅமையும் மூன்றுநக்ஷத்திரங்களுக்கு, சந்திரன் முதலான மற்ற கிரகங்களும் அதிபதியாவார்கள்.

நவகிரஹங்களின் நாயகனாகவும், மூவுலகத்தின் ஜகத்சக்ஷுவாகவும் விளங்குவதுடன் முதலாவதான சிருஷ்டி (படைத்தல்) காரியத்தைச்செய்யும் ஆத்மகாரகனாகவும், சோதிடத்தில் விளங்குகி சூரியனின் நக்ஷத்திரமாகஉள்ள கிருத்திகையில் துவங்கி, கடைசித்தொழிலான சம்ஹாரகிருத்தியத்தின் கர்த்தாவும், சூரியனின் குமாரருமான யமதருமரின் நக்ஷத்திரமாக உள்ள பரணியில் முடிவுபெறுமாறு வேதத்திலும், சைவாகமங்களிலும் கூறப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானதே என்று அறியலாம். இந்த 27 நக்ஷத்திரங்களின் ஒரேநாயகனாக சந்திர-பகவான் வேதாகமங்களில் கூறப்படுகிறார். சிறப்பாக **சந்திரமா நக்ஷத்ராணாம் அதிபதி:** என்று யஜுர்வேதம் கூறிஉள்ளது. மேலும் இருபத்திஏழு நக்ஷத்திரங்களிலும் ரோஹிணீ நக்ஷத்திரமே சந்திரனுக்கு மிகவும் பிரியமானது என்று அனைவராலும் கூறப்பட்டுஉள்ளது. இதற்கு ஜோதிஷ சாஸ்த்திரத்தில் கூறப்படும் காரணமாவது யாதெனில், முழுநக்ஷத்திரமாய் ரோஹிணீ விருஷபராசியில் விளங்கும் நக்ஷத்திரத்தில் **சந்திரன் உச்சம்பெறுவதால்** அதாவது ரோஹிணீ நக்ஷத்திரத்தின்

இடமாகிய ரிஷபராசியில் சந்திரன் உச்சம்பெற்று விளங்கு-வதாலேயே சந்திரனுக்கு மிகவும் பிரியமானது ரோஹிணீ என்று கூறப்பட்டுள்ளது. இதையே யஜுர்வேதமும் நக்ஷத்திர ஆகுதி மந்திரவாக்கியங்களில் ரோஹிண்யை ஸ்வாஹா, ரோசமானாயை ஸ்வாஹா" என்றும் கூறி உறுதிப்படுத்துகிறது. இந்த ரோஹிணீக்கும், சந்திரனுக்கும் பிறந்தகுமாரரே ஸ்ரீபுதகிரஹர் ஆவார். மேலும் மற்றொரு சந்திரனின் பிரிய-நக்ஷத்திரமாகவும், முதல்நக்ஷத்திரமாகவும், சந்திரநாயகியாகவும்உள்ள, கிருத்திகாநக்ஷத்திரம் சிவகுமாரராகிய ஷண்முகசுவாமிக்கு, வளர்ப்புதாய்மார்களாக விளங்கியதுஆகும். இதனாலேயே முருகன் கார்த்திகேயன் என்று பெயர்பெற்றதும், தீபஜோதிரூபனான அவருக்கும், ஸகல-தெய்வங்களுக்கும் இந்த கிருத்திகையிலேயே, இந்த நக்ஷத்திரம் இரவில் உள்ள தினத்திலேயே தீபத்திருவிழா தீபாவளித்திருவிழாவாக ஸகலகோயில்களிலும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இதனால் இவ்விருநக்ஷத்திரங்களின் தனிச்சிறப்பு நன்குவிளங்கும். மேலும் சிவமஹா-புராணத்தில், இந்த இருபத்திஏழுநக்ஷத்திரங்களும், தக்ஷபிரஜாபதிக்கு மகளாகத்தோன்றி, வளர்ந்தபின்பு அவரால் நக்ஷத்திரதேவியர்கள் விரும்பியபடியே சந்திரனுக்கு மணமுடித்து அளித்ததாகவும் கூறப்பட்டுஉள்ளது. இரவில் தோன்றும் சந்திரன் நக்ஷத்திரம் ஆகிய இவ்விரு- ஒளிகளும், நம் யாவருக்கும், விரும்பிப்பார்த்து மகிழவும், உலகில்படைப்பாகிய சிருஷ்டிஏற்படவும் உதவுகிற நம்விருப்பமான நாயகநாயகிகளாக வானில்விளங்கவும், காணத்தக்க பிரத்யக்ஷதிவ்ய தம்பதியாகவும் உள்ளனர். வானில் சந்திரனும், நக்ஷத்திரமும் தினமும் தோன்றி, உயிரினங்-களுக்கு தமது அமுதஒளிகிரணத்தால் குளிர்ச்சியான ஜீவனத்து அமுதளித்துக்காக்கின்றனர்.

<u>வானவெளியில் நக்ஷத்திரரூபம் (28ன் வகை) :</u> - ஜோதிடசாஸ்திரத்தில், யாவரும் வானில் அன்றைய, சிறப்புநக்ஷத்திரத்தைக்கண்டு, வணங்கிடத்தக்கவகையில், எளியமுறையில், சந்திரனுக்குஅருகில் இருக்கும் நக்ஷத்திரத்தின், எண்ணிக்கை விவரம், அவற்றால் தோன்றும் உருவஅமைப்பு பற்றிய விவரமும், தெளிவாக கூறப்பட்டுஉள்ளது.

திருத்ரியங்க பஞ்சாக்னி குவேத வன்ய:
சரேஷு நேத்ராச்வி சரேந்து பூகிருதா: I
வேதாக்னி ருத்ராச்வி யமாக்னி வன்யோ
அப்த்யச் சதம் த்வி த்வி ரதாப தாரகா : I

மேற்கண்ட சுலோகத்தில், வானில் நக்ஷத்திரங்களின் எண்ணிக்கை பஞ்ச/சரம்/இஷு =5), (த்ரி = 3), (நேத்ர/அச்வி/யம = 2), (அங்க = 6), (அக்னி/வஹ்நி = 3), (பூ/கு/இந்து = 1), (வேதஅப்தி = 4) (ருத்ர = 11) (த்வி = 2), (ரதன பற்கள் = 32) என்று மாற்று சொற்களுக்கு பொருளறிக). இவ்வாறு 28 நக்ஷத்திரங்களின் மேற்கண்ட எண்ணிக்கையின் ஒருங்கிணைப்பால் வானில் எண்ணி உணரத்தக்க மாதிரி வடிவங்களும் இந்நூலில் கூறப்படுகின்றன.

அச்வியாதிரூபம் துரகாஸ்ய யோநி.
க்ஷுரோ அநா ஏ நாஸ்ய மணிர் கிருஹம்ச.
பிருஷத்க, சக்ரே, பவனம், ச, மஞ்ச:
சய்யா, கரோ, மௌக்திக, வித்ருமம்ச.

தோரணம் பலிநிபம்ச குண்டலம்.
சிம்மபுச்ச கஜதந்த மஞ்சகா:
த்ரயச்ரச் சத்ரி சரணாப மர்தளோ
விருத்த மஞ்ச யமளாப மர்தளா: .

மேற்கண்ட இருசுலோகங்களில் அச்வினீநக்ஷத்திரம் முதல் ரேவதீவரையிலானவற்றின் விண்வெளிவடிவமைப்பு கூறப்பட்டுள்ளது. இவற்றை இனி காண்போம்.

(1) அசுவினீ நக்ஷத்திரம் இது 3 எண்ணிக்கையில் குதிரைமுகம் போன்றது.

(2) பரணீ நக்ஷத்திரம் இது 3 எண்ணிக்கையில் முக்கோணக்குறி வடிவானது.

(3) கிருத்திகை இது 6 நக்ஷத்திரங்களாக நாபிதனின் கத்தி வடிவானது.

(4) ரோஹிணீ இது 5 நக்ஷத்திரங்களாக (மாட்டு) வண்டி வடிவில் தோன்றுவது.

(5) மிருகசீரிஷம் இது 3 எண்ணிக்கையில் மானின் முகம் போன்ற வடிவானது.

(6) திருவாதிரை இது 1 எண்ணிக்கையில் தனித்ததாக மணி போன்று விளங்குவது.

(7) புனர்பூசம் இது 4 எண்ணிக்கையில் வீடு போன்ற தோற்றமுடையது.

(8) பூசம் இது 3 எண்ணிக்கையில் அம்பு போன்ற வடிவமுடையது.

(9) ஆயில்யம் இது 5 எண்ணிக்கையில் சக்கரம் போன்ற வடிவுடையது.

(10) மகம் இது 5 நக்ஷத்திரங்களாய் வீடு போன்ற உருவமுடையது.

(11) பூரம் இது 2 நக்ஷத்திரங்களாய் கட்டில் உருவிலிருப்பது.

(12) உத்தரம். இது 2 நக்ஷத்திரங்களாய் படுக்கை வடிவுடையது.

(13) ஹஸ்தம். இது 5 நக்ஷத்திரங்களாய் கை வடிவிலிருப்பது.

(14) சித்திரை. இது 1 தனி நக்ஷத்திரமாய் முத்து உருவிலிருப்பது.

(15) சுவாதீ. இது 1 தனி நக்ஷத்திரமாய் பவழரத்தின உருவிலிருப்பது.

(16) விசாகம். இது 4 நக்ஷத்திரங்களாய் தோரணவாயில் உருவமுடையது.

(17) அனுஷம். இது 4 நக்ஷத்திரங்களாய் பலிஉருண்டை (உருளை) உருவமுடையது.

(18) கேட்டை. இது 3 நக்ஷத்திரங்களாய் வட்டமாய் குண்டல வடிவானது.

(19) மூலம். இது 11 நக்ஷத்திரங்களாய் மேல்நோக்கிய சிங்கவால் போன்றது.

(20) பூராடம். இது 2 நக்ஷத்திரங்களாக யானையின்தந்த வடிவிலிருக்கும்.

(21) உத்திராடம். இது 2 நக்ஷத்திரங்களாக கட்டில் வடிவத்தில் தோன்றும்.

(22) அபிஜித். இது 3 நக்ஷத்திரங்களாக முக்கோண வடிவமுள்ளது.

(23) திருவோணம். இது 3 நக்ஷத்திரங்களாக ஹரிபாதம் உருவிலிருப்பது.

(24) அவிட்டம். இது 4 நக்ஷத்திரங்களாக மத்தளவாத்திய வடிவிலிருப்பது.

(25) சதயம். இது 100 நக்ஷத்திரங்களின் மண்டலமாய் வட்ட வடிவிலிருப்பது.

(26) பூரட்டாதி. இது 2 நக்ஷத்திரங்களாக கட்டில் உருவம் கொண்டது.

(27) உத்திரட்டாதி. இது 2 நக்ஷத்திரங்களாக இரட்டை உருவிலிருக்கும்.

(28) ரேவதீ. இது 32 நக்ஷத்திரங்களாக மத்தகளக்கருவி உருவிலிருக்கும்.

வானில் அனேககோடி நக்ஷத்திரங்கள் இருக்கின்றபொழுதிலும், மிகப்பெரிய ஜோதிட சாஸ்திரத்தில் வானவியலின் கணிதசாத்திரத்தில் அசுவினி முதல் ரேவதி வரை நக்ஷத்திரங்கள் இருபத்திஏழு என்ற எண்ணிக்கையிலேயே கணிக்கப்பட்டுஉள்ளது. இதற்கு காரணம் யாது? எனில், ஜோதிடத்தில் எடுக்கப்பட்டுள்ள நவகிரஹங்கள்இந்த இருபத்திஏழு நக்ஷத்திரங்கள் இருக்கும்பாதையில்தான், வானில்சஞ்சாரம் (போக்குவரத்தை) செய்கின்றன. எனவே, இவைகள் தான் பூமியிலுள்ள ஸகலப்பிராணிகளின் வாழ்க்கையில் தொடர்புகொண்டுஉள்ளவை. இந்த இருபத்தேழு நக்ஷத்திரங்களைக் கொண்டதாகவே பன்னிரண்டு ராசிகளைப் பிரித்து விளக்கிஉள்ளனர். ஒவ்வொரு ராசியும் 120 அம்சங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நக்ஷத்திரங்கள் யாவும் சுமார் 60 நாழிகை உடையவை. 24 மணிநேரமாகிய 1 நாள். இந்த ஒருநாளில் 21,600 பிறப்புகள் பூலோகத்தில் உதயமாகின்றன என்றும், அவற்றுள் 7200 வகை மனிதபிராணிகள் ஆவர் என்றும், ஒரு லக்னத்தில் 600 மனிதர்கள் பிறப்பார்கள் என்றும், சூரியசித்தாந்தம் என்ற நூல் கூறுகின்றது. இவ்விதமாய் வானில் நக்ஷத்திரஇயலின்உருவை அறிந்தோம்.

நக்ஷத்திரங்களின் இயல்புதன்மைக்கேற்ற பிரிவுகள் : - ஜோதிஷ சாஸ்திரத்தில், கூறப்படும் இருபத்திஏழு நக்ஷத்திரங்களையும் முகூர்த்தசிந்தாமணி எனும் சோதிஷநூலானது, ஏழுவித-கூட்டமாகப்பிரித்தும், அவற்றில் செய்யத்தக்க காரியங்களைப்பகுத்து விளக்கியும்உள்ளது. அவை ஏழுகணங்கள் ஆகும். அதாவது,

(1) துருவகணம் : - (த்ருவம் = நிலையானது மற்றும் அசையாதது). துருவகணத்தில் [1]உத்திரம், [2]உத்திராடம், [3]உத்திரட்டாதி, [4]ரோகிணீ ஆகிய நான்குநக்ஷத்திரங்கள் விளங்கும். இதில் கிழமை ஞாயிறு இடம்பெறும். இவற்றில் செய்யத்தக்கதும், செய்யவேண்டியதுமான காரியங்கள். வீடுகட்டுதல், விதைவிதைத்தல், தோட்டபிரவேசம் ஆகியன.

2) சரகணம் : - (சர = அசைவு & போக்குஉடைய கூட்டம்) சரகணத்தில் [1]சுவாதீ, [2]புனர்பூசம், [3]திருவோணம், [4]அவிட்டம், [5]சதயம் ஆகிய ஐந்து நக்ஷத்திரங்கள் உள்ளன. இதில் திங்கள் கிழமை இடம்பெறும். இவற்றில் செய்யக்கூடிய காரியங்கள் யானை ஏற்றம், குதிரை முதலிய வாஹன ஏற்றம், தோட்டபிரவேசம் முதலியனஆகும்.

3) உக்ரகணம் : - (வெப்பம் = தாகம் கொண்டு வெகுண்ட கூட்டம்). உக்ரகணத்தில் [1]பூரம், [2]பூராடம், [3]பூரட்டாதி, [4]பரணீ, [5]மகம் ஆகிய ஐந்து நக்ஷத்திரங்கள் உள்ளன. இதில் செவ்வாய் கிழமை இடம்பெறும். இவற்றில் கொடியசெயல், வன்செயல், எரித்தல், போக்கிரித்தனம், விஷம் உண்ணுதல், ஆயுதபிரயோகம், சண்டை, கீழ்நோக்கிய ஆழப்படுத்தும் பணிகள், சிகிச்சை முதலியன செய்யத்தக்கவை ஆகும்.

4) மிச்ரகணம் : - (மிச்ரம் = கலப்பு, சரத்தன்மையும், ஸ்திரத்தன்மையும் சேர்ந்தவை). மிச்ர-கணத்தில் [1]விசாகம், [2]கிருத்திகை ஆகிய இருநக்ஷத்திரங்கள் உள்ளன. இதில் புதன்கிழமை விளங்கும். இவற்றில் (நன்மைகளை விரும்பிச்செய்யும் அஷ்டகர்மபிரயோகம்), அக்னிகாரியம், விருஷோத்ஸர்கம் (காளையை பொதுநலனுக்கு நேர்ந்து, நியமித்து கோயிலில் விடுதல்), கொடிய காரியங்கள் இவைகளை செய்ய வேண்டும்.

5) லகுகணம் : - (லகு = மென்மைவாய்ந்த, ஸாத்விககுண, லேசானதன்மையன). லகுகணத்தில் [1]ஹஸ்தம், [2]அஸ்வினி, [3]பூசம், [4]அபிஜித் என்பவையும், வியாழக்கிழமையும் இடம்பெற்று-உள்ளன. இவற்றில் தேவகாரியம், சில்பகாரியம், விற்பனை, சாந்திமுகூர்த்தம், கற்பித்தல், ஆபரணம் செய்தல் ஆகியவை செய்யத்தக்கன.

6) மிருதுகணம் : - (மிருது = மென்மைவாய்ந்த தாரகைகள்). மிருதுகணத்தில் [1]மிருகசீரிஷம், [2]ரேவதி, [3]சித்திரை, [4]அனுஷம் ஆகிய நான்கும், வெள்ளிக்கிழமையும் இடம்பெற்றுஉள்ளன. இவற்றில் பாட்டுபாடுதல், புதியஆடைஅணிதல், ரதிகிரியை (கூடல்), நட்பு பூணுதல், ஆபரணங்கள் அணிதல், முதலியவை செய்யவேண்டிய காரியங்களாம்.

7) தீக்ஷ்ணகணம் : - (தீக்ஷ்ணம் = கூர்மையும், நுட்பமும் உள்ளவை). தீக்ஷ்ணகணத்தில் [1]மூலம், [2]கேட்டை, [3]ஆயில்யம் ஆகிய மூன்று நக்ஷத்திரங்களும், சனிக்கிழமையும் இடம்-பெறுவனவாம். இவற்றில் கூர்மையான ஆயுதம் உபயோகித்தல், தீயசெயல்கள், தீமைதரவல்ல ஆபிசார பிரயோகங்கள் ஆகியன செய்யத்தக்கவை.

மேலும் நக்ஷத்திரங்கள் யாவும் [1]ஊர்த்துவமுகம், [2]திர்யங்முகம், [3]அதோமுகம் என்று மூன்று வகைகளாகவும், பிரிக்கப்பட்டுஉள்ளன. இவ்விதமாக நக்ஷத்திரங்கள் யாவும் பத்து-வகைகளாகப் பிரிக்கப்பட்டுஉள்ளன.

ஊர்த்துவமுக நக்ஷத்திரங்கள் 9 : - (மேல்நோக்கிய முகமுடையவை). 1) ரோகிணி, 2) திருவாதிரை, 3) பூசம், 4) உத்திரம், 5) உத்திராடம், 6) திருவோணம், 7) அவிட்டம், 8) சதயம், 9) உத்திரட்டாதி ஆகியன. இவைகளில் பட்டாபிஷேகம், கோயில்கும்பாபிஷேகம், உத்யோகம் ஏற்பது, பந்தல் போடுவது போன்ற மேல்புற செயலுக்கு நன்று.

திரியக்முக நக்ஷத்திரங்கள் 9 : - (நாற்புறமும் சமமாக குருக்குபார்வை கொண்டவை). 1) அசுவினி, 2) மிருகசீரிஷம், 3) புனர்பூசம், 4) அஸ்தம், 5) சித்திரை, 6) சுவாதி, 7) அனுஷம், 8) கேட்டை, 9) ரேவதி ஆகியன. இவைகளில் பயிரிடுதல், வாஹனஏற்றம், பயணங்கள், நீர்-பாசனங்கள் செய்யத்தக்கவை.

அதோமுக நக்ஷத்திரங்கள் 9 : - (கீழ்நோக்குஉடையவை). 1) பரணி, 2) கார்த்திகை, 3) ஆயில்யம், 4) மகம், 5) பூரம், 6) விசாகம், 7) மூலம், 8) பூராடம், 9) பூரட்டாதி ஆகியவை. இவற்றில் கணக்குதுவங்குதல், கிணறு, குளம் வெட்டுதல், புதையல் கிழங்கு தோண்டுதல் முதலிய கீழ்நோக்கி செய்யும் செயல்கள் யாவும் செய்யத்தக்கன.

அந்த ருக்ஷம் / திருஷ்டி ரஹிதம் : - மேலும் சூரியன் இருக்கின்ற நக்ஷத்திரம் முதல் 1, 2, 3, 4, 25, 26, 27 இவை பார்வை அற்ற குருட்டு நக்ஷத்திரங்கள். இவற்றில் சுபகாரியங்கள் செய்யக்கூடாது.

ஏகாக்ஷ ருக்ஷம் / அர்த திருஷ்டிகம் : - சூரியன் இருக்கின்ற நக்ஷத்திரம் முதல் 5, 6, 7, 8, 21, 22, 23, 24. இவை ஒருகண் மட்டுமே உள்ள நக்ஷத்திரங்கள். இவைகளில் சுபகாரியங்களை செய்யலாம்.

த்விநேத்ர ருக்ஷம்/ பூரண திருஷ்டிகம் : - சூரியன் இருக்கின்ற நக்ஷத்திரம் முதல் 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20. இவை இருகண்களும் உடைய நக்ஷத்திரங்கள். இவற்றில் சுபகாரியங்களைச் செய்வது வெகுசிறப்பாகும்.

மிருத பம் (ஜீவனற்ற நக்ஷத்திரங்கள்) : - சூரியன் இருக்கும் நக்ஷத்திரம் முதல் 1, 2, 10, 19, 27 ஆவதாகஇருப்பவை. உயிரற்றநக்ஷத்திரங்கள் ஆகும். இவற்றில் சுபத்தை விலக்க வேண்டும். இவற்றை பஞ்சாங்கங்களில் தினக்குறிப்பில் காணலாம்.

அர்தஜீவ ருக்ஷம் (பாதிஜீவனுள்ள நக்ஷத்திரங்கள்) : - சூரியன் இருக்கின்ற நக்ஷத்திரம் முதல் 11, 12, 13, 14, 15, 16, 17, 18வது நக்ஷத்திரங்கள் அர்தஜீவ நக்ஷத்திரங்கள். இவற்றில் சுபகாரியங்களை செய்யலாம். இவற்றை பஞ்சாங்கத்தில் காணலாம்.

பூர்ணஜீவ ருக்ஷம் (முழுஜீவனுள்ள நக்ஷத்திரங்கள்) : -சூரியன் இருக்கின்ற நக்ஷத்திரம். முதல் 3, 4, 5, 6, 7, 8, 9 மற்றும் 20, 21, 22, 23, 24, 25, 26வது நக்ஷத்திரங்கள் பூரணஜீவ நக்ஷத்திரங்கள் ஆகும். இவற்றில் சுபகாரியங்கள் செய்வது சிறப்பாகும். சூரியன் தினமும் எந்த நக்ஷத்திரத்தில் இருக்கிறார் என்பதனை பஞ்சாங்கத்தில் கிரகங்களின் பாதசாரங்கள் எனும் குறிப்பில் எந்தமாதத்தில், எந்ததேதியில், எப்பொழுது எந்த நக்ஷத்திரத்தில் இருக்கிறார் என்று குறித்து இருப்பர். அதிலிருந்து அன்றைய நக்ஷத்திரம் வரை எண்ணி இதனை அறிக. நக்ஷத்திர பலத்தையே தாராபலம் என்று கூறி தேவையைக்கூறுவர்.

உபநயனத்திற்கு ஏற்ற நக்ஷத்திரங்கள் : - (பூணூல் = பிரம்மசூத்திரம்) உபநயனம் எனும் சடங்கானது வேதத்தைப்பயிலத் தகுதிபெறுவதன்பொருட்டு, புனிதமுவிழைநூலை முதன்முதலில் அணிவதாகிய பூணூல்போட்டுக்கொள்ளும் சுபகிரியை ஆகும். இதனை நான்கு வேதங்களைப் பயில்வோருக்கும், அவர்வர்களுக்கு உரியவற்றை அறிந்து, அதுகூடிய நன்னாளில் உபநயன சடங்கினைச்செய்திடவேண்டும். அப்பொழுதுதான், ஞானமும், பிரம்மதேஜஸ் எனும் தேக-பொலிவும் கிட்டும்.

1) ரிக்வேதியர்களின் உபநயனத்திற்கான நக்ஷத்திரங்கள் : -

மூலேஹஸ்தத்ரய ஸார்தே சைவே பூர்வாத்ரயே ததா I.
ரிக்வேதாத்யாயிநாம் சஸ்தம் மேகலாபந்தனம் புதை : (ஆச்வலாயனம்)

இவ்வசனத்தின்படி, மூலம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, ஆயில்யம், பூரம், பூராடம், பூரட்டாதி என்பவை என அறிக

2) யஜுர்வேதியர்களின் உபநயனத்திற்கான நக்ஷத்திரங்கள் : -

புஷ்யே புனர்வஸௌ பௌஷ்ணே ஹஸ்தே மைத்ரே சசாங்கபே.
த்ருவேஷுச பிரசஸ்தம் ஸ்யாத் யாஜுஷாம் மௌஞ்சிபந்தனம்.

மேற்படி வசனத்தால், பூசம், புனர்பூசம், ரேவதி, ஹஸ்தம், அனுஷம், மிருகசீரிஷம், உத்திராடம், உத்திரம், உத்திரட்டாதி, ரோகிணி என்பவைகள் என அறியவும்.

3) ஸாமவேதியர்களின் உபநயனத்திற்கான நக்ஷத்திரங்கள் :-

புஷ்ய வாஸவ ஹஸ்தா ச்வி சிவ விஷ்ணுத் தரத்ரயம்.
பிரசஸ்தம் மேகலாபந்தே வடுகம் ஸாமவேதிநாம்.

இதன்படி பூசம், கேட்டை, ஹஸ்தம், அச்வினீ, திருஆதிரை, திருஓணம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி ஆகியன ஏற்கத்தக்கனவாகும்.

4) அதர்வண வேதியர்களின் உபநயனத்திற்கான நக்ஷத்திரங்கள் :-

மிருக மைத்ரா ச்விநீ ஹஸ்த ரேவத் யதிதி வாஸவம்.
அதர்வ வேதிநாம் சஸ்தோ பகணோ அயம் விரதார்பணே.

இதன்படி மிருகசீரிஷம், அனுஷம், அசுவினீ, ஹஸ்தம், ரேவதீ, புனர்பூசம், கேட்டை (இந்திரனின்ருக்ஷம்) ஆகியனவாகும். இவற்றில் கீழ்நோக்குஉடைய அதோமுக நக்ஷத்திரங்களை ஆச்வலாயனர் எடுத்திருப்பதால் அக்காலத்தில் நக்ஷத்திரபேதம் பின்பற்றப்படவில்லையோ எனக்கருதிட வாய்ப்பு உள்ளது.

தாரா சந்திரானுகூலேஷு கிரஹாப்தேஷு சுபேஷ்வபி.
புனர்வஸௌ சோபநீத: புனஸ் ஸம்ஸ்காரமர்ஹதி. (ராஜமார்த்தாண்டம்)

இதன்படி நக்ஷத்திரம், கிரஹம் யாவும் சுபமாக அமையப்பெற்று இருப்பினும், புனர்பூச நக்ஷத்திரத்தில் உபநயனம் செய்துகொண்டவன் மீண்டும் சுத்திகரிக்கத்தக்கவன் என்று மேற்படி ராஜமார்த்தாண்டம் எனும் நூலில் கூறப்பட்டு, புனர்பூசநக்ஷத்திரம் உபநயனகிரியைக்கு விலக்கப்பட்டு இருப்பினும், வசிஷ்டர் மற்றும் நாரத மகரிஷிகளின் நூல்களில் அந்த புனர்பூச- நக்ஷத்திரத்திற்கு விலக்களிக்கப்படாததாலும், பாரததேசத்தில் தென்னாட்டுவழக்கமான தக்ஷிணாசாரமுறையில் புனர்வசுநக்ஷத்திரம் ஏற்புடையதாக எடுக்கப்பட்டிருப்பினும், புனர்பூசம், உபநயனத்திற்கு ஏற்றதே என்று நாமும் ஏற்கவேண்டிஉள்ளது. இது தேவமாதாவான அதிதியின் திருநக்ஷத்திரம்ஆகும்.

<u>விவாஹத்திற்குஏற்ற சிறப்புநக்ஷத்திரம் :-</u> விவாஹவிஷயத்தில் ஆபஸ்தம்பர் ஜோதிடநூல்களில் கூறிய விஷயங்களை ஏற்றுக்கொண்டு அதில் சிறப்புக்கூற்றாக சுவாதியில் பெண்ணை திருமணம் செய்துகொடுத்தால் தகப்பன் வீட்டிற்குத்திரும்பாமல் கணவன் வீட்டிலேயே நிரந்தரமாக சந்தோஷமாக இருப்பாள் என்று தனிச்சிறப்பினைக் குறிப்பிட்டுக்கூறி இருக்கிறார். இதனை ஹயாம் காமயேத துஹிதரம் பிரியாஸ்யாதிதி தாம் நிஷ்ட்டியாயாம் தத்யாத் பிரியைவ பவதி நைவது புனராகச்சதீதி பிராம்மணாவே க்ஷணவிதி" என்று கூறிஇருக்கிறார். (நிஷ்ட்யா = சுவாதீ). இவற்றால் நக்ஷத்திரங்களின் காலமகிமைகளையும், தனிச்சிறப்புகளையும் நன்கு அறியலாம்.

நக்ஷத்திரசாந்திகள்

இனி நக்ஷத்திரங்களின்தனிச்சிறப்புகளையும், அவற்றிற்குரிய, தெய்வங்களையும், அவர்களை ஆராதித்து, மகிழ்விக்கும் சாந்திவேள்விமுறைகளையும் பற்றி சுருக்கமாக காண்போம்.

<u>வேதத்தில் நக்ஷத்திரஇஷ்டி : -</u> சித்திரைநக்ஷத்திரத்தில் செய்யவேண்டிய யாகம் "ஸாங்கிர ஹண்யேஷ்டி" என்றும், சித்திராநக்ஷத்ரம் பவதி. சித்ரம் வா ஏதத்கர்மா யதச்வமேதஸ் ஸமிருத்யை" என்றும் கூறப்பட்டுஉள்ளதால் அறியலாம்.

<u>வேதத்தில் கூறப்படும் நக்ஷத்திர சிறப்புகள் : -</u> வருணதேவருடையதும், நூறு நக்ஷத்திர-மண்டலமாகி சிறந்துவிளங்குவதுமான சதயநக்ஷத்திரமானது, நீண்டஆயுளைத் தரக்கூடியது. இதனை யஜுர்வேதம் "க்ஷத்ரஸ்யராஜா வருணோ அதிராஜ: நக்ஷத்ராணாம் சதபிஷக் வஸிஷ்ட: தௌதேவேபய: கிருனுதோ தீர்க்கமாயு:" என்று கூறுகிறது. மேலும் ரேவதீ-நக்ஷத்திரதேவதையான பூஷா என்பது நமது பசுக்கள், குதிரை மற்றும் வண்டி இவற்றையும், யஜமானரையும், பின்தொடர்ந்து வந்து காப்பாற்றுவதாக வேதம் கூறுகிறது. இதனை வேதம் க்ஷுத்ரான் பசூன்ரக்ஷது ரேவதீந:. காவோ நோ அச்வான் அன்வேதுபூஷா. அன்னம் ரக்ஷந்தௌ பகுதாவிரூபம். வாஜம் ஸநுதாம் யஜமானாய யக்ஞம்: என்கிறது. மேலும் கேட்டைநக்ஷத்திரத்திலே இந்திரன் வீருத்திராசுரனைக்கொன்றார், உலகத்தைக்காத்தார் என்ற வரலாற்றுசிறப்பாக, வேதத்தில் இந்திரோ ஜ்யேஷ்டா மனுநக்ஷத்ரமேதி. யஸ்மின் விருத்ரம் விருத்ரதூர்யே ததார" என்று விருத்ராசுரவதம் கூறப்படுகிறது. வேதகாலத்தில் நக்ஷத்ரங்களைப் பகுக்கும்விதம் காணப்படவில்லை. மேலும், வேதத்தில் பஞ்சாங்க செய்திகளில் குறிப்பாக வாரம், யோகம், கரணங்கள் இம்மூன்றைப் பற்றிய குறிப்புகள் அதிகமாக காணப்பட- வில்லை. திதிநக்ஷத்திரங்களை வைத்தே இஷ்டி, யாகம், யக்ஞம் முதலியவற்றின் கால-நிர்தாரணம் (நிச்சயம்) செய்யப்பட்டது. ராகா என்று பௌர்ணமியும், குஹூ சினீவாலீ முதலான பெயர்களால் அமாவாசையும், திதிகளில் சிறப்பாக வேதத்தில் குறிப்பிடப்பட்டுஉள்ளன.

<u>நக்ஷத்திரங்களின் தெய்வீகரூபம் (தேவதாஸ்வரூபம்) : -</u> நக்ஷத்திரங்களின் அதிதேவதைகள் சிறப்பாக வேதத்திலும், ஆகமங்களிலும், ஒரேவகையில் கூறப்பட்டுஉள்ளது. மகரிஷிகள்பலரும், சுருதிகளையும், ஸ்மிருதிகளையும் பின்பற்றி கிருஹ்யசூத்ரங்களையும், அறங்களை போதிக்கும் சிரௌதசூத்திரங்களையும், வழிபாட்டுபொதுவிதிகளைக்கூறும் கல்ப-சூத்திரங்களையும் படைத்தனர். குறிப்பாக போதாயனர், ஆபஸ்தம்பர், பராசரர், சௌனகர் முதலான மகரிஷிகள் இல்லறத்தவர்களுக்கு உரியகடமைகளாக, தேவபித்ருகாரியங்களிலிருந்து நாம் விலகாதிருக்க பலசாந்திகளையும், வாழ்வியல் நெறிமுறைகளையும் எடுத்துக்கூறி உள்ளனர். கிரஹங்களின் குறிப்பிட்ட

காலசஞ்சார அமைப்பிற்குஏற்ப, அவரவர்களுக்கு, ஆகாத இடத்தில் கிரகங்கள்பெயர்ந்து, வரும்காலத்திலும், நமது பிறந்தநாட்களில், பிறந்த நக்ஷத்திரத்திலும், நக்ஷத்திரசாந்தியை செய்யும் முறையைக் கூறிஉள்ளனர். ஆகமங்களிலும் நவகிரஹபூஜையுடன், நக்ஷத்திரபூசையும், ஹோமமும் இடம்பெற்று உள்ளன. இவற்றில் 28 நக்ஷத்திரங்களுக்கும், தேவதாஸ்வரூபமானது, தியானித்து பூசிப்பதற்கு என்று கூறப்பட்டு உள்ளது. இனி அவற்றைப்பற்றி சுருக்கமாகக் காண்போம். (1) கிருத்திகைக்கு ஆட்டு-வாஹநத்தில் அமர்ந்துள்ள அக்னிபகவான் அதிதேவதை ஆவார். (2) ரோஹிணிக்கு தேவதை பிரஜாபதியும், (3) மிருகசீரிஷத்திற்குவ தேவதை பத்துகுதிரைபூட்டிய தேரில்உள்ள சந்திரனும், (4) திருவாதிரை நக்ஷத்திரத்திற்கு தேவதை விருஷபவாஹனத்தின்மீது உள்ள ருத்திரனும், (5) புனர்பூசத்திற்கு தேவதை அதிதி என்ற தேவமாதாவும், (6) பூசத்திற்கு தேவதை தேவகுருவான பிருஹஸ்பதியும், (7) ஆயில்ய நக்ஷத்திரத்திற்கு தேவதை ஸர்பராஜனும், (8) மகத்திற்கு தேவதை பித்ருக்களும், (9) பூரத்திற்கு தேவதை தேர்மீதுள்ள அர்யமா என்பவரும், (10) உத்தரத்திற்கு தேவதை தேர்மீதுள்ள பகதேவரும், (11) ஹஸ்தத்திற்கு தேவதை ஏழுகுதிரைபூட்டிய தேரில்உள்ள ஸவிதா எனும் சூரியபகவானும், (12) சித்திரைக்கு தேவதை தேரின்மீதுள்ள துவஷ்டா என்பவரும், (13) சுவாதீநக்ஷத்திரத்திற்கு தேவதை வாயுபகவானும், (14) விசாகத்திற்கு தேவதை தேரின்மீதுள்ள இந்திரன், அக்னிஇருவரும், (15) அனுஷத்திற்கு தேவதை பத்மாஸனத்திலுள்ள மித்ரர் என்பவரும், (16) கேட்டைக்கு தேவதை யானைமீத-மர்ந்துள்ள தேவேந்திரனும், (17) மூலத்திற்கு தேவைத ராக்ஷசேஸ்வரரான, உக்ரரூபியான, நிருதிதேவரும், (18) பூராடத்திற்கு தேவதை கடல்அரசனாகிய ஆபதேவரும், (19) உத்திராத்திற்கு தேவதை விச்வதேவர்களான வைச்வதேவர்களும், (20) அபிஜித்-நக்ஷத்திரத்திற்கு தேவதை வேதரூபியான பிரம்மாவும், (21) திருவோணத்திற்கு தேவதை கருடவாஹனத்தின் மீதமர்ந்த விஷ்ணுவும், (22) அவிட்டத்திற்கு தேவதை அஷ்டவசுக்களும், (23) சதயத்திற்கு தேவதை ஜலாதிபதியான வருணதேவரும், (24) பூரட்டாதிக்கு தேவதை ஒரேபாதமுள்ள அஜர் எனும் ஏகபாதஅஜருத்ரரும், (25) உத்திரட்டாதிக்கு தேவதை சங்குசக்ரதரித்து சேஷவாஹனரான அஹிர்புத்னியரும், (26) ரேவதிக்கு தேவதை சிம்மாசனத்திலிருக்கும் பூஷதேவரும், (27) அசுவினிக்கு தேவதை குதிரைமீதமர்ந்த தேவமருத்துவர்களான அச்வினீதேவர்கள் இரட்டையரும், (28) பரணிக்கு தேவதை எருமை-வாஹனத்தின் மீதமர்ந்துள்ள யமதருமராஜரும் முறையே நக்ஷத்திரங்களுக்கு அதிதேவதை ஆவார்கள். மேற்கண்ட 28 நக்ஷத்திரதேவதை களைப்பற்றி, அவர்களின் உடல் நிறம், சிகை அமைப்பு, ஆடைநிறம், அணிகலன்கள், தோற்றம், குணம், சிறப்புத்தொழில், அங்கசிறப்பு அடையாளங்கள், வாஹனங்கள் முதலான திருவுருவத்தொடர்பானவற்றை பூஜாபத்ததிகளில் காணப்படும் ரூபதியான சுலோகங்கள் வாயிலாக விரிவாக அறியலாம்

நக்ஷத்திரங்களின் சாந்திபூஜாமுறை : - (பூஜாபலிஹோமதானமுறை) : - தினமும் ஒரு நக்ஷத்திரம் காலையில் வியாபித்து, அதிகநேரம் இருக்கும். அவ்விதம் அதிகநேரம் இருக்கிற நக்ஷத்திரத்தில் அந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவர்களும், விரும்புகிறவர்களும், அந்த நக்ஷத்திர சாந்தியை செய்து கொள்ளவேண்டும். அன்றையதினத்தில் ஆசாரியரையும், வேதபிராமணர்-களையும் அழைத்து, நியமித்து, தானியங்களை வாழைஇலைமீதில் பரப்பி, ஸ்தண்டிலம் அமைத்து, அதன்மீது நீர்நிறைந்த கலசத்தை வைத்து, மாவிலை, தேங்காய், தர்பை, பூமாலை இவற்றால் அலங்கரித்து அந்தசாந்திகலசதீர்த்தத்தில் ஐந்துவகைகளில் [1]மண்வகை, [2]மரப்பட்டைவகை, [3]மூலிகைவகை, [4]உலோகவகை, [5]ரத்தினவகை, முதலியவைகளையும், மணம்மிகுந்த ஏலாதிபரிமளதீர்த்ததிரவியங்களையும் சேர்த்து, தயார்நிலையில்வைத்து, நக்ஷத்திரத்திற்கு உரியதேவதையை ஆவாஹனம்செய்து, பதினாறுவகையான உபசரிப்புகளால் பூசித்து, பின்பு அதனைத்தொட்டு கொண்டு வேதியர்கள் வேதத்தின் சாந்திமந்திரங்களையும், நக்ஷத்திரமந்திரங்களையும், ஜபம் செய்து மந்திரிக்கவேண்டும். முடிவில் அப்புனிதநீரை, வேதியர்கள் யஜமானருக்கு தெளிப்பதாலும், கர்த்தாபருகுவதாலும், அவர் நீராடுவதாலும், சாந்திசெய்துகொண்டவர் அனைத்துபாவங்களும் நீங்கியவராய், புனிதராய் விரும்பிய பயனைப்-பெறுவார். அப்பொழுது அந்தஆசாரியர் மற்றும் வேதியர்களுக்கு உரியமுறையில் சிறப்பான உணவு அளித்து, பிறகு உரிய தானங்களை வழங்குவதால், நக்ஷத்திரதோஷம் மற்றும் கிரஹதோஷங்கள் நீங்கப்பெற்று, ஸர்வசாந்தியும் ஏற்படும். இதேமுறையில் செய்யவேண்டிய ஒவ்வொரு சாந்தியிலும் ஒவ்வொரு நக்ஷத்திரத்திற்கும் வெவ்வேறானபூசைப்பொருட்களும், நிவேதனவகையும், ஹோமதிரவியமும், சிறப்புஅன்னபலிமுறையும், உரியதானமும், தனித்-தனியாக **பூஜாபத்ததி நூல்களில்** கூறப்படுகின்றன. அவற்றை இனி சுருக்கமாகக் காண்போம். (1) அசுவினிக்கு சாந்திபூஜையின்திரவியங்களாக சந்தனம், கருநெய்தல்பூ, குங்குலியதூபம், பசும்பால், லட்டுநிவேதனம், சர்க்கரைப்பொங்கலால் பலிதானம் கூறப்படுகிறது. இவ்வாறே (2) பரணிக்கு : அகில், சந்தனம், அலரிப்பூ, குக்குளுதூபம், சர்க்கரைப்பொங்கல் நிவேதனம், எள்ளுஅன்னபலிதானமும் கூறப்படும். (3) கிருத்திகைக்கு சந்தனத்துடன் யூதிகா- புஷ்பம் நெய்கலந்த குங்குலியதூபம், எள்ளுஉளுந்துசாதம், வடகம், நெய்நிவேதனம், பாயசான்ன- பலிதானமும் கூறப்பட்டதாகஆகும். (4) ரோஹினிக்கு, சந்தனத்துடன் தாமரைப்பூ, தசாங்க திரவியதூபம், சர்க்கரைப்பொங்கல் நிவேதனம், பாலன்னத்தால்பலியும்ஏற்றதாம். (5) மிருகசீரிஷத்திற்கு சந்தனத்துடன்கூடிய அல்லிப்பூ, தாசங்கதூபம், பாயசான்னம், அதிரச- நிவேதனம், சர்க்கரைதயிர்கலந்தஅன்னபலிதானமும் உரியதாகும். (6) திருவாதிரைக்கு சந்தனத்துடன், வாசனைமலர்கள், தசாங்கதூபம், நெய்தேன்கலந்தசாதம்நிவேதனம், தயிரன்ன-பலிதானம் செய்யத்தக்கதாகும். (7) புனர்பூசத்திற்கு குங்குமப்பூகலந்த சந்தனத்துடன் சாமந்திப்பூவும், மலயஜசந்தனதூபமும், நெய்சாதநிவேதனமும், மஞ்சள்கிழங்குபலியும், செய்யத்-தக்கதாகும். (8) பூசத்திற்கு குங்குமசந்தனம், நீர்த்தாமரை, சந்தன கட்டைதூபம், நெய்பாயஸ-நிவேதனம்,

தயிர்வெல்லம்சேர்த்த சுத்தான்னபலியும் செய்யத்தக்கதாகும். (9) ஆயில்யத்திற்கு, அகருசந்தனத்துடன் அகஸ்தியபுஷ்பம், நெய்கலந்த குக்குளுதூபம், பால்நெய்அன்னநிவேதனம், தயிர்சாதபலிதானம் இவை செய்யத்தக்கது. (10) மகத்திற்கு, சந்தனம், செண்பகப்பூ, நெய்-குக்குலுதூபம், நெய்கலந்தஅரிசிசாத நிவேதனம், எள்ளுஅன்னபலிதானம் செய்யத்தக்கது ஆகும். (11) பூரத்திற்கு, சந்தனத்துடன், ஜாதீமாலதீபுஷ்பம், பில்வதூபம், நெய்அதிரச நிவேதனம், பாயஸான்னபலிதானம் செய்யத்தக்கது. (12) உத்திரத்திற்கு, குங்குமகற்பூரம் கலந்தசந்தனமும், (சிறுநாகப்பூ), லகுபுஷ்பமும், நெய்கலந்த குங்குலியதூபமும், நெய்பாயசமும், சாலியன்னபலிதானமும் செய்யத்தக்கது. (13) ஹஸ்தத்திற்கு, சாந்தியில், செஞ்சந்தனம், தாமரைப்பூசந்தனகுக்குலுதூபம், நெய்பாயஸநிவேதனம், இலுப்பைப்பூ, எள்ளு, அருகம்புல், கேசரிஅன்னபலிதானம் செய்யத்தக்கது. (14) சித்திரைக்கு, அகில்சந்தனசாந்துடன், பலநிற மலர்கள், குக்குலுதூபம், கொழுக்கட்டை, சித்ரான்னம்நிவேதனம், நெய்சாதபலியும் செய்யத்-தக்கது. (15) சுவாதிக்கு, காரகில்சந்தனமும், மருவும், சந்தனதூபமும், நெய்பாயஸநிவேதனமும், பலியும் செய்யத்தக்கது. (16) விசாகத்திற்கு, சந்தனம், தாமரைப்பூ, தேவதாருதூபம், நெய்பாயஸம்சித்ரான்னபலி இவைசெய்யவேண்டியது. (17) அனுஷத்திற்கு, குங்குமசந்தனம், வெண்தாமரைப்பூ, சந்தனபொடிதூபம், நெய்பாயஸகிழங்குவகைநிவேதனம், தேன்சர்க்கரை கலந்தபாயஸான்னபலிதானம் செய்யத்தக்கவை. (18) கேட்டைக்கு, சாந்தியில், சந்தன-சாந்துடன் தாமரைப்பூவும், பச்சைக்கற்பூரதூபம், சித்ரான்னம், (கருணைகிழங்கு) சூரணகந்த-நிவேதனம், தயிர்சாதபலியும் செய்யத்தக்கது. (19) மூலத்திற்கு, காரகில்சந்தனத்துடன் கருநெய்தல்பூவும், காரகில்தூபமும், உளுந்துசாதம், வடை, நிவேதனமும், பலியும் செய்யத்-தக்கவை. (20) பூராடத்திற்கு, சந்தனம் தாமரைப்பூ, மலயஜதூபம், நெய்பாயஸநிவேதனமும், ஜீரகசாதபலியும் செய்யத்தக்கது. (21) உத்திராடத்திற்கு, சந்தனம், மல்லிகை கற்பூரகுக்குலு-தூபம், அறுசுவைஉணவுநிவேதனம், பாயஸான்னபலிதானமும் செய்யத்தக்கது. (22) திருவோணத்திற்கு, மலயாகருசாந்தும், செந்தாமரையும், குக்குலுதூபம், நெய்பாயஸம், வெல்லஅப்பம், தேன்நெய்சேர்ந்தஅன்னபலி-தானம் செய்யத்தக்கவை. (23) அவிட்டத்திற்கு, மலயாகருசந்தனம், நீலோத்பலம், தாமரைப்பூ, தசாங்கதிரவியதூபம், நெய்போளிநிவேதனம், சித்ரான்னபலியும் செய்யத்தக்கது. (24) சதயத்திற்கு, சந்தனமும், தாமரையும், தசாங்கதூபமும், சர்க்கரைப்பொங்கல் நிவேதனமும், பாயசான்னபலிதானமும் ஏற்றது. (25) பூரட்டாதிக்கு, அகருசாந்தும், பலநிறமலர்களும், தூபதீபமும், சித்ரான்னமோதகநிவேதனமும், நெய்சாதபலியும் ஏற்றதாகும். (26) உத்திராடதிக்கு, காரகில்சாந்துடன் மருக்கொழுந்துபுஷ்பமும், சந்தனாகரு-தூபம், நெய்கலந்தபாயஸான்ன நிவேதனம், பலிதானமும் செய்யத்தக்கது. (27) ரேவதிக்கு, செஞ்சந்தனம், மந்தாரபுஷ்பம், குங்குலியதூபம், நெய்பாயஸான்ன நிவேதனமும், பலிதானமும் செய்யவேண்டியது.

இவ்வாறாக உரியபொருட்களை சிறப்பாக அதிகசிரத்தையோடுசேமித்து, முறையே அர்ப்பணித்தால் விரும்பிய பயனும், தோஷசாந்தியும் ஏற்படுவது உறுதி ஆகும்.

<u>நக்ஷத்திரவிரதபூசையின விசேஷதானம்</u> : - நாரதமகரிஷி தேவகிக்கு கூறிய நக்ஷத்திரங்களின் தானவகைகளின்பயனை இனி காண்போம். (1) கிருத்திகையில் பிராம்மண-போஜனத்தால் உத்தமலோகமும், (2) ரோகினியில் காய்கறிகளின் தானத்தால் கடன்நீக்கமும், (3) மிருகசீரிஷத்தில் கன்றுடன்கூடிய கரவைப்பசுவின் தானத்தால் சுவர்கலோகமும், (4) ஆதிரையில் எள்ளுதானத்தால் சங்கடநீக்கமும், ஆபத்திலிருந்துவிடுதலையும், (5) புனர்-பூசத்தில் அன்னதானம் செய்வதால் புகழும், உயர்குலப்பிறப்பும், (6) பூசத்தில் சுவர்ணாபரண தானம் செய்வதால் காணா உலகங்களைக் காணுதலும், (7) ஆயில்யத்தில் வெள்ளி அல்லது எருதுதானம் செய்வதால் பயநிவிருத்தியும், (8) மகத்தில் பெரியபாத்திரத்தில் எள்ளைதானம் செய்வதால் புத்திரனையும், மறுமையில் பரலோகத்தையும், (9) பூரத்தில் பக்ஷணத்துடன் கூடிய விருந்துணவு அளித்தலால் சௌபாக்கியத்தையும், (10) உத்திரத்தில் நெய்யும்பாலும்சேர்ந்த அன்னதானத்தால் சுவர்க்கத்தையும், (11) ஹஸ்தத்தில் குதிரைகளுடன்கூடிய தேரைதானம் செய்வதால் புண்ணியஉலகத்தையும், (12) சித்திரையில் சந்தனகட்டை அல்லது காளைமாட்டு தானத்தால் அப்ஸரஸ்திரீபோகத்தையும், (13) சுவாதியில் தனக்குவிருப்பமான பொருளின் தானத்தால் அழியாப்புகழையும், (14) விசாகத்தில் மாடுடன்கூடியவண்டி அல்லது கன்றுடன் கூடிய கரவைப்பசுவை தானம்அளிப்பதால் பித்ருபிரீதியையும், (15) அனுஷத்தில் வஸ்திர-தானத்தால் சுவர்க்கவாசத்தையும், (16) கேட்டையில் காய்கறி, கிழங்குகளின்தானத்தால் இஷ்டசித்தியும், நற்கதியையும், (17) மூலத்தில் கந்தமூபலபலதானத்தால் பித்ருப்ரீதி நற்கதி-களையும், (18) பூரத்தில் தயிர்பாத்ரதானத்தால் தானத்தையும், (19) உத்திராடத்தில் பலகாரத்துடன்கூடிய அன்னதானத்தால் இஷ்டசித்தியையும், (20) அபிஜித்தில் தேன்நெய்பால் இவற்றின் தானத்தால் சுவர்க்கத்தையும், (21) ஓணத்தில் வேஷ்டிகம்பளதானத்தால்விமானத்தில்சுவர்க்கத்தையும், (22) அவிட்டத்தில் வண்டிமாடுபசு இவற்றின் தானத்தால் சாம்ராஜ்யத்தையும், (23) சதயத்தில் சுகந்தவாசனாதிரவியதானத்தால் மேலுலக அப்ஸரஸ்திரீ-போகத்தையும், (24) பூரட்டாதியில் மொச்சைதானியதானத்தால் மேலுலக சுகபோகத்தையும், (25) உத்திரட்டாதியில் பழவகைகளுடன் அன்னதானத்தால் சுவர்கபோகமும், (26) ரேவதியில் வெங்கலபாத்திரத்தில் செய்யப்படும் (க்ஷீர) பால்தானத்தால் மறுமையில் பரலோகசுகமும், (27) அசுவினியில் குதிரையுடன்கூடியதேரை, தானம்செய்வதால், சதுரங்கசேனையுடன் கூடிய செல்வமும், (28) பரணியில் (எள்ளுமயபசு) திலதேனுதானத்தால் கோஸமிருத்தியுடன் சுவர்க்கத்தையும் அடைவார்கள் என்று நாரதரின் உபதேசத்தால் அறியமுடிகிறது. இவற்றை மிகுந்தசிரத்தையுடன், தகுந்த, வேதமறிந்த பிராமணருக்கு தானம்செய்து, உரியபயனை அடையலாம். மேலும், அவரவர்கள் தங்களது பிறந்தநக்ஷத்திரத்தில் மங்களஸ்நானம் செய்து, அன்றைய தினத்தில் விரதம், பூஜை,

சாந்திஹோமம், தானம் ஏழைஎளியோருக்கான அளவற்றதான, பூரிதானம், ஆலயவழிபாடு, தத்தமதுநக்ஷத்திரத்திற்கு கூறப்பட்டுள்ள, திவ்ய-விருட்சமான குறிப்பிட்ட நக்ஷத்திரமரத்தை வலம்வந்து வணங்குதல், அன்றையதினத்தில் தாய், தந்தை, குரு, தெய்வம், வேதியர்கள் இவர்களை வணங்குதல் இவற்றை செய்ய- வேண்டும். இதனால் அவர்கள் நீண்டஆயுளையும், பெரும்புண்ணியத்தையும், வாழ்வில் மேன்மையையும் பெறுவார்கள். அனைவரும் தமது பிறந்தநக்ஷத்திரத்தன்று தவறாமல் ஆலய வழிபாடு செய்யவும்.

நாம் வழக்கமாகக்கொண்டு, தினமும் காலதேவதைகளுக்கு வணக்கம் செலுத்திட இந்த பஞ்சாங்க பயனைத்தரும் சுலோகத்தை ஒருமுறை கூறுவோமாக. நிறைவாக இவ்விதம் நமக்கு புண்ணியத்தையும், அரியபயன்களையும் கொடுக்கவல்ல தான, புண்ணியநக்ஷத்திரங்களின் சாந்தியினை அனைவரும் ஆண்டுதோறும் ஒருமுறையேனும் செய்துகொண்டு, யாவரும் நூறாண்டுகாலம் பூரணஆயுளுடன், இன்புற்று வளமுடன் வாழ்ந்து, இகபரசுகத்தை இனிதே அடைவோமாக.பயன்பெற்று உய்வோமாக.

“யுஸ்மரேத் ஸாம்ப மீசாநம் ஸ பாஹ்யாப் யந்தரச்சுசி:” என்பதால் ஹரஹர சிவசிவ என்று நாமஸங்கீர்த்தனம் செய்து புனிதமடைவோம். ஓம் ஹரஹர நமப் பார்வதீபதயே ஹரஹர மஹாதேவ! சிவசிவ சம்போ சங்கரமஹாதேவ! ஓம் சாந்திஸ் சாந்திஸ் சாந்தி :

திதிச்சம்புஸ் ததாவார: நக்ஷத்ரம் சம்புரேவச.
யோகச்ச கரணம் சைவ ஸர்வம் சிவமயம் ஜகத்.

ஸ்ரீகல்யாண குணாவஹம் ரிபுஹரம் துஸ்சுவப்ன தோஷாபஹம்.
கங்காஸ்நான விசேஷபுண்ய பலதம் கோதான துல்யம் நிருணாம்.
ஆயுர் விருத்தித முத்தமம் சுபகரம் ஸௌபாக்ய ஸம்பத்பிரதம்.
நாநாகர்மசு ஸாதனம் ஸமுதிதம் பஞ்சாங்க மாகர்ணியதாம்.

(பஞ்சாங்கசிரவணபலம்)

----------*********-----------

உ

<u>நமச்சிவாப்யாம்</u>

ஆலய தேவதா பிரதிஷ்டா கிரியாவளி

(கோயில் தெய்வத்தின் கும்பாபிஷேக கிரியைகள்)

கட்டுரையாசிரியர்
சிவாகம வித்யாபாரதி. மீமாம்ஸா சிரோமணி.
(காஞ்சிதிருமடத்தின்) சைவாகம வித்யா ப்ரவீணர்.
சிவஸ்ரீ. பட்டம். தி. கார்த்திகேய சிவாசாரியர் M.A.,
ஸ்ரீ அண்ணாமலையார் திருக்கோயில் அர்ச்சகம், திருவண்ணாமலை.

ஏகாகார ஸமஸ்தலோக ஜனகம் ஹேமாத்ரி பாணாஸனம்
நாகாவாஸ கிரீட குண்டலதரம் நாகேந்த்ர பூஷோஜ்வலம்.
ராகாசந்த்ர ஸமானகாந்தி வதனம் ராஜீவ நேத்ரார்ச்சிதம்.
சோகாரண்ய தவானலம் சுபகரம் சோணாத்ரிநாதம் பஜே.
ஆகமமாகி நின்றண்ணிப்பான் தாள் வாழ்க.

"சிவேநஸ்தாபிதம் சைவம்" எனும் ஸ்ரீமத்காரணாகம வசனத்தின்படி சிவனால் நிறுவப்பட்டது சைவம். சிவபெருமானின் திருக்கருணை, பேராற்றலின் தோற்றத்தின் பேறறிவைத்தருவது சிவாகமம். இதன் உட்பிரிவுகள் பல. இதில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்களில் நன்நெறிகள் கூறப்படுகின்றன. இவற்றில் கிரியாபாதத்தில் கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உத்ஸவாந்தம், உத்ஸவாதி பிராயச்சித்தாந்தம் என முப்பகுதிகளாக கிரியைகள் முகூர்த்தநிர்ணயம் முதலாக, இங்கு பிரதிஷ்டை முதல் தொடரப்படும் நித்திய பூஜாரம்பம் வரையிலான கிரியைகள் 141 கர்மாக்களாக வரிசைப்படுத்தி கூறப்படுகிறது. இதனை, எனது குருநாதர், வி. சோமசேகர சிவாசாரியார் சென்னை சைவாகம கலாசார வித்யாகேந்திரத்தின் முதல்வர் அவர்கள் "ஆலய தேவதா பிரதிஷ்டா கிரியாவளி விவரணம்" என்று பேச்சுத்தலைப்பாக எனக்குஅளித்திட, 24.04.2011 ஞாயிற்றுக்-கிழமை அன்று கரவருடம் சித்திரை மாதம் 11ம் நாளன்று, தெய்வத்திரு தி.ஷ. ஸாம்பமூர்த்தி சிவாசாரியார் அவர்களின் திருக்குமாரர்களால் நடத்தப்படும் சிவாசாரிய டிரஸ்ட் மூலம் சைவாகம கலாசார வித்யாகேந்திரத்தின் சித்தாந்த பிரவசனகோஷ்டத்தில் நடைபெற்ற சைவாகம சிறப்புச்சொற்பொழிவின்போது, திருவண்ணாமலை பட்டம். தி. கார்த்திகேய சிவாசாரியார் ஆகிய அடியேனின் பேச்சாக அமைந்த மேற்படி பொருள் பற்றிய சிவாகம கருத்துரையை இனி கட்டுரையாக காண்போம்.

ஓர் ஆலயத்தை புதிதாக நிர்மாணம் செய்து அதில் புதிய பிம்பத்தை அல்லது லிங்கத்தை ஸ்தாபிதம் செய்வதற்கு பலசம்ஸ்காரங்களைச் செய்யவேண்டும் என்று நமது சைவாகம

நூல்கள் கூறுகின்றன. இதனை ஸ்ரீமத்காமிகாகமம் "மந்திரம் விநா கிரியா நாஸ்தி கர்ஷ்ணாதி அர்சனாந்திகா" என்றுகூறி கிரியைகள் யாவும் மந்திரத்துடன் செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திஉள்ளது. புதிய ஆலயத்தை நிர்மாணிக்க பலகிரியைகளைக் கூறுவதுடன் சிறப்பாக அவ்விடத்தில்முதலில் பிரவேசபலி, ரசேஷாக்னம், வாஸ்துசாந்தி, கிராமசாந்தி போன்றவற்றைச்செய்து, அங்கிருந்த தீயசக்திகளை அகற்றியபின்பு கர்ஷணம் என்கிற ஆலயபூமியை உழுதல் அங்கு பிராம்மணபோஜனம், பூமிபூஜை, போன்றவற்றை அவ்விடத்தில் செய்து அவ்விடத்தை புனிதமாய் சுத்திகரித்துப், பின்பு அங்குமுறைப்படி ஆலயத்தை அமைத்து அதில் லிங்கபிம்பாதிகளில் தேவதாசான்னித்யம் குறைவில்லாமல் என்றும் நிலைத்துநிற்கவேண்டும் என்பதற்காக தேவதாபிரதிஷ்டை என்பதைச்செய்யவேண்டும். இந்த பிரதிஷ்டையே மஹாகும்பாபிஷேகம் எனப்படுகிறது. "பிரதி பிம்பஸ்திதம் மந்திரம் பிரதிஷ்டேதி பிரகீர்த்திதம்" எனும் அஜிதாகமவசனத்தின்படி மந்திரத்தால்செய்யப்படுவது, லிங்காதியில் ஜீவநியாஸமாக நிலைத்துஇருக்குமாறு செய்யப்படுவதே பிரதிஷ்டை எனப்படுவதாகும்.

பிரதிஷ்டை என்பது ஸர்வவியாபியாய்இருக்கும் பகவானை லோகஅனுக்ரஹத்தின் பொருட்டு ஒரு லிங்கத்திலோ, பிம்பத்திலோ, வெகுகாலத்திற்கு நிலைத்து இருக்கச்செய்வது ஆகும். இத்தகைய பிரதிஷ்டைக்குரிய கிரியைகளை, பொதுவாகசுருக்கி பதினெட்டு கிரியை-களில் அடக்கி, பிரதிஷ்டா அஷ்டாதச கிரியாவளி என்பதாக மிருத்ஸங்கிரஹணம் முதலாக திவ்யவிவாஹம் வரையிலாக பதினெட்டு கிரியைகள் கூறப்படுகின்றன. அவை முறையே 1) மிருத்ஸங்கிரஹணம், 2) அங்குரார்ப்பணம், 3) ரத்தின நியாஸம், 4) நயனோன்- மீலனம், 5) பிரதிமாசுத்தி, 6) கிராமபிரதக்ஷிணம், 7) ஜலாதிவாஸம், 8) ரக்ஷாபந்தனம், 9) வாஸ்துபூஜை, 10) பஞ்சகவ்யம், 11) யாகமண்டபஸம்ஸ்காரம், 12) சயனாதிவாஸம் 13) ஹோமகர்மம், 14) ஸ்தாபனம், 15) அஷ்டபந்தனம், 16) மந்திரபூஜா, 17) நாமகரணம், 18) விவாஹம் ஆகியன ஆகும். இதற்கு சிவாகமசான்று

அதவக்ஷ்யே விசேஷேன லிங்கஸ்தாபன முத்தமம்.
அஷ்டாதச விதானேந பிரதிஷ்டா விதி ருச்யதே.
மிருத்ஸம் கிரஹணமாரப்ய த்விதீய மங்குரார்ப்பணம்.
ரத்னநியாஸம் த்ருதீயம் து நயனோன்மீலனம் சது:
பஞ்சமம் பிரதமாசுத்தி: ஷஷ்டம் கிராமபிரதக்ஷிணம்.
ஜலாதிவாஸனம் ஸப்த ரக்ஷாபந்தன மஷ்டமம்.
நவமம் வாஸ்து பூஜாச தசமம் பஞ்ச கவ்யகம்.
ருத்ரம் பண்டப ஸம்ஸ்காரம் துவாதசம் சயனம்துவா.
ஹோமகர்ம த்ரயோதச்யம் ஸ்தாபனம்ச சதுர்தசம்.
திதிஸங்கியம் ஸூபந்தம்ச ஷோடசம் மந்த்ர பூஜனம்.
ஸப்தாதசம் ததா நாம விவாஹோஷ்டாதசம் பவேத்.
அஷ்டாதச விதானேந மிருத்ஸங் கிரஹன பூர்வகம்.

இவ்விதம் பொதுவாகக்கூறிஇருப்பினும், லிங்கம் மற்றும் பிம்பங்களின் நிஷ்களம், ஸகளம், ஸகளநிஷ்களம் மற்றும் சைலஜம், லோஹஜம், தாருஜம் என்று பலவகையாக இருக்கின்ற-படியால் எந்தெந்தபிம்பங்களுக்கு, எந்தெந்தவிதம் கிரியைகளைச் செய்யவேண்டுமென்பதை காமிகம், காரணம், முதலான பிரதிஷ்டாமகாதந்த்ரங்களான மூலாகமங்களின்படியும் பத்ததி-களின்படியும் அறிந்து அவை செய்யப்படவேண்டும். நூதனபிம்பமாயிருப்பின் மேற்கூறிய பதினெட்டுக்கிரியைகளையும் செய்யவேண்டும். புராதனபிம்பங்களுக்கு **ஜீர்ணோத்தாரம்** முதலிய காலங்களில் ரத்தினநியாஸம், **நயனோன்மீலனம், கிராமபிரதக்ஷிணம், ஜலாதி-வாஸம், நாமகரணம்,** முதலியவைகளை செய்யவேண்டியதில்லை என்பது ஆகமம்அறிந்த பெரியோர்களின் முடிவுஆகும். இவையே மேலும் விரிவாக ஸ்ரீமத்பூர்வகாமிகாகமபடலம் 77ல் **பிரதிமாபிரதிஷ்டாவிதியில்** இருபத்திரண்டு கிரியைகளாக வரிசைப்படுத்தப்பட்டு முறையாக கூறப்பட்டுள்ளது. அதாவது,

பிரதிமானாம் பிரதிஷ்டாம் து பிரவக்ஷ்யாமி ஸமாஸத:
திரவ்ய ஸங்கிரஹணம் பூர்வம் பிம்பநிர்மாண மேவச.
பச்சாத் மண்டப நிர்மானம் ரத்ன நியாஸ மதப்பரம்.
நயனோன் மீலனம் பச்சாத் பேரசுத்தி ரனந்தரம்.
கிராமப் பிரதக்ஷிணம் பச்சாத் ஜலவேசோஷ்டமம் பவேத்.
மண்டபா லங்கிருதிப் பச்சாத் வாஸ்து ஹோம மதப்பரம்.
சய்யா க்லுப்திஸ் ததப் புரோக்தா பிரதிமா ஸ்தாபனம் தத:
தத: கௌதுக பந்த ஸ்யாத் சயனா ரோஹணம் புன:
கும்பஸம் ஸ்தாபனம் பச்சாத் அர்ச்சனம் ததனந்தரம்.
ததோ மூர்த்தி யாதி விந்யாஸோ ஹோமகார்ய மனந்தரம்.
தக்ஷிணாதான மந்தே ஸ்யாத் மந்திரநியாஸ மதப் பரம்.
அதப்பரம் ச ஸ்நபனம் அர்ச்சனம் ஸ்யாத் அதப் பரம்.
துவாவிம்சதி கிரியா: புரோக்தாஸ்தாஸாம் லக்ஷணமுச்யதே.
(பூர்வகாமிகம் 77-1-7)

இவ்விதமாகவே இதுபற்றி பத்ததிஆசாரியப்பெரியோர்களால் பிரதிஷ்டையின்கிரியைகளில் மேலும் சில சம்ஸ்காரங்களுக்கு முக்கியத்துவம்அளித்து, 36கிரியைகளாக, பிரதிஷ்டாஷ்ட திரிம் சத் கிரியாவளி என்று குறிப்பிட்டும், மேலும்விரிவாக, 64கிரியைகளாக முறைப்படுத்தி, அதனை பிரதிஷ்டாசதுஷ்ஷஷ்டி கிரியாவளி என்றும் குறிப்பிட்டுக் கூறியுள்ளனர். இவற்றில் பல கிரியைகள் விடுபட்டும், மாறுபட்டும், இந்த எண்ணிக்கையில் இடம்பெற்றுள்ளன. மேலும் இவற்றிற்குள்ளேயும் பல அந்தரங்க கிரியைகளும், தத்வார்சனா ஜீவநியாஸம், ஸ்பர்சாகுதி போன்ற மிகமுக்கிய சித்தாந்தபாவனாத்மகமான, கிரியைகளும் கூறப்பட்டுள்ளதால் இந்த முறையை

ஆதாரமாகக்கொண்டு நடைமுறையில்உள்ள சைவாகம (புதிய ஆலயத்தின்) ஆவர்த்தபிரதிஷ்டையில் கடைபிடிக்கப்படுவனவற்றைமுறைப்படுத்தி 141கிரியைகளாக இக்கட்டுரையில்விளக்கிட முற்படுகிறேன். இவற்றின் சித்தாந்த தத்துவார்த்தக்கருத்துக்-களையும், ஆன்மப்பயன்தரும் வகைகளைஅறிதல் நலம்பயக்குமாயினும், இக்கட்டுரை விரிவடையும் எனக்கருதி, நிகழ்ச்சிபற்றிய விவரங்களை சுருக்கமாக தெரிவிக்கமுற்படுகிறேன். இவற்றை பிரதிஷ்டானுக்ரமணிகையில் கூறப்பட்டதாலும், வாமதேவபத்ததி, அகோர- சிவாசாரியாரின்பத்ததி, சிவாகமசேகரம், சிவலிங்கபிரதிஷ்டாவதி, பிரயோகசந்திரிகை, முதலிய நூல்களில் இவைகளின் விரிவானசெய்திகளைக்கண்டுஅறியலாம். முதலில், கிரியை-களுக்குரிய காலவிதானத்தை நிச்சயித்தலாகிற முகூர்த்தநிர்ணயம் முதலாக நித்யார்-சனாரம்பம் வரையிலுமாக 141கிரியைகளையும் தனித்தனியே இங்கு, இனி காண்போம்.

1) முகூர்த்த நிர்ணயம் . (பிரதிஷ்டாகால நிச்சயதார்த்த அறிவிப்பு முறை)

ஆசாரியர் முதலாவதாக பிரதிஷ்டைக்கும் அதன் முக்கிய உறுப்புகளாக உள்ள பிம்ப-ஸ்தாபனம், அஷ்டபந்தனம் முதலான கிரியைகளுக்கும் சைவாகம காலவிதானத்தின்படி உரிய, ஏற்ற, காலத்தை, முடிவுசெய்து அடியார்கள்முன்னிலையில் அறிவித்தல்வேண்டும். முகூர்த்தகாலம்என்பது 45நிமிடமேஆகும். சுபமுகூர்த்தம்என்றால், சுபதினத்தில் சுபநிமிடத்தை (காலத்தை) அறிந்து, அதனை, பத்திரிக்கையாகவெளியிட்டு, அதனை நன்நாளில் விநாயகரை வழிபட்டு, பத்திரிக்கையில்சரஸ்வதியைபூசித்து, சிறந்தஜோதிடபிராம்மணரை அழைத்து கௌரவித்து, அவர்வாயிலாக கும்பாபிஷேக பத்திரிக்கையை வாசித்து, அதன்காலப் பொருத்தசிறப்பை எடுத்துக்கூறச்செய்து, அனைவரும்கூட்டாக பிரார்த்தனைசெய்தபின்பு, பத்திரிக்கையை விநியோகித்து யாவருக்கும் வழங்குதல் பிரதிஷ்டாங்கமான முகூர்த்தநிர்ணய கிரியை ஆகும். சான்று,

அதேதானீம் பிரதிஷ்டாம் து லிங்கஸ்ய ச்ருணு தத் துவிஜா:
பூர்வோக்த விதிநா காலம் கல்பயேத் ஸ்தாபனாதிகே.
ஸுமுகூர்த்தே ஸுலக்னேது நக்ஷத்ர கரணான்விதே..

(பூர்வகாமிகலிங்கபிரதிஷ்டா விதிபடலம் 64)

2) ஸ்தம்ப ஸ்தாபனம். (பந்தல்கால் கோல்விழா)

ஆலய மஹாகும்பாபிஷேகத்தின்பொருட்டு, யாகசாலைகொட்டகை மற்றும் சுற்றுப்புற -நிழற்பந்தல் அமைப்பதற்கு, ஸ்தம்பம் என்கிற (பந்தல்கால் எனப்படுகிற மரத்தூணை) பச்சை மூங்கில் கம்பினை 11 அல்லது 21 போன்ற ஒற்றை எண்ணுடன் கூடிய கண்ணுஉள்ள கம்பத்தைக்கழுவி மஞ்சள்பூசி, மாவிலை, தர்பை, சந்தனம், குங்குமம், பூமாலை, வஸ்திரம் போன்றவைகளால் நன்கு அலங்கரித்து, அதனை, (மூங்கில்கம்பை) ஸ்தானுருத்ரன் எனக்

கருதிப்பூஜித்து, உரிய இடத்தில் வடகிழக்குமூலைதிசையில் குறிப்பிட்ட சுபமுகூர்த்தநேரத்தில், குழியில் வலுவுடன் நிலைத்திருக்குமாறு, நன்குபதித்தல்வேண்டும். இதுவே **கால்கோலும்விழா** என கடைபிடிக்கப் படுவதும், ஆலய **ஆகமநெறிமரபும்** ஆகும்.

3) யஜமானகுருவந்தனம். (சிவதருமச்செயலில் ஈடுபடுவோரின் தன்நல ஆத்மார்த்த வழிபாடு), (சிவகைங்கர்யத்தை செய்யும் கர்த்தா தன குலகுரு, குலதெய்வம், குடும்பதெய்வம் இவர்களின் வழிபாடுகளை முதலில் முறையாகச்செய்தல்) காரியானுகூலர், **யஜமானர்,** அல்லது **கர்த்தா** எனப்படுவர், யாகத்திற்குத்தேவையான பொருட்களையும், யாகத்திற்குவேண்டியதையும், கேட்டவுடன், அதனை தியாகமனப்பான்மையோடு, கேட்பதைவிட அதிகமாக கொடுக்கும் மனப்பான்மை உடையவரே ஆவார். யஜமானர் முதலில் தனது குலகுருவிடம் வணங்கி ஆலோசனையுடன் அனுமதியைப்பெறவேண்டும். பிறகு கார்யானுகூலர் தன் முன்னோர்களின் வழக்கப்படி தன்குலதெய்வங்களைவீட்டில்வழிபட்டு, அத்தெய்வங்களின் அருளோடு சைவதரும காரியத்தை, நலமாக, முறையாகநடத்திடஎண்ணி, அர்பணிக்கஉள்ள பொருளை (தனத்தை) சிவத்திரவியமாகக்கருதி, அதனை ஆசாரியரிடம் அர்பணிக்கத்துணிதல் வேண்டும். இதுவே யஜனயாகத்தைநடத்துபவர் பிரதிஷ்டா ஆசார்யரை வணங்கிடும் முறைஆகும்.

4) யஜமான ப்ரதிஷ்டாமஹாஸங்கல்பம். (காலதேச நோக்கங்களை எண்ணுதல்)

கர்மாரம்பஸ்ய பூர்வேது ஸங்கல்ப மிதி புத்திமான்.
தேச காலௌ து ஸங்கீர்த்ய கிரியாம் குர்யாத் து தேசிக:.

ஆலயமஹாகும்பாபிஷேகத்தின் பொருட்டும், புதியபிம்பங்களை ப்ரதிஷ்டை செய்வதன் பொருட்டும், யஜமானர் **"பொருள் எதுவும் எனதில்லை எல்லாம் இறைவனுடையதே"** என்ற சிந்தனையுடன் தெளிவான தியாகமனதோடு, இறைவனைக்குறித்து செய்யப்போகின்ற ப்ரதிஷ்டை எனும் மஹாகும்பாபிஷேகத்தை சபையோரிடம் காரணம், காரியம், நோக்கம், விதிமுறை இவைகளுடன் முன்மொழிதல் யஜமானர் இறைவனை நோக்கி தனது விருப்பங்களை நிரைவுபெறச்செய்ய ஸங்கல்பம்செய்துவேண்டுதல், எண்ணித்துணிக கருமம் என்றவாறு நற்சிந்தனையோடு நற்காரியங்கள் இடரின்றி தொடர்ந்து நடைபெறவேண்டுதல் ஸங்கல்பம் எனப்படுவதாக ஆகும்.

5) மங்களவாத்ய ஸங்கோஷணம், (பஞ்ச மஹாசப்தம்) இது பஞ்சபூதாம்சமான ஐவகை இசைக்கருவிகளின் முழக்கம் ஆகும். **"குர்யாத் பஞ்சமஹாசப்தம் ஸர்வபிராணி தமோபஹம்"** எனும் காமிகாகம வசனத்தின்படியும், **"குர்யாத் பஞ்சமஹாசப்தம் ததா அசுப நிவிருத்தயே"** என்கிற வாதுளாகமவசனத்தின்படியும், மரகட்டையிலிருந்து எழும் **1) தாருஜம்,** நீரில்உதித்த சங்கின்ஒலியான, **2) ஜலஜம்,** வெங்கல முதலிய உலோகங்களின் ஒலியான **3) லொஹஜம்,** துளையிலிருந்து

உண்டாவதான 4) **சுஷிரஜம்,** தேஹத்திலிருந்து வருவதானவாய் பாட்டுகானமாகும் 5) **கேயம்** என்பன பஞ்சமகாசப்தங்கள். இதன்பலன் ஸகலவாத்யஒலிகள் யாவும் ஸகலபிராணிகளின் அஞ்ஞானஇருளைநீக்குவதும் அசுபத்தை விலக்கி மங்களத்தை விளைவிப்பதுமாம். [1]ம்ருதங்கம், [5]வீணை [4]புல்லாங்குழல், [1]பேரிவாத்யம், [3]தாளம், [1]மத்தளம், [2]சங்கவாத்யம், [1]படகவாத்யம் முதலியன. இவை [1]நிலம், [2]நீர், [3]நெருப்பு, [4]காற்று, [5]ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களின் அம்சங்களைக்கொண்ட இசைக்கருவிகள் என்பதால் இவைகளின் ஒலிமுழக்கம் மங்களம் தரவல்லதால் இவை மங்களவாத்யங்கள் எனப்படுவனவாகும்.

தாருஜம் சைவ சங்கம்ச லோஹம் சுஷிர மேவச.
கேயம் ஸர்வைஸ் ஸமாயுக்த: சப்த: பஞ்சவித: ஸ்மிருத: (சைவாகமம்)

6) ஆசார்யவரணம். (பிரதிஷ்டைக்கென ஆசார்யரை யஜமானர் நியமித்தல்)

ஆசார்யம் பூர்வமன் வேஷ்யமூர்த்திபான் ததனந்தரம்.
ஆசார்யேநைவ காத்தவ்யா பூஜா நைமித்திகீ கிரியா. (அம்சுமதாகமம்)

இதுபற்றி வாமதேவபத்ததி கூறிடும் ஆசார்யலக்ஷணம் பற்றி இங்கு அறிவோம். சாஸ்திர ஞானமுடையவரும், உண்மையை பேசுகின்றவரும், அனைத்து ஆகமத்தின் அறிவுத்திறனை உடையவரும், ஆரோக்கியமானவரும், மண், பெண், பொன் போன்றவற்றில் ஆசைஅற்றவரும், காதுகேட்பவரும், நல்லொழுக்கமுடையவரும், ஸ்நானம் முதலிய நித்யகர்மானுஷ்டானங்களைச் செய்துவருபவரும், கருணைஉள்ளம்கொண்டவரும், ஆத்மஞானத்தால் தன்னிலை அறிந்தவரும், நல்லதேஹலக்ஷணத்துடன்கூடியவரும், வேதத்தைகற்றவரும், நித்தமும் சிவபூஜையை செய்பவரும், சிவதீக்ஷைபெற்றவரும், மனைவியுடன்கூடிவாழ்பவரும், எவ்வித ஊனமுமில்லாத உடலமைப்பு உடையவரும், சிறுவனாக இல்லாதவரும், குறுகிய அங்க அமைப்பு இல்லாதவரும், வயது 70க்கு மேலாக மிகமுதியவராக இல்லாதவரும், அந்த ஊரின் பழக்கவழக்கங்களை அறிந்து, அவ்வூரிலேயேஇருப்பவராகவும் உள்ள, சிவப்ரதிஷ்டை போன்றவற்றில் அதிகாரமுடையவரின் கூற்றுக்கிணங்கசெயல்படும், நல்லதகுதிமிக்க ஆசார்யரை, தேவதாப்ரதிஷ்டையின் பொருட்டு, விரும்பி, வேண்டி, அழைத்திடவேண்டும். யஜமானர் அவரையே பிரதிஷ்டா ஆசாரியராக நியமிக்க வேண்டும் என்கிறது.

7) தேவானுக்ஞா ஸ்வீகரணம். (ஆசார்யர் தான் செய்யப்போகும் கிரியைகளுக்கு தெய்வத்திடம் அனுமதி பெறுதல்)

தங்கத்தாம்பாளத்தில் அனுக்ஞைக்கென கூறப்பட்டுள்ள தேங்காய் முதலான மங்களப் பொருட்களை வைத்து, உரிய தெய்வங்களை அவற்றில் பூஜித்து, இறைவனிடம் சென்று அவரை பூஜித்து, அவரிடம் நாம்செய்கின்ற காரியத்தின்பொருட்டு அனுமதிவேண்டுதல்.

அனுமதி பெற்ற ஆசார்யர் ஆலயத்தை வலம்வந்து, சிவசிந்தனையோடு அமர்தல், தேவானுக்ஞாகிரஹணமாம்.

தேவதேவ! ஜதன்நாத! ஜகதானந்த காரண!.
சிவாத்வர பிரவிருத்தோஹம் அனுக்ஞாம் குருதே நம:
ததேதி பிரப்ருவாநந்தம் ஸம்யக் ஸம்பாவ்ய தேசிக:.
தாம பிரதக்ஷிணம் குர்யாத் அஸ்த்ர ராஜ ஸமன் விதம்.

8) ராஜானுக்ஞா, அனுக்ஞாபாத்திரத்துடன் சபையோர் முன்னிலையில் ஆசார்யர் ஆலய தர்மாதிகாரியிடம் செய்யப்போகின்ற காரியத்தின் பொருட்டு முன் அனுமதியைப்பெறுதல் ராஜானுக்ஞா எனும் செயலாகும். **"ஏதத்கர்மகரிஷ்யாமி தர்போத்வாஸன முத்தரே".**

9) பிராம்மணானுக்ஞை. (வைதிக விப்ர அவையில் அறிவிப்பு), சபையோர்முன் தக்ஷிணா-தாம்பூலதானாதிகளால் பிராமணர்களை திருப்திசெய்து, பின்பு பிராம்மணர்களிடம் மந்திரித்த அனுக்ஞாபாத்திரத்துடன் ஆசார்யர் தான் செய்யப்போகின்ற காரியத்தின்பொருட்டு, சமயநூல் விதிமுறைமையைஅறிவித்து, அனுமதிபெறுதல் **பிராம்மணானுக்ஞை,** எனும் செயலாகும். புவி = பூமியில், சுரா: = தேவர்கள் என்பதால் பூசுரர்கள் எனப்படுகிற வேதியர்கள், ஸர்வதேவதா-ரூபமாய் பூமியில்உள்ளவர்கள் என்பதை **"பிராம்மணோவை ஸர்வாதேவதா:"** என்று வேதம் கூறுகிறது.

10) விக்னேஸ்வர பூஜை. (ஆசாரியரது செயலில் இடையூறுஅகல விநாயகரை வழிபடுதல்) விக்னேசம் பூஜயேத் பூர்வம் ஸர்வவிக்ன நிவிருத்தயே. எனும் வசனப்படி எந்த ஒரு காரியத்தை நாம் செய்வதனாலும் அந்தகாரியம் நிறைவுபெறுவதையே நாம் விரும்புவோம். அப்படி நிறைவை நாம் பெறவேண்டுமானால் இடையூறுகள் அகலவேண்டும். விக்னேச்வரரை பூஜித்துவணங்கி, நாம் செய்கின்றகாரியம் நிறைவுபெறுவதற்காக ஆசாரியர் முதலில் பிரார்த்தனை செய்தல்வேண்டும். அதனை கணேசஆலயத்திலோ, ஒருமண்டபத்திலோ, கணபதிக்கு சிறப்பானகலசபூஜை, அபிஷேகம், ஹோமம், நிவேதனம் உபசாரம் இவற்றுடன் செயதிடவேண்டும்.

11) யாகதிரவிய சங்கிரஹணம் . (யாகத்தின் பொருட்களை ஓரிடத்தில் சேகரித்து வைத்து சுத்திகரித்தல்) "யாகதிரவ்யான் ச ஸங்கிருஹ்ய சோதயேத்அஸ்த்ரமந்த்ரத:" யாக-சாலையில் வடக்குதிக்கில் பூமியை சுத்தம்செய்து, அவ்விடத்தில் யாகத்திற்கான அனைத்து பொருட்களையும் வைத்து, காற்றினாலும், நெருப்பினாலும், நீரினாலும், மந்திரத்தினாலும் சுத்தம் செய்து சிவதர்மத்தினபொருட்டு **"இறைவனுக்கே அனைத்தும் அர்ப்பணம்"** என தூயஉள்ளத்துடன் தாமிரபாத்திரத்தில் வைத்து ஆசாரியரிடம் கொடுக்கவேண்டும்.

12) திரவ்யவிபாக தனபூஜை. இது தனலக்ஷ்மியை பூஜித்த செல்வத்தைப்பகுத்து உபயோகித்தல். திரவியங்களை புண்யாஹவாசனம், பஞ்சகவ்யம் ஆகிய கிரியைகளால் சுத்தி செய்து, அத்திரவியங்களை 11பாகமாகசெய்து, செயல்களுக்கு பிரிக்கவேண்டும். பிரித்த செல்வங்களை (திரவ்யங்களை) தனலக்ஷ்மியாக பூஜிக்கவேண்டும். 11ருத்ரர்களை 11சம்ஹிதா மந்திரத்துடன் பூஜிக்கவேண்டும். ஒவ்வொரு காரியத்திற்கும் 1 பாகத்தை கொண்டு மூன்று மூன்றாக பிரித்து செயல்படுத்தவேண்டும்.

13) மதுபர்கப்ராசனம். இது மதுபர்கத்தைப்பூஜித்து போதகாசாரியர் அளித்திட ஆசாரியர் ஏற்பது. முதலில் புண்யாஹவாசனம்செய்து, புரோக்ஷிக்கவும். மதுபர்க்கம் என்பது வாழைபழம், தேன், நெய் இம்மூன்றினையும் முறையாக, [1]சிவதத்வம், [2]வித்யாதத்வம், [3]ஆத்மதத்வம் என்று புஜித்து, ருத்ரசூக்தம், விஷ்ணுசூக்தம், பிரஹமசூக்தம் இவற்றை அதில் ஜபித்து, பசும்பாலை வாழைப்பழம் தேன் நெய்யுடன் கலந்து, சிவைக்கியமாகபாவித்து, இலந்தைப் பழஅளவில் ஆகமபோதகர், ஆசார்யரிக்கு மூன்றுமுறை கையில்தரவேண்டும். பின்பு யாகத்திற்கு நியமிக்கப்பட்டோருக்கும், ரித்விஜர்களுக்கும் கொடுத்து அழைப்பு விடுப்பதே ஆகும்.

14) ஆசார்ய தசவிதஸ்நானம் : -(யாகத்திற்காக வபனம் செய்து கொண்டு மங்கள நீராடுதல்), இது யாகத்தின்பொருட்டு, யாகத்தை துவங்குவதற்கு முன்னதாக ஆசாரியர் பத்துவிதமான ஸ்நானங்களை (முழுக்காடுவதை) முறையாக செய்யவேண்டும். இது ஸாதக-போதகர்களால், மந்திரத்தோடு செய்விக்கப்படவேண்டும். அவற்றின் வரிசைமுறையாவது,

1) **தைலஸ்நானம்.** இது நல்லஎண்ணெய் தலைக்குதேய்த்து குளித்தல் என்கிறது.
2) **க்ஷௌரஸ்நானம்** என்கிறது வபனம் (க்ஷவரம்) செய்து கொண்டபிறகு சுடுநீரில் குளித்தல்,
3) **நதீஜலஸ்நானம்.** என்கிறது புண்யாஹவாசனகலசத்தில் பூசித்த கங்காதி ஆற்றுநீரில் குளித்தல்,
4) **ம்ருத்திகாஸ்நானம்.** எட்டுவகையான அரியமண்ணை உடலில்பூசிககுளித்தல்.
5) **வாருணஸ்நானம்.** இது மழையில்குளித்தல் (ஸஹஸ்ரதாராபாத்திரத்தில் நனைதல்).
6) **மானஸீகஸ்நானம்.** மனதால்மூலமந்திரத்தை முறையாக உச்சரிப்பதால், குளித்ததாக நினைத்தல்.
7) **பஸ்னஸ்நானம்.** என்கிறது விபூதியினால் உடல் முழுதும் பூசிக்கொள்ளுதல்.
8) **ஔஷதஸ்நானம்.** ஐவிதமரத்தோலை மூலிகைகளை ஜலத்துடன்சேர்த்து ஸ்நானம் செய்தல்.

9) **கவ்யஸ்நானம்.** பசுவின் பஞ்சகவ்யத்தை பூசைசெய்து பதமந்திரத்தால் ஸ்நானம்செய்தல்.

10) **ராஜாபிஷேக ஸ்நானம்.** என்பது கலசங்களின்நீரினால் ஸ்நானம் செய்தல் ஆகும்.

15) பஞ்சகவ்ய பூஜை. (ஆவின் ஐங்கலப்பூசை), பசுவிடமிருந்து புதியதாய் பெறப்பட்ட பால், தயிர், நெய், கோமூத்திரம், பசுஞ்சாணம் ஆகிய ஐவகைபொருட்களை, தானிய ஸ்தண்டிலத்தில் ஸ்தாபித்து, பஞ்சப்ரஹ்மமந்திரத்தால் பூஜித்து, அவைகளை தர்பைநுனி ஜலத்தோடு ஒன்றுகூட்டி, தர்பைகட்டையால்கடைந்து, அதன்மேல் தர்பை புரோக்ஷணீகூர்சத்தை வைத்து, பரப்ரஹம்மாகிய சதாசிவரைபூஜித்து, பாசுபதமந்திரத்தைஜபித்து, அதனால் சுத்தி செய்திட எங்கும் ப்ரோக்ஷிக்கவேண்டும். பஞ்சகவ்யத்தை உட்கொண்டால் உடலில்உள்ள வியாதிகள அனைத்தையும்போகும், பஞ்சகவ்யத்தை இறைவனுக்கு அபிஷேகித்தால் அனைத்து பாவங்களும் கொடிய பஞ்சமஹாபாபங்களும் நம்மைவிட்டு அகலும்.

16) விசேஷஸந்தி தர்ப்பணம். (சிறப்புகால அனுஷ்டானம்) ஆசாரியர் மந்திர-தர்பணத்துடன் அனுஷ்டானம்முடித்தல்), நித்யகர்மானுஷ்டானங்கள் அனைத்தும் முடிந்தபின் ப்ரதிஷ்டையின்பொருட்டு, ஒவ்வொருகாலமும் வெள்வி துவங்கும்முன், விசேஷசந்தியை செய்ய வேண்டும். பஞ்சபிரம்மமந்திரம் ஷடங்கமந்திரம், மூலமந்திரம், வித்யேஸ்வரர்களின் நாமமந்திரம், முப்பத்தியாறு தத்வங்களுக்கும் அதன்அதிபதிகளுக்கும் ஸ்வாஹா என்பதை முடிவிலுடையதாக கொண்டு **தைலதீர்த்தத்தாலும்,** 11 ரிஷிகளுக்கு நமஹஎன்பதில் முடியுமாறு, பூனூல் மூலமாகவும், 7மனுஷ்யர்களுக்கு வஷடந்தமாகவும் கைநுனியினாலும் **"ஸர்வேப்யோ பூதப்யோ- வஊஷட்** என்று பூதகணங்களுக்கும், அவரவர் கோத்திரத்தின்ரிஷிகளுக்கு, பெயரைச் சொல்லியும் தர்பணம்செய்யவேண்டும். பூனூலை இடமாக கொண்டு எள்ளுடன் கட்டைவிரல் நுனிவழியாக விழும் **பித்ருதீர்த்தத்தால்** தேவபித்ருக்களுக்கும், விசேஷபித்ருக்களுக்கும், தமது பித்ருக்களுக்கும், இதனை தந்தைஇல்லாதோர் தர்பணம்செய்யவேண்டும். பிறகு பூனூலை வலமாகக்கொண்டு, கணபதி முதலானவர்களுக்கும் தர்பணம்செய்து, தர்பபவித்திரத்தை அவிழ்த்துவிட்டு, ஆசமனம்செய்து, விபூதிதரித்து அகோரமந்திரத்தை 21 முறை ஜபம் செய்ய வேண்டும். கர்மேந்திரியம், ஞானேந்திரியம், மந்திரங்கள், முன்னோர்கள், ரிஷிகள் போன்றவர்களை திருப்திசெய்வதால் இக்கிரியை மந்திரசித்தியைத்தருவதாகிய **விசேஷசந்தி** ஆகும்.

17) ஆரம்பகால கோதானம். ஆசார்யர் முதலில் பூசையைத் துவக்கும்காலத்தில் கிரியைகளின் முன்னோடியாக செய்யப்படும்தானமே **பூர்வாங்ககோதானம்** எனப்படும். சிறந்த- தொரு பெரியகாரியத்தை செய்யும்போது முதலிலும் முடிவிலும் தானம் செய்யப்படவேண்டும். இதில் பசுவை கன்றுடன் கோதானம் செய்வது சிறப்பாகும்.

18) பூர்வாங்க க்ரஹப்ப்ரீதிதானம். ஒருகாரியத்தை துவக்கும்முன் அக்காரியம் நவக்ரஹங்களின் இடையூறு இன்றி நல்லவிதமாக முடிவுபெற க்ரஹப்ரீதி எனும் தானத்தை செய்யவேண்டும். நேரம், காலம் போன்றவை நவக்ரஹங்களின் இயக்கத்தால் பலனளிப்பது. ஆதலால் அவர்களை ப்ரீதிசெய்யவேண்டும். இவை தக்ஷிணைதாம்பூலம் நவதான்யத்துடன் மந்திரம்கூறி நவக்ரஹதோஷம் விலக ப்ராம்மணர்களுக்கு அளிப்பதுஆகும். பூர்வாங்க கிரியைகள் என்பது, கணபதிஹோமம் முதற்கொண்டு, மிருத்சங்கிரஹணம்வரையிலான காரியங்கள் ஆகும். இவை எந்தவித இடையூறுமின்றி, தோஷம்ஏற்படாதவாறு நடைபெற வேண்டியும் அதற்கு காலதேவதைகள் துணைபுரியவேண்டியும் கிரகங்களை மகிவித்திட தானம் செய்வதே துவக்ககால க்ரஹப்ரீதிதானம் ஆகும்.

19) பேரீதாடனம். வாத்யகோஷம். (மூவுலகஅழைப்பிற்கான முரசோலியை எழுப்புதல்), பூலோகம், பாதாளலோகம், ஸ்வர்கலோகம் ஆகிய மூவுலகத்தில் உள்ளோர் மகிழவும், நமக்கு நன்மை பயக்கவும் அவர்களுக்கு கேட்கும்படி உரிய மந்திரத்தைச்சொல்லி ஆசாரியர் முரசு கொட்டியபின்பு அந்தவாதகரைக்கௌரவித்து, அவரைக்கொண்டு தெய்வங்களுக்கு விருப்பான ராகதாளங்களை இசைக்கச்சொல்லி மகிழ்வித்தல் முறையாகும். பேரீவாத்தியத்தை பூஜித்து வாசித்து முழங்க செய்தலே பேரீதாடனம் ஆகும்.

20) சுத்தி புண்யாஹவாசனம். (கலசநீரில் சுபதினத்திற்கான சாந்திமந்திரத்தை ஜபித்து அந்நீரைத்தெளித்தல்), பாவங்களை அழிப்பதாலும், தேஹாதிகளை சுத்தம் செய்வதாலும், ஆத்மாக்களை புனிதப்படுத்துவதாலும் இக்கிரியைக்கு புண்வாஹம் என்றபெயர் விளங்குகிறது. ஸலக்ஷணகலசத்தில் ஜலத்தின் அதிபதியான வருணனைப்பூஜித்து, பிராம்மணர்-களின் ஸ்வஸ்திவசனங்களைபெற்று அவர்களை திருப்திசெய்து, மந்திரித்த நீரான அப்புனித- கலசஜலத்தை எல்லாஇடத்திலும் தெளித்து, சுத்திசெய்வதே சுத்திபுண்யாஹ வாசனமாகும்.

21) பஞ்சசுத்திக்ரியை. இது பூஜகரின் [1]உயிர்& உடல், [2]இடம், [3]பொருள், [4]மந்திரம், [5]பூஜ்யலிங்கம் / சிலை இவை ஐந்தையும் புனிதமாக்குதல், (1) ஆத்மசுத்தி = அந்தர்யாகம், (2) ஸ்தானசுத்தி = பூமிபூஜை (3) த்ரவ்யசுத்தி = விசேஷார்க்யபூஜை (4) மந்திரசுத்தி = ஹ்ரஸ்வம், தீர்க்கம், ப்லுதம், இவற்றுடன் றையாக ஓம்காராதிநமோந்தமாகமந்திரங்களை உச்சரித்தல், (5) பிம்பசுத்தி = நதிநீர், மரப்பட்டை கஷாயநீர், புனிதமண்கலந்த நீர் முதலான ஸ்நாநதிரவியங்களால், பூசிக்கஉள்ள தெய்வச்சிலையை சுத்திசெய்து அபிஷேகித்தல் இவை ஐந்தும் பஞ்சசுத்தி எனப்படும் ஐவகைசுத்திகள்.

22) நவகலச ஸ்நான பூஜை. (தெய்வ அபிஷேகத்திற்கான ஒன்பதுகலசத்தை பூஜித்தல்), தெய்வத்தை நீராட்டுவதற்காக தானியங்களைப்பரப்பி ஸ்தண்டிலம்அமைத்து, அதன்மீது முறையே அபிஷேகதிரவியங்கள் நிறைத்த 9கலசத்தை வைத்துப்பூசித்து, அபிஷேகித்தலாகும். சுப்ரபேதாகமத்தில் கூறியபடி நான்குவாயில், பதினாறுஸ்தம்பங்களின் நடுவில் வேதிகைஅமைத்து, கிழக்குமுனையாயும் வடக்குமுனையாயும் நான்கு நான்கு கோடிட்டு ஒன்பது பதங்கள் (கட்டங்களை) அமைத்து அவற்றில் நடுவில் பிரதானம் கும்பத்தையும், வர்தனி கலசத்தையும்வைத்து, சுற்றிலும்உள்ள 8பதத்தில் எட்டு கலசங்-களையும் ஸ்தாபித்து, நடுவில் சிவசக்திகளையும், சுற்றிலும் அஷ்டவித்யேஸ்வரர்களையும் முறைப்படி பூசித்து, ஹோமம்செய்து ஜபசமர்பணம்வரைசெய்து, அபிஷேகமுடிவில் இக்கலசங்-களால் நீராட்டுதலைச்செய்வது **ஸ்நபனவிதிமுறையாகும்.**

23) மஹாகணபதி ஹோமம். (இடையூறு அகன்றிட வேழமுகத்தோனின்வேள்வி), நாம் செய்கின்ற காரியத்திலுள்ள இடையூறுகளை அகற்றி, அக்கார்யத்தை நிறைவு செய்வதற்கு நாம் கணபதியை வழிபட்டு வேள்வியை செய்யவேண்டும். கார்யநிவர்த்திக்கும், கார்யப்ரவர்த்திற்கும் **கணபதிஹோமமே** சிறந்தது. **கம்** என்ற கணபதியின்பீஜாக்ஷரத்தை உச்சரித்தாலே எல்லா இடையூறுகளும் அகலும். "கம் என்று இரு" என்பது கணபதியை நினைத்து இரு, எல்லாம் அவனருளாலே இனிது நிறைவேறும் என்ற தாத்பர்யர்தையே உணர்த்துகிறது.

24) கிரஹ மகம். (நவக்ரஹ ஹோமம்). இது சுபமானகாலநேரத்தின் பயனைப்பெற **நவக்ரஹங்களை வழிபடும் வேள்வி** ஆகும். தோஷம் என்றால் குறையை எப்படி நிறைவு செய்வது? ஜாதகதோஷம் நாம் பிறந்தநேரத்தில் ஏதாவது குறைஇருக்கலாம், அல்லது நாம் செய்கின்ற காரியநேரத்தில், அதாவது லக்கினத்தில் தோஷம்குறைஇருக்கலாம். இவை அனைத்தும் விலகிட காலம், நேரம் போன்றவைகளின் அதிபதியாக இருக்கின்ற (நவநாயகர்கள்) நவக்ரஹங்களை திருப்திசெய்திட, பூஜித்து வேள்விசெய்வதே **க்ரஹமகம்** என்கிற **நவக்ரஹ ஹோமம்** ஆகும். இவ்வேள்வியினால் ஏற்படும்பயன், அக்கார்யங்களில் குறைவுகளைநீங்கி அச்செயலை நிறைவு பெறச்செய்வதே (தோஷம் நீங்கி) பலன் அடைதல் ஆகும்.

25) கபிலார்சனம். (கன்றுடன் கூடிய கரவைப்பசுவில் தெய்வங்களை பூஜித்தல்), பூஜிக்கதக்கவர்களை பூஜிக்கவேண்டும், கன்றுடன் கூடிய பசுவை பூஜிப்பதால் பலவித நன்மைகள் நமக்கு கிடைக்கும் என்பது நிதர்சனமான உண்மை. முப்பத்து முக்கோடி தேவர்-களையும் ஒன்றுசேர்த்துபூஜித்தபலன் கன்றுடன்கூடியபசுவைப்பூஜிப்பதால் நமக்கு கிடைக்கிறது. பசுவின் அங்கங்களின் ஒவ்வொருஇடத்திலும் ஒவ்வொருதெய்வம் வாசம் செய்தால் அம்முறைப்-படியே நாம் பூஜித்தால் உரிய பலன்களைப்பெறுவோம். கோ பூஜையால் நன்மைகள் பல நமக்குக் கிடைக்கும்.

26) தேவதா ப்ரீதியஜனம். (தெய்வங்களை மகிழ்வித்திடும் பொருட்டு பூசை முடிவில் ப்ரம்மசாரி, வடுகர், சுவாஸினி, கன்னி, தம்பதி, வேதியர்கள் இவர்களைப் பூசித்தல்) தெய்வாம்சமாக மனிதர்களைக் கருதி வணங்கி தெய்வங்களை ப்ரீதிசெய்தல் தேவதாப்ரீதி என்பதாகும். எட்டு வயதான வேதாத்யயனம் செய்யும் ப்ரம்மசாரியை விநாயகராக பாவித்து பூஜித்தல்வேண்டும். பன்னிரண்டு வயதான ப்ரம்மசாரியை வடுகனாக அதாவது பைரவராக கருதி பூஜிக்கவேண்டும். அறுபது வயதை தாண்டிய சுமங்கலியை பராசக்தியாக பூஜிக்க வேண்டும். எட்டுவயது உடைய சிறுமியை கன்னிகையாக கருதி பூஜிக்கவேண்டும். வேதம்ஓதும் வேதியர்களை தேவர்களாக கருதி பூஜிக்கவேண்டும். இதுவே தேவதாப்ரீதி யஜனமாகும். உள்ளத்தில் உறையும் இறைவனை அன்பு என்ற உணர்வினால் ஆராதிப்பதே இது. இதன் பலன் தெய்வம் மகிழ்ந்து அருள்வதே ஆகும். கணபதிஹோமத்தின் முடிவில் பிரம்மசாரிபூஜை விதிக்கப்படுகிறது.

27) ரக்ஷோக்ன ஹோமம். (ராக்ஷஸர்களை அகற்றும் பாதுகாப்புக்குரிய வேள்வி), ஆலயத்திற்குள் உயிரினங்கள் மனிதர்கள் இறந்தாலும், தீயவர்கள் ஆலயத்தில் நுழைந்து- விட்டாலும், இரத்தசொட்டுகள் கோயில் தரையில் விழுந்தாலும் இப்படிப்பட்ட எல்லாவித-தோஷங்களை போக்குவதற்கும், அவசியம் ரக்ஷோக்ன ஹோமத்தை செய்யவேண்டும். கும்பத்தில் ரக்ஷோக்னதேவரையும் அவருக்கு வலதில் தேங்காயில் சிவபெருமானையும், இடதில் கட்கேஸ்வரரையும், அவரைச்சுற்றிலும் ப்ராஹ்மியாதிசக்திகளையும், அஸிதாங்காதி பைரவர்களையும் பூசித்து, ஒன்பதுகொஷ்டத்தில் இரக்தான்னத்தினால் (குங்குமமான்னத்தில்) பலியிட்டு **"யேதேவாப்புரஸ்ஸதோக்கினி நேத்ரா** என்ற சூக்தமந்திரத்தைக்கூறி, வேள்வி செய்து, பூர்ணாஹுதியிட்டு பூர்த்திசெய்து? பிறகு பூஜித்த கும்பம், தேங்காய், கத்தியில், அதனை சமர்பித்து? பிறகு கும்பஜலத்தினால் ஆலயத்தை புரோக்ஷிக்கவேண்டும். பிறகு வாத்ய கோஷத்துடன் கத்திதேங்காயுடன் ஆலயத்தை வலம்வந்து கர்பக்ரஹத்தின் உள்ளே வைக்கவும். ரக்ஷோக்ன ஹோமத்தினால் தீயவைஅகலும், நன்மைபல கிட்டும்.

28) பிரவேசபலி ப்ரக்ஷேபம். (எண்திசையில், தீயசக்திகளை, பலிதந்துவிரட்டும், நுழைவுகால பூஜை), தீயசக்திகளை அகற்றி நற்சக்தியின் தொடர்பினை எட்டுதிக்குகளில் பரவ ப்ரவேசபலி என்ற பூஜையைச்செய்யவேண்டும். யக்ஷன், ராக்ஷஸன், ஸர்வபூதன், பிசாசன், ப்ரஹ்மராக்ஷசன், காவிகா, சலலீ, பைரவர் ஆகிய எட்டுத்திக்குகளில்உள்ளவர்களுக்கு, பலி கொடுத்து, த்ருப்திசெய்து அவர்களை, அவர்களுக்கேஉரிய நடுகாடு, சூன்யஸ்தானம் மலையுச்சி, ஆற்றங்கரை, போன்றஇடத்திற்கு **"க்ஷேத்திரபாலரின் கட்டளையின்படி தாங்கள் இந்த இடத்தை விட்டு செல்லவேண்டும்"** என்றுகூறிவழியனுப்பிவிட்டு, பிறகு அங்கு நடுவில் மஹாலக்ஷ்மியைஆவாஹித்தும், எட்டுத்திசையிலும் 1இந்திரன், 2அக்னி, 3யமன், 4நிருதி, 5வருணன், 6வாயு, 7குபேரன், 8ஈசானன் போன்ற எட்டுதிக்குபாலர்களையும் பூஜித்து,

அவரவர்க்கேஉரிய திக்கில் அவரவர் இருந்தபடி பரம்பொருள்உறையும் ஆலயத்தை பாதுகாக்க வேண்டும் என்று பிரார்த்தித்தல்ஆகும். இக்காரியத்தை செய்தால்தான் எக்கார்யமும் பலன்தரும். பிரவேசபலி என்ற பூஜையை செய்யாமல் செய்யும் கார்யம் சீக்கிரம் பலனைதராது.

29) கிராமசாந்தி ஹோமம். (மக்கள்வசிப்பிடத்தின் பாதுகாப்பிற்கான, கிராம அமைதிக்கான இரவுநேரவேள்வி), முதன்முதலில் ஒரு கிராமத்தை நிறுவினாலும், கிராமத்தில் மக்களுக்கு பலவிதநோய்களும், பலவிதமான துன்பங்களும், இடையூறுகளும் நேர்ந்தாலும், அவ்வூரில் முதல்முதலில் செய்யவேண்டிய கார்யம் **கிராமசாந்திபூஜை** ஆகும். கிராமசாந்திபூஜை இரவுநேரத்தில் கிராமத்தின் எல்லைப்பகுதியில் எட்டுகோணம் அமைத்து, நடுவில் பஞ்சகோணத்தின் நடுவில் த்ரிகோணம் அமைத்து, பைரவரை பூஜித்து யாகம் செய்ய வேண்டும். பைரவரை கிராமமக்களின் நன்மையைபொருட்டு, **கிராமத்தை காக்கவேண்டும்** என்று பிராத்தித்தலே கிராமசாந்தி. கிராமசாந்தியால் நிலைநடுக்கம் போன்ற பயங்கள் ஏற்படாது.

30) பிம்பரத்தினநியாஸம். (புதுசிலையில் ரத்தினங்களைவைத்து பூஜித்தல்), புவியில் இருந்து கிடைக்கின்றவை இரத்தினங்கள். அதன் ஈர்ப்புசக்தியை சேர்த்திட ந்யாஸம் என்ற இச்செயலைச்செய்கிறோம். பிம்பத்தின் தலையில் **மாணிக்கம்**, நெற்றியில் **இந்திரநீலம்**, ஹ்ருதயத்தில் **வஜ்ஜிரம்** (வைரம்), வயிறுபிரதேசத்தில் **வைடூரியம்**, இரண்டுமுட்டியில் **ஸ்படிகங்கள்**, இருபாதத்தில் **பத்மராகம்**, இருகைகளிலும் **ப்ரவாளம்(பவழம்)**. இந்த முறையிலேயே ரத்தினங்களை சந்தனத்துடன் சேர்த்து, புதியபிம்பங்களின் அந்தந்த மேற்கூறிய அங்கங்களில் வைக்கவும். பிறகு எட்டு நாகங்களையும் மூர்த்திமந்திரத்தால் பூஜிக்கவேண்டும். ரத்தினநியாஸத்தினால் ஜனஆகர்ஷணசக்தி புதியபிம்பத்திற்கும் அதை பழிபடுகின்றவர்க்கும் கிடைக்கும்.

மூர்த்நி லலாடே கண்டேச ஹ்ருதயே நாபி பாதயோ:.
பாஹூ த்வயேச ஸம்ஸ்தாப்ய ஸம்ஹிதா மந்த்ரமர்ச்சயேத்.
அஷ்ட புஷ்பேண ஸம்பூஜ்ய அபிஷேக மதாசரேத்.

31) ஆகார சோதனம். (புதுசிலையைசோதித்து, சுத்திகரித்து , பூஜித்தல்) புதிய பிம்பத்தில் யாதொரு குறையும் இல்லாமல் இருக்கிறதா? என்று கண்டறிந்து, பின்பு புண்யாஹ வாசனம், பஞ்சகவ்யம், அஸ்த்ரபூஜைசெய்து, அக்கும்பங்களின்நீரினால் பிம்பத்தை சுத்தி செய்வதே ஆகாரசோதனமாகும். ஆகாரசோதனத்தால் சிலையில் எவ்வித தோஷமும் இன்றி சிலையை இறைதன்மைக்கும், ஈர்ப்புக்கும் உகந்ததாகசெய்தல். இதனால் இறைவனை வழிபடுவோர்க்கும் நன்மை ஏற்படும்.

32) நேத்ரோன்மீலனம். (புதுச்சிலைக்கு கண் திறத்தலைச் செய்து பூஜித்தல்), மூன்று கண்களுடைய தேவர்களுக்கு அக்கண்களாக விளங்குகின்ற சூரியன், சந்திரன் அக்னி ஆகிய மூன்று தேவர்களை தனித்தனியாக மூன்றுகும்பத்தில் பூஜித்து, முதலில் நெற்றிகண் அக்னியை திறந்து பிறகு, வலதில் சூரியனையும், இடதில் சந்திரனையும் முறையாக நெய், தேன், பால் என்பவைதோய்ந்த தங்கஊசியினாலோ, அல்லது தர்பைநுனியினாலோ நேத்ரமந்திர பீஜமந்திரங்களைக்கூறியவாறு கண்களைத்திறக்கவேண்டும். இரண்டு கண்களுடைய தெய்வங்-களுக்கு வலதுகண்ணைத் திறந்தபின்னரே, இடதுகண்ணைத் திறக்கவேண்டும். பிறகு முகம், வாய், மூக்குத்துவாரங்கள், இருசெவித்துளைகள், குய்யம், குறி, வயிறு, நாபி நகத்தின் முனைகள், இவ்வாறு உடலின் ஒன்பதுதுளைகள் அமைத்தையும், இவ்வாறே வாஹனம் மற்றும் அபஸ்மாரதிதுணை மூர்த்திகளுக்கும் முறையாக கண் திறக்கவேண்டும். சிற்பி தன் ஆயுதத்தினால் கண்திறக்கவேண்டும். மூடித்திரையிட்டவாறே மேற்கூறப்பட்ட, அனைத்து காரியங்களையும் செய்யவேண்டும்.

ஹோமாந்தம் பூஜயேத் தேவம் பிரச்சன்ன பட வேஷ்டிதம்.
சில்பாயுதம் து ஸம்கிருஹ்ய நேத்ரமந்த்ர மனுஸ்மிருதன்.
பக்ஷ்மரேகாம் புரா கிருத்வா ததோவை கிருஷ்ண மண்டலம்.
ஜோதிர் மண்டல மாலிக்ய ஸமதிருஷ்டிம்ச காரயேத்.
சரோத்ர த்வயம்ச நாஸெளத்வெள வக்த்ரம்ச குத குஹ்யயோ:
சக்திபிம்பே ஸ்த நாக்ரே வா ஸர்வாங்குலி ஸமாசரேத்.
வாஹநாயுத ஸம் திருஷ்டியா ஹேமசூச்யா விலேகயேத்.
தத் ரந்த்ரே மதுஸம்ஸ்பிருச்ய அபிஷேகம் அதாசரேத்.

முன்னதாக புண்யாஹவாசனம், பஞ்சகவ்யம், செய்து புனிதப்படுத்தி முடிவில் சூரியர், சந்திரர், அக்னி ஆகிய மூன்றுகும்பஜலத்தினால் புதியவிக்ரஹத்தில் குறிப்பிட்டஇடத்தில் அபிஷேகிக்கவும், புதியபிம்பங்களுக்கு "திருக்கிரியேச்சா விசாலாக்ஷம், ஸர்வக்ஞதாரூபம்" கண் திறத்தல் என்ற காரியம் செய்வதால் இறையன்பு கிட்டும்.

33) மங்களதசதரிசனம். (புதுச்சிலைக்கு கண்திறந்தவுடன் முதலாவதாக பத்து வகையான மங்களகாட்சிகளை இறைவனுக்குக்காண்பித்தல்). புதிய பிம்பத்தில் உறையும் இறைவனுக்கு கண்திறந்தபிறகு, முதலில் நன்மைபொருந்திய பொருட்களையும், நபர்களையும் பூஜித்து, 10வகையாக காண்பித்தல் தசதரிசனம் எனப்படுவதாகும். கண்விழித்ததும், நல்லவற்றைக்காண்பதால், நமக்கு மங்களமேற்படும். அதுபோலவே, திரையிடப்பட்டபகுதிக்குள் சிலைகள் முறையே ஒவ்வொன்றாகஅழைத்து தரிசனம் செய்விக்கவேண்டும். 1) கன்றுடன் கூடிய பசுவை பூஜித்துக்காண்பித்தல், 2) பூஜித்த கன்னிகையை (சிறுமியை) காண்பித்தல், 3) பூஜித்த புதியபசுவின் பஞ்சகவ்யபொருள்கள்

(ஐங்கலன்கள்), 4) பூஜித்த சம்பாநெல் முதலிய தான்யத்தைகாண்பித்தல், 5) பூஜித்த ஒன்பதுதானிய வகைகளைக் காண்பித்தல், 6) பூஜித்த கண்ணாடியைக்காண்பித்தல், 7) பூஜித்த சுமங்கலிப்பெண்ணைக்காண்பித்தல், அல்லது சைவ-சந்யாஸியை காண்பித்தல், 8) பூஜித்த வேதகோஷங்களுடன்கூடிய வேதபிராம்மணர்களைக் காண்பித்தல், (பூஜித்த பிரம்மனின் அம்சமான பிரமாணசிறுவனைக் காண்பித்தல்), 9) தீவிர சிவபக்தர்களை காண்பித்தல், யஜமானரை காண்பித்தல், (சிலையை செய்வித்த கர்தா முதலானோரை), 10) முடிவில் திரையினைநீக்கி, அனைத்துபக்தர்களையும், (இறைவனைத்தாம் பூஜிப்பதாக பக்தர்கள் மனதில் நினைத்திட ஸகலஜனங்களையும்) இறைவனுக்குக் காண்பித்தல் முறை. கண்திறந்தபிறகு, ஒவ்வொன்றாக இறைவனுக்கு முறையாக நன்மைபொருந்திய பொருட்களையும், நபர்களையும்காட்டி, திரையைவிலக்கி, முடிவில், இறையருளை அனைவரும் பெற வழிகாட்டுதல் நேத்ரோன்மீலனத்தின் **தசதரிசனம்** என்ற காரியமாகும்.

34) ப்ரதிமாகசுத்திகிரியை. இது புதுச்சிலைக்கு சுத்திகரிப்புக்கான நீராட்டுதலை செய்தல், இதில் **ஐந்துகலச ஸ்தாபனமுறையாவது,** 5 கலசமுறையில் நடுவில் அஷ்ட-மிருத்திகை கும்பத்தையும், கிழக்கே 5 மரப்பட்டைகளின் காஷாயதீர்த்தம், தெற்கில் 5மரத்தளிர்- களின் பல்லவோதகம், மேற்கில் ஜாதி, மல்லிகை, தாழை, பாதிரி, புன்னை ஆகிய 5புஷ்போதகம், வடக்கில் வாழை, மா, பலா, வில்வம், மாதுளை ஆகிய 5பழங்கள்இட்ட பலோதகம் இவற்றை ஸ்தாபித்து, பஞ்சபிரம்மத்தால்பூசித்து, நீராட்டுதல்முறை. இவ்விதமாக ஐந்துகலசங்களை வைத்து, அவற்றில் ஐவகைப்பொருட்களைப்போட்டு, ஊறவைத்து, முறையே பூசித்து நீராட்ட வேண்டும். பிரதிமாசுத்தியால் தேவதாஉறைவிடமான, பிம்பத்திற்கு ஈர்ப்புசக்தி தெய்வாம்சம் அதிகரிக்கும்.

35) தான்யாதிவாஸம். இது புதுச்சிலையை, சிலகாலத்திற்கு மந்திரித்த விதை தானியத்தில் வைத்திருத்தல்.

யவநீவார தான்யைச்ச கல்பிதே ஸ்தண்டிலே விபும்.
தான்ய மத்யே து ஸம்ஸ்தாப்ய பூஜயேத் விதிவத் க்ரமாத்.

புதுச்சிலையை இருத்திவைத்தலின்பொருட்டு, தான்யத்தைசுத்தம்செய்து, புண்யாஹவாசன ஜலத்தினால் புரோக்ஷித்து, புதுச்சிலையை மந்திர அஷ்டபுஷ்பத்தினால்பூஜித்து, தாம்பூலத்தை நிவேதனம் செய்யவேண்டும். பெண்உருவபிம்பத்திற்கு காதுவரை தான்யத்தைகொட்டி, அதிவாஸம் செய்யவேண்டும். ஆண்உருவபிம்பத்திற்கு மார்புவரையிலான தானியத்தில் திவாஸம் செய்யவேண்டும். முகூர்த்தகாலம் முதல் ஒரு யாமமாகிய 3மணிநேரம் வரையிலும், (அதிகமாகவும்), பாதுகாப்பு பூசையுடன் வைத்திருத்தலே அதிவாஸகிரியை ஆகும்.

36) ஜலாதிவாஸம் . (புதுச்சிலையை மந்திரித்த நீரினுள் வைத்திருத்தல்)

ஸமுத்ரகாமி நத்யாம் வா தடாகே வா விசேஷத:
ஜலதீரே து ஸம்ஸ்தாப்ய தேவம் வை பூர்வதோமுகம்.

புதியபிம்பத்தை நிருத்தவாத்யம் கானம் முதலான ஸகலஉபசரிப்புடன் அழைத்துச்சென்று, குளம் அல்லது நதிநடுவில் பிம்பத்தைவைத்து, கிழக்குமுகமாக மண்டபகல்பனம் செய்துகொண்டு, கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதா, ஸிந்து, காவேரி ஆகிய ஏழுநதிகளை கும்பத்தில்பூஜித்து, அதை புதியபிம்பத்திற்கு அபிஷேகம்செய்து, தூபதீப நைவேத்யம்செய்து, ந்ருத்தகீதவாத்யத்துடன் புதியபிம்பத்தை மீண்டும்புறப்பாடுசெய்து, ஆலயத்திற்கு வந்துசேர வேண்டும். பிறகு ஆலயத்தில் பெண்உருவசிலையை காதுவரை ஜலத்தில் வைக்கவும். ஆண் உருவசிலையை மார்புவரை ஜலத்தில் கிழக்குமுகமாக குறிப்பிட்டகாலம்வரை வைக்கவும். ஜலாதிவாஸத்தினால் புதியபிம்பத்திற்கு நீரின்ஆற்றல் தன்மை கிடைக்கும்.

37) கிராமபிரதக்ஷினம். (புதுச்சிலையை அதன் கருக்கோலம்காண ஊர்வலம் செய்வித்தல்). புதியபிம்பத்தை வஸ்திரம், ஆபரணம், பூமாலைகளால் அலங்கரித்து, ரதத்திலோ, பல்லக்கிலோ, யானையின்மீதோ. அமர்த்தி, கீதவாத்தியத்துடன் இரவுநேரத்தில் கிராமத்தை சுற்றிவரச்செய்யவேண்டும். ஆலயத்தின் கோபுரவாயிஹலுக்குவெளியே, புதியபிம்பத்தை நிறுத்தி, த்ருஷ்டிவிமோசனத்தின்பொருட்டு, பருத்திதுணியால் அந்த பிம்பத்தை மூடிவைக்க வேண்டும். கிராமபிரதக்ஷிணம் ஊரிலுள்ள அனைவருக்கும் மூலக்கருவறையில் இடம் பெறப்போகும் இந்தஇறைவன் உறையப்போகிறான் என்பதன்காட்சி என்பதை இச்செயல் விளக்கக்கூடியது ஆகும்.

38) ஸ்வர்ண, ரத்தின, தனாதிகளில் அதிவாஸம். இது பொன், வெள்ளி, ரத்தினம் முதலிய செல்வத்தின்மீது இறைவனை இருக்கச்செய்தல். புதியபிம்பத்தை பொன், வெள்ளி, இரத்தினம், போன்றவைகளில் வைத்து பூஜித்தல். இவற்றில் சிறிதுகாலம் வைத்திருப்பதால் அச்சிலைக்கு வீரியசக்தி, காந்தசக்தி, தேகசக்தி முதலான ஆற்றல்கள் சேர்ந்த தகுதி மேம்பாடு ஏஙபடுகிறது. **பஞ்சகவ்யஅதிவாஸம். (பசுவின்பால் முதலிய ஐங்கலத்தில் முகூர்த்த-காலம் இருக்கச்செய்தல். "ஸ்நாபயேத் பஞ்சகவ்சையச்ச பிரதிமாசுத்திஹேதவே"** என்பதால் புதியபிம்பத்தை பசுவின் பால், தயிர், நெய், கோமூத்திரம், பசுஞ்சானம் ஆகியவற்றை, (ஐவகைப்பசுவின் பஞ்சகவ்யத்தை) பூசித்து, ஒன்றுசேர்த்து, அதில் வைத்திருப்பது **கவ்யஅதிவாஸம்** எனப்படுகிறது. இதனை சிலர் முதலில்செய்வர். அதில் முகூர்த்தகாலம்வரை 1½மணிநேரம்மட்டும் இருக்கச்செய்து **அதிவாஸம்** செய்தல்முறை. பஞ்சகவ்யஅதிவாசத்தினால் புதியபிம்பத்திலுள்ள பார்வதிதோஷமும், சிற்பியின்கை உளிபட்டதோஷமும், பிறதோஷங்களும் விலகிபுனிதம் ஏற்படும்.

39) **பஞ்சவிதசயனார்சனம். (ஐந்துவகையான படுக்கைவிரிப்புகளின் பஞ்சதத்துவ பூஜை),** யாகசாலையின் வாயுதேசத்தில் தானியம், அரிசி, எள்ளு, நவதானியங்கள், நெல்பொரி, தர்பை இவற்றைப்பரப்பி, ஏழுசுற்றாகஅமைத்து, அதன்மீது புதுதுணியைப்பரப்பி, (1) மயில், குக்குட(கோழி) ஹம்ஸஇறகுகளாகிய **அண்டஜத்தையும்,** (2) தர்பை, கம்பளம், பட்டு, பருத்தி, தோல் எனும் துணிமீது பருத்தி, புஷ்பங்களாலான பட்டாலான **முண்டஜத்தையும்** (3) துணிமீது சமரிமான்முடி, ஆட்டுமுடி முதலிய ஐவகை **ரோமஜத்தையும்,** (4) துணிமீது மான்முதலிய-வற்றின் தோலாலான **சர்மஜத்தையும்,** 5மீதில் பஞ்சநிறபலவண்ணரத்னகம்பளமாகிற **வாமஜம்** ஆகியவற்றை ஒன்றன்மீது ஒன்றாக துணிமீது படுக்கைவிரிப்பாக அமைத்து, பஞ்சதத்துவத்தால் பூசிப்பது முறையாம்.

40) **சயனாரோபனம். (புதிய சிலையைப்பூசித்த திவ்யஷடத்துவபடுக்கையில்ஏற்றி படுக்கவைத்திருத்தல்)** ஐந்துவிதபடுக்கை அல்லது ஐந்து துணிவிரிப்புக்குமேல். ஒரு படுக்கையை (ஜமுக்காளத்தை) விரித்து, அதன்மேல் புதியபிம்பத்தை எழுந்தருளச்செய்து, படுக்கவைக்கவேண்டும். அதில் பூசித்து, பாலும், பழமும்,நிவேதனம் செய்து, (கேயத்துடன்) வாய்பாட்டுப்பாடி, துயில்கொள்ளச்செய்து நிறைவுசெய்தல்வேண்டும். **சயனாரோபனம்** என்ற கிரியையின்மூலம் மனம் அமைதியை அடையும். இக்கிரியை சிவசக்தியின்லயயகிருத்தியத்தை உணர்த்துவதாய் ஜகன் மங்களம்தருவதாய்உள்ளது.

41) **கர்ப்பக்ரஹ பதவிந்யாஸம் (மூலாலய கருவறைப்பகுத்து வாஸ்துப்படி பூஜை செய்தல்)** புதிய ஆலயத்தின் கர்ப்பக்ரஹத்தினுள்ளே வாஸ்துபதத்தை முறையே அமைத்து, அதில் 53 வாஸ்துதெய்வங்களை பூஜித்து, கருவறையை பகுத்து, தெய்வத்திற்கு உரியபதமாதிய இடத்தை விதிப்படி அறியவேண்டும். இதனால் கருவறைபிரதேசத்திற்கு ஆகர்ஷணதன்மை (ஈர்ப்புத்தன்மை) மேலோங்கிவளர்ந்து, அது நன்மையைஅளிக்கும். தேவதைகள் வசித்திடதகுதி உடையதாகஆகும்.

42) **விமானப்ரதிமாசுத்தி. (மூலக்கோயில்(விமான)சிற்பங்களின் சடங்குகளை முடித்தல்),** சில்பசாஸ்திரமுறைப்படி அமைக்கப்பட்டு, பஞ்சவர்ணம்தீட்டிய மூலவிமானத்தின் நான்கு திசையில் சுதையாகஉள்ள கந்த, தக்ஷிணாமூர்த்தி பிரம்மா, விஷ்ணு ஆகிய 4திசா மூர்த்தங்களை அலங்கரித்து செய்யவேண்டும். பிறகு சிற்பங்களுக்கு கண்திறத்தல் போன்ற சடங்குகளை செய்யவேண்டும். இதனால் பலவிததோஷங்கள் அகலும். விமானத்தின் அதிஷ்டனாம், பாதம், பிரஸ்தரம், கண்டம், சிகரம், ஸ்தூபி ஆகிய ஆறுஉறுப்புகளிலும், அதன் உட்கூறுகளிலும் 64சக்திகலைளையும், ஆறுஅத்வாக்களையும் நியாசம் செய்து, ஷடத்வரூபமாய் கலாமயமாக ஆக்குவதே விமானசுத்தியாம்.

43) **விமான சூளிகாஸ்தாபனம். (விமானம்,கோபுரம், இவற்றில்ஸ்தூபிமகுட கலசத்தை பொருத்துதல்),** மூலாலயவிமானத்தில், உச்சிநடுவில்

ப்ரஹ்மரந்திரஸ்தானத்தில் மூடிவைக்கப்பட்டுள்ள தலைக்கல்லின்மீது, நவரத்தினங்கள், பொன், வெள்ளி முதலிய நவ உலோகங்கள், நவதானியங்களைபோட்டு, ஸ்தூபிதண்டத்துடன் வரவுதானியம் நிரப்பிய கலசத்தை நடுவிலே நிலைநிறுத்தி, ஜடிபந்தனத்தினால் அக்கலசம் அசையாமல் இருக்குமாறு, செய்யவேண்டும். இதுஆலயத்தின் முடிசூட்டும்நிகழ்ச்சியாகிய **மகுடாரோபணம்** ஆகும்.

44) த்வார கவாட ஸ்தாபனம். (மூலாலயத்தில் தோரணவாயிலில் இருகதவுகளைப் பொருத்தி துவாரபூஜையை செய்தல்), துவாரத்தின் மேல் வலதில் கணபதி, இடதில் சரஸ்வதி, இவ்விருவரின் நடுவில் மஹாலக்ஷ்மி ஆகிய மூவரையும், த்வாரத்தின் வலதில் நந்தி, கங்கையையும், துவாரதின் இடதில் மஹாகாலன் மற்றும் யமுனையையும், துவாரமேற்பரப்பில் பதங்கள், கீழ்பரப்பின் புவங்கன், வலதுதூணில் நித்யன், இடதுதூணில் அகம்பனன், வலது கதவில் விமலன், இடதுகதவில் சுபாஹூ, கதவுபட்டையில் ஸ்கந்தன், வலதுவளையத்தில் சூரியன், இடதுவளையத்தில் சந்திரன், ஒவ்வொருகதவின் ஆனியிலும் நவசக்திகள், கதவின் ஒவ்வொரு ஒட்டைமுடிவிலும் சிவன், ஆதாரத்தில் அஸ்திரதேவன், வாயிலின்முன் விருஷபர், பூமியின்விக்னமகற்றிட விக்னாத்யக்ஷர், நடுவில் மேலுலக்கத்துஇடையூறைஅகற்ற விக்னராஜர், சுவர்கலோகத்து இடர்நீங்க விக்னேஸ்வரர் என இப்படிமூவகைஇடர்களை நீக்கிடபூசித்து, மூலாலயத்தின் தோரணவாயிலில், இருகதவைப்பொருத்தி, நித்தியதுவாரபூஜையைச் செய்ய வேண்டும். ஆலயநுழைவாயில் என்பது ஞானசக்தி எனும் இறைவனின்சக்தியேஆகும். இறைவனைக்காணஉதவும் கண்போன்றுஉள்ளது திருநிலைத்தோரணவாயிலாகும். மூலக்கருவரையில் கதவு இன்றி, ஞானம், கிரியை எனும் இருசக்திகள் வடிவாய் சக்திதுவாரம் என்பது விளங்கும். எனவே இதற்குவெளியே முகமண்டபத்திலேயே நித்தியதுவாரபூசை செய்யப் படவேண்டும்.

45) கர்பகேஹபீடஸ்தாபனம். (கருவறையில் சிலையின் ஆதாரபீடத்தை ஸ்தாபித்தல்). கர்பகேஹஸ்ய மத்யேது பீடம்ஸம்ஸ்தாப்ய தேசிக: எனும் கூற்றின்படி, கருவறைப்பகுதியை புண்யாஹவாசனம், பஞ்சகவ்யத்தால் சுத்திசெய்து, பூமியைபூஜித்து, கர்ப்பக்ருஹத்தின் நடுவில் (மத்யஸ்தானத்தில்) தெய்வத்திற்குஉரிய பதமாகிய இடத்தில், ஆதாரசக்தியைப்பூஜித்து, பிம்பத்தின்பொருட்டு, அடிப்படையான சிலாமயமான ஆதாரசிலாஸ்தாபனம் என்கிறதும், மூலசிலைவைக்கஉள்ள ரத்தினநியாஸத்திற்குஉரியதுமான ஆதாரபீடத்தை வலுவாக நிலை- நிறுத்தவேண்டும்.

46) ஜடிரத்தின ந்யாஸம். நிலையாகவைக்கஇருக்கும் சிலையின் அடிபிரதேசத்தில், பீடத்தில் இரத்தினம் முதலானவைகளை முறையே மந்திரத்தால் வைப்பது ரத்தின நியாஸம் எனப்படும். பீடத்தினுள்ளே, சிலையின் அடியில் குறிப்பிட்ட ஸ்தானத்தியே அந்தந்த இரத்தினங்களை வைத்திடவேண்டும். அது நடுவில் மாணிக்கம், தென்கிழக்கில் முத்து, தெற்கே பவழம், வடகிழக்கில் மரகதம், வடக்கில் புஷ்பராகம்,

கிழக்கில் வைரம், மேற்கில் இந்திரநீலம், தென்மேற்கில் கோமேதகம், வடமேற்கில் வைடூரியம் இவ்வாறு முறையாக வைத்திடவேண்டும். இவற்றின்முறைகள் மாறுபடும். மேலும் 9 வகைஉலோகம், 9வகைதானியம், 9வகைமூலிகை, 9வகைதாதுக்களையும் முறையே வைத்தல்வேண்டும். ஐவகையாக இவற்றினை வைப்பதால் அச்சிலைக்கு, வீரியம், காந்தி, ஜீவசக்திகள், ஆகர்ஷணாதிஸித்திகள், எண்குணங்கள், அஷ்டமாசித்தி தரும்வல்லமை கைகூடும் என்கிறது ஆகமம்.

47) பீஜாக்ஷரயந்திர ஸ்தாபனம். (தெய்வத்தின் நாதமயமந்திரம்உள்ள யந்திர ஒலித்தகட்டை வைத்தல்) "தத்தத் பீஜம்து ஸம்நியஸ்த்வா பீடமத்யே விநிக்ஷிபேத்" எனும் வசனத்தால் வைக்கப்படுகிறது. யந்திரம் என்றால் இயக்குவிக்கின்றது என்பது பொருள். தெய்வத்தின் நாதமந்திரத்தால் ஒருமண்டலம்பூஜித்த யந்திரஒலிதகட்டைவைத்து, மூலபீஜா-க்ஷரத்தைக்கூறி பூஜைசெய்து ஸ்தாபனம் செய்யவேண்டும்.

48) பிம்பஸ்தாபனம். (கருவறைபீடத்தில் தெய்வசிலையை நிலைநிறுத்துவது) கர்பக்ருஹத்தில் பீடத்தின்மேல் பிம்பத்தை ஜடிபந்தனத்தால் சரியாக வலுவுற அமர்த்தி வைக்க வேண்டும். **"நிஷ்களம் பிரம்ம பாகே து ஸகளம் தைவிகாம்சகே"** என்ற பூர்வாகமிக படலம் 67-ன்படி லிங்கத்தை நடுவிலும், உருவச்சிலைகளை அடுத்த தைவிகபதத்தில் உள்புறம், பின்புறம்தள்ளியும் வைத்தல்முறை. ஆலயத்தின் தோற்றத்திற்கு ஏற்றவாறு பிம்பத்தை நிலை- நிறுத்தவேண்டும். வாஸ்துசில்பசாஸ்திரமறிந்த ஸ்தபதியைக்கொண்டு வாயிலின் உயரஅளவுக்கு ஏற்ப பக்கப்பார்வை, மேல்பார்வை, கீழ்பார்வை, சூத்திரதோஷம், ஸ்தாபனதோஷம், போன்ற குற்றங்கள் இல்லாதவாறு சமதிருஷ்டியுடன், மிகவலுவாக என்றுமே அசையாதவகையில் ஸ்தாபிக்கப்படவேண்டும். வலுவூட்டும்திடகர்மாவைசில்பியும், அருளூட்டும் மந்திரகர்மாவை ஆசாரியரும் என சேர்ந்தும்பகுத்தும் ஆகமமுறைப்படிசெய்திடவேண்டும்.

49) பிம்ப அஷ்டபந்தனம். (1) சுக்காங்கல் (2) குங்கிலியம் (3) நற்காவி (4) ஜாதிலிங்கம் (5) அரக்கு (6) மெழுகு (7) செம்பஞ்சு (8) எருமைவெண்ணெய் என்ற எட்டுவகை பொருட்களின் சேர்க்கைதான் **அஷ்டபந்தனமருந்து.** இந்தமருந்தினை இடித்தும்உருக்கியும் பிம்பத்தையும், பீடத்தையும் இணைத்திடுமாறு, இடைப்பட்ட இடுக்கில்சேர்த்து அழுத்தமாகப்பூசிக் கட்டுதல்வேண்டும். இதில் ஐந்துபொருட்களாலானவை **பஞ்சபந்தனம்** என்றும், மூன்றுபொருட் கலவையாலானது **திரிபந்தனம்** என்றும் முறைஅறிந்துபயன் படுத்தப்படவேண்டும். இதனால் தெய்வஅருள்நோக்குநிலை பெற்றதாயிருக்கும். இதனை விலகிவிடாமல்கண்காணித்து எப்பவும் பாதுகாக்கவேண்டும்.

50) ஸ்வர்ணபந்தனம். (அஷ்டபந்தனத்தின்மீது, பொன்தகட்டைமூடியாகப் பதித்தல்) தங்கத்தினால்பீடத்தையும், பிம்பத்தையும்இணைத்தலை, தங்கத்தைஉருக்கி,

இடுக்கில்ஊற்றியோ தகட்டைப்பொருத்தியோ பீடத்தையும் பிம்பத்தையும் நன்குவிலகிடாதவகையில் சுவர்ணத்தினால் கட்டிஇணைத்திடுதல் சுவர்ணபந்தனம் எனப்படும்.

51) யாகசாலா க்ஷேத்திரசுத்தி. (யாகசாலைபகுதியில் பிராம்மணபோஜனம் செய்வித்தபின்பு, பசுஞ்சாணத்தால்அவ்விடத்தைமெழுகி, கோலமிட்டு புண்யாகத்தால் சுத்திகரித்தல்) எந்தஒருஇடமும் சுத்தம்பெற்றுபுனிதமாக இருக்க வேண்டுமென்றால், அந்த இடத்தில் கையகப்படுத்திபயன்படுத்துவதற்கு முன்னதாக, முதலில் பிராம்மணபோஜனத்தை செய்வித்து, பசுஞ்சாணத்தால்மெழுகிசுத்தப்படுத்தி, கோலமிடுதல் வேண்டும். பின்பு மாவிலை-தோரணாதிகளால் அலங்கரித்து, பிராமணர்களுடன் சுத்திபுண்யாக வாசனகிரியையைச்செய்து, புனிதநீரைத்தெளித்திடவேண்டும். மேலும் வாஸ்துபத 53தேவதைகளைப்பூசித்து, அன்னபலியை தந்து, சிவாக்னித்தீயால் தரையில்சுற்றிபரியக்னீகரணம் செய்தும் சுத்திசெய்யப்படவேண்டும். யாகசாலைக்கென உரிய இடம் அவ்வாறே சுத்தம் செய்யப்பட வேண்டும்.

52) யாகாலய, த்வாரதோரணாதிஸ்தாபனம். (வேள்விச்சாலையில் நான்குவாசக்-கால்களஈ எண்திசைகொடிகள், பதாகைகள், தீபங்கள் இவற்றைவைத்தல்) யாகாலயத்தின்நான்குதிசையிலும், பொரசு, அத்தி, அரசு, ஆல், ஆகிய நால்வகைமரத்தாலான நான்குதுவாரவாயிற்கால்களை அமைத்தும், அவற்றிற்குமேலும் 8திசைகளிலும் ஆகஎட்டுதிசைக் கொடிகளையும், வேதிகைகள், ஸ்நானவேதிகைகள், அந்தராளங்கள் இடைப்பட்டபயன்பாட்டுப்-பகுதிகள், அஷ்டமங்களங்கள், தசாயுதங்கள் போன்றவைகளால் யாகசாலையை அழகாக அமைத்தும் அலங்கரித்தும் முன்னதாக நிர்மாணிக்க வேண்டும்.

53) சில்பி விஸர்ஜனம். இது கோயில், சிலை, யாகசாலை, யாகஉபகரண தொழிற் கருவிகள் இவற்றைஅமைத்துஅளித்தோரை மகிழ்வித்து, கௌரவித்து, வழிஅனுப்புதல். "சில்பிகிருத்யம் புரா கிருத்வா, பச்சாத் து குரு கிருத்யகம" என்றும், "சில்பினம் பூஜயேத் ஸம்யக் வஸ்திரஹேமாங்குளீயகை:" என்றும், ஆகமம் கூறியபடியே கர்மஆசாரியராகிய சில்பியை தக்கசன்மானத்தோடு, தாம்பூலம், வஸ்திரம் போன்றவற்றால் மகிழ்வித்து போற்றி, கவுரவித்து, பணிகள் யாவற்றையும் அவரிடமிருந்து நிறைவுறப்பெற்றபின்பு அனுப்பிவைத்திட வேண்டும். இதுவே சில்பிவிஸர்ஜனம் எனும் பூர்வாங்ககிரியை ஆகும்.

55) வாஸ்துசாந்திஹோமம். (பிரம்மாதி 53 நிலப்பகுதிதெய்வங்களைப்பூஜித்து, தீயால்தரைகட்டிடத்தை சுத்திகரித்தல்) "வாஸ்துஹோமம் பிரகுர்வீத பர்யக்னி

கரணான்விதம்" என்றவாறு பிரதிஷ்டைக்கும், உத்ஸவத்திற்கும் முன்பாக **வாஸ்துசாந்தி** என்ற கிரியையைச்செய்யவேண்டும். வாஸ்துசாந்திபூஜையை செய்யாமல் செய்யப்படும் மற்ற எல்லாகாரியங்களும் வீணாகும் என்று அறியவும். வாஸ்துசாந்தியில் புருஷதேவதைகளுக்கு **மண்டூகபதம்** என்றமுறையிலும், (கிழக்கு வடக்கு முனைகளாக ஒன்பதுகோடு கொண்டவை) பெண் தெய்வங்களுக்கு **பரமசாயிகபதம்** என்றமுறையிலும், வாஸ்துபதத்தை (பத்துகோடு கொண்டவை) அமைத்து, அதில் பிரம்மாதி முதலாக நிலப்பகுதியின் 53 தெய்வங்களை பூஜிக்க வேண்டும். வாஸ்துபுருஷனின் தோற்றமானது, ஆகமத்தில் கூறப்படுதாவது, அந்தகாஸுர-ஸம்ஹாரத்தின்போது சிவபெருமானுடைய வேர்வைத்துளியானது, பூமியில்விழுந்தது, அந்த வேர்வைத்துளியிலிருந்து உண்டானவன் வாஸ்துபுருஷன். அவன் சிவபெருமானிடமிருந்து வரம் பலபெற்று, உலகத்தையே அழிக்கும் **நோக்கத்துடன்** தனது பிரம்மாண்டமான சரீரத்தினால் உலகத்தையே வியாபித்து நின்றான். பூமியெங்கும் அவனாகவே இருந்தான். சிவபெருமானின் கருணையினால் **அதிபலன்** என்ற ருத்ரனை உருவாக்கி, மாயாபாசங்களினால் வாஸ்து-புருஷனைகட்டுவித்து, பூமியில்படுக்கவைத்து, அவனுக்கு உடல்மீது 53தேவர்களை (வாஸ்து-புருஷன் எழுந்திருக்காவண்ணம்) ஆங்காங்கு இருக்குமாறு செய்தார். வாஸ்துபுருஷனையும், 53தேவதைகளையும் பூஜித்து, அன்னத்தால் பலிஸமர்ப்பணம்செய்யவேண்டும். அக்னிகார்யம் செய்து, வாஸ்துதேவதைகளுக்கு ஆஹுதிகொடுத்து, பூர்ணாஹுதிசெய்யவேண்டும். யக்ஞவிருக்ஷங்களாலோ, தர்பையினாலோ பொம்மையைகட்டுவித்து, வாஸ்துபுருஷனை பாபதேவனாக பூஜைசெய்து, ஹோமகுண்டத்தின் சிவாக்னியில் ஜ்வலிக்கச்செய்து, அந்த எரியும் (மோதுகட்டை அல்லது) பொம்மையோடு சுற்றுபிராகாரத்தை வலம்வந்து, பிரம்மகும்ப புண்யாகஜலத்தினால் எங்கும் புரோக்ஷணம் செய்யப்படவேண்டும். வாஸ்துபுருஷன் உலகத்தையே விழுங்குவதற்கு முற்பட்டமையால், ஜகதண்டரூபமாக (உலகஉருண்டையாக) விளங்கும் பூசணிக்காயையே உலகமாமிசபலியாக பாவித்து, அளித்து, இந்தயாகத்தையும், ஆலயத்தையும் காத்தருளவேண்டுமாய் பிரார்த்திப்பதுடன் **வாஸ்துசாந்தி** என்கிற ஸம்ஸ்காரம் முடிவடைகின்றது.

55) ஸ்தாபிதபிம்பசுத்திஸ்நபநம். (புதுச்சிலையை சுத்தமாக்கிட 16வகை பொருள்கள் நிறைந்த, பூசித்தகலசநீரால் முழுக்காட்டி புனிதமாக்குதல்).
16வகைதீர்த்தகலச ஸ்தாபன முறை (1) மிருத்திகாஜலம், [1]க்ஷேத்ரம், [2]மரத்தடி, [3]தர்பையடி, [4]மலை, [5]கடல், [6]நதீ, [7]நண்டுவளை, [8]வயல் இவற்றின் மணவகைகளும், புற்றுமண், காளைக்கொம்புமண், யானை தந்த மண் போன்ற அரிய புண்ணிய மிருத்திகை கைபிடிஅளவில் சேர்த்த **மிருதம்பகலசம்.** (2) [1]நாவல், [2]மா, [3]அரசு, [4]ஆல், [5]அத்தி ஆகிய 5வகை மரப்பட்டைகள்ஊரிய **காஷாயோதகம்.** (3) அலரி, மருதம், வில்வம், துளசி, வன்னிஆகிய 5வகைஇலைகள்ஊரிய **பத்ரோதகம்,** (4) சூரியகாந்தம், சந்திரகாந்தம்,

அயக்காந்தம்ஊரிய **காந்தோகம்.** (5) விளாமிச்சம்வேர், வெட்டிவேர், சந்தனவேர் ஊரிய **மூலோதகம்.** (6) ஸகதேவீ, நெருஞ்சில் முதலிய மூலிகைகள் ஊரிய **மார்ஜோனதகம்.** (7) அருகுமுனை, தர்பைமுனை, தும்பைமுதலானவைஊரிய **பரிமார்ஜனோதகம்.** (8) வாசனைப் பொருட்கள் சேர்ந்த **சுகந்தோதகம்.** (9) உரியமலர்வகைஊரிய **புஷ்போதகம்.** (10) முக்கனி முதலிய கனிவகைஊரிய **பலோதகம்.** (11) ரத்தினங்கள் இடப்பட்ட **ரத்னோதகம்.** (12) நீவாரம், தினை, யவம், சியாமை, சாலிமுதலியனஇட்ட **பீஜோதகம்.** (13) தானியநீர், உலோகவகைகள் இடப்பட்ட **உலோகோதகம்.** (14) சந்தனம், குங்குமப்பூ, கற்பூராதியிடப்பட்ட **மான்யோதகம்.** (15) மான்கொம்பு, காண்டா மிருககொம்பு, யானைதந்தம் இவைகள் ஊரிய **சிருங்கோதகம்.** (16) தெய்வங்களின் ஆயுதங்கள், உலோசின்னங்களாய் ஊரிய **அஸ்திரோதகம்** என்கிற இந்த 16வகைபொருட்களால், 16வகைகும்பதீர்த்தங்களைத்தயாரித்துவைத்து, அஷ்டவித்யேச்வரர்கள், மற்றும் லோகபாலகர்களின் மந்திரங்களால் பூசித்து, முறையே இவற்றால் புதுச்சிலையை முழுக்காட்டி, பார்த்திவபாஞ்சபௌதிகதன்மையைநீக்கி, தெய்வீகபுனிததன்மையைஅடைவித்து, சுத்திசெய்வதே **பிம்பசுத்தி** எனும் கிரியையாகும். மூலாலயத்திலுள்ள பிம்பத்திற்கு அரிய பொருட்களாலும், புண்யா"வாசனம், பஞ்சகவ்யம் இவற்றினாலும், வேதசாந்திமந்திரங்கள், ஆகமத்தின் ஸம்ஹிதாமந்திரம், 81பதமந்திரங்கள், மாலாமந்திரங்கள், இவற்றால் புதுசிலையை நீராட்டி,அபிஷேகித்து, சுத்திசெய்தல், கும்பாபிஷேகத்திற்குமுன்பாக பலரும்தீண்டிய மாசுஅகலச் செய்யவேண்டிய **பூஜ்யபிம்பசுத்திஸ்நபனம்** ஆகும்.

56) மிருத்ஸங்கிரஹணம். (பூமிதேவியைப்பூஜித்து, யாகத்திற்கெனயாசித்து, திருமண்ணைப் பெற்றுவருவது). கிழக்கு, மேற்கு முதலிய உரியதிசையில் மண் எடுக்கப்படவேண்டும். ஆற்றங்கரை, குளக்கரை, தர்பையடி, மலைப்பகுதி, புற்று, சுத்தமான பூந்தோட்டம் போன்ற இடத்திலிருந்து பூமிதேவியை பூஜித்து, மண்ணை எடுத்துவரவேண்டும். மண்எடுப்பு முறையானது விரிவாயும், சுருக்கமாகவும் பலவாறு கூறப்படும். விசேஷமானமுறையில் இதற்கென அங்கு ஒருபந்தலை அமைத்து, வாத்யகோஷங்களுடன், மேற்கில், கிழக்குமுகமாக அஸத்ரராஜரையும், வடக்கில், தெற்குமுகமாகசண்டேஸ்வரரையும், மண்வெட்டியை வடகிழக்கு-திக்கிலும் வைத்து, புண்யாஹவாசனத்தினால், அவ்விடத்தை முதலில் சுத்தம்செய்து, பூமி தேவியை உருவமாக தரையில்அமைத்து, பூமிதேவியின் மேற்குபாகத்தில் 9 கட்டம் (கோஷ்டம்) அமைத்து, அதனருகில்7கும்பத்தைவைத்து, அதில் ஏழுகடல்களை (ஸமுத்திரத்தை) பூஜித்து, அவர்களுக்கு தத்யன்னத்தால் பலிகொடுத்து, **"ஈஸ்வரகாரியத்தின்பொருட்டு மண்ணை எடுக்கிறோம்"**, என்று பிரார்த்தித்து, பூமிதேவியின் வெளிபாகத்தில் தர்பையால் பரிஸ்தரணம் அமைத்து, இந்திராதி 8லோகபாலகர்களையும் பூஜித்து, உளுந்துடையபொங்கலினால் அவர்-களுக்கு பலிகொடுத்து, **"யாகத்தின்பொருட்டு மண்எடுக்கிறோம்"** என்று லோகபாலகர்-

களையும்வேண்டி, பூசுக்தம்ஜபித்து, மாவிலை, தர்பைகூர்ச்சத்துடன்கூடிய, மண்வெட்டியை தைலாதிபஞ்சகவ்யத்தினால் நீராட்டி, சுத்தம்செய்து, கேசவனைபூஜித்து, மண்எடுக்கும் பாத்திரத்தில், சக்தியைபூஜித்து, "தேவஸ்யத்வா" என்ற வேதமந்திரத்தால், பூமிதேவியின் வயிற்றுபிரதேசத்தில் அஸ்திரமந்திரத்தைக் கூறி, மூன்றுமுறை தேங்காய்அளவில் மண்ணை எடுத்து, அதனை பூசித்தபாத்திரத்தில் வைக்கவேண்டும். ஆசாரியர் பூமிதேவியின் வயிற்று பிரதேசத்தில் மண்எடுத்த தோஷத்திற்காக அந்தபிரதேசத்தை சமமாகசெய்து, முன் பூஜித்த ஏழுசமுத்திரத்தின் கலசநீரால் அங்கே அபிஷேகம் செய்யவேண்டும். பிறகு அனைத்தையும் உத்வாஸனம் செய்யணேண்டும். நெல் முதலிய தானியத்தை வயிறு ப்ரதேசத்தில் போடவேண்டும். பிறகு மண்எடுத்த பாத்திரத்தில், புஷ்பம், அக்ஷதை, கூர்ச்சம் இவைகளை வைத்து, பட்டுத்-துணியால்மூடி, அதில் ப்ரம்மாங்கமந்திரத்தைஜபித்து, பிராமணர்களுக்கு தக்ஷிணைகொடுத்து, அதனை பல்லக்கிலோ, யானையிலோ, பரிசாரகனுடையதலையிலோ வைத்து, ஆசார்யன் தர்பமுஷ்டியினால் தொட்டுகொண்டு, ஆலயத்தை வாத்யகோஷங்களுடன்வலம்வந்து, யாகசாலையில் அங்குரார்பணவேதிகையின் அருகில் வைக்கவும். இவ்விதம் உபசரிப்புடன் மண்எடுத்து வருவதே **மிருத்ஸங்கிரஹணம்** எனப்படும்.

57) யாகசாலாஸம்ஸ்காரம். (யாகசாலையினுடைய புனிதசடங்குகளை முடித்தல்). புண்யாஹவாசனஜலத்தினாலும், பஞ்சகவ்யத்தினாலும் யாகசாலையில்தெளிக்கவும், [1]நீரீக்ஷணம் (பார்த்தல்), [2]புரோக்ஷணம் (தெளித்தல்) [3]தாடனம் (தர்பத்தினால்தட்டுதல்) [4]அப்யுக்ஷணம் (கீழ்நோக்கிதெளித்தல்) ஆகிய 4வகைஸம்ஸ்காரத்தினால் யாகசாலையை முதலில் சுத்தம்செய்தல். யாகசாலையின் முழுஅமைப்பையும், பூமியை அகழ்ந்துதோண்டுதல், கனனம் முதலாக கலாமயபரிகல்பனம் வரையிலுமாக பதினெட்டுசம்ஸ்காரங்களும், ஏழுவகையான மந்திரித்த விகிரதிரவியங்களினாலும் சுத்திகரிக்கப்டும்.

58) யாகாலய ஸ்தண்டிலகல்பனம். (வேள்விச்சாலையில் தானியங்களால் கலசம் வைக்க அடிப்பரப்பினைஅமைத்தல்), யாகாலயத்தில் ப்ரதானவேதிகையின் மேல் முறையே, நெல், அரிசி, தான்யம், எள், பொரி, தர்பை ஆகியவை ஒன்றின்மேல்ஒன்று என்று முறைப்படி (கலசத்தின் அடிப்பாகத்தில்) பரப்பிவைத்து, அதன்மீது கலசங்களை ஸ்தாபித்தல் வேண்டும். இவற்றை ஒன்றில் ஒன்று பாதிஅளவாகக் கொள்ளவேண்டும். பரிவாரதேவதைகளுக்கு [1]நெல், [2]அரிசி, [3]பொரி இவை மட்டும் வைத்தால்போதும். ஏழுவகையை ஒன்றன்மீதுஒன்றாக [1]யவம், [2]அரிசி, [3]பயறு, [4]உளுந்து, [5]கோதுமை, [6]துவரை, [7]எள் இவற்றைப்போட்டு சமசதுரமாய் பரப்பி, நடுவில் எட்டு தளமுள்ள தாமரையை கோடுகளால் வரைதல்முறை. இதுவே **தண்டிலம்** அமைப்பதாகும்.

59) யாக, பரிவார கலசஸ்தாபனம். (வேள்விச்சாலையில் சுற்றுகலசங்களை முறையே ஸ்தாபித்தல்), யாகசாலையின் நான்குவாயிலுக்கும், இருபக்கத்திலுமாக, நான்குமூலையிலுமாக, ஆக சுற்றிலும் 27கலசங்களை வைத்தல்முறை. (சுற்றி 28 கலசங்கள் வைத்தல்). இது அந்தந்த பரிவாரகலசஸ்தாபனம் எனப்படும். தெய்வங்களுக்குரிய பரிவாரதேவதைகள் கர்பாவரண தேவதைகள், துவாரதேவதைகள் ஆகியோரைப்பூஜிக்கும் கலசங்களை முறையாக வைத்திடல் வேண்டும். இவைமுறையே. மூன்றுமூலையிலும், 7 வீதமாக, 27ஆகஅமையும். இதனை எட்டு-திக்கிற்கும் முறையே, கிழக்கில் 5ம், தென்கிழக்கில் 1ம், தெற்கில் 4ம், தென்மேற்கில் 3ம், மேற்கில் 5ம், வடமேற்கில் 2ம், வடக்கில் 4ம், வடகிழக்கில் 3ம் ஆக 28 என்று விளக்கி, விதிக்கப்பட்டுஉள்ளது.

60) அங்குரார்பணம். (முளைத்திட, விதைவிதைத்துப்பூசித்தல்). பாலிகையில் விதையை, தானியமுளைகளைவிதைத்து, வளர்த்துப்பயிரிடுதல். அனைத்துமங்களகாரியத்திற்கும் இவ்விதம் **அங்குரார்பணத்தைச் செய்யவேண்டும்.** யாகசாலையில் (வடமேற்கில்) வாயுஸ்தானத்தில் அங்குரார்பணவேதிகையை அமைக்கவேண்டும். 12பாலிகைகள், 16பாலிகைகள், 24பாலிகைகள் போன்ற விதிமுறைக்கு ஒருவகை உகந்ததாக எண்ணிக்கையில் இவற்றை நிறுவி, பொரசு, அரசு முதலான இலையினால் பாலிகைகளின் ஓட்டையைஅடைத்து, முன்பு பூஜித்து எடுத்துவந்த மண்ணை அதில்நிரப்பவேண்டும். கிருத்திகை, சந்திரன், ரோகிணீ, முதலானவர்களை, கும்பத்தில் பூஜிக்கவேண்டும். புண்யாஹவாசனஜலத்தினால், நவதானியத்தை சுத்தம்செய்து, ஓஷதீசூக்தம்ஜபித்து, அவ்விதைதானியத்தை ஒவ்வொரு பாலிகையிலும் அந்தந்ததேவர்களைப்பூஜித்து வைக்கவேண்டும். பிறகு, சந்திரகும்பஜலத்தினால் அனைத்துபாலிகைகளிலும் நீரைவிடவேண்டும். பிறகு சந்திரகும்பத்தில் மீண்டும் ஜலத்தை நிரப்பி, பூஜைசெய்து, தூபதீபம்காட்டி, பாயசான்னம், வெல்லஅப்பம், (குலாபூபம்), தாம்பூலமிவற்றை நிவேதனம்செய்து, தீபாராதனை ஜபசமர்பணம் செய்யவேண்டும். இவ்வாறு யாகமுடிவுவரை தினமும் இருவேளையும், சந்திரனையும், பாலிகைகளையும் பூஜித்து, அவற்றில் அக்கலசநீரைவார்த்து, அங்குரத்தை வளர்த்துவரவேண்டும். வளர்ச்சிக்குறிப்புகளுக்கு ஏற்ப பயனையும், பரிகாரத்தையும் செய்யவேண்டும். யாகம் முடிந்தபிறகு முளைத்தஅங்குரத்தை இறைவனுக்குசாத்தி, மீதியை ஜலத்தில் கரைக்கவும்.

51) ரக்ஷாபந்தனம். (ஆசாரியர், ப்ரதிஷ்டைவரை புனிதம்நிலைத்திட, கையில்காப்பு கட்டிக்கொள்ளுதல்). ஆசார்யர் பிரதிஷ்டையின் பொருட்டு, ஸங்கல்பம் செய்துகொண்டு, தட்டின்அடியில் ஆதாரசக்தியையும், (திரிபாதி)முக்காலியின் கால்களில் [1]ஆத்மதத்வம், [2]வித்யா-தத்வம், [3]சிவதத்துவம் மூன்றையும், கைகாப்புவளையத்தில் வாசுகீ என்ற நாகதேவரையும், தட்டில்பிரகிருத்திதத்துவத்தையும், தாம்பூலத்தில் மஹாலக்ஷ்மியையும், தேங்காயில் ருத்ரனையும், வாழைப்பழத்தில் கணபதியையும்,

விபூதிமடக்கில் மாயாசக்தியையும், விபூதியில் லகுலீஸ்வரரையும், தங்கம், வெள்ளி, பட்டுபெருத்திநூல்களில்அமைந்த ரக்ஷாசூத்திரத்தில் அனந்தாதிஅஷ்டநாகங்களையும், பருத்திநூலில், தத்வத்ரயத்தையும், முறையேபூஜித்து, சந்தனம், புஷ்பம்சாத்தி, தூபதீபநைவேத்தியங்களைசெய்து, நமோ அஸ்து ஸர்பேப்யோ என்ற வேத-மந்திரத்தைக்கூறி, ப்ரதிஸரமந்திரம், ஆயுஷ்யசூக்தம், வேதாரம்பமந்திரம் போன்ற வேதாகம மந்திரங்களால் ரக்ஷாபந்தனத்தை அபிமந்திரித்து, திரயம்பகமந்திரத்தால், ரக்ஷாபந்தனத்தை ஆசார்யரின் வலதுகையில் அஸ்திரமந்திரத்தால் நன்றாக முடிச்சுபோட்டுக்கட்டவேண்டும். ரக்ஷாபந்தனத்தைலிங்கங்களுக்குருத்ரபாகத்திலும், பீடத்திற்கு தண்டுபாகத்திலும், மாஹேச்வர- புருஷபிம்பங்களுக்கு வலதுகையிலும், சக்திபிம்பங்களுக்கு இடதுகையிலும், த்ரிசூலத்தில் நுனியில் நடுவிலுள்ளபத்திரத்திலும், மண்டபத்திற்கு தூண்நடுவிலும், விருபஷபத்திற்க்கு கொம்புகளுக்குநடுவிலும், தேருக்கு குட்மலத்திலும் (அச்சுப்பகுதியில்) கட்டவேண்டும். ரக்ஷா எனும் சொல்லில்உள்ள "ர" என்ற எழுத்தினால் அனைத்தையும்சேர்க்கும் திறனும், "க்ஷ" என்ற எழுத்தினால் பாபம்விலகும் என்பதும் பொருளாகும். "ரக்ஷா" என்றசொல்லினால் அனைத்தும் அமைதியோடு சித்திதரும், செயல்திறன்கூடும் என உணர்த்தப்படும். ரக்ஷாஸூத்திரம் என்பது 21, 11, 7 ஆகிய எண்ணிக்கையில் நூலினால் செய்யப்படுவதுஆகும்.

62) யாகாதஜ வஸ்திரதானம். (வேள்விக்கென உயரியபுத்தாடையை ஆசாரியர் உடுத்திக்கொள்வது). "நவ வஸ்திரோத்தரீயம்ச உஷ்ணீஷம் சைவ தாரயேத்" ஆசாரியர் வேள்வியின்பொருட்டு உயரியபுத்தாடையை அணிந்துகொண்டு, கிரியைகளைச் செய்யவேண்டும். புத்தாடைஉடுத்தாது செய்யப்படும்செயல் புனிதமுடையதாக ஆகாது. பிரதி வேளையும் புத்தாடைகளை உடுத்துவது புனிதம் காத்திட அவசியமாகும்.

63) பிரஸன்னபூஜை. (ஆலயமூர்த்திகளுக்கு சிறப்புகாலத்தில் சாந்நித்யத்திற்கு தெய்வப்ரீதிபூஜையை செய்வது). தெய்வசாந்நியத்தின்பொருட்டு, அந்தந்த மூர்த்திகளுக்கு முறைபடி ஸ்நபனகலசபூசை, ஹோமத்துடன், ஸ்நபனாபிஷேகத்தையும், விசேஷபூஜையை தூப-தீபாதிஜபாந்தமாகவும், செய்துமுடித்து, விசேஷமாக பஞ்சாஸநஷடத்வநியாஸத்துடன் லயாங்க-போகாங்கபூசையுடன், விரிவாகபூசித்து, அமுதம்நிவேதித்து, செய்யஉள்ளநிகழ்ச்சிபற்றி இறைவனிடம் அறிவிப்புகளை விண்ணப்பித்து, வேண்டுதலே பிரசன்னபூஜை எனப்படுகிறது.

64) ஆலயமூர்த்திஹோமம். (கோயில்மூர்த்திக்காக 9கலசபூஜையுடன் ஹோமம் செய்தல்). 9கலசங்களை நிறுவி, பூஜித்து, ஹோமம்செய்து, அக்கலசங்களின் நீரினால் கோயிலின் அமையஉள்ள மூர்த்திகளுக்கு அபிஷேகித்தல். இதனால் மூர்த்திகளுக்கு விசேஷ-ஸாந்நித்யம் ஏற்படும். ஸகலதோஷங்களும் விலகும்.

65) திசாஹோமம். (கோயிலில்4திசையிலும் 4வகையான அஸ்திரமந்திரத்தால் ஹோமம்செய்தல்). திசாஹோமம் நோக்கத்தால் இருவகை. ஒன்று ஸ்நபனாங்கம் மற்றொன்று பிராயச்சித்தாங்கம். லிங்கம், பிரதிமை, பீடம், பிராசாதம், மண்டபம், கொடிமரம் இவைகளில் எங்கே தோஷமேற்பட்டதோ அங்கே, நான்குதிக்கிலும், வ்ருத்தகுண்டம் அல்லது சதுரகுண்டம் நான்குஅமைத்து, கிழக்கில் சிவாஸ்திரம், தெற்கில் அகோராஸ்திரம், வடக்கில் பிரத்யங்கிராஸ்திரம், மேற்கில் பாசுபாதஸ்திரம் இவைகளை, முறையாக கும்பங்கள்வைத்து பூஜித்து, சமித்து, நெய், எள், பால், வெண்கடுகு, அருகம்புல், மதுரத்ரயம், பலத்ரயம், சுத்தான்னம் போன்ற திரவியங்களால் ஹோமம் செய்யவேண்டும். பிறகு அந்தந்த திக்கில், அந்தந்தகலச நீரினால் தெளித்து, புரோக்ஷணம் செய்யவேண்டும். ஒரேஇடத்திலேயும், இவ்வாறாகவே ஒருவேதிகை, ஒருகுண்டம் என்று அமைத்தும், இதனைச்செய்யலாம். இதன்பயன் ஸர்வசாந்தி ஏற்படுவதாகும். அவ்வளாகத்தில்இருந்த துர்தேவதைகள்விலகிட அங்கு, மாந்திதீகமான பாதுகாப்புவளையம் ஏற்படும்.

66) ஸம்ஹிதாஹோமம் (சைவாகமத்துமந்திரங்களால் அதிகஅளவில் ஆகுதி-யுடன் ஹோமம்செய்தல்), [1]ஈசானம், [2]தத்புருஷம், [3]அகோரம், [4]வாமதேவம், [5]ஸத்யோஜாதம், [6]ஹ்ருதயம், [7]சிரசு, [8]சிகா, [9]கவசம், [10]நேத்ரம், [11]அஸ்திரம் ஆகிய, **ஸம்ஹிதாமந்திரம்** எனப்படுகிற பதினோறு மந்திரத்தால் 108முறையோ, 1008முறையோ அன்னம், நெய், நாயுறுவி சமித்து, ஆகியதிரவியங்களால், ஸம்ஹிதாஹோமம் செய்யப்படவேண்டும். விடுபட்டதும், அறியாமல். ஏற்றபட்டதுமான ஸகலதோஷங்களையும்போக்கி, தெய்வசாந்நித்யம் ஏற்படச் செய்வது இதன் பயனாகும்.

67) பாசுபதாஸ்த்ரஹோமம். (சிவனின் பாசுபதாஸ்திரமந்திரத்தினால் 1008ஆகுதி- களுடன் ஹோமம்செய்தல்), பாசுபதாஸ்த்ரஹோமத்தில் நாயுருவி அல்லது வில்வசமித்தும், நெய், பால், எள், வெண்கடுகு, அருகம்பில், மதுத்ரயம், பலத்ரயம், அன்னம் அல்லது பாயசம் போன்ற திரவியங்களால் 1008முறை ஆகுதிகளைச் செய்யவேண்டும். பாசுபதாஸ்திர கும்பம், அஸ்திரகும்பம், 8திசையின் ஆயுதகலசங்கள் இவற்றில் பூஜையை செய்திடவேண்டும். இப்புனித- நீரால் முடிவில் சாந்தியின்பொருட்டு எங்கும்தெளித்திடவேண்டும். இதில் **"குறைகள் இருப்பின் பொருத்தருள வேண்டப்படும்".**

68) தீர்த்தஸங்கிரஹணம். (புனிதநதியின் நீர்நிரப்பியகுடத்தைப்பூஜித்து, கங்கையை அழைத்துவருதல்). கங்கா, யமுனா, நர்மதா, சிந்து, காவேரி, கோதாவரி, சரஸ்வதி போன்ற ஏழுநதிகளில் இருந்து, ஏழுகுடத்தில் தனித்தனியாக பூஜித்து, நீரைநிரப்பி, ஆலயத்திற்கு அழைத்துவருதல். இதுயாகத்தின் மஹாகும்பத்தில் சேர்த்திடுவதற்காக சேமிக்கப்படும் புண்ய தீர்த்தங்களின் சிறப்புஅழைப்பு பூசையாகும்.

69) யாகஅக்னி உத்பாதனம் (சூரியஒளி அல்லது மரக்கட்டையிலிருந்து வேள்வித் தீயை புதிதாய் தோற்றுவித்தல்). யாகத்திற்கு வேண்டிய அக்னியை உண்டாக்குவதற்கு சூரியமந்திரத்தைக்கூறி, சூரியகாந்திகண்ணாடியின்மூலமாக, (குவிலென்ஸ்) அக்னியை புதிய மண்சட்டியில் உண்டாக்கவேண்டும். மரக்கட்டையாலான அக்னியை உண்டாக்கவேண்டும். அல்லது தேங்காய்நார், பருத்திபஞ்சை அடையில் வைத்து, இருஅரணிக்கட்டையை கயிற்றால் சூடுஏறக்கடைந்து, அக்னியை உண்டாக்கவேண்டும். அல்லது பிராமணர்கள் நித்தமும் வீட்டில் இடைவிடாது, அணையாது செய்துவரும் ஔபாஸனஅக்னியிலிருந்து வேண்டிப்பெற்று (ஔபாஸனஹோமம்செய்த) அக்னியை உபசாரத்துடன் அக்னிதேவரை யாகசாலைக்கு அழைத்து வரவேண்டும்.

70) அஷ்டமூர்த்திஹோமம். (இயற்கையின் எட்டுவடிவங்களில், இறைவனைப் பூஜித்து மகிழ்வித்தல்). வேதிகையின்மீதில் தானியஸ்தண்டிலத்தில், மத்தியிலும், எண்திசை-யிலுமாக 9கலசங்களை வைத்து, நடுவில் சிவனையும், அவரைச்சுற்றிலும் 8பவாதிமூர்த்திகளை மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், யஜமானர், சூரியன், சந்திரன் ஆகிய எட்டுவடிவங்-களிலுமாக இறைவனை எண்ணிபூஜித்து, எதிரில் எட்டுவகை பீஜமந்திரங்களுடன் மூர்த்தி மந்திரங்களால் ஹோமம் செய்யவேண்டும். முடிவில் தெளித்து சுத்திசெய்யவேண்டும்.

71) சாந்திஹோமம். (குற்றம், குறைகளைப்போக்கிடுமாறு, பாசுதாஸ்திரத்தினால் வேள்விசெய்தல்). பாசுபாதாஸ்திரம், வர்த்தினீசக்தி, அஷ்டதிக்பாலகர்கள், வஜ்ராதி-8ஆயுதங்கள் ஆகியவற்றை பத்துகலசத்தில்பூஜித்து, பால், எள், மதுத்ரயம், பலத்ரயம், அருகம்புல், வெண்கடுகு, சமித்து, நெய் போன்ற திரவியங்களால் ஹோமம் செய்து, அஸ்திர மந்திரத்தை ஜபம்செய்து கும்பத்தில்சமர்ப்பித்து, அக்கலசநீரால் புரோக்ஷணம் செய்யப்பட வேண்டும். இது ஸகலசாந்தியை அளித்திடும் பரிஹாரகிரியை ஆகும்.

72) சங்கதீர்த்தபூஜை. (நீர்நிறைந்தசங்கில் தெய்வாம்சங்களைப்பூஜித்தல்). சங்கத்தை அஸ்திரமந்திரத்தால் புரோக்ஷணம் செய்து, ஷடுத்தாஸனத்தால் பூஜித்து, பத்மத்தின் நடுவில் சூரியமண்டலம், சந்திரமண்டலம், அக்னிமண்டலங்களையும், அவற்றின் கலைகளையும் பூஜித்து, பிறகு ஏழுநதிகளையும், ஏழுஸமுத்திரத்தையும் ஆவாஹனம் செய்து, "த்வம்புராஸா-கரோத்பத்னா" என்ற துதியைச்சொல்லியும், பாஞ்சஜன்யாய வித்மஹே" எனும் சங்க-காயத்திரியை உச்சரித்தும், பூஜிக்கவேண்டும். அந்ததேவதையின் விசேஷபிரம்மாங்க மூலமந்திரங்களாலும், காயத்திரீமந்திரங்களாலும் மந்திரிக்கப்பட்ட சங்கதீர்த்தத்தை விசேஷமான அர்கியதீர்த்தமாகவும், மிகமிகப்புனித தீர்த்தரமாகவும் பூஜையில் கையாளவேண்டும்.

73) மண்டேலஸ்ரபூஜை. (துணிமண்டலத்தில் யந்திரவடிவில் தெய்வத்தின் பூஜையை செய்தல்), ஸகலமங்களமும், ஸகலகாரியஸித்தியும் ஏற்படும்பொருட்டு, இறைவனை வண்ணமிகுகோலமாக அமைக்கப்பட்ட, யந்திரவடிவானமண்டலத்தில், யந்திரவடிவில், அபிஷேகித்துபூஜிப்பதைப்போலவே துணிமண்டலத்தில் அப்படியே அந்தந்த ஸ்தானத்தில் பலசுற்றாக அத்தெய்வங்களை சூழ்ந்திருக்கமாறு விசேஷமாகபூசித்து, மந்திரதோத்திர ஜபங்களைச்செய்து, ஸமர்பித்தல்வேண்டும். ஐவகை வண்ணப்பொடிகளாலும், தானியவகை-களாலும் மலர்வகைகளாலும் பலபெயரில், பலவடிவில் இந்த பூஜ்யமண்டலம் அமைக்கத்தக்கதாக கூறப்படுகிறது.

74) திரவிய பாவனாபிஷேகம். (கும்பம், சூலம் முதலான இலக்குஉருவில், உரிய பாவனையுடன் பொருள்களால் நீராட்டுதல்). அபிஷேகம் செய்யமுடியாத சுதைசித்திரம், சுவரோவியம், கலசபூஜை முதலானவற்றில், அதன் பூசையின்போது, மாற்றாகஒன்றில் அதற்கு தொடர்புசெய்து, ஒவ்வொரு திரவியத்தையும், பூசைக்கு இலக்காக அமைந்துள்ள யாககும்பம், திரிசூலம் முதலான உருவில்பாவித்து, அபிஷேகம் செய்து, பிறகு பூசையை தொடருதல்முறை. புதியமூர்த்திகளுக்கும், உரியமூர்த்திக்கும் சமர்ப்பணம் செய்தல் **திரவ்யபாவனாபிஷேகம்** எனப்படுவதாகும்.

75) கிருதசிரோர்ப்பணம். (நிலையாக ஸ்தாபிக்கப்பட்ட சிலையின் தலைஉச்சியில் பசுவின்நெய்யை மந்திரித்துவைத்தல்), பிம்பத்தின் தலைஉச்சியில் அம்மூர்த்தியின் மந்திரம், பலமுறை மந்திரிக்கப்பட்ட பசுநெய்யை மங்களவாத்தியங்கள்முழங்கிட, ஆலயத்தை வலமாக எடுத்துசென்று, அச்சிலைமீது தடவிஉச்சியில்வார்த்திடல்வேண்டும். இக்கிரியை கும்பாபிஷேகத்தில் கருவரையில் மூலவர்சிலைக்கு அஷ்டபந்தனம்செய்தபிறகு, முதன்முதலில், நீராட்டலுக்குமுன் **எண்ணெய்தேய்த்தல்** எனப்படுகிற **அப்யங்ககிரியை** ஆகும். பசுவின் ஆயுள்தரும், கவ்வியமான நெய்பூச்சினால் **"ஆயுர்வைகிருதம்"** என்றபடி சிலைக்கு நீண்ட ஆயுள்பலம் கிட்டுவதாகிறது.

76) தைலாப்யங்கம். (எண்ணைகாப்பு). அஷ்டபந்தனம் செய்தபின்பு **"திலாப்பாபஹரா நித்யம்"** என்பதாக சிலாதோஷம்நீங்கவும், பிம்பசுத்திக்காகவும், சிலையில் வெப்பம்தணியவும், தூயஎள்ளின் நல்லஎண்ணையால் சிலைகள் முழுவதும், நல்லெண்ணெயை பூசவேண்டும் (தடவவேண்டும்). சிறிதுகாலமோ, முகூர்த்தகாலமோ, ஒருயாமமோ, 3மணிநேரமோ எண்ணெய்-காப்புடனே வைத்திருந்து, பின்நீராட்டி உபசரிக்கும்முறை **அப்யங்கஉபசாரமாகும்.** இதனை **தைலகாப்பு** என்பர்.

77) மந்திர மஸ்தகஜபம். (மந்திரங்களை சிலையின் தலையில் ஜபித்திடுதல்), தெய்வம் நிலைபெறஉள்ள, பிரதிஷ்டைக்குரிய, மூலவரான, துருவபேரத்தில், சைவசித்தாந்த

அமைப்புமுறையின்படி, ஆறுவகையில் விளங்கும் ஷடத்வாக்களை, அச்சிலையின் தலை-உச்சியில் மூலபிராஸாதபஞ்சாக்ஷரத்துடன், உரியமந்திரங்களையும், பக்தியோடுநியாஸம்செய்து, ஆசாரியர் ரித்விஜர்கள் சூழ்ந்திருந்து, தர்பைநுணியால் அச்சிலையைத்தொட்டுக்கொண்டே, ஆயிரம்முறை சுஸ்வரத்துடன் மூலமந்திரத்தை ஜபித்தல்வேண்டும். இதனால் அச்சிலை தெய்வம் வெளிப்பட ஏற்ற தகுதியையும், பக்குவநிலையையும் அடைகிறது.

78) கும்பாலங்காரம். (இறைமேனியாக உரியபொருட்களால் கும்பத்தை முறையே வடிவமைத்தல்). இறைவனுக்கு ஞான, கிரியா சக்திகளே உடலாய் விளங்குவன. ஞானமே நாதமான மந்திரம், மந்திரசக்தியே வித்யா எனப்படுகிறது. கும்பத்தை தயாரிக்கும் கிரியையினை ஞானத்துடன் மந்திரத்தால் வித்யாதேஹமான கும்பத்தில், இறைவனை எண்ணிபூசிப்பது சிறந்ததுஆகும். கும்பத்தை எவ்வாறு? உடலாகப்பாவிக்கவேண்டும் என்பதை யோகஜம் என்ற சிவாகமம் விளக்கமாக கூறுகிறது. நம்உடலில் உள்ளவையாவும், ஷடத்துவாக்களால் நாதமந்திர வடிவாய், அந்தந்தஅம்சமாய், கலசத்தில் விளங்குவனவாகும். அது, கும்பம் சரீரமாகவும், கும்பத்திலுள்ள நீர் இரத்தமாகவும், கும்பத்தில் இடப்படும் நவரத்தினங்கள் சுக்லம் முதலான உடலின் 9தாதுக்களாகவும், போடப்படும் பொற்றாமரை தேஹஇதயமாகவும், நவதாதிகா சக்திகளாகவும், கும்பத்திலுள்ள 36 ர்பைக்கட்டு காயத்தின் மையநாடிசுழுமுனையாகவும், குடத்தின்மேல் சுற்றப்பட்டுள்ள முப்பிரிநூல்கள் பல்லாயிரம்நரம்புகளாகவும், கும்பத்தைச்-சுற்றியுள்ள வஸ்திரம் தோலாகவும், நியசிக்கப்படும் மந்திரங்கள் ஜீவபிராணாதிகளாகவும், குடத்தின்மேல் அமையும் தேங்காய் தலை மற்றும் முகமாகவும், தேங்காய்மேல்விரித்துள்ள, தர்பையாலான, லம்பகூர்ச்சம் என்பது திருமுடிசிகையாகவும், மாவிலைகள் ஜடைகளாகவும் விளங்குவதாய், அங்ககற்பனை கருதத்தக்கதாக சிவாகமம் கூறுகிறது. ஆதலால் முன்கூறிய பொருட்களுடன் உரிய அங்கபாவனையுடனும், யாகத்தின் மஹாகும்பத்தை தயாரித்து, வண்ண-மலர்மாலைகளால் அலங்காரம்செய்து, அதில் தெய்வத்தை அழைத்து,நிறுத்தி, நன்குஉபசரித்து, பூஜித்திடவேண்டும். அருவுருவநிலையில் அனைத்து தெய்வங்களுக்கும் பொதுவானதொரு புனிதமூர்த்தமே யாகபூசையில் அமையும் மஹாகும்பமூர்த்தமாகும். இது சிறப்புமிக்கதாகும்.

79) கும்பத்ரிகண்ட சோதனம். (கும்பத்தில் முப்பகுதியில் தத்துவங்களை சோதித்தல்). அருஉருவ திருமேனி என்பது ஆகமத்தில் இரண்டு. ஒன்று இலிங்கவடிவம் மற்றொன்று **கும்பம்** ஆகும். கும்பத்தின் அடிப்பாகத்தை ஆத்மதத்துவமாகவும், நடுபாகத்தை வித்யா தத்துவமாகவும்,கும்பத்தின் முனைப்பகுதியை சிவதத்துவமாகவும் முறையே பாவித்து, அதனை மூன்றுதத்துவ அதிபதிகளின் மந்திரத்தினால்சோதித்தும், உருவேற்றிமந்திரித்தும், பூஜிக்கவேண்டும். யாகசாலைஎன்பதே இயற்கையிலுள்ள அஷ்டமூர்த்திகளையும்

வழிபடக்கூடிய சிறந்த ஒரேஇடமாகும். அதில் கும்பத்தில் ஆறுஅத்வாக்களின் வடிவமாகவும் பூஜிக்கவேண்டும். லிங்கத்தில் பிரம்மபாகம், விஷ்ணுபாகம், ருத்ரபாகம் என மூன்றுபாகங்கள் எவ்வாறு உள்ளவோ, அவ்வாறே கும்பங்களிலும், பிம்பங்களிலும் பாவித்து, முன்னும் பின்னும் ஆவாஹநாதி கிரியைகளில் பொருந்திடும் வகையில் பூசிக்கப்படும்.

80) மூர்த்தி கலாகர்ஷணம். (தெய்வாம்சங்களை கும்பத்தில் குடிபுகஅழைத்துச் சேர்த்திடுதல்), உடல் உருவம் இவற்றிற்கு மூலகாரணமாகுகிற பஞ்சபூதங்களும்பராசக்தியின் கலைகளான **பஞ்சகலைகளே** ஆகும். இவற்றிலேயே யாவும் தோன்றி ஒடுங்குவனவாகும். இவை [1]**சாந்தியதீதகலை,** [2]**சாந்திகலை,** [3]**வித்யாகலை,** [4]**பிரதிஷ்டாகலை,** [5]**நிவிருத்திகலை** என்பவை ஆகும். பஞ்சபிரம்ம மந்திரகலைகளான 38கலைகளே இறைவனுக்கு மூர்த்த-மாகின்றன. பிறஜந்து அத்வாக்காளகவுள்ள [1]பதம், [2]வர்ணம், [3]புவனம், [4]தத்துவம், 5. மந்திரம், போன்றவைகளையும் ஒவ்வொருகலையோடும் இணைத்து, அதன்மூலம் தெய்வாம்சங்களாள அனைத்துகலைகளையும் கும்பத்தில்ஆகர்ஷித்து, (இழுத்து), அழைத்துவைத்துப் பூஜிக்க வேண்டும். இம்முறையே **கலாகர்ஷணம்** எனப்படுவதாகும். இக்கிரியையில் மூலமந்திரமாகி, ஜீவனாகிஇருக்கும் இறைவன், உலகில் ஒருகிளி ஒருகூட்டிலிருந்து, மற்றொருகூட்டிற்குள் வரவழைத்து, நிலைநிறுத்தப்படுவதைப்போலவே கும்பம், பிம்பம், லிங்கம் இவற்றில் நிலைபெறுமாறு செய்யப்படுகிறார். இதுவே **மூர்த்தி சம்யோஜனம்** எனப்படும்.

81) லிங்காத்கும்ப, சுயோஜனம். (லிங்கத்திலிருந்து கும்பத்தில் அழைத்துச் சேர்த்திடுதல்). தேவதேவ! ஜகன்நாத! என்று துவங்கும் பிரார்த்தனைசுலோகத்கைதக்கூறி, விண்ணப்பித்து, மந்திரத்தை முறையே உச்சரிப்பதால், இறைவனை லிங்கத்திலிருந்து கும்பத்தில் அழைத்து, அதிலேஇருக்குமாறு செய்யவேண்டும். இறைவா! தங்களுடைய உத்திரவின்பேரில், தங்களின்இடத்தை, சரிசெய்து, தங்களைஅவ்விடத்திலேயே மீண்டும் அமர்த்திடும்வரையில், அனைவருக்கும் தாங்கள் அருள்புரியவேண்டி, தங்களை கும்பத்தில் அழைக்கிறோம். எல்லாவித சக்திகளோடும், அனைத்து ஆவரணங்களோடும் கூடியவராகவே, தாங்கள் தயவுகூர்ந்து வரவேண்டும். இறைவனே! தயவுகூர்ந்து தாங்கள் கலசத்தின்உருவில், தங்கிஇருக்கவேண்டும். அறியாத மௌட்யமான நான் எங்கே? தாங்களோ அறிவொளிப்பிழம்பு, ஏதோ என் சக்திக்கும், என்அறிவுக்கும்எட்டியவாறு தங்களைஅழைக்கிறேன். கருணைக்கடலே, தயவுகூர்ந்து அருவுருவத்திருமேனியான இக்கலசத்திற்கு வரவும், என்றுவேண்டி, அழைத்து, இறைவனை கும்பத்தில்சேர்த்தல் சிவாகமமுறையாகும். இறைவனும், பக்தவத்ஸலனாக தனது வேண்டுகோளை ஏற்று, கலசத்தில் வந்து உறைந்ததாய் கருதவும் வேண்டும்.

82) யாத்ராஹோமம். (புறப்படும்கால வேள்விப்பூசை). தெய்வத்தின் பயணக்காலத்தில், அந்தகாலத்தின்மூகூர்த்தத்தில்உள்ள காலதோஷங்கள்அகலவும்,

சமயஅனுகூலம்கிட்டவும், க்ஷணஹோமத்தைச் செய்தல்முறையாகும். இறைவன் யாகசாலைக்கு, பிரதிஷ்டைக்கான வேள்வியின் ஹவிர்பாகத்தை ஏற்பதன்பொருட்டு, புறப்பாடாகஉள்ளதருணத்தில், வியாபித்து விளங்குகிற அக்காலத்திய தெய்வங்களான திதி, வாரம், நக்ஷத்ரம், யோகம், கரணம் நவகிரஹங்கள் இதனைக்குறித்து அக்கணத்திலேயே மூலசந்நதியெதிரில் அக்கணதெய்வங்-களுக்கெனஹோமம்செய்தலே **க்ஷணஹோமம்** என்றும், இது யாத்திரைபொருட்டாக இது செய்யப்படுவதால் இது **யாத்ராஹோமம்** என்றும், பெயருடையதாகும்.

83) யாத்ராதானம். (தெய்வம் புறப்படும்நேரத்தில், தானவகைகளைத் தானம் செய்தல்). மூலக்கருவறையில் இருந்தோ பாலாலயத்திலிருந்தோ, யாகசாலையிலிருந்தோ, தெய்வம் இடம்பெயரும்போதெல்லாம் காலதெய்வங்கள், காவல்தெய்வங்களின் அனுகூலம் ஏற்படவேண்டி, தெய்வம்புறப்படும்முன்பாக, பலவகைதானங்களைச் செய்யவேண்டும். நவதான்யம், தக்ஷிணைத்தாம்பூலம் போன்றவைகளை கிரஹப்பிரீதிதானம், கோதானம், தசதானம், பூரிதானம் இவற்றை வேதம்ஓதும் பிராமணர்களுக்கு அளிக்கவேண்டும். பயண-காலத்தில் செய்யப்படுவதால் இது **யாத்ராதானம்** எனப்படுகிறது.

84) கும்பஉத்தாபனம். (மஹாகும்பத்தின் புறப்பாடு) கும்பவடிவில்உள்ள இறைவனை வேண்டி, எழச்செய்து, தோளில்தாங்கியோ, தலைமீதுசுமந்தோ, யாகசாலைக்கு அழைத்து வருதல். அருவுருவத்திருமேனியான கும்பத்தை, இறைவடிவமாகவேபாவித்து, எழுப்பித்தாங்கி, சகலஉபசாரத்தோடும் அழைத்துவரவேண்டும். உத்தாபனம் என்றால் எழுப்புதல் ஆகும். ஸ்திராசனபூசையை மாற்றி, சலாசனமாக அசைக்கத்தக்க பூசையைக்கும்பத்தடியிலும், சுமக்க உள்ளவரிடத்திலும், தெய்வவாஹனத்தையும் பூசித்து, புறப்படவேண்டி, கும்பத்தைஅசைத்து, எடுத்து, எழுப்பிப்புறப்பாட்டை (பயணத்தை) விதிமுறைப்படி மேற்கொள்வதே **கும்போத்தாபன கர்மா** எனப்படுவதாகும்.

85) யாகசாலா பிரவேசம். (வேள்விமனைபுகுதல்). தெய்வகும்பம், ஆலயத்தை வலமாக வந்து, ஆலயஅனைத்துசக்தியுடன், யாகாலையினுள்புகுதல் **யாகசாலா பிரவேசம்** ஆகும். இதனை திருமுறைபாராயணம், வேதமந்திரம், சிவாகமமந்திரங்கள்ஒலித்திட, வாத்ய-கோஷத்துடன் குடை, சாமரம் முதலிய அனைத்து புறப்பாட்டுவிதிமுறையின் உபசாரங்களுடன் தெய்வத்தின் மஹாகும்பமானது ஆலயத்தை வலம்வந்து யாசகாசலையினுள் நுழைதல். உட்புகும்முன் அர்க்கியநீராஜனாதிகளால் வாயிலில் உபசரிக்கப்பட்டு, லாஜபுஷ்பாஞ்சலிகளைச் செய்து, ஸ்வாகம்கூறி, அழைத்துச்சென்று யாகசாலையின் மையவேதிகையில், தானிய-ஸ்தண்டிலத்தின்நடுவே, இருத்திவைத்து நிலைபெறச்செய்து பூசிக்கவேண்டும்.

86) யாகமண்டபார்ச்சனம். (வேள்விக்கொட்டகைவழிபாடு) யாகமண்டபத்திலும், அதனைச்சுற்றிஉள்ள27கலசங்களிலும் உரியதெய்வங்களை பூஜித்தலே. மண்டபார்ச்சனை

என்று கூறப்படும். விக்னேஷ்வரபூஜைமுதற்கொண்டு, ஸதாசிவாதிஸப்தகுருபூஜைவரை, சுற்று-கலசங்கள் 27ஐயும், யாகமண்டபத்தின் 4வாயில்தேவர்களையும், பரிவாரதேவதைகளையும் தினமும் இருவேளையில் பூஜைசெய்வதே **மண்டபபூஜை** ஆகும்.

87) மூர்த்திகும்ப விசேஷபூஜை. (மகாகும்பத்தில் யாகத்திற்கான சிறப்புபூஜையைச் செய்தல்). பிரதானமூர்த்தியாக விளங்கும் இறைவனுக்கு, மகாகும்பத்தில், பஞ்சாஸன, பஞ்சா-வரணத்துடன் விசேஷபூஜையை தினமும், யாகமுடிவுவரை இருவேளையிலும் செய்வதலாகும். இதில் மூலஆலயத்தில் செய்யப்படுபவை அனைத்தும் யாகஆலயத்திலும் சிறப்புடன் செய்யப்படும்.

88) அக்னிகார்யம். (ஹோமம்) (வேள்வித்தீவழிபாடு). ஹோமகுண்டத்தில் வேள்வித்-தீயின் சடங்குகளைச்செய்தல் **அக்னிகாரியம்** எனப்படுவதாகும். குண்டத்திற்கு பதினெட்டு-வகை ஸம்ஸ்காரங்களுடன், கலாமயாப்யர்ச்சனம்செய்து, அதன்நடுவே வாகீசீவாகீஸ்வரகூர்ச்ச-பூஜையுடன் அக்னிஉத்பத்திஸம்ஸ்காரஙளைச்செய்து, அக்னியின் பாதுகாப்பிற்கு சுற்றிலும் பரிதி, விஷ்டர, பரிஸ்தரணங்களின் பூஜைகளையும்செய்து. ஸ்ருக்ஸ்ருவம் மற்றும் ஆஜ்யஸம்ஸ்-காரங்கள், காலபக்ஷத்தின் தேவதாஹுதி, அக்னிவக்த்ரைகீகரணம், அக்னிஜிஹ்வைகீகரணம் முதலியவற்றிற்கான ஆஹுதிகளைச்செய்து, பாலாக்னி, யௌவநாக்னி, வ்ருத்தாக்னி, சிவாக்னி என்று அக்னிக்குபூஜைசெய்து, ஆஹிதிகளைச்செய்து, வாகீசீவாகீஸ்வரர்களை விஸர்ஜனம் செய்து, பூர்ணாஹுதி, நாடீசந்தானம், தேசாபாதனாதிஆகுதிகள், மந்திரங்களின் தர்பநதீப ஆகுதிகள், சடங்கு களுக்கான பூர்ணாஹுதி, சருஸம்ஸ்காரம், சருஆஹுதி போன்றவைகளால் குண்டத்தின் வேள்வித்தீயின் சடங்குகளைச்செய்தல் அக்னிகாரியசெய்முறையாகும். அக்னி-காரியத்தில் பஞ்சபூதங்களில்ஒன்றான, சாதாரணஅக்னிபோலத்தெரிந்தாலும், அதுமுற்றிலும் தெய்வாம்சமான தீ வடிவில்உள்ள தெய்வமாகவே கருதவேண்டியதாக மாற்றப்படும்.

89) சிவாக்னியஜனம். (குண்டத்தில் வேள்வித்தீயில் தெய்வத்தை முறையே பூஜித்தல்). குண்டத்தில் மேற்கண்டவாறு, பல்வேறுமந்திரசம்ஸ்காரங்களினால் உருவாக்கப்-பட்டுள்ள, சிவாக்னியை **"தங்களின் ஹ்ருதயகமலத்தில் இறைவனை பூஜிக்க தங்களின் அனுமதிவேண்டும்"** என்று பிரார்தித்து, அத்தீயின் இதயத்தில் சிவயோகநெறிமுறையில் பஞ்சாவரணத்துடன், **இறைவனை பூஜித்து**, ஆஹுதிகளை அளித்திடவேண்டும். அக்னியின் உடலுக்குள் தெய்வத்தை நிலைநிறுத்திவிட்டு, வெளியில்வந்து, யாகபொருட்களை அக்னியின் வாயில்அளிப்பதால், கர்பசிசுவிற்கு தாயின்வாய்மூலம் உணவுசெல்வதுபோல் நாடீசந்தானத்தின் மூலம் தீயில்பூசித்ததெய்வத்திற்கு ஆகுதிசெய்யும்ஹவிர்பாகபொருட்கள் நேரடியாக சென்று அடைவதாகிறது.

90) ஸ்தாலீபாகம். (ஹவிர்பாகம் / அரிசிப்பொங்கல் சமைத்தல்), இது யாகத்திற்கான ஆகுதிக்குஉரிய அன்னத்தை அங்கேயே சிவாக்னிஅடுப்பில் பொங்கலாக சமைத்தல்ஆகும். யாகத்திற்குவேண்டிய ஹவிஸ்ஸின்பொருட்டு, அடுப்பு, விறகு, நெய், வெங்கலபாத்திரம், கரண்டி, பச்சரிசி, போன்றவைகளை சிவசக்திகளாகபூஜித்து, பிறகு பச்சரிசியை பொங்கலாக சமைத்து, யாகத்திற்கு வேண்டிய அந்தஹவிஸ்ஸை, நெய்யும், தேனும் கலந்து, சூர்யன் முதலான யாக சாலையிலுள்ள அனைத்துதேவர்களுக்கும் நிவேதனம்செய்து, பலிபாகம், ஆத்மபாகம், இறைவனது என்று மூன்றுமூன்றாகபிரித்து, இறைபாகத்தை இறைவனுக்கு அன்னத்தால் நிவேதனத்திற்காக ஆகுதி செய்யவும். ஹோமநிறைவில் பிரம்மாதிதேவர்களுக்கும், லோக-பாலகர்களுக்கும், அந்தர்பலி, பஹிர்பலி, போன்றவைகளின்பொருட்டும், பலிபாகத்தை உபயோகிக்கவும். ஆத்மபாகத்தை ஆசார்யர்பூஜை நிறைவுபெற்றபின் உணவாக ஏற்று உட்கொள்ள வண்டும்.

91) விசேஷ திரவியாகுதி. யாககுண்டத்தில், சிறப்புப்பொருட்களை முறையே, தியாகம் செய்தல் திரவியாகுதிகள் எனப்படும். இதற்கு உரியவற்றைசேமித்து, அவற்றை நால்வகை ஸம்ஸ்காரங்களால் சுத்திகரித்து, அதன்அதிதேவதைகளைப்பூசித்து, மந்திரித்து, மங்கள-வாத்யத்துடன் எடுத்துவரப்பட்டு, குண்டத்தில் ஹோமம்செய்யப்படும். விசேஷதிரவியஆகுதிகள் 96முதலாக பலவகையாகும். 32சமித்துவகைகள், 32தான்யவகைகள், 10கிழங்குவகைகள், 10பலகாரவகைகள், 10மூலிகைவகைகள், 10வாசனைதிரவியங்கள், 10முகவாசதிரிவயங்கள், 10ரசப்பொருட்வகைகள், 10இலைவகைகள், 10திரவபிசினிப்பொருட்கள்வகைகள், என்பதாக மொத்தம் 144திரவியங்களை, விசேஷமாக திரவியஆஹூதிகளாக, உரியமந்திரத்தைக் கூறியவாறு, உரியமுத்திரையினால், அக்னியில் நாக்குகள் முதலியவற்றைஅறிந்து ஹோமவிதிப்- படி ஆகுதிசெய்யவேண்டும். ஷண்ணவதி என்பது 96 வகை விசேஷதிரவியாஹூதி ஆகும்.

92) ஆலயதுவாரபூஜை. (கோயிலின் தோரணவாயிலில் வாயிற்தெய்வங்களைப் பூஜித்தல்), புதுக்கோயிலை முதலாவதாக உபயோகிக்கத்துவங்குகையில் அக்கோயிலின் பிரதானவாயிலில் கதவுகளைப்பொருத்தி, அதனைச்சிறப்பாகபூசித்து, திறப்புவிழாவைசெய்க. கணபதி, லக்ஷ்மீ, சரஸ்வதி, டிண்டி, முண்டி முதலான தெய்வங்களை கோயிலின் அந்தஅந்த ஸ்தானத்தில் முறையாக பூஜிக்கவேண்டும். வாயிலின் தெய்வங்கள் மற்றும் வாயிற்காவலர்-களுக்கு தனித்தனியே கும்பம்வைத்து, ஹோமத்துடன்பூசித்து, அக்கும்பத்தால் நீராட்டி, துவார-தேவதாபிரதிஷ்டையைசெய்து, சுமங்கலிகளை முதலில் புகச்செய்து, பிறகு தீபம், பீடம், பிம்பம் இவற்றை ஒன்றன்பின்ஒன்றாக ஸ்தாபித்து சாந்நித்யம் ஏற்படுத்தவேண்டும்.

93) அகண்டதீபஸ்தாபனம். (தீபலக்ஷ்மீஸ்தாபனம்). புதியகருவறையில் அணையா-விளக்கை பூஜித்துஏற்றிவைத்தல். புதுகோயில் கட்டிடத்திற்குள் ஆலயசடங்குகள் ஸ்தூபி

மற்றும், துவாரதேவதாஸ்தாபனம், முடிவுற்றபின்பு, கர்பாவரணதேவதையான, மண்டபரூபிணியான மகாலக்ஷ்மியை தீபத்தில்பூசித்து, வாமாதிசக்திகளையும், மனோன்மணியையும்பூசித்து, ஸ்ரீசூக்தாதிகளைஜபித்து, மங்களவாத்தியத்துடன் சுவாசினிகளால் அஷ்டமங்களம் ஏந்தியவாறு ஆலயவலம்வந்து, பூசித்த அணையாவிளக்கான தூண்டாமணிவிளக்கை சுவாசினீகரத்தால், அகண்டதீபத்தைஏற்றி, கருவறையில்வைத்து, என்றும் அணையாதவண்ணம் பாதுகாக்க வேண்டும். அதில் இறைவனை பூஜித்து, அனுதினமும் வழிபடவேண்டும். இதனால் இறைவனை பிரதிஷ்டை செய்யஉள்ள மூலாலயகர்பகிரஹம், லக்ஷ்மிகடாக்ஷமும், குறைவற்ற பூஜாங்க-பொருள் மற்றும் வற்றாத செல்வத்தையும் ஆலயம் பெற்றுவிளங்கும்.

94) கர்பாவரணபூஜை. இது கருவறையின்உள்ளே லக்ஷ்மீமுதலிய தெய்வங்களை அருவ-நிலையில் பூஜித்தல்ஆகும். மூலாலயகருவறையில் கர்பாவரணதெய்வங்களை அருவமாகபூஜிக்க வேண்டும். அதாவது, கருவறையின்வெளியே, திரைச்சீலையில் ஸ்தானுருத்ரனையும், வாயிலின் இடதுபுறத்தில், அருகில் போகசக்தியையும், கருவறையினுள்ளே தென்மேற்கு மூலைக்குசற்று கிழக்கில், வாஸ்துஅதிபதியான பிரம்மதேவரையும், தென்மேற்கில் கணபதியையும், தெற்கில் சரஸ்வதியையும், வாயுமூலையில் மஹாலக்ஷ்மியையும், நீராடும்கோமுகத்தில் வாமாதி நவசக்தி- களையும், ஈசானத்தில் சதாசிவாதிசப்தகுருமார்களையும், முறையே பூஜிக்கவேண்டும். இவ்விதமே, யாகசாலையில் வைக்கப்பட்டு, 27-ல்இடம்பெற்றுபூசிகப்பட்ட கலசத்தால் அபிஷேகத்துடன் பிரதிஷ்டையும் செய்யப்பட்டு, இவ்வாறே நித்தமும் பூசிக்கப்பட வேண்டியதாகும்.

95) ஷட்கந்த ஸமாலேபனம். (நறுமணம்சேர்ந்த சந்தனத்தைப்பூசுதல்), சந்தனமர கட்டையைஅரைத்த தூயசந்தனசாந்துடன், பச்சகற்பூரம், பன்னீர், புனுகு, அரகஜா,, கஸ்தூரி, குங்குமப்பூ, நறுமணபூக்களின்சாரம் போன்றவற்றைக்கலந்து, அக்குழம்பினை சிலையில் பூசுதல் **கந்தவேபனகிரியை** எனப்படுவதாகும். சந்தனத்தில் சிவனேவாசம்செய்வதாலும், பிரதிஷ்டைக்கு உரியசிலைமுழுவதும் இதுபூசப்படுவதாலும் அச்சிலைக்கும், லிங்கத்துக்கும் தெய்யவங்கள் உரையும் அளவிற்கு சுத்தமும், மங்களமும் ஏற்படும்.

96) திரிகண்டசோதனம். (முப்பகுதியாக சோதித்தல்) சிவலிங்கம் அல்லது உருவச்சிலை பிரதிஷ்டைக்குஉரியது எதுவாயினும் முதலில் அது மூன்றுபகுதிகளாகபூச்சரத்தால் பகுக்கப்-பட்டு, முறையே **பாதம்** முதல் நாபிவரை **பிரம்மபாகம்** என்றும், நாபி முதல் கண்டம்வரை **விஷ்ணுபாகம்** என்றும், அதற்குமேல் **ருத்ரபாகம்** என்றும், திரிகண்டமாக செய்யப்படும். அவற்றில் சைவசித்தாந்தநிலைப்படி ஆத்மதத்துவம், வித்யாதத்துவம், சிவதத்துவமான முப்பகுதியாக ஷடத்வநியாஸம் செய்யப்படும். இதுசிலையை மிகப்புனிதமாய் சுத்திசெய்யவே செய்யப்படும் **தத்துவசுத்தி** **செயலாகும்.**

97) கௌதுகபந்தனம். (பிரதிஷ்டைக்குஉரிய சிலைக்கு காப்புகட்டுதல்), அஷ்ட-பந்தனம்செய்து, பிம்பசுத்தி நீராட்டுமுடிந்தபிறகு, அச்சிலைக்கு ரக்ஷாபந்தனமுறைப்படி மந்திரித்த பொன்கம்பியிலான காப்பினை லிங்கத்திற்கு ருத்ரபாகத்திலும், ஆண் தெய்வங்-களுக்கு வலதுகையிலும், பெண்தெய்வத்திற்கு இடதுகையிலும் முறையே கட்டுதல் பிம்பங்-களுக்கான **கௌதுகபந்தனம்** எனும் கிரியைஆகும். இது மண்டலாபிஷேகம் 45 நாள் முடியும் வரை சுவாமியிடமே புனிதக்காப்பாக விளங்கும். இக்காப்பு பொன் அல்லது வெள்ளியாலானா நீண்டபாம்புவடிவில் செய்யத்தக்கதாம்.

98) தத்துவார்ச்சனம். இது சிலையில் 36தத்துவம், தத்வாதிபதிகளைப்பூஜித்தல். பிம்பத்தில் அல்லது லிங்கத்தில் சிவதத்துவம் முதற்கொண்டு பிருத்விதத்துவம் வரையிலான 36தத்துவங்-களையும், அவற்றின் அதிபதிகளையும் முப்பகுதிகளாக, மூன்றுதத்துவங்களாக சித்தாந்த முறையில் பகுத்துச்செய்யப்படுவதே **திரிதத்வார்ச்சனை** ஆகும். அதாவது, பிரம்மாபாகம், விஷ்ணுபாகம், ருத்ரபாகம் என்று மூன்றுபாகமாகப்பிரித்து, ருத்ரபாகத்தில் சிவதத்துவம் முதலான ஐந்துதத்துவத்தையும், விஷ்ணுபாகத்தில் அதன்பின் 8 தத்துவத்தையும், பிரம்ம-பாகத்தில் (கடைசிமீதமான 24தத்துவத்தையும் இவ்வாறு முறையாக மூன்றுபாகமாகப்பிரித்து பூஜிக்கவேண்டும். ஒவ்வொரு கண்டத்திலும் (பாகத்திலும்) மூர்த்தி மூர்த்திஸ்வரனை பூஜித்து, பிண்டிகையிலும் அதேமாதிரி பூஜிக்கவேண்டும். இதுவே **தத்துவஅர்ச்சனமாகும்.**

99) ஷடத்வ நியாஸார்ச்சனம். இது ஆறுவகைஅத்வாக்களை சிலையில்பதித்துப்பூஜித்தல் ஆகும். [1]கலாத்வா, [2]தத்வாத்வா, [3]புவனாத்வா, [4]வர்ணாத்வா, [5]பதாத்வா, [6]மந்த்ராத்வா என்கிற ஆறுவகை அத்வாக்களை பிம்பத்தில் பூஜைசெய்யவேண்டும். இவற்றால் ஷாட்குண்ய சித்தியும், சிவத்தன்மையும் அச்சிலைக்குஏற்படும். ஸர்வக்ஞாதிஎண்குணமும் தந்திட அதுவல்லமைபெறும்.

100) நாடீஸந்தானம். (ஹோமகுண்டத்திற்கும், சிலைக்கும் நாடியால் தொடர்பை ஏற்படுத்துதல்), ஆசாரியர், யாககுண்டம், மகாகும்பம், பிரதானமூலமூர்த்தி இவைகளின் தொடர்போடுகூடியதாக, தர்பையினால் திரிக்கப்பட்டகயிறு, பட்டுநூல், வெள்ளிக்கம்பி, தங்கக்-கம்பி, போன்றவற்றில் ஒன்றினால், தன்னை இணைத்துக்கொள்ளும் செயலே நாடீ-சந்தானமாகும். ஆசாரியர் குண்டத்தில்செய்கின்ற மந்திரங்களின் ஆஹுதியை இதன்வாயிலாக ஈர்த்து, கருவறையில் அவைகளின் பிம்பத்தில் சான்னித்தியத்தை உண்டாக்குவதே நாடீ-சந்தானச்செயலின் நோக்கமும், பயனுமாகும். தாயிக்கும் அவளது கருவுக்குள்இருக்கும் சேய்க்கும் தொப்புள்கொடியானது எவ்வாறு ஒருஇணைப்பாகஉள்ளதோ, சிலந்திக்கு அதன் உமிழ்நீர்நூல் எவ்வாறு தொடர்புகொள்ளவும், போக்குவரத்துக்குமானவழியாக உள்ளதோ அவ்வாறே இதுஅறியத்தக்கது.

101) யாகபிம்பஸ்பர்சாகுதி. (யாகத்திலிருந்து, ஆகுதிநெய்யுடன், சிலையைத்தொட்டுத் தொட்டுமும்முறையில் தெய்வாம்சங்களைச்சேர்த்தல்). யாகத்தில் செய்யப்படும் மூன்று-தத்துவ, முப்பகுதிப்பூஜையை, ஹோமகுண்டத்திலும், பிம்பத்திலும் செய்து, முஷ்டிஅளவு தர்பை நுணிகட்டு, புஷ்பம், அக்ஷதை இவற்றின்மூலம், அந்தந்ததிக்கில் அமர்ந்து, குண்டங்களில் ஆஹுதிசெய்து, ஆசாரியர்கள் தத்தமது மூலமந்திரத்தை அந்தந்த திக்கிலேயே பிம்பத்தில் பிராதான ஆசாரியரின் அனுமதியோடு, ஸ்பர்சம்செய்து, தொட்டுஜெபிக்கவேண்டும், பின்பு யாகத்தால்மகிழ்வித்த தெய்வாம்சங்களை பிம்பத்தில்சேர்த்து, நிலைத்திடச்செய்யவேண்டும். யாகபிம்பங்களிடையே ஈர்ப்புத்தொடர்புஉடைய ஆஹுதிகளைஉடையசெயலே ஸ்பர்சாகுதி-கிரியை. இதனால் 9மாதத்தில் கருவின்வளர்ச்சிபோன்று, நவகண்டமாக, 9பகுதியாக செய்யப்-படுவதால் தெய்வஅம்சம் யாவும் அச்சிலைக்குள்நிறைந்து, பூரணநிலையை அம்மூர்த்தம் (சிலைவடிவம்) உடையதாகிறது.

102) சாந்திகும்ப சம்ப்ரோக்ஷணம். சாந்திகலசநீரைத் தெளித்து, புனிதப்படுத்துதல். பாசு-பதாஸ்திர மந்திரத்தினால், கும்பத்தில்பூஜித்து, லிங்கமுப்பகுதிகளின் சுத்தியின்பொருட்டு, ஒவ்வொருமுறையும் ஸ்பர்சாஹுதிக்கு ப்ரதான ஆசார்யர் பிம்பத்திடம் சென்று, பாஸுபதா-ஸத்திரத்து புனிதநீரினால் (சாந்திகும்பதீர்த்தத்தால்) பிம்பத்தின் அந்தந்த பிரம்மவிஷ்ணுருத்ர பாகங்களில் தெளித்து, புனிதப்படுத்துதல், **சாந்திசம்புரோக்ஷணமாகும்.** இது புதிதாய்பிறந்த சிசுவின் முதலுதவிச்செயல் போன்றதாய் சுத்திகரித்து, தெய்வத்தின் வரவுக்கு ஏற்றதாய், அப்பகுதியை மாற்றி சுத்தமே சிவம் என்பதை விளக்குகிறது.

103) ஜீவன்நியாஸம். (ஆவாஹனம்) (பிராணபிரதிஷ்டை), பீஜமந்திரத்தையே உயிராக, இறையாக சிலையினுள்செலுத்தி நிலைநிறுத்துதல் ஆகும். குருவிடம் உபதேசமாகப்பெற்ற பிராசாதம் முதலான தெய்வத்தின்பீஜமந்திரத்தை உயிராகபாவித்து, அப்பீஜமந்திரமாகிற ஜீவனை சிலையினுள்செலுத்தி, இறைவனை அச்சிலையின்இதயகமலத்தில் மந்திரரூபியாய் நிலை-நிறுத்துவதே ஜீவன்நியாஸம் எனும் கிரியைஆகும். இதனால் அச்சிலை உயிர்ப்புடையதாய் முழுமைபெற்று ஞானகிரியா ஆற்றல்களைப் பெற்றதாகி சைதன்யத்தை அடைந்ததாகிறது.

104) நாமகரணம். (ஆலயமூலசிலாமூர்த்திக்கு, சிறப்புப்பெயரைசூட்டும்செயல்). மூலாஆலயபிம்பத்தில் வெளிப்பட்டுள்ள இறைவனுக்கு நாம்போற்றி, அன்றாடம் அழைத்திட உகந்ததான ஒருபெயரைச்சூட்டி, அப்பெயரினாலேயே இறைவனுக்கு அனுதினமும் உபசாரங்களை செய்துமகிழவேண்டும், என்பதற்காக இச்செயல் இடம்பெற்றுஉள்ளது.

அன்புடன் பெயரிட்டு அழைத்தலால் குழந்தை உடனேநம்முன்னே வருவதைப்போலவே, தினமும் பெயரிட்டு அழைத்ததும் இறையருள் வெளிப்பட்டு, புற்றில் உறைந்தபாம்பு வெளியில் தலைகாட்டுவதுபோல் சிலையில் தோன்றி பூசையை ஏற்கும்.

105) ஸம்ரக்ஷணம். இது கருவறையில் சிலைக்கு மந்திரத்தால் பிரதிஷ்டைவரை தக்க-பாதுகாப்புவளையத்தை அமைத்தல்ஆகும். மேற்கண்டவாறு கருவறையில் இறைவனுக்கு நாமகரணம் சூட்டியபிறகு, அவரைச்சுற்றி, தர்பையால் பரிஸ்தரணம்செய்து, எள்ளு, விபூதி, வெண்கடுகு போன்றவைகளை சுற்றிப்போட்டு இவ்அகழிகளால் பாதுகாப்புவளையம் அமைக்கப்- படவேண்டும். இந்திரன், அக்னி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகியோர்களை அச்சிலையின் புனிதத்தை பாதுகாக்கும்பொருட்டு, கருவறையில் இறைவனுக்கு கீழேஅருகில், எண்திசையிலும், சுற்றிலுமாக பூசித்து, உரியஎச்சரிக்கை விண்ணப்பங்களை முத்திரையால் மகிழ்வித்துத் தெரிவித்தலே **சம்ரக்ஷணக்கிரியை** என்பதாகும்.

106) மஹாபூர்ணாஹூதி. இது யாகத்தை நிறைவுசெய்யும் உயர்நிலை தியாகஆகுதியை அளித்தல்ஆகும். பூர்ணம் என்பதற்கு நிறைவானது என்றுபொருள். யாகத்தை இது நிறைவு செய்வதால், இப்பெயர் பெறுகிறது. முக்கியமான நிறைவைத்தரும். மஹாபூர்ணாஹீதிக்குஎன்று, பட்டுத்துணியில், வெற்றிலைபாக்கு, பழம், எலுமிச்சம்பழம், வெற்றிவேர், பொரி இறைவனுக்கு உகந்த நைவேத்தியபொருளையும் அதில்வைத்து, யாகத்தின் இறுதியில் நிறைவின்பொருட்டு, அத்தெய்வத்தின் மூலமந்திரத்தை வௌஷட் என்பதை முடிவாகக்கொண்டாக உச்சரித்தவாறே அப்பொருளை யாகத்தீயில் ஆஹுதியாக சேர்த்து சமர்ப்பிக்கவேண்டும். இத்துடன் பிரதான ஆகுதி முடிவடையும். இதன்பிறகு உத்தராங்ககிரியைகளே செய்யப்படும்.

107) மூர்த்திசம்யோஜனம். இது யாககுண்டத்திலிருந்து தெய்வத்தை கும்பத்தில் சேர்த்திடுதலேஆகும். யாகத்தீயில் மந்திரங்களால் ஆவாஹனம் செய்து, பல்லாயிரக்கணக்கில் செய்யப்பட்ட ஆஹுதிகளால் மகிழ்விக்கப்பட்ட இறைவனை யாகத்தீயிலிருந்து கும்பத்தில் நாடி-சந்தானத்தின்வாயிலாக சேர்த்திடுதல் **மூர்த்திசம்யோஜம்** எனப்படுவதாகும். விளக்கின் சுடரொளி மற்றொருசுடரொளியுடன் கலந்து ஒளிர்வதுபோல் குண்டத்திலிருந்த யக்ஞமூர்த்தியும் கும்பத்திலிருந்த மூலமூர்த்தியும் நெருப்பினில் சூடுபோல இணைந்து மிளிரும்.

108)யக்ஞரக்ஷாதாரணம். இது வேள்வித்தீயின் சாம்பல்மையினால் கும்பத்திற்கு திலகப்-பொட்டு வைத்தல் ஆகும். யாகத்தின்உரிய தர்பையைப்பொசுக்கி, எடுக்கப்பட்டசாம்பலை, யாகசேஷ நெய்யுடன்குழைத்து, கும்பத்தில்விளங்கும் இறைவனுக்கு பொட்டுவைத்தல் யாக-ரக்ஷை அணிவிக்கும் செயலாகும். இதனால் பிரதிஷ்டையின் யாகத்தின்பயன்

பரமனைஅடைந்து மகிழ்விக்கிறது. மூவுலகத்திற்கும் ஐந்தொழில்கள் மூலம் தொடர்பாதுகாப்பு ஏற்படுவதாகும்.

109) மண்டபதேவதா ஹோமம் (ஜயாதிஹோமம்). யாகமண்டபத்திலுள்ள சுற்றுதெய்வங்-களுக்கு ஆகுதி அளித்திடும் கிரியைஆகும். மண்டபத்தில் ஆவாஹனம் செய்யப்பட்ட சுற்று தெய்வங்களுக்கும் முடிவில் ஆகுதிகளைக்கொடுத்து, மகிழ்விக்கவேண்டும். வேதமந்திரத்தால் ஜயாதிஹோமம் என்பதையும் செய்யவேண்டும். ஜயாதிமந்திரத்தின் மூன்றுபகுதிகளால் செய்யப்- படவேண்டும். ஜயாதிஹோமம் என்பது அனைத்துஹோமங்களும் நிறைவடைந்தபிறகு பிராய-சித்தமாக யாகத்தின் நிறைவின்பொருட்டு செய்யவேண்டும். **ஹஜயாதிரப்யாதானம்ச ராஷ்டிர பிருத்ச யதாக்கிரமம்"** எனும் ஆகமவசனத்தால் வேதத்தின்ஜயாதி மூன்றுப்பகுதியினால் யாகம் ஆகுதிசெய்யப்படுவதானல் ராஜா, ராஜ்யம், தேசம் வளம்பெறும். இவ்வாறு தேசநல பிரார்த்தனையுடன் நிறைவுபெறும்.

110) அந்தர்பலி, பஹிர்பலிவிதானம். இது, யாகசாலையின் உள்ளும், புறமும் உரிய தெய்வத்திற்கு பலிதரும் செயலாகும். யாகத்தை காத்துரக்ஷித்ததேவர்கள், பிரம்மன், விஷ்ணு, ருத்ரன், ஈஸ்வரன், இந்திரன், அக்னி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், ஆகியோருக்கு யாகசாலைக்குஉள்ளே அந்தர்பலியையும், உக்ரதேவதைகளுக்கும் பஹிர்-பலியும், அன்னத்தால் அளித்து, திருப்திசெய்தலே பலிதருதல்ஆகும். பலிகொடுக்கும் முறையை அறிந்து வாயசாதிகட்கும், யாகசாலைக்குவெளியே பலியிடுதல்வேண்டும். பலிதருதலே யாகத்தின் பயனையும், நமக்கு பலத்தையும் அளிக்கும்.

111) குண்டாக்னிஸம்ரக்ஷணம். இது, வேள்வித்தீயை குண்டத்திலேயே பாதுகாத்து வைத்திருத்தல்ஆகும். இறைவனை பூஜித்த வேள்வித்தீயில் பின்னர் தொடர்ந்து, செய்ய வேண்டிய சில (சடங்கு) சம்ஸ்காரங்கள் இருப்பதால், அந்தயாகத்து அக்னியை முடிவுவரை அணையாமல், பாதுகாத்து, பத்திரமாக வைத்திருத்தல்வேண்டும். நெல்உமி, பசுஞ்சாண உலர்-வில்லைகள் மூடிகாத்திடுவர்.

112) திவ்யோபசார தீபாராதனம். இது, தெய்வாம்சங்களான தீபங்களைக்காட்டி, இராஜ-உபசாரங்களைச் செய்தல்ஆகும். இதனை தெய்வாம்சமான ரதஹாரத்தி, த்ரிதளதீபம், நந்திதீபம், பஞ்சப்ரம்மதீபங்கள், பூரணகும்பதீபம் போன்ற தீபங்களைப்பூசித்தபின்பு, எடுத்துக்காட்டி, இறைவனுக்கு இராஜோபசாரங்களைச் செய்தல் வேண்டும்.

113) தசதானம் பூரிதானம். இது யாத்ராதான 10வகை தானங்கள், யாகமுடிவில் சிறப்புமிக்க அளவற்ற தானங்களைச்செய்தல்ஆகும். இதனை பசு, பூமி, சுவர்ணம், நெய், ஆடை, தானியம், வெல்லவம், வெள்ளி, உப்பு ஆகிய 10ம் தசதானப்பொருட்களாகும்.

இவ்விதம் கோதானம், பூதானம், முதற்கொண்டு பத்துவித தானங்களையும், பூரி என்றால் அளவற்றது என்று பொருள். ஏழை எளியோர் ஊனமுற்றோருக்கு பூரி தானங்களையும் யாகமுடிவில் கலசம் புறப்படுவதற்கு முன்பாக செய்து, மகிழ்வித்தல்வேண்டும்.

114) கும்போத்வாஸனம். (யாகசாலையிலிருந்து மூர்த்திகும்பத்தை வெளியே அனுப்புதல்). இது யாகசாலையிலிருந்து மூர்த்திகும்பத்தைத்தாங்கி எடுத்துவருதல்ஆகும். புறப்பாடாக யாகசாலையிலிருந்து தெய்வத்தின்மஹாகும்பத்தை தனதுதலையில்தாங்கி வருபவரை, இறைவனின் வாகனமாக கருதிபூஜித்து, கும்பத்தை யாகசாலையில் இருந்து ஸகல- வாத்திய மங்களஇசை முழங்கிட புறப்பாடுசெய்து, தலையில் தாங்கியவாறே கோயில்வரை அழைத்துவரவேண்டும்.

115) மூர்த்திகும்ப ஆலயப்ரவேசம். இது, தெய்வகும்பமானது, கோயிலுக்குள் முறையே புகுதல்ஆகும். இதனை பிரதானகும்பத்தை மற்றதெய்வங்களின் கும்பத்தோடு எல்லாவித ராஜஉபசாரங்களையும் செய்துகொண்டு, ஆலயத்தின் எட்டுதிக்குபாலகர்களையும் திருப்தி செய்தவண்ணம், ஆலயத்தைவலமாகவந்து, ஆலயத்தில் தெய்வகும்பங்கள் முறையே அந்தந்த மூர்த்திகளின் உரியசந்நிதானத்தை அடைந்து, வாயிலில் உபசரித்தபின்பு உள்ளேஅழைத்திட கோயிலினுள் புகுதல்முறை. கோயிலில் சுவாமியின்முன்பு தானியபரப்பில் கும்பத்தை இறக்கி வைத்து, இருக்கச்செய்து சிறப்பான பூசைகளைச்செய்து லிங்காதிகளில் சேர்த்திடவேண்டும்.

116) கும்பாத் லிங்கசுயோஜனம். இது, கும்பத்திலிருந்து, தெய்வத்தை, லிங்கத்தில் சேர்த்திடுதல்ஆகும். இதனை கும்பத்திலிருந்து லிங்கம் அல்லது பிம்பத்தில் உரியதெய்வத்தை பொன்கம்பி நாடீசந்தானத்தின்வழியாக, முறையேபூஜித்து லிங்கத்தில்ஆவாஹித்து, முன்னர் லிங்கத்திலிருந்து கும்பத்திற்கு அழைத்தமுறையிலேயே, மீண்டும் கும்பத்திலிருந்து லிங்கத்திற்கு அழைத்துசேர்த்திடவேண்டும். இதுவே **ஸுயோஜனம் = சேர்த்தல்** எனும் கிரியையாகும்.

117) கும்பாபிஷேகம். இதுவே ஸம்புரோக்ஷணம். அதாவது யாகத்தின் மகாகும்பதீர்த்தத்தால் உரியமூர்த்திக்கு அபிஷேகம் செய்தல்ஆகும். இறைவனை கும்பத்திலிருந்து லிங்கம் அல்லது மூர்த்திபிம்பாதிகளில் ஸுயோஜனம் செய்தபிறகு, இறைவனைப்பூஜித்த மகாகும்பத்தின் தீர்த்தத்தால் அம்மூர்த்திக்கு முழுக்காட்டுதலாகிற கும்பாபிஷேகத்தைச் (பெருஞ்சாந்தி கும்பத்தால் அபிஷேகம்) செய்யவேண்டும். இதனால் சூரியசந்திரர் உள்ளவரையிலும், அதற்கு குறை ஏற்படும் வரையிலும், தெய்வம் அருள்சக்திகள் அச்சிலையைவிட்டு அகலாதிருக்கும்.

118) பரிவார ஸம்யோஜனம். இது துவாரபாலாதி பலிபிடாந்தமான சுற்றுதெய்வங்களை ஸ்தாபித்தல்ஆகும். இதற்கு துவாரபாலகர்கள் முதற்கொண்டு, பலிபீடம்வரையிலாக, ஸ்தாபித்துள்ள தெய்வங்களுக்கு அந்தஅந்ததெய்வங்களை ஆவாஹித்து, பூசித்தகும்பங்களின் தீர்த்தத்தால் அபிஷேகம் செய்யவேண்டும். இதனால் மூலமூர்த்திஉள்ளமட்டும், சுற்றிலும் இவர்களும் அங்கேயே விளங்கி அருள்புரிவார்கள்.

119) போகாங்கார்ச்சனம். இது பலசுற்றுகளில் ஆவரணதெய்வங்களுடன் சிறப்பான பூஜையை செய்தல்ஆகும். சுகபோகங்களைச்செய்வதற்கு, உடனிருந்து துணைபுரிபவர்களாக, **போகாங்கபூசை** என்றுகூறப்படும் ஆவரணதெய்வங்களை இறைவனருகில் சிறப்பாகபூஜித்து, வழிபடவேண்டும். இறைவனை சுற்றுதெய்வமின்றி தனித்தேஇருப்பவராய்பூசித்தல் குற்றமாகும். ஆதலால் சுற்றுதெய்வங்களை பூசித்தல்வேண்டும். இங்கு 1ஆவரணம்முதல், 21ஆவரணம்வரை தேவரகளை் குழாங்களாக சூழ்ந்துள்ளவாறு பூசிக்கும் **ஆவரணபூசைமுறை** கூறப்பட்டு உள்ளது. மூன்றுசுற்று அல்லது ஐந்துசுற்றுகளில் உரியதெய்வங்களை பூசிப்பது வழக்கமாகும்.

120) பிராயசித்தம், ஹோமம். இது மீண்டும் அதேயாகசாலையில் ஆசாரியர் குறை-தீர்த்திடும் ஹோமத்தை செய்தல்ஆகும். இக்கிரியை மீண்டும் அதேயாகசாலையில், அதே அக்னியில் பூசையை மட்டும், மீண்டும்ஒருமுறை யாகத்தீயில்செய்து, பூஜைகளில், பிரதிஷ்டையில் அறிந்தோ, அறியாமலோ ஏற்பட்ட யாதொருகுறைஇருந்தால், அக்குறைகள் அனைத்தும் நிறைவுபெரும்பொருட்டு, **பிராயச்சித்தம்** எனப்படுகிற உரியஅஸ்திரமந்திரங்களால் செய்யப்படும் ஹோமத்தைச்செய்யவேண்டும். இதனால் பிரதிஷ்டைகிரியை குற்றமற்றதாதி நிறைவுபெறும். முழுபயனை அளிக்கும்.

121) சண்டஹோமம். இது சண்டேசபக்தரைப்பூஜித்து, ஹோமம்செய்தல்ஆகும். இதனை சிவபக்தரானசண்டேஸ்வரரை சிவநிர்மால்யத்தினால்அலங்கரித்து, பூஜித்து, அவருக்கு உரிய மந்திரத்தால் ஹோமத்தைசெய்து, 1008ஆகுதிகள்கொடுத்து, அவரிடம் சிவபிரதிஷ்டையின் பலனையும், சிவபூஜையின்பலனையும் அளிக்கவேண்டி துதித்தல்வேண்டும். பகவானை பூசிக்கும் பயன் எப்பொழுதும் அவரது அடியவர்களான பாகவதர்களை மதித்துப்பூசித்தலாலேயே பெறமுடியும். **பக்தபிரதிஷ்டை, பக்தோஸ்வம், பக்தபூஜையே** எதிலும், முடிவில்அமைந்து, முடிவானபயனைத்தருவதாக அமைந்து உள்ளது என்று ஆகமங்களின்படி அறியத்தக்கது.

122) யாகாக்னி உத்வாஸனம். இது யாகசாலையின் அக்னிபகவானை மகிழ்வித்து, முடிவில் வழிஅனுப்புதல்ஆகும். இறைவனை பூஜிப்பதற்கு யாககுண்டத்தில் தோற்றுவித்தும், இறையைஆவாஹித்தும், பூசிக்கப்பட்ட குண்டத்தில்இருந்து உதவிய அக்னிபகவானை, மந்திரத்தில்குறைஇருந்தாலும், செயலில்குறைஇருந்தாலும், தம்மை

மன்னித்துஅருளவேண்டும் என பயபக்தியுடன் ஆசாரியர் பிரார்த்தித்து, தாம்பூலத்தை அவருக்கு ஆகுதிஅளித்து, வணங்கி, அவரைமகிழ்வித்து, "அவரை தாமழைக்கையில் மீண்டும் வரவேண்டும்" என்றுகூறி வழிஅனுப்புதல், விருப்பப்படி இருக்கவைத்தல்வேண்டும். தம்மால் வைக்கப்பட்ட நியாஸம் செய்யப்பட்ட மந்திரங்களை, தெய்வங்களை முறையே ஒடுக்கி, புனிதம்குன்றாதவாறு சேர்த்திடுதல் வேண்டும்.

123) சூர்ணோத்ஸவம். இது மஞ்சள் முதலிய மங்கலப்பொருள்களைமந்திரித்து, பொடி-செய்து, அணிவித்தல் ஆகும். சூர்ணோத்ஸவத்திற்கு என்று மஞ்சள் முதலிய மங்களத்திரவியங்-களைப்பூஜித்துஉரலில்இட்டுபொடி செய்யவேண்டும். பொடிசெய்த அப்பொருட்களில் மந்திரத்தை ஜபித்தபின்பு, அச்சாந்தினை இறைவனுக்கு அணிவித்தல்வேண்டும். இதனை சந்தனம்போல் அணிவித்தும், கரைத்து மஞ்சள்நீராக தெளித்தும், மங்களநீராட்டுதலைச்செய்தும், யாவரும் தீர்த்தர்களாக புனிதர்களாகஆகும்வகையில் செய்துமுடிப்பர்.

124) ஆசார்ய ரக்ஷாவிஸர்ஜனம். இது யாகஆசாரியர் முதலாக ரித்விஜர் அனைவரின் கைகளில் துவக்கத்தில் கட்டிய நூல்காப்புகளை அவிழ்த்துவிடுதல்ஆகும். பிரதிஷ்டையின் பொருட்டு, முன்புகையில் கட்டப்பட்ட ரக்ஷாந்தனகாப்பினை, ஆசாரியர்முதற்கொண்டு அனைவருக்கும் அவிழ்த்துவிடவேண்டும். இது முறையான காரியத்தின் நிறைவானசெயலாகும். இதனை முறையே அர்ப்பணித்திடவேண்டும்.

125) அவபிருதஸ்நானம். இது யாவரும் அங்குரம், அஸ்திரதீர்த்தத்துடன், தீர்த்தத்தில், மஞ்சள்நீரில் முழுக்காடுதல்ஆகும். யாகம்செய்தவர் அஸ்திரமந்திரத்தால் பூஜித்த, மஞ்சள்நீரில் நதீ, குளம் இவற்றில் ஆசாரியர் அங்குரத்துடன், அஸ்திரதேவர், அஸ்திரகும்பதீர்த்தத்தால் முழுகிநீராடுதல்வேண்டும். மற்றவரும் அவருடன் முழ்கிநீராடுதல்வேண்டும். இதனால் சிவஸாயுஜ்ய பதவியையும், சிவத்தன்மையையும், புனிதத்தையும் யாவரும் எய்துவர்.

126) மஹாஸ்நபனம். (பெரும் முழுக்காட்டுதல்). இது ஆலயமூர்த்திக்கு 1008 கலசங்-களால் நீராட்டுதலை பூஜைஹோமத்துடன் செய்வதுஆகும். ஆலயபிரதான மூர்த்தியின்பொருட்டு பிரதிஷ்டைக்குஓர்அங்கமாக விதித்துள்ள, பிராயச்சித்தமாகக்கருதி 1008கலசங்களைமுறையே நிறுவி, சிவாகமமுறைப்படிபூஜித்து, ஹோமம்செய்து, ஆகுதிகளைகொடுத்து, பலவகைஜபம் செய்து, அக்கலசங்களினால் இறைவனுக்கு தொடர்ந்து, பெருமளவில் அபிஷேகம்செய்து, ஸகல-உபசாரங்களுடன் தீபாராதனை செய்வதே **மஹாஸ்நபனம்** என்பதுஆகும்.

127) மஹாஅபிஷேகம். இது பிரதிஷ்டைக்குப்பிறகு, முதலில் விரிவாக மஹாஅபிஷேகம் செய்வதாகும். இதனை பிரதிஷ்டைக்குபின்பு, முதல்அபிஷேகமாக இறைவனுக்கு தைலகாப்பு

செய்து, பஞ்சகவ்யம் முதற்கொண்டு 36வகையில் கலசாபிஷேகம் வரை அனைத்து திரவிய-விசேஷங்களினால் விரிவாக செய்யவேண்டும்.

128) மஹாஹவிர்நிவேதனம். (அன்னப்பெரும் படையலைப்படைத்தல்). இது தெய்வத்திற்குபெரும்அளவில் அன்னப்படையலைப்படைத்தல்ஆகும். மேற்கூறியபடி மகா-அபிஷேகம்செய்துமுடித்து, அலங்காரம்செய்து பூசித்திடும்பொழுது, பெரும்அளவில் அன்னப்-படையலை தயார்செய்து, அதை இறைவனுக்கு எதிரில் குவியலாக வாழைஇலையில் பரப்பி வைத்து, அன்னசூக்தம் ஜபித்து, 16வகையாக அன்னபக்ஷ்யபலகாரவகைகளைப்படைத்திடல் வேண்டும். பின்பு அனைவருக்கும் அவற்றை பிரசாதமாக கொடுத்திடவேண்டும்.

129) லோகேச பலிப்ரதானம். இது கோயிலின் விசேஷபூசை 8திசைநாயகர்களுக்கும் அன்னபலியை அளித்தல்ஆகும். கோயிலின் கிழக்கு முதலான எட்டுதிசையிலும் ஸ்தாபிக்கப்-பட்டுள்ள திசாபலிபீடங்களில் [1]இந்திரன், [2]அக்னி, [3]யமன், [4]நிருருதி, [5]வருணன், [6]வாயு, [7]குபேரன், [8]ஈசானன் என்ற எட்டுதிக்குபாலகர்களுக்கும் அன்னத்தினால் பலியை கொடுத்து திருப்தி செய்துபூஜிக்கவேண்டும்.

130) ஸ்ரீகல்யாண உத்ஸவம். இது கோயிலின் தெய்வத்திற்கு திருமணம் அல்லது பொற்கிரீடம்சூட்டுதலைச் செய்வித்தல் ஆகும். பிரதிஷ்டைமுடிந்ததினத்தில், இறைவன்இறைவி இருவருக்கும், ஆகமமுறைப்படி அபிஷேகித்து, அலங்காரம்செய்து, வைதிகதிருமணவைபவ முறைப்படி, திருமணத்தைசெய்து வைக்கவேண்டும். இறைவன்இறைவியின் உற்சவமூர்த்தி-களுக்கும் இவ்விதமே திருமணவைபவம்செய்து, விருஷபவாகனத்தில் இருவரையும்அமர்த்தி, வீதிஉலாவருதலைச் செய்தல்வேண்டும். இறைவன்மட்டுமோ, இறைவிமட்டுமோ உள்ள, ஆலயத்தில் தனிப்பட்டதெய்வங்களுக்கு முடிசூட்டுதலை உபசரிப்பாக நூதனமகுடாரோப-விதிமுறைப்படி செய்து, வீதிஉலாவைச்செய்தல்வேண்டும்.

131) பிரதிஷ்டோத்ஸவம். இது பிரதிஷ்டைசெய்தஅன்றுஇரவு, கிராமவீதிஉலாவரும் பொருட்டு, விழாசெய்வித்தல்ஆகும். கும்பாபிஷேகம் செய்யப்பட்ட அன்றுஇரவு உற்சவ-மூர்த்திகள் அனைத்தையும், நிருத்தம், கீதம், வாத்யம், இவற்றோடு மற்றும் பலவகை கலை-நிகழ்ச்சிகளோடும், ஊரேஒன்றுகூடி நகர்வலம் செய்யுமாறு, இவ்விழாவினை சிறப்பாக செய்தல் வேண்டும். நித்தியபூஜை, நித்தியஉத்ஸவம், மகோத்ஸ்வம் அனைத்திற்கும் கும்பாபிஷேகமே அடிப்படையாகவும், முதலாவதாகவும் திகழ்வதால், பிரதிஷ்டோத்ஸவமே நித்யோத்ஸவத்திற்கும், மஹோத்ஸவத்திற்கும் முதல்விழாவாக உள்ளதாக அறியலாம்.

132) யஜமானோத்ஜவம். இது யாகம் செய்வதித்த கர்த்தாவிற்கு பிரதிஷ்டையின் அருள்-பிரசாதத்தை ஆசாரியர் தந்து மகிழ்வித்தல் ஆகும். ரித்விஜர்களுடன்கூடிய

பிரதானஆசாரியர், யாகம்செய்வித்த கர்த்தாவிற்கு இறையருள்நிறைந்த அருட்பிரசாதத்தைத்தந்து, மகிழ்வித்து, அவரை சிவதர்மம் வளர்க்கவும், செழிக்கவும் ஆசீர்வதித்தல்வேண்டும். பின்பு அவரை பலரும் போற்றி, வீட்டில்சேர்த்திடவேண்டும்.

133) தக்ஷிணாபிரதானம். இது ஆசாரியர் முதலானோர்க்கு கர்த்தா முதலானோர், பொற்காசு முதலான வெகுமதியைத்தந்து வணங்குவதுஆகும். பிரதிஷ்டைபோன்ற உயரிய சிவபுண்ணிய யாககாரியங்களை, இறைவனின் பொருட்டுசெய்து, உலகிற்குஉதவிய ஆசார்யர் ரித்விஜர்கள் போன்றவர்களுக்கு, தகுந்த அளவில் தக்ஷிணை, யாகத்தின் மிகுந்த தனம், தானியம், வெகுமதி, பொற்காசு போன்றவைகளைத் தந்து யஜமானர் வணங்குதல்முறைஆகும்.

134) பிரதிஷ்டாபலதானம். இது, ஆசாரியர் கர்த்தாவிற்கு கும்பாபிஷேகபயனை முறையே அளித்திடல்ஆகும். தாம் பிரதிஷ்டைசெய்தஅனைத்து சிவபுண்ணியப்பயனையும், ஆசாரியர் கர்த்தாவிடம் பழம்தாம்பூலத்தில் நீர்வார்த்து, இக்கருத்தைக்கூறி பயனைதாரைவார்த்து அளித்தல்வேண்டும். இதனால் கும்பாபிஷேகம் செய்தபயன் அனைத்தும் அதன்முழு புண்ணியமும் கர்த்தாவிடம் அளிக்கப்படுகிறது.

135) ஆசார்யோத்ஸவம். இது, பிரதிஷ்டாபயனை பெற்றுக்கொண்ட யஜமானர், ஆசாரியரைக் கௌரவித்துவணங்கி, மகிழ்வித்தல்ஆகும். இக்கிரியை ஆசார்யவரணம்செய்த கர்த்தாவானவர், முறைப்படி நிகழ்ச்சியைமுடித்து, கும்பாபிஷேகப்பயனைத்தமக்குத்தந்த ஆசாரியரை கௌரவித்து, வணங்கி, மகிழ்வித்து, பல்லக்கு முதலானவற்றில் அவரது வீட்டிற்கு ஸகலஉபசாரங்களுடன் தாமும் அழைத்துச்சென்றுசேர்ப்பித்தல் **ஆசாரியஉத்வஸம்** எனப்படும்.

136) மண்டல திரிபக்ஷயஜனாரம். இது, தொடர்ந்து மூன்றுபக்ஷம் (45 நாள்) மண்டல அபிஷேகபூஜை செய்யப்படுவதாகும். இறைவனுக்கு காப்புகட்டியதன்பேரில், அன்றுமுதல் மூன்றுபக்ஷகாலம் 45 நாட்கள் எனும் 1மண்டலம் தினமும் கலசபூஜை, ஹோமம் இவற்றை செய்து, இறைவனுக்கு உரியபொருட்களால் அபிஷேகித்து, விசேஷஆராதனையை செய்துவரவேண்டும். இருபக்ஷமாகவோ, ஒருபக்ஷமாக 15நாளிலோ இதனை செய்தும் முடிக்கலாம்.

137) தேவதாரக்ஷாவிஸர்ஜனம். இது கோயில் தெய்வங்களினுடைய கும்பாபிஷேகத்தன்று கட்டப்பட்ட காப்பைக்களைந்துபூசித்தலாகும். தெய்வமூர்த்தங்களுக்கு கும்பாபிஷேகத்தின் பொழுது கட்டியகாப்பினை மூன்றுபக்ஷமண்டலம் 45 நாட்கள் அல்லது இருபக்ஷம் 30 நாட்கள் அல்லது 1பக்ஷம் 15 நாட்கள் முடிந்தபிறகு, முடிவடைந்தஅன்று காலை அக்காப்பினை அவிழ்த்து விஸர்ஜனம் செய்துபின்பு சிறப்புகலசாபிஷேகம், நிவேதனத்துடன் விழாவையும் செய்யவேண்டும்.

138) மண்டலார்ச்சன அவஸான உத்ஸவம். இது 45நாள் மண்டலபூஜையின் நிறைவுத் திருவிழாவை செய்தல்ஆகும். த்ரிபக்ஷயஜனத்தை மண்டலபூஜையின் நிறைவுதினத்தன்று விசேஷஅபிஷேகத்தை, யாகபூஜை, அலங்காரம் போன்றவைகளுடன்செய்து, இறைவனை நிறைந்தமனதோடு வணங்கி வழிபடவேண்டும். அன்று அந்தந்த தேவதைக்குஉரிய சிறப்பு-வாஹனத்தில் உத்ஸவமூர்த்தியை புறப்பாடுசெய்து, உத்ஸவயானக்ரமத்துடன் கிராமபிரதக்ஷிண ஊர்வலத்தைச்செய்து பரிவேஷநீராஜனம் செய்து, கோயிலினுள் ஸ்தாபித்திடவேண்டும்.

139) சண்டேசாதி பத்தோத்ஸவம். இது, சண்டேஸ்வரருக்கு அல்லது அத்தெய்வத்தின் அணுக்கத்தொண்டருக்கு (பக்தருக்கு) விழாசெய்தல் ஆகும். இறைவனை எப்பொழுதும் இடைவிடாதுசிந்தித்து, தியானத்தில்இருக்கும் பக்தரான சண்டேஸ்வரருக்கு அபிஷேகம், அலங்காரம், ஆராதனைகளைசெய்து, அவருக்கும் திருவிழாவை, தேவனுடனேயே மிகச்சிறப்பாக சேர்த்தே செய்யவேண்டும். அல்லது அன்றேமுடிவில் தனியாகவும், இரண்டாவதாக நகர்வலம் வருமாறும்செய்யலாம். இதுவே **பக்தோத்ஸவம்** ஆகும்.

140) தீனாந்தலோக பூரிதானம். இது, ஏழை, குருடர், ஊனமுற்றோர் முதலிய எளியோருக்கான, அதிகநலன்தரும் தானங்களைச் செய்துமுடித்தல்ஆகும். எளியவர்க்கு அவர்-களின் நலன்கருதி அவர்களுக்கு என்னதேவையோ, அதனைசெய்துகொடுத்து, அவர்களின் அன்பைபெற்று, இறைசிந்தனையோடு அதனை இறைவனுக்கே அர்ப்பணம் செய்யவேண்டும். மக்களின் சேவையால் பக்தவத்ஸலனான இறைவன் அருளுவான் என்கிறது ஆகமம்.

141) நித்யபூஜாரம்பம். இது பிரதிஷ்டையானதினம் முதலாக சிலநாட்கள் நைமதித்திக உத்ஸவம் செய்து, முடிவுற்றதும் இடைவிடாமல் நித்தமும் இயன்றஅளவு இருகாலம் முதலாக எட்டுகாலம் வரையலாகஆலயத்தின் நித்யபூஜையை விதிமுறைப்படி திட்டமிட்டுத்துவக்கி, இடைவிடாமல் பூசையை கடைபிடித்தல்வேண்டும். நித்யபூஜை செய்யப்படாமல்விடப்பட்டால், மக்களுக்கும், மன்னனுக்கும் தீங்குஏற்படும். எனவே, நித்யபூஜையை, ஆலயத்தின் பழக்க-வழக்கங்களைக்கொண்டு, 1 கால பூஜை முதல் 2 காலம், 3 காலம், 6 காலபூஜை & 12 கால-பூஜை என இப்படி ஒருவிதிமுறைப்படி ஆரம்பித்து, மாற்றாமல் அதனையேபின்பற்றி, இறைவனை இடைவிடாது பூஜிக்கவேண்டும். எல்லாவித பூஜையைவிட சிறந்தது **நித்யபூஜையே**ஆகும். இதனால் பலகோடி நன்மைகள் அனைவருக்கும் கிட்டுவதாகும். ஆலயநித்யபூஜை என்பது தேசநலனுக்கும், தேசத்தின் அனைத்துஜீவராசிகளுக்கும் நன்மைஏற்படசெய்யப்படுவதாகும். இவ்விதமாக ஆலயதேவதா மஹாகும்பாபிஷேககிரியாவளியின் விவரம், தொன்றுதொட்டு சைவமரபினர்பின்பற்றிவரும் சைவாகமபத்ததியை அனுசரித்து கூறப்பட்டது. இதனையே சைவசமயிகள் அனைவரும், கடைபிடித்து, இவற்றினுடைய உட்கிரியைகளையும், நன்குஅறிந்து, மனம், வாக்கு, காயம்

ஆகிய மூன்றினாலும் முறையே பொருளுணர்ந்து, மனோபாவனையோடு மந்திரஒலியை முறையாக உச்சரித்து, ஏற்றபொருளைஉரிய செயலால், உகந்தபூஜையில்அளித்து, திரிகரணசுத்தியுடன், திரிகரணத்தால் முக்கண்ணுடைவனையும், முக்கண்ணுடையவளையும் பிறவாமைவேண்டியும், பிறந்தாலும் மறவாதநினைவைவேண்டியும், பூஜித்து, நாம் பயன் பெறுவோமாக. இமைப்பொழுதும் என்நெஞ்சில்நீங்காதான்தாள்வாழ்க. மேன்மைகொள் சைவநீதிவிளங்குக உலகமெல்லாம். வாழ்கசீரடியாரெல்லாம். முப்போதும் திருமேனி தீண்டுவார் தம் அடியார்க்கும் அடியேன். குருவருளும் திருவருளம் என்றுமே துணை எனக்கூறி வணங்கி மகிழ்கிறேன்.

************* சுபம் *************

உ

ஓம் கணபதயே நம :

ஆதிசைவ ஸதாசார விளக்கம்

கட்டுரையாசிரியர்

சிவாகம ஞானகலாநிதி, ஜோதிடர். கயிலை மணி.

புலவர் ஏ.பு. சந்தான குருக்கள் M.A., B.Ed.,

பம்மல், சென்னை - 600 075.

"தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி" (திருவாசகம்)

சைவசமயாசாரியரும், அருளாளருமான மாணிக்கவாசகர் இறைவனை இத்தென்னாட்டிற்கே உரியவராகவும், அவரே உலகில் உள்ள எந்நாட்டவர்க்கும் இறைவர் ஆவார் என்றும் கூறுகிறார். அதிலும் தென்னாடுடைய சிவனே போற்றி என்பதால் தென்னாட்டில் சிவன் சிறப்புற வழிபடப்பெறுகிறான். அப்படி தென்னாட்டில் சிறப்பான வழிபாடுகளைப்பெறும் அச்சிவன் எவ்வுலகிற்கும் இறைவனாகி தன்னைக் காத்தருளவேண்டும் என்று வேண்டுகிறார். (போற்றி என்பதற்கு காத்தல் - பாதுகாத்தல் என்பதே சரியான பொருளாகும்). அப்படி என்ன சிறப்பான வழிபாடுகள் தென்னாட்டில் நடைபெறுகிறது? எனில், அச்சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்ட ஆகமங்களின் விதிப்படியான வழிபாடு தென்னாட்டில் சிறப்பாக நடைபெறுகிறது என்பதாகும். ஆம் இறைவனால் அருளப்பெற்ற ஆகமங்கள் வழியே தென்னாட்டில் சைவம் தழைத்தது. யாவரும் அவ்விறைவனை ஆன்மார்த்தமாக ஆகமவிதிப்படியே தென்னாட்டில் சிறப்பாக வழிப்படுகிறார்கள் என்பதாகும். ஆன்மார்த்தமட்டுமல்லாது பரார்த்தமாகவும் உலக நன்மைகருதி, ஆலயங்களை அமைத்து, நித்திய, நைமித்திக பூசைனைகள் செய்வது பற்றியும் ஆகமங்கள் விளக்குகின்றன. ஆகமவிதிப்படி பரார்த்தபூஜைகளை ஆதிசைவர்களே செய்யவேண்டும் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன. இதுவே இறைவனின் திருவுளப்பாங்கு எனலாம். உண்மைதான்! ஆகமங்களின் விதிப்படிதான் நித்தியநைமித்திகங்கள் நடைபெறுகின்றன. ஆன்மார்த்த பூஜைகளையும் சைவதீட்சை பெற்று செய்கின்றனர். ஆனால் இதில் என்ன "ஸதாசாரம்" என்று ஒன்று தனியாக உள்ளதா? ஆகமத்தில் சேர்ந்ததா? எனில் அதுப்பற்றி சற்று விரிவாகவே ஆய்தல்வேண்டும். முதலில் ஒரு கேள்வி, நாம் எங்கிருந்து வந்தோம்? எங்கு இருக்கின்றோம்? எங்கே போகிறோம்? இக்கேள்விகளுக்கு என்ன விடை காணமுடியும் எனில் இங்கு கூறுவோம்.

உலகத்தின் வாழ்வியல் நிலைமைப்பற்றி முதலாவதாகப் பார்ப்போம். உலகம் தோன்றி பல கோடிஆண்டுகள் ஆகிவிட்டன, மனிதன்தோன்றி, வளர்ந்து, பலவிதவளர்ச்சிகளை அடைந்து கொண்டேயிருக்கின்றான், இதற்கு முடிவே இல்லை. மனித வாழ்நாள் குறைந்தாலும், மனிதர்- களின் பழக்கவழக்கங்கள், குணங்கள் என்பதெல்லாம் என்றும் மாறாது இருக்கிறது. ஆனால், மனிதன், இயற்கையான மற்றையபொருள்களோடு இயைந்து, வாழ்ந்தவாழ்வே நாம் இருந்த நிலை என்பதாகும். இந்நிலையில் மனமும், உடலும் ஆரோக்கியமாக இருந்தன. இறைநாட்டம் உண்மையாய் இருந்தது. அதனால் மக்கள் மனநிம்மதியாக வாழமுடிந்தது. ஆனால், இன்றைய நிலையில் இயற்கையைமீறி, பலவித செயற்கைஅமைப்புகளைக் கொண்டு, வாழும் காலமாகி-விட்டது. தற்காலம், எல்லாம் மனிதனால் முடியும் என்னும் வேண்டாத எண்ணம் உருவாகி-விட்டது. இயற்கையைத்திரித்துமாற்றி, பலசெயற்கையான அமைப்புகளை ஏற்படுத்திக்கொண்டு, வாழ்ந்துவருகிறோம். இதுதான் நாம் இருக்கும்நிலை. இதனால் உடலும், உள்ளமும் ஆரோக்கிய- மற்றதாகிவிட்டது, உடலிலும் பலமில்லை, உள்ளத்திலும் உறுதியில்லை, தூய்மையும், நேர்மையும் போய்விட்டன. அதனால் மனஅமைதியும், நிம்மதியும் காணாமல் போய்விட்டன. இனி எங்கே போகிறோம்? எனில், இன்றைய விஞ்ஞானவளர்ச்சியினால், பல அரிய கண்டுபிடிப்புகளால், இயற்கையை வென்றுவிடமுடியும் என்றும், அதனால் மனிதன் மூன்று காலங்களிலும் பயணம் செய்யலாம் என்றும் கருதப்படுகிறது. நேற்று எப்படியிருந்தோம், நாளை எப்படி இருப்போம் என அறியமுடியும் என்று துணிந்து சொல்லுகின்றனர் விஞ்ஞானிகள். அதற்கு காலப்பயணம் என்ற ஒன்றைச்செய்ய பல ஆய்வுகள் நடத்திவருகின்றனர் இன்றைய விஞ்ஞானிகள். அவர்கள் கூறுவது யாதெனில், ஒளியின் வேகத்தில் சென்றால் காலப்பயணம் சாத்தியமாகும் என்பதாகும். ஒளியின் வேகம் என்பது ஒருநாள் அந்த வேகத்தில் சென்றால் நம் உலகில் ஒரு வருடம் கழிந்து போய்விடும் என்று கூறப்படுகிறது. நாமோ, நம் சந்ததியினரோ காலப்பயணம் செய்வார்களா? இது சாத்தியமாகுமா? தெரியாது. கேள்விக்குறியாகவே உள்ளது. ஆனால், நம் முன்னோர்கள் இந்த இந்திய மண்ணில் வாழ்ந்த முனிவர்கள் மிகவும் உயர்ந்த, விஞ்ஞானிகள்ஆவார்கள். அவர்கள் இந்த ஒளியின் வேகத்தையும் அறிந்திருந்தனர். அதில் ஒருநாள் சென்றால் நம் பூமியில் ஒருஆண்டு ஆகும் என்றும் அறிந்து வைத்திருந்தனர். அதற்கும் மேலாக மனவேகத்தை அறிந்திருந்தனர். அந்த வேகத்திற்கு ஈடான வேகம் வேறொன்றும் இல்லை என்றும் உணர்ந்து இருந்தனர். அதனால் அவர்கள் முக்காலமும் உணர்ந்த ஞானிகள் எனப்பட்டனர். இந்த வகையில் ஆய்வு செய்வது இந்ததலைப்பின் நோக்கமல்ல. ஆனால், அவர்களால் எப்படி இவற்றை அறியமுடிந்தது? அதுபோல் நாமும் முக்காலமும் உணரமுடியுமா? என்று ஆவலாய் கேள்வி எழுப்பமுடியும். அவை முடியும் என்றால், அவ்வாறு அது முடிய நாம் எந்தவொரு துரும்பையும் அசைக்கவில்லையே, அப்படி முக்காலமும் உணர்ந்த முனிவர்கள் நமக்களித்த சதாசாரம் என்பதின் அறிச்சுவடியைக்கூட முழுமையாக உணராமல் இருக்கின்றோமே என்னும் ஆதங்கத்தின் வடிகாலாய் அமைவதே

இக்கட்டுரையாகும். அதிலும் ஆதிசைவம் வேறு, ஸதாசாரம் வேறு என்று மாறுபட்டு நிற்கும் நிலைமையும் உள்ளது. அதேநேரத்தில் சைவத்தின் விதிகளையும், வைதீகவிதிகளையும் சேர்த்து குழப்பிக்கொள்வதிலேயேதான், நமது செயல்-பாடுகள் உள்ளன. ஆதிசைவத்திற்கும், ஸதாசாரத்திற்கும் உள்ள தொடர்பு யாது? இவை ஒன்றா? வெவ்வோறனதா? என்பதை அறியமுற்படுவோம், பயன் பெறுவோம்.

முதலில் ஸதாசாரம் என்பது என்ன? என்பதை அறிவோம். நல்ல ஒழுக்கம் என்று சுருங்கக் கூறலாம் ஒழுக்கம் என்பது ஒழுகலாறு அதாவது, வாழ்வில் செய்யவேண்டிய வழிமுறைகள், கடைப்பிடிக்கவேண்டிய குணங்கள், மேற்கொள்ளவேண்டிய கடமைகள் எனலாம். இந்த ஸதாசாரம் என்பவற்றை சொல்லியவர்கள் ரிஷிகள் என்றும், முனிவர்கள் என்றும் அறியப்படுகிறார்கள். அவர்கள் யாவரும் துறவிகள் அல்ல. வாழ்வின் அனுபவத்தை முழுமையாக பெற்ற இல்லறத்தார்களே. மனத்தைஅடக்கி, அதன் வேகத்தைஅறிந்து, அதன் வழியாக முக்காலமும் உணர்ந்தவர்கள். தங்களைப்போலவே இவ்வுலகமக்கள் யாவரும் உயர-வேண்டும், இறைஅனுபவத்தை பெறவேண்டும், பிறவிப்பெருங்கடலை நீந்தவேண்டும், அதனால் இறைவனடி சேரவேண்டும் என்று தான் "ஸ்மிருதி" என்று சொல்லப்படும் தர்மசாஸ்திரங்களை நமக்களித்துள்ளனர். இதேகருத்திலேயே தர்மசாஸ்திரங்களின் சாரமாக திருக்குறள் தமிழில் இயற்றப்பட்டுள்ளது. அந்த தர்மசாஸ்திரங்களை ரிஷிகள் வேதத்தில் கூறப்பட்டுள்ள நெறிமுறை-களுக்கு மாறுபடாமல், அதேநேரத்தில் எக்காலத்திலும் யாவரும் நடைமுறையில் ஏற்று செயல்-படுத்தும்விதமாகவே கொடுத்துள்ளனர். காலத்தை யுகங்களாகபிரித்தனர். அந்ததந்த யுகத்திற்கு ஏற்ற ஸதாசாரங்களை கூறியுள்ளனர். இவையெல்லாம் இங்கு சுருக்கமாகவே கூறப்படுகின்றன. ஆதிசைவத்தில் ஸதாசாரம் எவ்வாறு ஒன்றிப்போகும் என்பதை விளக்கும் விதமாக, இங்கு தர்மசாஸ்திரத்தில் ஆன்ஹிககாண்டத்தில் சொல்லப்பட்டுள்ள சில வழிமுறைகளையும், செயல்பாடுகளையும் கொண்டு விளக்க முற்படுகிறேன்.

ஆகமங்களை அளித்த இறைவனே இவ்வாகமங்கள் வேதநெறிமுறைகட்கும், "ஸ்மிருதி" சாரத்திற்கும் ஏற்பவே அமைக்கப்பெற்றுள்ளது என்று கூறுகிறார். இந்த உண்மையை காமிகம், காரணம், மகுடம் போன்ற பல ஆகமங்களிலும் காணலாம். இக்கருத்து பொதுப்படவே கூறப்பட்டுள்ளது. சிவனைப்பூஜிக்கும் ஆன்மார்த்த, பரார்த்த, நித்திய, நைமித்திக பூஜை வழிமுறைகளைத்தானே, ஆகமங்கள் சொல்லுகின்றன. அதற்கு சதாசாரத்தையொட்டி சொல்ல வேண்டியது என்ன இருக்கின்றது? எனலாம். ஆகமங்கள், விதிகளைக்கடைப்பிடிப்பவன், முதலில் அவனளவில் உடல் மற்றும் உள்ளத்தூய்மையைப் பெற்றவனாக இருத்தல் வேண்டும் என்கின்றன. அதுபற்றி எடுத்துக்காட்டாக சிலவற்றை ஆகமங்கள் கூறுகின்றன. அவற்றை முழுமையாகவும், காலத்திற்கேற்பவும் செய்யவேண்டிய வழிமுறைகளை "ஸ்மிருதி"களைக் கொண்டே, தெரிந்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அவற்றைக் கடைப்பிடிக்கும் போது ஏற்படும் தவறுகளுக்கேற்ப, பிராயச்சித்தங்களையும்,

அவற்றிலிருந்தே அறிய வேண்டியுள்ளது. ஆகம-பூஜைவிதிகளில் ஏற்படும் குறைபாடுகளுக்குரிய பிராயச்சித்தங்கள் ஆகமநூல்களிலே கூறப்படுகின்றன. எனவே, முதலில் ஸதாசாரத்தை அறியவேண்டும். அதை ஆதி- சைவானுஷ்ட ான முறையில் செய்ய ஆகமத்தைக் துணைக்கொள்ள வேண்டும். ஸதாசாரத்தில் ஆன்ஹீகம் : - ஆன்ஹீகம் என்பது ஒருதினப்பொழுதில் செய்ய வேண்டியதை எடுத்துக்கூறும் பகுதியாகும்.

விடியற்காலத்தில் எழுந்திருப்பது - (தர்மசாஸ்திரங்களில்அதிகாலையில் விழித்தெழுதல்) :

மனு தருமம் : - பிரம்மமுகூர்த்தத்தில் எழுந்திருக்க வேண்டும். தர்மத்தையும், அர்த்தத்தையும் சிந்திக்க வேண்டும். அதனாலுண்டாகும் தேகச்சிரமங்களை (உடல் உழைப்பு, உடல்நலம்) பற்றி சிந்திக்க வேண்டும். வேதத்தின் உண்மை பொருளையும், இறைவனான பரமாத்மாவையும் சிந்திக்க வேண்டும். இதனால் அன்றைய பகலிலும், இரவிலும் எவ்வித தர்மத்தைச் செய்ய வேண்டும், எவ்விதம் பொருளைத்தேடவேண்டும் என்றும், உடல்சிரமம் அதிகமாகலும், தர்மார்த்தங்கள் குறைவுபடாமலும் செயல்படவேண்டிய வழிகளையும், வேதங்களில் கூறப்பட்டு உள்ளபடி தர்மசாஸ்திரங்களின்வழியே செய்யவேண்டிய, முறைகளையும் முதலில் மனதில் சங்கல்பித்துக்கொள்ள வேண்டும். இதேகருத்தை வ்யாசர் முதலானோர்களும் சொல்கின்றனர். பராசரர்=பிரம்மமுகூர்த்தம் என்பது சூர்யோதயத்திற்கு முன்புஉள்ள, கடைசி யாமநேரத்தில் பின்பாதி முஹூர்த்தக்காலத்தில், முன்பாதி நேரமாகும். அதாவது விடியற்காலம் 4.30 மணி முதல் 6.00 மணி வரை உள்ள அளவில், முன்பாதியான 4.30மணி முதல் 5.15 வரை - பிரம்ம - முஹூர்த்தமாகும். அடுத்தபாதி 5.15 முதல் 6.00 மணி வரை ரௌத்திரம் எனப்படும். ஸ்மிருதியர்த்தசாரத்தில், விடியற்காலத்தில் எழுந்து இஷ்டதெய்வத்தை மனதால் வணங்கி அன்றைய பொழுதில் செய்யவேண்டிய செயல்களைப்பற்றி சிந்திக்கவேண்டும் என்று சொல்லப்-படுகிறது. பிரஹன்மனு, சாப்பிடுதல், ஸ்த்ரீசங்கமம், தூக்கம், வேதமோதுதல் இந்நான்கு செயல்-களையும் சந்தியாகாலத்தில் செய்யக்கூடாது. இதனால் முறையே வியாதி, கர்பநாசம், மூதேவி-யடைதல் (சோம்பல்), ஆயுள்நாசம் இவை உண்டாகும் என்கிறது. மனுதருமம், சந்தியா காலங்களில் தூங்குகிறவன் ஒருபகல் முழுவதும் காயத்ரியை ஜெபிக்க வேண்டும். சூர்யா-ஸ்த்தமனத்தில் தூங்குகிறவன் "அபிநிம்ருத்தன்". உதயகாலத்தில் தூங்குபவன் "அப்யுதிதன்" எனப்படுவர். இவர்கள் பிராயச்சித்தம் செய்யாவிடில் பாவமுடையவராவர் என்கிறது. உடல்அசதி, உடல்நலிவு, அறிவின்மை, இயலாமை, ஆகியநிலையில், சந்தியாகாலத்தில் தூங்குபவனுக்கு பிராயச்சித்தம் தேவையில்லை. அதனால் தோஷமில்லை.

ஸ்மிருதிரத்னாவளியில் : - எவன் மோட்சத்தை விரும்பிகிறானோ, எவன் எமபயத்தினின்று நீங்க எண்ணுகிறானோ அவன் தினமும் பிரம்மமுஹூர்த்தத்திலேயே எழுந்திருக்க வேண்டும். அவ்வாறு எழுந்திருக்காதவன் அசுத்தனாவான். எந்தகர்மாங்களுக்கும் யோக்கியதை அற்றவன் ஆவான், புண்ணியத்தை நாசமடையச் செய்பவன் ஆவான் என்று கூறப்படுகிறது.

எழுந்தவுடன் பார்க்கக்கூடிய பொருள்கள் : - நல்ல பிராமணன், அழகுடையவன், பசு, அக்னி, குழந்தைகள் முதலியவர்களைப் பார்க்க வேண்டும். தன்மனத்திற்கு பிடித்த பொருள்களை, தேவதாவடிவங்கள், தன்உள்ளங்கை இவைகளையும் பார்க்கலாம். இதனால் அன்றைய பொழுது மனஅமைதியுடனும், ஆபத்துகளிலின்று விடுபடும் ஆற்றலுடனும் கழியும், அதாவது மனத்திற்கு ஒருதெம்பும், பலமும் கிடைக்கும். சைவத்தில் (கிரியாக்கிரமத் தியோதிகையில்) : - சூரியோ-தயத்திற்கு 5 நாழிகை முன்பே எழுந்திருக்க வேண்டும். கூடியவரை தேகசுத்தியைச் செய்துக்-கொண்டு சிவனை தியானிக்கவேண்டும் எனப்படுகிறது. காமிகம், காரணம் போன்ற ஆகமங்-களிலும் இப்படியே சொல்லப்பட்டுள்ளது. (விரிவாக சொல்லப்படாததன் காரணம் என்னவெனில் இவை ஸதாசாரத்தில் அறியப்படவேண்டியவை என்பதால் இக்கருத்து மற்றைய விஷயங்-களுக்கும் பொருந்தும்). இதனால் ஏற்படும் பலன்கள் என்னவெனில் உடலுக்கு ஆரோக்கியமும், மனத்தெளிவும் உண்டாகும், சோம்பல் விலகும், வாதம், பித்தம், சீதளம் என்னும் மூன்றும், தன் நிலைமிகாது, சரியாக இயங்கும், முகவசீகரம் உண்டாகும் என்று வைத்திய நூல்கள் கூறுகின்றன. அனுபவத்திலும் விடியற்காலம் எழுந்திருப்பது உடலுக்கும், உள்ளத்திற்கும் தெம்பூட்டுவதாகவே உள்ளது. எனவே தான் ஸதாசாரமும், சைவஆகமங்களும் விடியற்காலை எழுந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன.

சௌசம் - (மலசலம் கழித்தல்) : - தர்மசாஸ்திரங்களில் நட்சத்திரங்களின் ஒளிஇருக்கும் காலம் முதல், சூர்யோதயம் வரையுள்ள காலம் பராதஸ்சந்தியாகாலம் எனப்படும். இதற்கு முன்பாகவே எழுந்து, தன் வீட்டிற்கு சற்று தொலைவான இடத்திற்குச் செல்லவேண்டும். வடக்கு, வடகிழக்கு, தென்மேற்கு, தெற்கு ஆகிய திக்கில் சென்று மலசலவிசர்ஜனம் செய்ய வேண்டும். எப்பொழுதும் இதனை வீட்டிற்குவெளியே பகாலானால் வெகுதூரத்திலும், இரவானால் சற்றுதூரத்திலும் சென்றே செய்யவேண்டும். (இதனால் காலையில் நடைப்-பயிற்சியும் கிட்டுகிறது. யாகம், பூஜை முதலியவற்றிற்கு பயன்படாத உலர்ந்த புற்களால் மூடப்பட்ட இடத்தில் மலசலவிசர்ஜனம் செய்க. தலையில் வஸ்த்திரத்தைமூடிக்கட்டிக்கொண்டு வடக்கு அல்லது மேற்கு முகமாய் (சூரியனுக்கு எதிரில் இல்லாமல்) அமர்ந்து, மலசலவிசர்ஜனம் செய்ய வேண்டும். அப்போது பூநூலை நிவீதியாய் முதுகுப்புறமாய் இருக்கும்படி செய்துக்கொள்க. தலையை வஸ்திரத்தினால் மூடாதநிலையானால் பூநூலை நிவீதியாய் வலது காதில் சுற்றிக்-கொள்ள வேண்டும். உழுதுள்ளநிலம், விளைநிலம், வளைகள் உள்ள இடம், களர்நிலம், சதுப்பு நிலம், மிகவும் இருண்டஇடம் போன்ற இடங்களில் இதனைச் செய்யக்கூடாது. மலசலம் கழித்தப்பின் சுத்திசெய்துக் கொள்வதற்குத் தேவையான, மண், ஜலம் ஆகியவற்றை உடன் எடுத்துச் செல்ல வேண்டும். சூரியன், பசு, மனிதர்களின் பார்வைக்கு படாதஇடத்தில் சௌசம் செய்து கொள்க. கீழாகவும், மேலாகவும், பார்த்தல் கூடாது, தன்மலத்தைத் தானே பார்க்கக் கூடாது. மௌனமாய் இருத்தல் வேண்டும், சுத்தி செய்வதற்குண்டான ஜலத்தைத் தொட்டுக்

கொண்டே மலம்கழித்தலைச் (விசர்ஜனம்) செய்யக்கூடாது. அதன்பிறகு, முறையே, தூய-மண்ணைக் கொண்டு குதத்தையும், கைகளையும் நீர்சேர்த்துப் பலமுறை சுத்திசெய்யவேண்டும். சுருக்கமாய் சொல்வதானால் தன் மனதிற்கு, மலசலலேபனமும், நாற்றமும், விலகி, சுத்தமாகி- விட்டது என்ற திருப்தி ஏற்படும்வரை சுத்திசெய்து கொள்ள வேண்டும். குளம், ஆறு போன்ற இடங்களிலும், தண்ணீரை தனியே ஒரு பாத்திரத்தில் முகர்ந்து, அதன் கரையில், சற்றுதள்ளியே இருந்து சுத்தம்செய்து கொள்ளவேண்டும். நேரிடையாக நீரில் அமர்ந்தோ, தாரையாக விழும் நீரில் நேரடியாகவோ சுத்தத்தைச்செய்தல்கூடாது. இது எல்லா மனிதர்களுக்கும், ஆண், பெண்- களுக்கும் பொதுவாய் ஏற்றதாகும். இதேகருத்துக்கள் ஆகமங்களிலும் சொல்லப்பட்டுள்ளன. ஆனால் இக்காலத்தில் நகரவாழ்வில் இவை சாத்தியமா? மலசலவிசர்ஜனம் செய்யாதிருக்க முடியாது. இவை இயற்கை உபாதை, இவற்றை அடக்கிக்கொண்டு எந்த செயலையும் செய்யக்-கூடாது என்று விதிக்கப்படுகிறது. அப்படி அடக்கி வைப்பதால், அதனால் உடலில் வியாதிகள் உண்டாகும் என்று ஆயுர்வேதம் கூறுகிறது. அப்படியெனில் தற்காலத்தில் இவற்றை விதிக்கப்-பட்டமுறையில் செய்ய முடியுமா? விதிமுறைப்படி செய்யாவிடில் தோஷம் என்ன? ஒரே பதில், மலசலம்கழித்தலிலும், சுத்தம் செய்துகொள்வதிலும் சொல்லப்பட்ட விதிமுறைகள் யாவும் தனக்கும், மற்ற எவற்றிற்கும் அசுத்தம் ஏற்படாத வகையில் செய்யப்படவேண்டும் என்பதே பொதுகருத்தாகும். இக்கருத்துக்கு ஏற்ப பலவசதிகள் இக்காலத்தில் நமக்கு உள்ளன. மலசலங்கள் மற்றவர்கள் கண்களுக்கு தெரியாமலும், மற்றஎவற்றிற்கும் அசுத்தம் ஏற்படுத்தாமலும், பாதுகாக்கப்பட்ட முறையில், வெளியேற்றும்வசதியுடன்கூடிய கழிவறைகளை பயன்படுத்துவதால், எந்த விதிமுறையும் மீறியதாக ஆகாது. சூரியன், மனிதர்கள் போன்றோரின் முன்னிலை இல்லாத, பயமற்ற, இடமாகவே கழிவறைகள் அமைக்கப்படுகின்றன. அதனால் எந்த திக்கு என்று எண்ண வேண்டியதும் இல்லை.

சுத்திசெய்வதிலும், மண்கொண்டு சுத்தம் செய்யவேண்டும் என்பதில்லை. அக்காலத்தில் வீட்டிற்கு வெளியில், தொலைவில், வெட்ட-வெளியில் மண்கொண்டு செய்யமுடிந்தது. இக்காலத்தில் நவீன கழிப்பிடங்களில் மண்கொண்டு செய்ய இயலாது. ஆனால் அதற்கு பதில் சோப்பு போன்றவை பயன்படுத்தப்படுகிறது. இதனால் மலசலலேபனமும், நாற்றமும் முழுவதும் நீக்கப்படுகிறது. மனதிற்கு சுத்தம் என்கிற திருப்தியும் ஏற்படுகிறது. எனவே, இக்கால வசதிகள் யாவும் சாஸ்திர, சைவாக விரோதமற்றவையே. அதனால் எந்ததோஷமுமில்லை என்பது புலனாகிறது.

<u>கண்டூஷம் (வாய்கொப்பளித்தல்) :</u> - மலசலவிசர்ஜன சுத்தி செய்யப்பட்ட பின் குடுமி, கச்சம் இவைகளைக்கட்டிக்கொண்டு வாய்கொப்பளித்தல் ஆசமனம் ஆகியவற்றைச் செய்யவேண்டும் என்கிறது பராசரஸ்மிருதி. ஸ்மிருதி சாரத்தில், பிராம்மணனின் வலது பாகத்தில் எப்பொழுதும் தேவர்கள் இருக்கின்றனர். ஆகவே கண்டூஷத்தை நீர்கொப்பளித்து துப்புவதை இடதுபக்கத்தில் செய்யவேண்டும் எனப்படுகிறது. மூத்திரவிசர்ஜனம்,

மலவிசர்ஜனம், போஜனம், திண்பண்டங்-களைத்தின்றபிறகு,இவற்றின்முடிவில் எப்பொழுதும் கண்டூஷத்தை செய்யவேண்டும். ஒவ்வொரு முறையும் முறையே 4, 8, 12, 16 முறை வாய்கொப்பளித்தலைச் செய்யவேண்டும், உட்கார்ந்துக் கொண்டு செய்ய வேண்டும். பழங்கால ஆயர்வேதமும் இக்கால மருத்துவமும் கண்டூஷத்தை கட்டாயமாகச் செய்திட வலியுறுத்துகின்றன. இதிலிருந்தே இதன் அவசியம் நன்குபுலப்படும். வாய், பல் சுத்தத்திற்கு இதை தவறாமல் செய்யவேண்டும். இதனையே இன்று பல் மருத்துவர்-களும் கூறுகின்றனர். இதனால் ஆரோக்கியமாக வாழலாம். செய்யாவிடில், பல் இடுக்குகளில் தங்கக்கூடிய உணவு துகள்களால் பல், ஈறுகெட்டு, அதனால் பல்வலி, சொத்தை முதலியன ஏற்பட்டு, அதனைத்தொடர்ந்து வியாதிகள் வர வாய்ப்புள்ளது. இதனால் ஸதாசாரம் சுகாதாரத்தை வலியுறுத்துவதை அறியலாம். கௌதமர், = கண்டூஷத்தின் போது ஆள்காட்டி விரலை வாயில் விட்டு தேய்ப்பதோ, துழவுவதோ கூடாது என்கிறார். ஆனால் மற்ற ஸ்மிருதிகள் இவ்வாறு சொல்லவில்லை. இதனின்று அறியவருவது யாதெனில் வாய், பல் இவற்றில் ஏத்வது பொருள்கள் ஒட்டிக்கொண்டு அது விலகாத நிலையில் தவிர, சாதாரணமாக விரலை பயன்படுத்தக்கூடாது என்பது அறியத்தக்கதாகும். சைவத்தில், வாய்கொப்பளித்தல் வேண்டும் என்பதை சுருக்கமாக கூறுகின்றன ஆகமங்கள்.

<u>ஆசமனம் (மும்முறை நீர்த்துளி அருந்துதல்) :-</u> கண்டூஷத்திற்குப்பிறகு ஒவ்வொருமுறையும் ஆசமனத்தைச் செய்யவேண்டும். கண்டூஷத்தோடு கை, கால்களை முழங்கை, முழங்கால் வரை ஜலத்தால் கழுவிச்சுத்தி செய்துகொண்டபிறகு, ஆசமனத்தைச் செய்யவேண்டும்.

கிழக்கு அல்லது வடக்கு நோக்கி அமர்ந்துக் கொண்டு ஆசமனம் செய்துகொள்ள வேண்டும். கௌதமர் போன்றோர் குத்துக்காலிட்டுக்கொண்டு ஆசமனம் செய்யலாம் என்கின்றனர். அப்பொழுது இரண்டு கால்களுக்கும் இடையில் இரண்டு கைகள் உள்ளவாறு ஆசமனம் செய்தல் வேண்டும். கால்களுக்கு வெளியே கைகள் இருக்குமாறு செய்தல் கூடாது. வலது உள்ளங்கைகளை, பசுவின்காதுபோல், குவித்துக்கொண்டு, உள்ளங்கையில், ஒரு உளுந்து முழுகும் அளவில் நீர்விட்டு பின்பு பருகி ஆசமனம் செய்யவேண்டும். ஆசமனத்தை எப்பொழுதும் பிரம்மதீர்த்தப்பகுதி எனப்படும் பெருவிரல் அடிபாகத்தின் வழியாகவே செய்ய வேண்டும். பிராமணர்கள் ஆசமனஜலம் மார்புப்பகுதிவரை செல்லும்வகையிலும், க்ஷத்திரியர்கள் தொண்டைப்பகுதிவரை செல்லும்வகையிலும், வைசியர்கள் வாய்நனையும் வகையிலும், சூத்திரர்கள்,பெண்கள் உதடுநனையும்வகையிலும், ஆசமனம் செய்யவேண்டும் என்று சொல்லப்- படுகிறது. சூடில்லாத நீரைக்கொண்டு ஆசமனம் செய்யவேண்டும். காய்ச்சின நீரானால் ஆறினப்பிறகு செய்யலாம். வியாதியுள்ளவர்கள் சூடான நீரிலும், சுத்தமான நீரிலும் ஆசமனம் செய்ய வேண்டும். அசுத்தமான நீர், துர்நாற்றமுள்ள நீர், நுரையுடன் கூடிய நீர் ஒருவர் குடித்துமீந்த நீர், பசு முதலியவை குடித்துமீந்த நீர் ஆகியவற்றால் ஆசமனம் செய்தல் கூடாது. இரண்டு துவாரமுள்ள "கரகம்" எனப்படும் கெண்டியில், குழாய் போன்ற துவாரத்தின் மூலம் வழியும்

நீரைக்கொண்டு ஆசமனம் செய்யவேண்டும். ஒரேவாயுள்ள பாத்திரமானால் "உத்தரணி" எனப்படும் எடுப்புச்சிறுகரண்டியால் முகந்தெடுத்த நீரைக்கொண்டு ஆசமனம் செய்யவேண்டும். வாசனைத்திரவியங்கள்சேர்ந்த நீராலும் ஆசமனம் செய்தல்கூடாது. பயன் படுத்தி, பசு முதலியவை குடித்த மீந்த நீரில் ஆசமனம் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் அந்நீரில் சிறிதை பூமியில் ஊற்றிவிட்டு, மீதியால் ஆசமனம் செய்யலாம். இந்த விதிவிலக்கு, வேறுநீரில்லை என்ற நிலையில் ஆசமனம் செய்தாகவேண்டும் என்கிறபோதே கடைப்பிடிக்கலாம். ஆசமனம் செய்யும் போது பிரணவத்தையோ அல்லது அவரவர்க்குரிய சூத்திரங்களில் சொல்லப்பட்ட மந்திரங்களையோ உச்சரித்துக் கொண்டு செய்யவேண்டும். மூன்று முறை ஆசமனம் செய்து ஒருமுறை கை சுத்தி செய்துக்கொள்க. பிறகு இருமுறை கட்டை விரலால் உதடுகளைத் துடைத்துக் கொள்க. அடுத்து முகத்தை தொட வேண்டும். பெருவிரல், பவித்திர-விரல், சேர்த்து இரு கண்களையும் ஆள்காட்டி விரல், பெருவிரல் சேர்த்து மூக்கில் இருபுறங்-களையும் சிறுவிரல், பெருவிரல் சேர்த்து இரண்டு காதுகளையும் வலஇடமாக தொட வேண்டும். எல்லா விரலையும் சேர்த்து அல்லது உள்ளங்கையினால் மார்பையும், தலையையும் தொட வேண்டும். ஜலத்தை கை, கால்களில் தெளித்துக் கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்-படுகின்றது. இதுவும் அவரவர் கிருஹ்யசூத்திரப்படி செய்துக்கொள்க. மும்முறை பருகும் ஆசமனத்தால் பிரம்மா, விஷ்ணு, ருத்திரனும், இருமுறை உதடுகளை துடைப்பதால் கங்கையும், யமுனையும், கண்களைத்தொடுவதால் சூரிய, சந்திரர்களும், மூக்கினைத் தொடுவதால் இருஅசுவினீதேவர்களும், காதுகளைத்தொடுவதால் அக்னியும், வாயுவும், மார்பைத் தொடுவதால்எல்லாதேவர்களும் தலையைத்தொடுவதால் பிரம்மாத்மாவும் திருப்தியடைகின்றனர் என்று சொல்லப்படுகின்றது. இதன் கருத்து யாதெனில், நம்மனத்தில் ஆசமனத்தால் கங்கை, யமுனை தீர்த்தங்களால் நாம்சுத்தப்படுத்தப்பட்டோம் என்ற எண்ணமும், மற்ற அவயங்களை தொடுவதால் அந்தந்த தேவர்களின், இயற்கைஆற்றல், நம்மிடம் தூண்டப்-பட்டதாகவும் பாவித்துக்கொள்ளும் நிலைஉண்டாகிறது. இதனால் அந்தந்த ஆற்றல் மேம்படுகிறது. ஆதி சைவத்தில், ஆசமனத்தை ஆத்ம, வித்யா, சிவதத்துவங்களை பிரணவத்துடன் சொல்லி செய்யும்படி கூறப்படுகிறது, மற்றவை சதாசாரப்படியே. ஆசமனத்துக்-குரிய பாத்திரங்கள், பொன், வெள்ளி, தாமிர பாத்திரங்கள், மூங்கில், வில்வங்காய்ஓடு, கல்பாத்திரம், தோல்பாத்திரம், சுரக்காய்ஓடு, மரப்பாத்திரம், தேங்காய் சிரட்டை, விளாங்காய்ஓடு இவைகளால் செய்யப்பட்ட பாத்திரங்களால் ஆசமனம் செய்யலாம். ஈரவஸ்திரத்துடன் ஆசமனம் செய்யக்கூடாது, நின்றுகொண்டு ஆசமனம் செய்யக்கூடாது. நீர்நிலைகளில் முழங்கால்அளவு, நீரில் நின்று-கொண்டு ஆசமனம் செய்யலாம். தானே, தன் கையால் ஆசமனம் செய்து கொள்வதானால் இடதுகையால் நீரை கெண்டி மூலமாகவோ, உத்தரணியில் முகந்தோ வலது உள்ளங்கையில் நீரை விட்டு ஆசமனம் செய்யலாம். இவ்வழிகள் ஆதிசைவத்திற்கும் பொருந்தும், சைவானுஷ்டத்திலும் ஆசமனம் சொல்லப்பட்டுள்ளது.

தந்த தாவனம் - (பல் தேய்த்தல்) : -

போதாயணர் : - ஆயுள் பலம் யசோ வர்சா ப்ரஜா பசு வசூநிச I
ப்ரம்ம ப்ரஜாம் ஸமேதாம் சத்வந் நோ தேஹி வநஸ்பதே II

(பொருள்) "ஓ! பற்குச்சிகளே (தற்காலத்தில் உள்ள சாதனத்தை என்று நினைத்துக் கொண்டு) எங்களுக்கு ஆயுள், பலம், யசஸ், தேஜஸ், ப்ரஜைகள், பசுக்கள், தனங்கள், வேதம், ப்ரக்ஜை, மேதை இவைகளை நீ கொடுக்க வேண்டும்" என்ற மேற்கண்ட சுலோகமந்திரத்தால் அபிமந்திரித்து, அக்குச்சிகளால் பல்லை மேல்கீழ், இடவலம் என்று தேய்த்து பல்துலக்குதலைச்-செய்க. இது என்ன? பல்குச்சியால் இவ்வளவும் கிடைக்குமா? வியப்பாக உள்ளதே! எனில் இதை மேற்போக்காக பார்த்தால் அப்படித்தான் தோன்றும், இதில் உள்ள ஆழ்ந்த கருத்துக்களை நோக்கவேண்டும். இவையெல்லாம் தேவை என்பதும், இவற்றை அடைய யாவருக்கும் ஆவல் உள்ளது என்பதும் மறுக்கமுடியாது அல்லவா! இவற்றை அடைய உடலும், உள்ளமும் அதற்கான முயற்சியில் ஈடுபடும்வகையில் இருக்கவேண்டுமல்லவா. முதலில் உடல் ஆரோக்கியம் வேண்டும், தினமும் வாயிலும், பல்லிலும், பழமையும், அசுத்தமும் சேர்ந்துவிடுகிறது. இவற்றை அகற்றாவிட்டால் நாளடைவில் பல்லில் வியாதி தோன்றும், அதன் தொடர்ச்சியாக உடலில் வியாதி தோன்றும், அதனால், உள்ளமும் நலிவுறும். (நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்) இந்நிலையில் ஆசைப்படுவதை அடைய முயற்சி கைகூடுமா? எனவே தான், தினமும் பல்தேய்ப்பதால் ஆரோக்கியமும், அதனால் முயற்சி கைகூடுதலும் நடைபெறும், அதற்கேற்ற மனபலமும் உண்டாகும் என்ற எண்ணத்திலே தான் இவ்வாறு "ஆயு" என்ற சுலோகமந்திரத்தை நினைக்கச் சொல்லப்படுகிறது. நம்முடைய காரியங்களில் முயற்சியும், வெற்றியும், பலனும் கிடைக்க மனத்திட்பமும், உடல்ஆரோக்கியமும் அவசியம். பல்தேய்ப்பதால் உடல் ஆரோக்கியம் கிடைக்கிறது. மந்திரத்தைநினைப்பதால் மனத்திட்பம்உண்டாகிறது. இப்பொழுது சொல்லுங்கள், பல்தேய்த்தலின் போது, குறிப்பிட்ட மந்திரம் நினைக்கப்படுவது சரிதானே! வியப்படைய ஏதுமில்லையல்லவா?

பல்துலக்கத்தக்க மரக்குச்சிகள் எவை? அவை எப்படி இருக்க வேண்டும்? என்பது பற்றி எல்லாம் விரிவாக சொல்லப்பட்டுள்ளது. அதுப்பற்றி அறிய விரும்பியவர்கள் சாஸ்த்திரங்களில் காண்க, விரிவஞ்சி விடுக்கப்படுகின்றன. ஒரு விஷயம், சாஸ்த்திரங்களில் சொல்லப்பட்டுள்ள பற்குச்சி விளக்கங்கள் அப்படியே ஆயுர்வேதத்திலும் சொல்லப்பட்டுள்ளது. மேலும் ஆயுர்வேதத்தில் அக்குச்சிகளால் உண்டாகும் நன்மை தீமைகளும் விளக்கப்பட்டு உள்ளன, சைவஆகமங்களிலும் கூறப்பட்டுள்ளன. இதை ஏன் விரிவாக சொல்லவில்லை என்றால், தற்காலத்தில் பற்குச்சி கொண்டு பல்தேய்ப்பவர்கள் கிராமங்களில் கூட காண்பது அரிதாவிட்டது. பல்தேய்க்கும் பிரஷ் கொண்டு பொடி அல்லது பேஸ்ட் எனப்படும் களி கடைகளில் விற்கப்படுகின்றன. அவரவர் மருத்துவர் ஆலோசனைப்படி குறிப்பிட்ட பேஸ்டை வாங்கி பயன்படுத்துகின்றனர். இது சாஸ்த்திரவிரோதம் என்று எண்ணவேண்டியதில்லை.

இதனால் குச்சியினால் பல்துலக்கும் பலன் கிடைக்குமல்லவா? ஆனால் ஒன்று, குச்சியானால் தினமும் புதிதாக எடுத்துக் கொள்ளலாம். பிரஷ்ஷை அவ்வாறு தினம் ஒன்றாக எடுத்துக் கொள்ளமுடியாது. சிலநாள் தொடர்ந்து பயன்படுத்தலாம். எனவே ஒவ்வொரு முறையும் நன்றாக சுத்தம் செய்து தனியான இடத்தில் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவேண்டும். பல் தேய்த்தலை காலையில் ஸ்நானம்செய்வதற்கு முன்பாக செய்யவேண்டும். மாத்தியாந்ஹிக காலத்தில், இரவில், என்றெல்லாம் செய்யக்கூடாது. பருவங்கள் (அமாவாசை, பூர்ணிமை), பிரதமை, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, சதுர்த்தசி, சிராத்ததினம், வ்ரதகாலங்கள், உபவாசங்கள், யாககாலங்கள் ஆகிய இக்காலங்களில் பல்குச்சியைக் கொண்டு பல் தேய்க்கக்கூடாது. (இக்காலங்களில் பிரஷ் பேஸ்ட் பயன்படுத்தக் கூடாது). ஆனால் கைவிரல்களால் அழுந்தத் தேய்த்து, குழப்பி, வாய்-கொப்பளித்தல் மூலமாக, பல் தேய்த்தலைச் செய்யவேண்டும். (பல் இலை சருகுகளையும் பயன்படுத்தலாம்). இப்படிச்சொல்லப்பட்டதின் காரணம், அக்காலங்களில் பல்குச்சியின் சாரத்தால் உடலிலுள்ள சீரணநீர்கள் அதிகமாகி பசியைத் தூண்டும். அன்று ஆகாரமில்லாமல் நீண்டநேரம் இருக்க வேண்டியிருந்தால் குடல்புண் போன்ற நோய்கள் ஏற்படக்கூடும் என்பதனாலேயே அதன் வேதனையை எண்ணியே, நரகமடைவான் என்றனர். பேஸ்ட் ஆனாலும் இதே உபாதைகள் ஏற்படலாம். இந்த கருத்துக்கள் யாவும் சைவத்திலும் கூறப்பட்டுள்ளன. பற்குச்சிகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

பல் தேய்த்தல் முடிந்த பிறகு மீண்டும் கண்டூஷம் என்னும் வாய்கொப்பளித்தலைச் செய்ய வேண்டும். சைவத்தில் 12 முறை என்று சொல்லப்படுகிறது. சாஸ்த்திரங்களில் இவற்றில் பேதமுண்டு. ஆனாலும் தற்காலத்தில், தான்பயன்படுத்திய பேஸ்ட்டின் நுரை, துகள்கள் அதன் வாசனை போகுமளவிற்கு பலமுறை வாய்கொப்பளித்தல் வேண்டும். நாக்கையும் வழித்துச் சுத்தம் செய்துகொள்ளவேண்டும்.

<u>ஸ்நானம் (தலைமுழுகி குளித்தல்) : -</u> தினமும் அவசியம் ஸ்நானம் செய்ய வேண்டும். சத்யவிரதர், மனிதன் நன்றாய் ஸ்நானம் செய்வதால் பலம், ரூபம், கீர்த்தி, தர்மம், ஞானம், ஆயுள், சுகம், தைர்யம், சிறந்த ஆரோக்யம் இவைகளை அடைகிறான் என்கிறார். ஸ்நானம் செய்வதால் இவைகள் அனைத்தும் உண்டாகுமா? என்றால் ஆம் உண்டாகும். எப்படியெனில்? தினமும் உடலானது வியர்வை-யினாலும், தூசுகள் படிவதாலும் அசுத்தமடைகிறது. உஷ்ணம் அதிகரிக்கின்றது. மேலும் வியர்வையும், கெட்டநீர்களும் வெளியேறாமல் தடுக்கப்படுகிறது. அதனால் உடலில் சோம்பலும், அசதியும், ஒருவித ஒவ்வாமையும் எற்படும். ஸ்நானம் செய்வதால் இவைகள் நீங்கி சுறுசுறுப்பும், ஒருவித புத்துணர்ச்சியும் உண்டாகும். அதனால் நம் செயல்பாடுகள் சீர்படும். முயற்சி செய்ய, அசதி தோன்றாது. அதனால் எல்லா பலன்களையும், நலனையும் அடையலாம். இதை அவரவர் அனுபவத்திலேயே உணர்ந்து கொள்ளலாம்.

ஸ்நானவிதி :- விடியற்காலத்திலேயே ஸ்நானம் செய்ய வேண்டும். ஸ்நானம் செய்யாமல் உணவு ஏதும் அருந்தக்கூடாது. விடியற்காலை என்பது பிரம்மமுகூர்த்தத்திலிருந்து சூரியன் உதிக்கும் நேரத்திற்குள், நதி முதலிய நீர்நிலைகளில ஸ்நானம் செய்வது சிறப்புடையது. வருண மந்திரங்களைச் சொல்லி ஸ்நானம் செய்தல் வேண்டும். வருணகாயத்ரியையும் சொல்லலாம். நீரின் நடுவில் நின்று, வருணமந்திரம் சொல்லி, விஷ்ணுவை தியானித்து ஸ்நானம் செய்யலாம். அகமர்ஷண மந்திரங்களைச்சொல்லி நீரில் மூழ்குதல் வேண்டும். வியாதியுடையவனாய் இருந்தால் வெந்நீரில் ஸ்நானம் செய்யலாம். மண்ணைக் கொண்டு சுத்தி செய்துக்கொள்ளலாம்.

ஸ்நான முடிவில் நித்யதர்பணம் செய்தல் வேண்டும். ஆசமனம் செய்தல் வேண்டும். காலையில் செய்வது நித்தியஸ்நானம், தீட்டு, வாந்தி, கண்ணீர்விடுதல், வபணம், தீட்சை முதலிய பலவித காரணங்களுக்காக செய்யும் ஸ்நானம் நைமித்திகம், ஸ்நான முடிவில் இரண்டு கைகளையும் சேர்த்துக் கொண்டு ஜலத்தால் நிரப்பி, பசுவின் கொம்பளவு கைகளை உயர்த்தி நீர்நிலையின் நடுவில் கையில் உள்ள ஜலத்தைவிடவேண்டும். இதை ஜலஸ்தானம் போன்றவற்றில் செய்யக -கூடாது.

ஈரவஸ்த்திரத்துடன் ஜலத்தின் நடுவில் இருந்து தர்ப்பணம் செய்த பிறகு கரையேறி ஈர-வஸ்த்திரத்தைக்களைந்து பூமியில் நீர்விழுமாறு பிழியவேண்டும். வஸ்த்திரத்துடனேயே ஸ்நானம் செய்யவேண்டும். (நக்னநாய்) ஆடையின்றி ஸ்நானம் செய்யக்கூடாது. நித்திய தர்பணம் செய்யாமல் வஸ்திரத்தை பிழியக்கூடாது. தலைமயிரில் இருக்கும் நீரை தனக்கு முன்-பக்கமாகவே பிழிந்து நீக்கவேண்டும். வஸ்த்திரத்தை மூன்றாய் மடித்து பிழியக்கூடாது. தலைப்பு ஒருபுறமாக இருக்குமாறு மடித்தே பிழியவேண்டும். ஜலத்தின் நடுவிலிருந்து வஸ்த்திரத்தைப் பிழியக்கூடாது. ஈரவஸ்த்திரத்தை தோளில் வைத்துக்கொள்ளக்கூடாது. பிறகு உலர்ந்த வஸ்த்திரத்தால் உடலை துடைத்துக்கொள்ளவேண்டும். ஸ்நானம்செய்தபோது, உடுத்திக்-கொண்டிருந்த ஈரவஸ்த்திரத்தால் உடலைத் துவட்டக்கூடாது. உடலைத்துவட்டியபிறகு, உலர்ந்த வஸ்த்திரத்தை மேலாடையுடன் உடுத்திக்கொள்ளவேண்டும். (உத்திரீயத்துடன்) சைவத்தில் ஸ்நானம்செய்வதுபற்றி விரிவாகச்சொல்லப்படவில்லை. ஆனாலும், ஆகமங்களில் சொல்லப்-பட்டுள்ளவை வேத, சாஸ்திரத்தின் விதிகளின்படி கடைபிடிக்க வேண்டும் என்று சொல்லப்-பட்டுள்ளதால் சதாசார சாஸ்த்திரங்களைக் கடைபிடிக்கவேண்டியது ஆதிசைவருக்கும் அவசியமாகிறது.

ஸ்நானகட்டம் (ஸ்நானம் செய்யுமிடங்கள்) :- இது சைவத்திலும் சொல்லப்பட்டுள்ளன. பாரத்வாஜர், ஸ்நானம் செய்ய, பத்துவிதஜலங்களைக் குறிப்பிடுகின்றார். அவையாவன. (இவற்றில் ஸ்நானம் செய்வதால் சகலபாவங்களும் போகும்) 1.மஹாநதீ : மலையில் உண்டாகி சமுத்திரத்தை அடையும் ஜலப்பிரவாகநதி. 2. நதம்: கிழக்கிலுள்ள மலையில் உண்டாகி, மேற்கு- சமுத்திரத்தைச் சென்றடையும் நதிப்பிரவாகம். 3. ஸ்ரோதஸ் : மலையிலோ, பூமியிலோ

தோன்றி, நீர்வீழ்ச்சியாகி வேறு நதியுடன் சேரும் நதிப்பிரவாகம். 4. ஸரஸ் : மலையின் அடிப்பாகத்திலோ, உச்சியிலோ, பெரிதாகவும், வற்றாததாகவும், விசாலமாகவும் இருக்கும் நீர்நிலை. 5. தேவகாதம் : ஸரஸுக்குரிய இலக்கணத்துடன் சிறியதாய் இருக்கும் நீர்நிலை. இது சமதரையான பூமியிலும் இருக்கலாம். கரைகள் உள்ளதாய் இருக்கும் 6. நாளம் : பலவித பயன்பாடுகளுக்காக மனிதர்களால் உண்டாக்கப்படும், ஓடைகால்வாய், குளங்கள். இதில் நதிநீர், மழைநீர் தேங்கி இருப்பதாகும். 7. தடாகம் : குளம் போன்ற நாளம், ஜலஆதாரம் பாதியாகவும், பாதி சந்திரனைப்போன்று வளைந்திருப்பது. மலை, வனம், கிராமம், என்று எங்கும் இருக்கலாம். (இவற்றில் தாமரை இருப்பது மிகவும் சிறப்புடையது ஆகும்). 8. குண்டம் : நான்கு மூலைகள் உடையதும், கற்களால் கட்டப்பெற்றதும் படிகளுடையதும் நீர்நிரம்பியதுமாய் விசாலமாகவோ, சிறியதாகவோ இருப்பது 9. தாரை: மலையின் இடுக்குகளில் எந்தவித ஆதாரமில்லாமல் தானாக விழும் நீர்பெருக்கு இது அருவி எனவும், நீர்வீழ்ச்சி எனவும் வழங்கப்படுகிறது. 10. கூபம் : அகழ்ந்து கட்டப்பட்ட அகலமான கிணறு (வாவி என்பது அகலமாக கிணறுகளின் கடைப்பாகத்தில் முற்றம், நான்கு பக்க தாழ்வரைகள் உள்ளதாய் இருக்கும். படிகள் மூலம் இறங்கிச்செல்லும்படி இருக்கும்). இவைகளில் ஸ்நானம் செய்வதால் பயங்கள் போகும் என்கின்றனர். பிறருக்கு சொந்தமான நீர்நிலைகளில் உரியவரின் அனுமதியின்றி நீராடக்கூடாது.

ஸ்நான பேதங்கள் :- சமுத்திரஸ்நானம் : அமாவாசை முதலிய பருவகாலங்கள் அல்லது குறிப்பிட்டகாலங்களில் மட்டுமே கடலில் ஸ்நானம் செய்யலாம். ஆனால் கோடிகரை, தனுஷ்கோடி, நவபாஷாணம், சேது, இராமேஸ்வரம் போன்று க்ஷேத்திரமகிமையுள்ள இடங்களில் எப்பொழுதும் சமுத்திரஸ்நானம் செய்யலாம். சமுத்திரஸ்நான முடிவில், வேறுஜலத்தால் ஆசமனம் செய்ய வேண்டும். நதி முதலியவை இல்லாத இடத்திலும், வீட்டிலும், ஸ்நானம் செய்யும்போது, கிணறு முதலியவற்றிலிருந்து ஜலத்தை ஒரு பாத்திரத்தில் நிரப்பி, அதை வேறு சிறுபாத்திரத்தால் (குவளை) முகுந்து எடுத்து ஸ்நானம் செய்யவேண்டும். குடத்தில் முகந்து, அப்படியே ஸ்நானம் செய்யக்கூடாது. நீராடும்போது,

கங்கேடச யமுனே! சைவ, கோதாவரி! ஸரஸ்வதி!
நர்மதே சிந்து! காவேரி! ஜலேஸ்மின் ஸன்னிதிம் குரு. (நதிதேவதை பிரார்த்தனை)

என்ற மந்திரத்தைச்சொல்லவேண்டும். இம்மந்திரம் சொல்வதால் கங்கை முதலிய நதிகளின்நீர் இங்குள்ளதாக பாவித்து, அதனால் ஸ்நானம்செய்வதாக நினைத்தால், இவ்வாறான பாவனையே கங்கை முதலிய நதிகளில் நீராடிய திருப்தியைத் தரும் என்பதாகும். தக்ஷர், ஆக்னேயம், வாருணம், பிராம்மம், வாயவ்யம், திவ்யம், மானஸம், பார்த்திவம், கபிலம், பஸ்மம் என ஒன்பது வகை ஸ்நானபேதங்களைக்கூறுகிறார்.

1. பஸ்மஸ்நானம் (திருநீற்றுக்குளியல்) : பாரத்துவாஜர், கூறும் ஆக்னேயஸ்நானம் எனப்படும் பஸ்மஸ்நானம் செய்யும்முறையாவது, முதலில் கை, கால்களை அலம்பிக்கொண்டு, கிழக்கு-முகமாய் அமர்ந்து, ஆசமனம் செய்தபின் பிராணாயமம் செய்க. பின்பு, பஸ்மஸ்நானம் செய்வதாக சங்கல்பம் செய்க. அக்னி ஹோத்திரத்தில் உண்டானதும் அல்லது முறைப்படி தயாரிக்கப்பட்டதும், வெண்ணிறமுடையதுமான பஸ்மத்தை (விபூதியை) எடுத்து, ஈசான-மத்திரத்தால் சிரஸிலும், தத்புருஷமந்திரத்தால் முகத்திலும், அகோரப்ரணவ மந்திரத்தால் மார்பிலும், வாமதேவமந்திரத்தால் பாதங்களிலும் (முழங்காலங்கள்), சத்யோஜாத ப்ரணவ-மந்திரத்தால் உடலின் எல்லாபாகங்களிலும் தூளிதமாக, பொடியாக பூசிக்கொள்ள வேண்டும். பெரிய முனிவர்களால் சொல்லப்பட்ட இதை எல்லாகர்மங்களும், குறைவில்லாமல் இருக்க, அவற்றின் ஆரம்பத்தில் செய்யவேண்டும். ஆபஸ்த்தம்பர், கூறுவதாவது, பஸ்மத்தை கையிலாவது பொன், வெள்ளி, தாமிரபாத்திரங்களிலாவது, மரபாத்திரங்களிலாவது வைத்துக் கொண்டு "அக்னிரிதிபஸ்ம" முதலான ஆறுமந்திரங்களையும், பிரணவத்தையும் ஜபித்து, ஈசானாதி ஐந்துமந்திரங்களாலும், பிரணவத்தாலும், உத்தூளனம் செய்க. "அக்னிரிதி" என்ற மந்திரங்கள் அதர்வசிரஸில் உள்ளது. இக்கருத்து லிங்கபுராணத்திலும், சைவ ஆகமங்களிலும் கூறப்பட்டுள்ளன. சைவத்தில் தினமும் சந்தியினுடன் சேர்த்து இதைச் செய்யும்படி வகுத்து உள்ளனர். சைவாகமத்தில், பஸ்மஸ்நானவிதி (கிரியாகிராமதியோதி) கையில் கற்ப்பம்முதலான பிரகாரத்தில் தகிக்கப்பட்ட பஸ்பத்தை இடதுகையிலே வைத்துக்கொண்டு, ராக்ஷஸாம்சமாக அணிவிரலால் சிறிது திருநீரையெடுத்து நிருருதி திக்கிலெ போட்டுவிட்டு, நிரீக்ஷணாதி சுத்திகளைச்செய்து, அஸ்திரத்தால் புரோசித்து, சம்ஹிதையால் அபிமந்திரித்தும், அகற்ப திருநீறானால் நிவிர்த்தியாதி கலாமந்திரங்களாலும், சம்ஹிதையாலும் அபிமந்திரித்தும், திக்பந்தனம் அவகுண்டனம் செய்து, அஸ்திரபீஜத்தால் தலை முதல் பாதம் வரை திருநீற்றை வலது கை அணிவிரல் பெருவிரலால் எடுத்து (உத்தூளனம்) பொடியாக பூசுதலைச்செய்து கொள்க. இந்த முறை ஆதிசைவ அனுஷ்டானத்தில், தினமும், ஸ்நானம்செய்தபின்பும், விபூதி தரிக்கும்காலத்தில், கடைபிடிக்கப்படுகிறது. இவ்வாறு உத்தூளனம் செய்தபிறகு, நீர்விட்டுக் குழைத்து, ஈசானாதி மந்திரங்களால் சிரசு முதல் முறையே திரிபுண்டரமாக (மூன்று பட்டையாக) தரிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. இதில் நெற்றி, மார்பு, தோள்களுக்கு ஆறு-அங்குலபிரமாணமாகவும், மற்றஇடங்களுக்கு ஒருஅங்குல அளவுள்ளதாகவும் தரிக்க வேண்டும். கையில் மீந்திருக்கும் பஸ்மத்தில், ஜலம் சிறிதுசேர்த்து, பஞ்சப்ரம்மத்தாலும், மூலத்தாலும், கும்ப-முத்திரையினால் சிரசிலே அபிஷேகித்துக்கொள்ளவேண்டும். அஸ்த்திரத்தால் தாளத்திரயம் செய்துகொண்டு, கீழே சிதறிய பஸ்மத்தை இருதய மந்திரத்தால் துடைத்தெடுத்தல் வேண்டும். இருதயத்தில் சேர்த்ததாக பாவித்தல் வேண்டும். ஆகமங்களில் இவ்வாறே கூறப்பட்டுள்ளது. மேலும் பிராமணர்கள் சாஸ்திரவிதிப்படி பஸ்மஸ்நானம் செய்யவேண்டும் என்பதையும் கூறுகின்றனர். இதனால் பஞ்சபிரம்மசடங்க மந்திரங்களுடன், வேதமந்திரங்களையும் சேர்த்துச் செய்வது ஆதிசைவ அனுஷ்டானத்திற்கு உகந்ததாகும்.

2. வாருண ஸ்நானம்:- முன்பு கூறப்பட்டப்படி ஜலதேவதைக்குரிய, வருணமந்திரங்களை உச்சரித்துக்கொண்டு, ஜலத்தில் ஸ்நானம்செய்வது, நீராடுவது, வாருணஸ்நானம் ஆகும். இதேகருத்தை ஆகமங்களும் கூறுகின்றன. வீட்டிலே ஸ்நானம்செய்பவன் 5, 8, 9 என்ற ஏதாவது ஒரு எண்ணிக்கையில் ஆன குடங்கள் நீரை எடுத்து, மூலமந்திரத்தினால், அபிமந்திரித்து ஸ்நானம் செய்யவேண்டும் என்று விதிக்கப்படுகின்றது. இதில், குடங்களிலுள்ள நீரை, ஒருபாத்திரத்தில் நிரப்பி, வேறொரு சிறியகுவளையால் அல்லது பாத்திரத்தால் முகந்தெடுத்தே ஸ்நானம் செய்யவேண்டும். குடத்து நீரை அப்படியே ஸ்நானம் செய்யக்கூடாது. வாருணஸ்நானம் செய்யஇயலாதவர் அசக்தனர் "ஆபோஹிஷ்டா" முதலிய மூன்று வேதருக்குமந்திரங்களை பதம்பதமாய், ப்ரணவபூர்வத்துத்துடன் கூறியபடியே, ஜலத்தால் பாதம், மார்பு, சிரசு ஆகிய இடங்களில் உரியமுறைப்படி மார்ஜனம் (தெளித்தால் செய்துக் கொள்ள வேண்டும்), மேலும் ஈரவஸ்திரம் கொண்டு சுத்தமாக துடைத்துக்கொள்வதும், இயலாதோர்க்கு நீராடலுக்கு நிகரானதாக சொல்லப்படுகிறது.

3. பிரம்மஸ்நானம்:- நீரில் மூழ்கியவாறு அகமர்ஷணசூக்தமந்திரம் ஓதியவாறு மந்திரத்தால் ஸ்நானம் செய்வது பிரம்ம ஸ்நானம் எனப்படுவதாகும்.

4. வாயவ்ய ஸ்நானம்:- இது பசுவின் குளம்படிப்புழுதியை உடலில்பூசிக்கொண்டு செய்வதாகும். இதை ஆகமத்தில் வருணஸ்நானத்தின் ஒரு பகுதியாக சொல்லப்பட்டுள்ளது. பசுக்களைப் பின்தொடர்ந்து சென்று அவை கிளப்பிய மண்புழுதி காற்றினால் நம்மீது பதிவதே வாயவ்யமாகும்.

5. திவ்யஸ்நானம்:- உத்திராயணத்தில் வெய்யிலுடன்பெய்யும் மழையில்நனைவது திவ்ய ஸ்நானமாகும்.

6. மானஸஸ்நானம்:- இதை சாரஸ்வதஸ்நானம் என்றும் கூறுவர். இந்த ஸ்நானவிதியைத் தெரிந்தவர்கள், சாரஸ்வதநதிதீரத்தில் (மானசரோவரம் என்ற இடத்திலும்) தவஒழுக்கம் மேற்கொண்டவர் தான்செய்யமுடியும் என்றும் கூறப்படுகிறது. அப்படிப்பட்டவர் தன்னை நாடி வந்தவருக்கு "தாட்சாயணமாயை + ஆச்சித்ரமஸ்து" என்ற மந்திரத்தால் செய்து வைக்கும் ஸ்நானம். இது மனதால் பாவனை செய்து செய்யப்படுவதாகும்.

7. பார்த்திவஸ்நானம்(மண்குளியல்):- சுத்தமான புனிதஇடத்திலிருந்து எடுத்துவந்த மண்ணை "ம்ருத்திகே ஹந மே பாபம்" என்பது முதலான பார்த்திவஸம்யுக்த வேதமந்திரங்களால் உடலில் பூசிக்கொண்டு செய்யப்படும் ஸ்நானம் ஆகும். ஆகமங்களில் மண்ணைப்பூசிக்கொண்டு அல்லது வாசனைப்பொடிகளைப்பூசிக்கொண்டு, ஸ்நானம்செய்வதை, வருணஸ்நானத்தின் ஒரு- பகுதியாகவே சொல்லப்படுகிறது. மேலும் ஸ்நானத்திற்குச்செல்லுபவன் பூசிக்கொள்ளும் ஸ்நானமிருத்திகையை மண்ணை எடுத்துச்செல்லவேண்டும் என்றும், ஸ்நானம் செய்வதற்கு முன்பு, அதை

பூசிக்கொள்ளவேண்டும் என்றும், சொல்லப்படுகிறது. அதாவது அம்மண்ணினால் உடலை சுத்தம் செய்துக்கொள்வது என்ற கருத்திலே சொல்லப்படுகிறது. சுத்தம்செய்வதற்கு வாசனைப்பொடிகளையும் பயன்படுத்தலாம். இந்த கருத்து ஆகமத்திலும், சாஸ்திரங்களிலும் பொதுவாகவே கூறப்படுகிறது.

8. கபிலஸ்நானம்:- என்பது தலைமுழுகாமல் செய்வதும், ஈரத்துணியினால் உடலைத்துவட்டிக் கொள்வதும் ஆகும். இது ஆகமத்திலும் விதிக்கப்படுகிறது. கபிலஸ்நானமானது முழுமையான ஸ்நானம் செய்ய சத்தியற்றவனுக்குமட்டிலுமே விதிக்கப்படுகிறது. ஸ்நானம்செய்ய சக்தி உள்ளவன் முழுமையாகவே ஸ்நானம்செய்யவேண்டும். வெந்நீரை பயன்படுத்தி ஸ்நானம் செய்வதையும் கபிலஸ்நானமாக செய்யலாம். தற்காலத்தில் சோப்பு போன்றவற்றை மண், வாசனைப்பொடிகளுக்கு பதிலாக பயன்படுத்துகிறோம். இது இக்காலத்தினால் ஏற்பட்டநிலை, காலதேசத்தினை அனுசரித்து கைக்கொள்வதே ஆசாரம் என்பதால், சோப்பு போன்றவற்றால் உடலை சுத்தம் செய்து, ஸ்நானம் செய்வது, ஏற்றுக்கொள்ளக்கூடியதே. மண் முதலானவை பயன்படுத்தாததால் தோஷம் ஒன்றும் இல்லை.

9. அப்யங்கஸ்நானம் (நல்லெண்ணெய்தேய்த்துக் குளித்தல்) :- அவரவர் வழக்கப்படியும், கிருஹ்ய சூத்திரங்களில் விதிக்கப்பட்டகர்மாக்களிலும், உரிய காலங்களிலும் இதனைந் செய்யலாம். அதுவன்றி, தனியாக செய்வதானால், நித்தியஸ்நானம் முடிந்தபிறகு தனியாக செய்வதுதான் சிறப்புடையது. இது விசேஷதினங்களில், மங்களஸ்நாநமாகவும், சனிஅன்று கட்டாயமாகவும், செய்யக்கூடியது. பொதுவாக காலையில் ஸ்நானம் செய்யாதநிலை ஏற்படும்-போது, அடுத்த சந்தியாவேளைக்குள் அதாவது மாத்யான்ஹிகம் செய்வதற்குமுன்பு ஸ்நானம் செய்ய வேண்டும். இது ஆபத்கால விஷயத்தில் கூறப்பட்ட கௌணகாலமாகும்.

ஒருநாளைக்கு மூன்றுமுறை காலை, மதியம், மாலை என ஸ்நானம் செய்யும் வழக்க-முடையவர்களுக்கு மாலை என்பது சூரியஅஸ்தனமத்திற்கு முன்புள்ள காலமாகும். இதில் கௌணகாலம் என்பது முன்னிரவில் முன் இரண்டு நாழிகை வரையில் ஆகும். இது விதி-விலக்காக சொல்லப்படுகிறது. (ஒவ்வொரு வேளை சந்தியாவந்தனம் செய்யும் போதும் ஸ்நானம் செய்யாவிட்டாலும், ஸ்நானம் செய்யும் பலனை பஸ்மஸ்நானம் செய்வதால் அடைய முடியும். இந்த கருத்தையொட்டி சைவசந்தியில் ஒவ்வொரு காலத்திலும் பஸ்மஸ்நானம் விதிக்கப்படுகிறது

10. வஸ்திரதாரணம் (ஆடைஉடுத்துதல்) :- பிராம்மணன் வெண்மையான வஸ்த்திரத்தையே உடுக்கவேண்டும். கிருகஸ்தர்கள் பஞ்சகச்சமாகவே உடுத்தவேண்டும். மேல்உத்திரியம் தரித்துக்கொள்ள வேண்டும். இரண்டாவது வஸ்த்திரம் இல்லாமல் ஏகவஸ்த்திரத்துடன் எந்த கர்மாவையும் செய்யக்கூடாது. பருத்தியிலானவஸ்த்திரம் சிறப்புடையது. பட்டுவஸ்த்திரமும் நன்றாகும். கம்பளி ஆடைகள் குளிர்காலத்தில் தரிக்கலாம். எல்லாகாலத்திற்கும் ஏற்றதல்ல,

உலர்ந்த வஸ்த்திரமே தரிக்கவேண்டும். எவ்விதவண்ணவஸ்த்திரமும் தரிக்கக்கூடாது. அழுக்கில்லாததும், கிழியாததுமாய் உள்ள வஸ்த்திரத்தை தரிக்கவேண்டும். புதிய வஸ்த்திரம் விவாகாதி மங்கள காரியங்களில் அப்போதைக்குமட்டில் தரிப்பதற்கு ஏற்புடையதாகும். மற்ற நேரத்திலோ அதை நீரில் துவைத்து, உலர்த்தியோ, சலவை செய்தோ தரிக்கலாம். சலவையால் வெளுக்கப்பட்ட வஸ்த்திரத்தையும் நீரில் நனைத்து, உலர்த்தியே தரிக்கவேண்டும். வேறு வஸ்த்திரம் இல்லாத நிலையில் முன்பு உடுத்திக்களைந்த வஸ்த்திரத்தையே, ப்ரணவமந்திரத்தால் புரோட்சித்து, பலமுறை காற்றில் உதறிவிட்டு மீண்டும் தரிக்கலாம் என்று விதிவிலக்காக ஆபத்காலத்திற்கு கூறப்படுகிறது. வெளுத்தவஸ்த்திரம் இல்லாதநிலையில், சணல்வஸ்த்திரமோ, நார்வஸ்த்திரமோ, கம்பளிவஸ்த்திரமோ தரிக்கலாம் என்று விதிவிலக்கு கூறப்படுகிறது. வஸ்த்திரம் இல்லாமல் எப்போதும் இருக்கக்கூடாது. பஞ்சகட்சமாககட்டாதவன் ஆடை-தரித்தவனாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டான். அவன் ஆடையில்லாதவன் என்றே கருதப்-படுவான். இதேபோல் அரைஞான் கயிறு இல்லாதவனுக்கும் (விவஸ்தை) கூறப்படுகிறது. உலர்ந்த வஸ்த்திரம் வேறுஇல்லாத நிலையிலும், வஸ்த்திரம் உலரக்கூடிய சாத்தியம் இல்லாத நிலையிலும், ஈரவஸ்த்திரத்தை நன்கு நீரவடியப் பிழிந்து, ஏழுதடவைகள் காற்றில் உதறிவிட்டு தரிக்கலாம். இது உலர்ந்த வஸ்த்திரத்திற்கு சமமாக சொல்லப்படுகிறது. இதுப்பற்றி போதாயனார் கூறுவதாவது, புதிய வஸ்த்திரத்தை அணியும்போது, தேவ, ருஷி, பித்ருக்களைத்-தர்பித்து, "கசீவ" என்ற மந்திரத்தால் வஸ்த்திரத்தை புரோட்சித்து "தேவஸ்யத்வா" என்ற மந்திரத்தால் எடுத்து "அவதூதம்" என்ற மந்திரத்தால் உதறி "உதுத்யம்" என்ற மந்திரத்தால் சூரியனுக்கு காண்பித்து "ஆவஹந்தி" என்ற மந்திரத்தால் தரித்துக்கொண்டு ஆசமனம் இருமுறை ப்ரத்யேகமாக செய்யவேண்டும் என்கிறார். <u>(குறிப்பு)</u> பொதுவாக புதியவஸ்த்திரத்தில், அந்தவஸ்த்திரம் நெய்யும்போது பூசப்பட்ட கஞ்சியின் பசபசப்பு போகாது இருக்கும். இதுபோல் சலவை துணியிலும் சலவையின் போது போடப்பட்ட சோடா, கஞ்சி போன்றவை இருக்கும். அதனால்தான் அவற்றை நனைத்து, உலர்த்தி அணியவேண்டும் என்கின்றனர். அனுபவத்தில் இவ்விரண்டு வஸ்த்திரங்களும் வியர்வையை உறிஞ்சிக்கொள்ளாமலும், உஷ்ணத்தை வாங்கிக்கொள்ளாமலும் இருப்பதால் உடல்நலனுக்கு ஏற்றதாகாது என்ற கருத்திலேதான் மேற்கூறப்பட்டவகைகள் ஏற்புடையதாக ஆகிறது என்பதை இங்கு உணர்ந்துக்கொள்ளலாம். ஐந்துஇடங்களில், ஐந்துகட்டுடன் கூடியதாய் பஞ்சகச்சமில்லாதவனும், உத்தரீயமில்லாதவனும், எந்தகாரியத்திற்கும், தகுதிஉடையவனாகமாட்டான். இதில் கச்சம் அணிந்துகொள்வதில் வகை, கருத்துமாறுபாடுகள் உள்ளது. இதனை அவரவர் அனுபவப்படி மேற்கொள்ளவும். இதுபற்றி பராசரமஹரிஷி தோளினின்று நழுவிய உத்தரீமுடையவன், உத்தரீயத்தை இடுப்பில் தரித்தவன், ஒரேவஸ்த்திரத்தை மட்டும் தரித்தவன் ஆகியவர்கள் எக்காரியத்திற்கும் அருகதை அற்றவர்கள் என்கிறார். ஆபஸ்தம்பர், உத்தரீயத்திற்காக மூன்றாவதாகு ஒரு உபவீதத்தை, (பூணூலை) தரிக்கவேண்டும் என்று சொல்கிறார். ஆதிசைவர்கள்,

ஆசாரியஅபிஷேகம் செய்துக்-கொண்டவர்கள், நான்காவதாக ஒரு உபவீதத்தை உத்தரீயார்த்தமாக தரித்துக்கொள்வர். முதல் மூன்றும் முறையாக ச்ரௌத, ஸ்மார்த்த, சைவானுட்டான கர்மாக்களுக்காக அணியப்படுகின்ற உபவீதங்களாகும்.சைவஆகமங்கள் இக்கருத்தை சுருக்காமாகவும், ஆங்காங்கு ஏற்றவிடத்திலும் சொல்லுகின்றன.

சதாசாரம் என்றபடி அவரவர் வழக்கத்தில் வஸ்த்திரங்களை தரிக்கலாம் என்றாலும், காலத்திற்கும், இடத்திற்கும், தான்செய்யும் காரியத்திற்கும் தக்கவாறு உடையணிவதில் எந்த தவறும் ஏற்படாது. ஆனாலும் ச்ரௌத ஸ்மார்த்த சைவானுஷ்டான காரியங்களிலும், தேவ பித்ரு காரியங்களிலும், யக்ஞங்களிலும் விதிக்கப்பட்டபடி தரிக்க வேண்டும். இதில் மாறுபட்டு காலத்திற்கு ஏற்ப என்றும், நாகரீகம் என்றும், தான்தோன்றித்தனமாக வஸ்திரதாரணம் செய்துக் கொள்ளக்கூடாது, தேவபித்ரு காரியத்தில் துணியை இதில் வெட்டித்தைத்த ஆடைகளையும் அணியக்கூடாது என்பவிதிமுறையாகும். வஸ்த்திரம் தரிப்பதையும், தேசசூழ்நிலைக்கேற்பவும், சீதோஷ்ணநிலைக்கேற்பவும் தரிக்கும்படி சொல்லப்பட்டுள்ளது. இதனால் உடல் ஆரோக்கியம் பெறுகிறது. உதாரணமாக அதிக உஷ்ணம்தகிக்கும் இடங்களில் கம்பளிஆடை, கனமான ஆடைகள், கழுத்துப்பட்டைகள், இருக்கமானஆடைகள் முதலியவற்றை அணிந்தால் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும். எனவேதான், ஆடைகள் தரிப்பதைப்பற்றிய, கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகிறது. (இவ்விஷயம் பற்றி விஞ்ஞான மருத்துவ விளக்கத்துடன் எம்மால் எழுதப்பெற்று வெளிவந்துள்ள தர்மசாஸ்த்திரமும், மருத்துவமும் என்ற நூலில் காண்க).

<u>விபூதி தாரணம் :</u> - திருநீறு அணிவதுப்பற்றி தைத்திரீய வேதஉபநிஷதத்தில் சிஷ்யானு சாஸனத்தில், "சத்யாந் ந ப்ரமதிதவ்யம்" - சத்தியத்தியம் மறவாதே, "தர்மாத் ந ப்ரமதிதவ்யம் - தர்மத்தை செய்வதை தவறாதே, "குசலாந் ந ப்ரமதிதவ்யம்" - யாவருடைய நலனையும் மறுக்காதே, "பூத்யைந ப்ரமதிதவ்யம்" - பஸ்மதாரணத்தை தவறவிடாதே, திருநீறுஅணிவதை மறக்காதே, "ஸ்வாத்யாய, ப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம்" - வேதம் ஓதுதலை தவறவிடாதே, "தேவ பித்ரு கார்யாப்யாம் ந ப்ரமதிதவ்யம்" - தேவகாரியம் பித்ருகர்மாக்களை தவறாமல் செய், "மாத்ரு தேவோ பவ - தாயையே தெய்வம் எனக்கொள், பித்ருதேவோ பவ - தந்தையை தெய்வமாகக்கொள், ஆசார்ய தேவோ பவ - குருவை தெய்வமாகக்கொள். என்ற வேதவசனங்-களில் பஸ்மதாரணம் பூதி என்ற சொல்லால் மற்றவற்றிற்கு இணையாக கூறப்பட்டுள்ளதாலறிக. விபூதிர் பூதி ரைச்வர்யம் அணிமாதிக மஷ்டதா" என்பது அமரகோசம். இதன்படி விபூதி, பூதி, ஐச்வர்யம், அணிமாதிகம், பஸ்மம் எனபவை ஒருபொருட்சொற்களாம்.

காலாக்னி ருத்ரோபநிஷத்தில், வித்வானாகிய பிரம்மசாரி, வனப்பரஸ்தன், சன்யாசி, கிரகஸ்தன் ஆகிய யாவராமாயினும், எவன் பஸ்மத்தினால் திரிபுண்ட்ரத்தை தரிக்கின்றானோ அவன் சகலமஹாபாதகங்களினின்றும், உபபாதகங்களின்றும், (ஸர்வபாவத்திலிருந்தும்)

விலகி சுத்தனாகிறான். இதனாலே அவன் சகலதேவர்களையும் தியானித்தவன் ஆகிறான், சகல-தீர்த்தங்களிலும் நீராடியவன் ஆகிறான், சகலசெல்வங்களையும் உடையவனாகிறான், சகல-ருத்திரமந்திரங்களையும் ஜெபித்தவன் ஆகிறான், சகலபோகங்களையும் அனுபவித்த-வனாகிறான், சிவசாயுஜ்யத்தை அடைகிறான், பிறவிப்பெருங்கடல் நீந்தி இறைவனடி சேருகிறான் என்று இவ்வாறு பயன்கள் கூறப்படுகிறது. இதனால் விபூதிதாரணமகிமை சொல்லப்பட்டது. இவை சாத்தியமா? எனில் - விபூதி மருத்துவகுணம் நிறைந்தது. (எடுத்துக்காட்டு) தற்காலத்தில் மகாதேவமலை என்ற இடத்தில் ஒரு சன்யாசி இருக்கிறார். அவர் வருடத்திற்கு ஒருமுறையே ஸ்நானம்செய்வாராம். எந்த உணவையும் எப்போதும் உண்பதில்லையாம். ஆனால் அவர் எப்போதும் தொடர்ந்து விபூதியை தூளிதமாய் பூசிக்-கொள்வாராம். இதனால்தான் அவரால் ஆரோக்கியத்துடன், திடக்காத்திரமாக செயலாற்றி வரமுடிகிறது என்கின்றனர். இதிலிருந்தே இவை சாத்தியம் என்பது புலனாகிறது. திருஞான-சம்பந்தரின் திருநீற்றுப்பதிகம் இதன் சிறப்பை விளக்குகிறது.

விபூதி செய்யும் முறை, நல்ல லட்சணங்களை உடைய புல் முதலிய இயற்கையானவற்றை மட்டும் உண்டுவாழும் பசுவின் சானத்தை எடுத்து, உருண்டை செய்து, உலர்த்தி, உமியுடன் சேர்த்து, மூட்டம் போட்டு, நெருப்பில் தகிக்கச்செய்யவேண்டும். தகித்த அவை நன்கு ஆறியன பின் அதிலுள்ள வெளுப்பான சாம்பலை எடுத்து சலித்து, மண் அல்லது மரப்பாத்திரங்களில் சேமித்துவைத்துக்கொள்ளவும். சுரக்குடுக்கை, விளாம்பழஓடு இவற்றில் வைத்துக்கொள்ளலாம். இப்படி செய்யப்படும் விபூதிக்கு "கற்பம்" என்று பெயர். எரிப்பதற்கு ஔபாசானாக்னியையோ, ஸ்ரௌதாக்கினியையோ பயன்படுத்தவேண்டும். த்ரிபுண்ட்ர தாரணத்தைச்(விபூதிதரிப்பதை) செய்யாமல் எக்கர்மாவையும் செய்யக்கூடாது. அப்படி செய்தால் அக்கர்மா வீணாகும் என்று போதாயனமஹரிஷி கூறுகிறார். நெற்றியில் மூன்றுபட்டைகளாக விபூதியை தரிப்பதே திரிபுண்டரம் எனப்படும். மேலுள்ள பட்டை சாமவேதத்தையும், இடையிலுள்ள பட்டை யஜுர் வேதத்தையும், அடியிலுள்ள பட்டை ருக்வேதத்தையும் குறிக்கும் என்று வேதசாஸ்த்திரங்கள் கூறுகின்றன. சைவாகமங்கள் மூன்றுதத்துவஅதிபதிகளாகிய மும்மூர்த்திகளை உணர்த்துவதாக கூறுகின்றன. பராசரர், வேதமந்திரத்துடன் பஸ்மத்தால் த்ரிபுண்டரமமும், உத்தூளனமும் எவனுக்கு சத்தியாயுள்ளதோ அவனுக்கே ப்ராமணத்தன்மை பூரண்மாய் உள்ளது எனலாம். இது எல்லா தேவதைகளையும், முத்தேவர், தேவிகளையும் திருப்தியடையச்செய்கிறது என்கிறார். ச்ரௌத தர்மத்தில் நிலைபெற்றவனுக்கு த்ரிபுண்ட்ரம் என்னும் முப்பட்டைக்குறியீடு சிரௌதமே ஆகும். உமைபங்கனாகிய சிவனும், லோகோபாகரத்திற்காக த்ரிபுண்ட்ரத்தை தரிக்கிறார். வேத சித்தரான விஷ்ணுவும் ச்ரௌத லிங்கமாகிய (குறியீடு) த்ரிபுண்டரத்தை தரிக்கிறார். மற்றதைத் தரிப்பதில்லை. அவருடைய அவதாரங்களிலும் த்ரிபுண்டரத்தையே தரித்தவராக இருக்கிறார். இதில் மாறுபட்ட கருத்துகளும் உள்ளன. ஊர்த்துவபுண்டரமான நாமமே பிராமணர்களுக்குரியது. த்ரிபுண்ட்ரமானது சூத்திரர்களுக்குரியது என்று வியாசர்

கூறுகிறார். இது சைவத்தில் மறுக்கப்-படுகிறது. வேறு தர்மசாஸ்த்திரங்களிலும் மறுக்கப்படுகிறது. கோபி, சந்தனம் முதலியவற்றை நாமம் போல ஊர்த்துவபுண்டரமாகவே மேல்நோக்கியதாக இடவேண்டும். அவற்றை த்ரிபுண்ட்ரமாக இடக்கூடாது என்று சந்திரிகையில் சொல்லப்படுகிறது. அர்த்தசாத்திரத்தில் கோபி, சந்தனம் முதலியவற்றை குறுக்காக இடவிரும்பினால் அவற்றுடன் விபூதியை சேர்த்து இடவேண்டும் என்று கூறப்படுகிறது. எனவே விபூதி ஒன்றே த்ரிபுண்ட்ரமாக தரிக்கக்கூடியது ஆகும். சைவாகமத்தில், காமிகத்தில் விபூதிதாரணம் பற்றி பஸ்மஸ்நானத்தில் முழுமையாக சொல்லப்பட்டுள்ளது. இனி பஸ்மத்தின் வகைகள் நான்காக ஆகமத்தில் சொல்லப்படுகிறது.

1. கற்பம் = நோயில்லாத, கருமைநிற அல்லது கபிலநிற, பசுவின்சாணத்தைத் தரையில் விழாமல், விழுமின்னரே அதனை தாமரைமுதலிய ஒருவகையில், இலை சத்யோதஜாதமந்திரம் உச்சரித்து ஏந்திப்பெற்று, வாமதேவமந்திரத்தால் அதனை உருண்டையாக செய்து, நல்ல சுத்தமான இடத்தில் உலர்த்தி, அகோர மந்திரத்தால் சிவாக்நியால் பொசுக்கி பஸ்மம் செய்தல் வேண்டும். 2. அனு கற்பம் = காட்டில் அல்லது ஆறு முதலிய நீரும், ஈரமும் உள்ள இடங்களில் இல்லாமல் உலர்ந்தஇடத்திலுள்ள, பசுவின் உலர்ந்தசாணத்தை, கற்பத்தில் சொல்லியது போல் அக்னியால் தகித்த பஸ்மம். 3. உப கற்பம் = பஸமபத்தை வஸ்த்திரத்தால் சலித்து, கோமூத்திரத்தில் நனைத்து, பிண்டமாக்கி, மறுபடியும் அக்னியால் தகித்து செய்யப்படுவது. 4. அகற்பம் = இவ்விதிகள் ஏதுமின்றி சாமான்யமாக சாணத்தின் சாம்பலைக் கொண்டு சாமானியர்களால் செய்யப்பட்ட பஸ்மம். அகற்பம் என்றும் பெயர்பெறும். சாமா தற்காலத்தில் நாம் பயன்படுத்தும் பஸ்மம் யாவும் அகற்பமேயாகும். சிலரே கற்பமுறையில் பஸ்மம் செய்பவர்களாய் உள்ளனர். கடைகளில் கலப்படம் நிறைந்த போலியான பஸ்மங்களும் விற்கப்-படுகின்றன. நல்லவிபூதியா என்பதற்கு, சிலசோதனைகள் உள்ளன. பொதுவாக நல்ல-வெண்மையுள்ளதாயும், மினுமினுப்பும், பளபளப்பும் அற்றதாயும் இருத்தல்வேண்டும். கனமற்றதாய் இருக்கவேண்டும், ஜலம்விட்டு குழைத்தால் வழுவழுப்பு இருக்கக்கூடாது. வாசனைகள் ஏதும் இருக்கக்கூடாது, காற்றில் பறப்பதாக இருத்தல்வேண்டும். நல்ல விபூதியை பார்த்து தேர்ந்தெடுத்து வாங்கி பயன்படுத்தினால் தான் பூரண நலன் கிடைக்கும்.

<u>சித்தமருத்துவத்தில் திருநீறு (விபூதி / பஸ்மம்) :</u> - பூமியில் சிலஇடங்களில் இயற்கையாகவே கிடைக்கும், திருநீறும் உண்டு. திருச்செந்தூர் போன்ற சிலஇடங்களில் கிடைக்கின்றன. இது சற்றுகனமாய் இருக்கும். சாணத்தினால் கற்பம், அனுகற்பம் ஆகிய முறையில் செய்யும் திருநீறு சிறந்தது. விபூதிபூசுவதால் உடலில் ஏற்படும் வியர்வைநாற்றம், அவற்றிலிருந்துவரும் கிருமிகள் நாசமடையும். சிரசிலும், நெற்றியிலும் பூசுவதால் சிரரோகமும், நீர்கட்டும் நீங்கும். சமாதியில் நீத்தார் உடலை வைக்கும்போது அதனைச்சுற்றி விபூதியைக்கொட்டுவதால் அவ்வுடல் நீண்ட-நாள் கெடாமல் இருக்கும். சரீரஅழுக்கையும், தலைமயிரிலிலுள்ள அழுக்கையும் விபூதி பூசிக் கொள்வதால் நீக்கிக்கொள்ளலாம். வயிற்றுவலி, உஷ்ணபேதி

ஆகிய நோய்களுக்கு கற்ப, அனுகற்ப முறையில் தயாரிக்கப்பட்ட விபூதியை ஒரு சிட்டிகை வாயில் போட்டு, தண்ணீர் அருந்தினால் சுகமாகும். அந்த பஸ்மத்தில் நல்லகற்பூரத்தை வைத்து எரியவிட்டு, அதன்பின் அந்த பஸ்மத்தை கொடுத்தால் நலம் பயக்கும்.

இவ்வாறு இங்கு நித்யான்ஹிகத்தில் பஸ்மதாரணம்வரையில் விதிமுறை விளக்கம் சொல்லப்பட்டுள்ளது. இவை யாவும் நம் முன்னோர்களால் பலகாலம் அனுபவத்தில் உணர்ந்து சொல்லப்பட்ட வகைகளாகும். இது செய்தால் புண்ணியம் கிடைக்கும், மோட்சம் கிடைக்கும், தெய்வானுகூலம் கிடைக்கும் என்று சொல்லப்படும் இடங்களிலும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டியது யாதெனில், அதனால் உடலும், உள்ளமும் நலமடையும் என்பதே. அந்நலத்தால் புலனடக்கமும், தர்மசிந்தனையும் உண்டாகும். இச்சிந்தையினால் வாழ்க்கை திருப்தியும், மகிழ்ச்சியும் உள்ளதாகுமெனவும், இவ்வாறான தூய்மையான வாழ்வினால் ஒவ்வொரு தனிமனிதனும் எல்லா நலன்களையும் அடையமுடியுமெனவும், அவன் சார்ந்த சமூகமும் அமைதியான வாழ்க்கையில் நிறைவு கண்டு எல்லா நலன்களையும் பெறும் என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும். செய்யக்கூடாது என்பதைச் செய்வதால் இதற்கு நேர்மாறான எதிர்மறை விளைவுகள் உண்டாகும். அவற்றை பாவமும், நரகமும் கிடைக்கும் என்று சான்றோர் குறிப்பிட்டனர்.

அறிவியல் உலகம் எனப்படும் தற்காலத்தில், யாவரும் காரணகாரியங்களை அறிய விரும்புகின்றனர். அதன்படி இங்கு சொல்லப்பட்ட விஷயங்கள் இயன்றவரை விளக்கப்பட்டன என்று கருதுகின்றேன். இதில் மேலும் ஆய்வுகளும், விளக்கங்களும் ஆன்றோர்கள் செய்வது நலமாகும். எளியோனின் கருத்துக்களில் பிழைப்பொறுத்து நிறைகொள்ளுமாறு பிரார்த்திக்கின்றேன்.

நலமுடன் வாழ்க

***************** சுபம் *****************

உ

<u>ஓம் நமச்சிவாய்யாம்</u>

ஆகமங்களில் பத்திர புஷ்ப வகைகளும், பயன்களும்

பரஸ்பர தபஸ் ஸம்பத் பலாயித பரஸ்பரௌ.
பிரபஞ்ச மாதா பிதரௌ பிராஞ்சோ ஜாயாதீஸ்துமः.

கட்டுரை ஆசிரியர்
ஆகம ப்ரவீணர், வ்யாகரண சிரோமணி
சைவாகம ரத்னம், ஆகம ப்ரயோக நிபுணர்
சிவஸ்ரீ. G. கோடீஸ்வர குருக்கள் M.A.,
திருநள்ளாறு. ஸ்ரீ தர்பாரண்யேச்வராலய அர்ச்சகர்

சிவபரம்பொருளின் அருட்கருணையினால் படைக்கப்பட்ட இப்புவியில், காடு, மலை, நிலம், ஆறு என இயற்கைவளம், எங்கெங்கும் நிறைந்து காணப்படுகிறது. **"சைவத்தின் மேலான சமயம் வேறில்லை"** என்ற சான்றோர் வாக்கிற்குஇணங்க, சைவசமயமே தலையாய சமயமாகும். உலக மக்களை இறைநிலைக்கு உயர்த்தவல்லது நமது சமயம். இறைநிலையை நாம் அடைய **வழிபாடு** எனும் முறைமையை **வேதம், சாஸ்திரம், புராணம்** இவைகள் வழிகாட்டு-கின்றன. இவற்றுள் ஆகமசாஸ்திரமானது இறைவனை போற்றி வணங்கிட, இறைவனாலேயே படைக்கப்பட்டதாகும்.

திக் பஸ்ம ரஹிதம் பாலம், திக் கிராம மசிவாலயம்.
திக் அனீசார்ச்சநம் ஜன்ம, திக் வித்யா மசிவாச்ரயாம்.

எனும் ஸ்மிருதிவாக்கியப்படி, நீறில்லாத நெற்றியும், கோயில் இல்லாத ஊரும், அரனை வழிபடாத பிறவியும், சிவனை சாராத, அறியஉதவாத கல்வியும் வீண் என கூறுகிறது. திருத்தொண்டர்- புராணத்தில்

**எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என வுரைத்தருள
அண்ணலார் தனை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாயினள் பெருந்தவக் கொழுந்து** என்றும்,

முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணத்தில்,

எப்போதும் இனிய பிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போதும் ஆர்வமிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதற்சைவராம் முனிவர்.

தெரிந்துணரின் முப்போதும் செல்காலம் நிகழ் காலம்
வருங்கால மாற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பிய அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியன
பெருந்தகையார் குலப்பெருமையாம் புகழும் பெற்றியதோ. என்றும்,

இங்குநாத! நீமொழிந்த ஆகமத்தின்
இயல்பினால் உனை அர்ச்சனை புரியப்
பொங்குகின்றதென் ஆசை என்றிறைஞ்சி
போகமார்த்த பூண் முலையினாள் போற்ற. என்றும் கூறியுள்ளது.

இதன்கூற்று, அரச்சனை என்பது பூஜையின் ஒரு அங்கமான வெளிப்பாடு. "அர்ஹ பூஜாயாம்" எனும் தாதுசொல்லிலிருந்து பூஜை எனும் சொல் உருவாகிறது.

பூர்யந்தே ஸர்வகர்மாணி, ஜாயதே ஞான மாத்மநி.
பூரணாத் ஞானதாத்ருத்வாத், பூஜாசப்த இஹோச்யதே (காரணாகமம்)

எல்லாசெயல்களையும் நிறைவுசெய்து, நிறைவான ஞானத்தை அளிப்பது என இதன்பொருள். அப்பூஜையானது, பரசிவத்தைப் பூஜிப்பதால் மட்டுமே அடையலாம். சங்கராத் ஞானம் அன்விச்சேத்" என்பதாலும், "ஈசானஸ்ஸர்வவித்யாநாம் ஈஸ்வரர்" என்று வேதம் கூறுவதாலும், பரமன் ஒருவரே மெய்ஞானத்தை அருள்பவர் என அறிய முடிகிறது.

பூஜயா விபுலம் ராஜ்யம், அக்னிகார்யனே ஸம்பதம்.
ஜபேந பாப ஸம்சுத்திம், ஞானம் தியானேந சாச்னுதே.
கிந்த்வா தேஹா வஸாநந்து, யப் பூஜயதி பக்தித
ஸ சிவஸ் ஸர்வகிருத் யஜ்வா ஜீவன்முக்தஸ் ஸ உச்யதே. (விமலாகமம்)

பூஜையினால் விஸ்தாரமான ராஜ்யத்தையும், அக்னிகாரியத்தினால் ஐஸ்வர்யத்தையும், ஜபத்தினால் பாபத்தினின்றும், சுத்தியையும், தியானத்தினால் ஞானத்தையும் அடைகின்றோம். ஆனால் எவர் ஒருவர் தேகம் இருக்கும்வரை, சிவபூஜை ஞானத்தையும் செய்துவருகிறாரோ, அவரே சிவன். அவரே எல்லாம் செய்பவர். அவரே யாகம் செய்பவர்.

அவரே ஜீவன் முக்தர் என சொல்லப்படுகிறது. "புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு", என்பதாலும், "போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்", என்பதாலும் புஷ்பமானது பூஜையில் முக்கியஇடத்தைப் பெறுகிறது. நாவுக்கரசர் பெருமான் தமது தேவாரப்பாடலில்

கைகாள் கூப்பித் தொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த, பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்.

ஆக்கையாற் பயனென் - அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றியென்னாதஇவ்
ஆக்கையாற் பயனென்.

என்பதனால், நமது கைகள்மலர்தூவியும், இறைவனைத் தொழுதும் பயன் பெறவேண்டுமெனக" கூறுகிறார். பூசையில் மலர்களை 1. மந்திராஷ்டபுஷ்பம், 2. புஷ்பாஷ்டபுஷ்பம், 3. பாவநாஷ்ட புஷ்பம் என மூன்றுவகைகளாக ஆகமம்சொல்லும்.

உத்தமம் ஆராமபுஷ்பாணி மத்யமம் வன ஸம்பவம்.
அதமம் விக்ரயம் சைவ, யாசகம், நிஷ்பலம் பவேத். (ஆகமம்)

பூக்களையும், பத்ரங்களையும் கற்றிக்கூறுகையில், நந்தவனத்திலிருந்துபறித்த புஷ்பம் உத்தமம் என்றும், காட்டிலிருந்து எடுத்த புஷ்பம் மத்யமம் என்றும், விலைகொடுத்தும், யாசகமாகவும் பெறப்பட்ட புஷ்பம் அதமம் என்றும் ஆகமநூல்கள் கூறுகின்றன.

உத்தமந் தனக்கென வுற்ற நந்தனம்
மத்திமங் காட்டினில் மலர்ந்த பூவெலா
மித்தலத் தொருவன்வைத் திட்ட சூழலி
லத்தனை மலர்களு மதம மாகுமே. (புஷ்பவிதி)

எனும் பாடல்கள் மூலமாகவும் அறியலாம். புஷ்பங்களை 1. கோட்டுப்பூ, 2. கொடிப்பூ, 3. நீர்ப்பூ, 4. நிலப்பூ என நான்காக பிரிக்கலாம்.

கோட்டுப்பூ

வன்னி பலாவெலுமிச்சை நாரத்தை கோங்கு
மந்தாரை யூமத்தை மாவிலிங்கை நொச்சி
பன்னியகில் சந்து மகிழ் மாதுளைமா வசோகு
பாதிரிவெள் ளெருக்கிலத்தை பலாசுநுணா நறவம்
புன்னைவிளா மருதுகொன்றை நொல்லிகுராச் செருந்தி
பொன்னினா விரைக்கிளுவை குருந்துவில்வ நாவன்
மன்னுதாதகி குளஞ்சி யலரிவெட்சி பவள
மல்லிகை சண்பக ஞாழல் கோட்டுப்பூ வகையே.

இப்பாடலில் மரக்கிளையில் பூக்கின்ற நாற்பது பூக்களைக் குறிப்பிடுகிறார். பூ என்று பொதுப்பட கூறினும் மந்திரங்களும் இதில் சேரும். வன்னி, பலா, எலுமிச்சை, நாரத்தை, நொச்சி, மருது, அகில், சந்தனம், மா, இலந்தை, நுணா, விளா, மாவிலங்கை, நெல்லி, குருந்தம், கிளுவை, வில்வம், நாவல், இவையெல்லாம் பத்திரங்களே. கோங்கு, நாகலிங்கம், புன்னை, மந்தாரை, பொன்ஊமத்தை, மகிழம்பூ, மாதுளை, பாதிரிப்பூ, வெள்ளெருக்கு, பலாசு என்ற முருக்கு, நறவம் என்ற குங்குமம், ஆவிரை, தாதகி என்ற ஆத்தி, குளஞ்சி என்ற கிச்சிலி, ஞாழல் என்ற புலிநகக்கொன்றை, அலரி, வெட்சி, பவழம், மல்லிகை, சண்பகம், ஞாழல் இவையெல்லாம் கோட்டுப்பூக்களாகும்.

கொடிப்பூவகை

மருவாருங் காந்தள் காட்டு மல்லிகை முல்லை மௌவல்
கருவார் வெற்றிலை யேதாளி கருமுகை கருங்காக் கொன்றை
முருகாரும் வெண்காக் கொன்றை குருக்கத்தி முதலா வுள்ள
விருவாட்சி கொகுடி பிச்சி யிவையெலாங் கொடிப்பூ வாமே.

இப்பாடலில், மணம் நிறைந்த காந்தள், காட்டுமல்லி, முல்லை, மௌவல், கருநிறம் பொருந்திய வெற்றிலை, கூதாளி, கரியநிறஅரும்பான காக்கொன்றை என்ற காக்கணம், வெண்காக்கணம், குருக்கத்தி, இருவாட்சி, கொகுடி, பிச்சி கொடிப்பூவாகும். வெற்றிலை நீங்கலாக 11 கொடிப்பூக்களின் வகைகளை இப்பாடலில் கூறப்பட்டு உள்ளது.

நீர்ப்பூவகை :

செய்ய தாமரை சேர்ந்த பொற் றாமரை
துய்ய தாமரை சொல்லிரண் டுற்பல
மைய செம்மையை வெண்மைய வாகிய
நெய்தன் மற்றிவை நீரின் மலர்களே.

இப்பாடலில் செந்தாமரை, பொற்றாமரை, வெண்டாமரை, செங்குவளை, கருங்குவளை, செம்மையாகிய ஆம்பல், வெண்மையாகிய வெள்ளாம்பல் என ஏழுநீர்ப்பூக்களின் வகைகள் பேசப்படுகின்றன.

நிலப்பூவகை :

பட்டிநா யுருவி பூளை பச்சை செவ்வந்தி தும்பை
வெட்டிவேர் மருக்கொழுந்து கரந்தை யேவிஷ்ணு காந்தி,
மட்டவிழ் துழாய்செங் கீரைமத்தை செம்பரந்தை வங்க
மிட்டகொக் கிறக ணிச்சம் வலம்புரி யிவை நிலப்பூ.

இப்பாடலில் பச்சை, மருக்கொழுந்து, துழாய் ஆகிய பத்திரங்களுடன், பட்டிப்பூ, நாயுருவி, பூளை, தும்பை, வெட்டிவேர், செவ்வந்தி (சாமந்தி), சிவகரந்தை, விஷ்ணுகாந்தி, ஊமத்தை, வங்கம் என்ற கத்திரி, கொக்குமந்தாரை, வலம்புரி என்ற நந்தியாவர்த்தம், செங்கீரை, அணிச்சம், செம்பரத்தை என்ற பதினெட்டு வகை நிலப்பூ வகைகள் கூறப்பட்டுள்ளன.

அஷ்ட புஷ்பம் / எண்மலர்கள் :

அர்க்க சம்பக புன்னாக நந்தியாவர்த்தம்ச பாடலீ
பிருஹதீ கரவீராணி துரோண புஷ்பாணி சார்ச்சயேத். (காரணாகமம்)

வெள்ளெருக்கம்பூ, செண்பகப்பூ, கொன்றைபுன்னை, நந்தியாவட்டை, பாதிரி, கண்டங்-கத்திரி, அரளி, தும்பை என்ற எட்டுவகையாம். அம்சுமதாகமம் மற்றொரு வகையான அஷ்டபுஷ்பங்களைக் கூறுகிறது. அவை,

பங்கஜார்க்க பலாசம்ச நந்தியாவர்த்தம்ச மல்லிகா
கரவீரம் பகம் சைவ நீலோத்பல மதாஷ்டகம். (அம்சுமதாகமம்)

என கூறுவதால் தாமரை, புரசு, நந்தியாவட்டை, எருக்கு, மல்லிகை, அரளி, கொக்குமந்தாரை, நீலோத்பலம் என எட்டுபுஷ்பங்களையும் நாம் அறியமுடிகிறது. மேற்கண்ட மலர்கள் **"அஷ்டபஷ்பம்"** என்ற பெருமைவாய்ந்ததாக எல்லா காலங்களிலும் இறைவனுக்கு மந்திரத்தால் சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு காலங்களிலும், அதாவது காலசந்தி, உச்சிகாலம், சாயரட்சை என முக்காலங்களிலும், அர்த்தயாமத்திலும் சாத்தவேண்டிய புஷ்பங்களை பல்வேறு விதமாக பலஆகமங்கள் எடுத்துஇயம்புகின்றன.

பங்கஜம்ச பலாசம்ச துளசீ நவமல்லிகா.
நந்தியாவர்தம்ச மந்தாரம் மாதவீ சம்பகம் ததா.
புன்னாகம் கேதகீ சாபி பிராத: காலார்சனேதச. (காரணாகமம்)

நந்தியாவர்த்தம் சிரியாவர்த்தம் சுவேதார்க்கம் உதயேததேத்
(சிவதருமம்)

மேற்கண்ட காரணாகமத்தின்படி தாமரை, புரசம்பூ,, துளசி, நவமல்லிகை, நந்தியாவட்டை, மந்தாரை, முல்லை, செண்பகப்பூ, கொன்றைப்பூ, தாழம்பூ என பத்துவிதமான புஷபங்கள் கூறப்படுகின்றன. அருணகிரிபுராண கதையின் வாயிலாக தற்போது தாழம்பூ சாத்துவது நடைமுறையில் இல்லை. ஆயினும் அர்த்தயாமத்தில் சாத்துவதாக சான்றோர் கூறுகின்றனர். சிவதர்மவாக்கியப்படி நந்தியாவர்த்தம், ஸ்ரீயாவர்த்தம், வெந்தாமரை இவைகளை உதயகாலத்தில் சாத்தவேண்டும் என அறிகிறோம். மேலும் சைவாகமங்களை ஆராய்ந்து, நுண்ணியதமிழ் ஞானம் பெற்ற தருமையாதீன முதலாம் பீடாதிபதி கமலைஞானபிரகாசர்

வம்பவி ழலரிநா யுருவி மல்லிகை
வெம்பிய வெருக்குடம் வில்வம் வெண்மலர்
நம்பிய வருக்கலர் நந்தி நாண்மல
ரம்புயங் காலையி லட்ட புட்பமே

என்பதால் அரளி, நாயுருவி, மல்லிகை, எருக்கு, வில்வம், நந்தியாவட்டை, தாமரை மேலும் ஒரு வெண்ணிரப்பூ சேர்த்து காலை பூஜையின் எட்டுவிதமான புஷ்பங்களைக் கூறுவதை காணலாம்.

<u>மத்யான்ஹ பூஜைக்கு உரிய மலர்கள் (மத்யான்ஹ புஷ்பம்) :</u>

சுவேதாப்ஜம் கரவீரம் ச பலாசம் துளசீ ததா.
உத்பலம் பில்வபத்ரம் ச சங்கம் குரவகம் ததா.
கோவிதாரம் சைகபத்ரம் தச மாத்யான்ஹ பூஜனே. (காரணாகமம்)

"கரவீரம் ச பத்மம் ச துரோணம் மத்யான்ஹகே ஹிதம்". (சிவதருமம்)

என்று கூறுவதால், வெண்தாமரை, அரளி, புரசு, துளசி, அல்லி (நெய்தல்), வில்வம், சங்கு, மருதாணி, கோவிதாரம் (நாட்டுஅக்ததி), ஓரிதழ்தாமரை என பத்துவகையான புஷ்பங்களை உச்சிகாலப்பொழுதில் பத்துவகையான புஷ்பங்களையும் சாத்தவேண்டும் என காரணாகமும், செவ்வரளி, தாமரை, தும்பை இம்மூன்றையும் உச்சிப்பொழுதில் சிவபெருமானுக்கு அர்பிப்பது நன்மை என சிவதர்மமும் கூறுகிறது.

போதவிழ் பொன்னூமத்தை புலிநகக் கொன்றை வெள்ளைப்
பாதிரி வன்னி செய்ய வழுதுணை படர் ம ந்தாரை
பேதமாய் மலரும் வெள்ளைக்காக் கொன்றை பெரிய தும்பை
யோதிய விவைக ளெட்டு முச்சியி லட்ட புட்பம்.

என்ற தமிழ்பாடல் 1) பொன்னூமத்தை, 2) புலிநகக்கொன்றை, 3) வெள்ளைப்பாதிரிப்பூ, 4) வன்னிப்பூ, 5) கத்தரி, 6) மந்தாரை, 7) வெண்டாமரை, 8) தும்பை என எட்டுவிதமான புஷ்பங்கள் உச்சிகாலபூஜைக்கு உரியவை என தெரிக்கிறது.

ஸாயங்கால பூஜைக்கு உரிய மலர்கள் (ஸாயான்ஹ புஷ்பம்)

ரக்தாப்ஜம் குமுதம் சைவ மல்லிகா ஜாதி மாலதீ
மருர் தமனம் வா பி பேரகம் கஜகர்ணிகா
துளசீ பில்வ பத்ரம்ச ஸாயங் காலார்ச்சநே தச. (காரணாகமம்)

மல்லிகா கிருஷ்ண துத்தூரம் ஸாயான்ஹேசம்பகம் ஹிதம்.
கதம்ப கனகா ஜாதி கர்ணிகா சார்த்தராத்ரிகே. (சிவதருமம்)

ஸாயங்கால பூஜைமலர்கள், 1) செந்தாமரை, 2) அல்லி, 3) மல்லிகை, 4) ஜாதிமுல்லை, 5) மரமல்லிகை, 6) மருகொழுந்து, 7) வெட்டிவேர், 8) கஜகர்ணிகை, 9) துளசீ, 10) வில்வம் என்ற பத்துவகைப்படும். மேலும் சிவதருமத்தின்படி, கருஊமத்தை, மல்லிகை, செண்பகம் இவைகளை மாலையிலும், கதம்பம், பொன்னிரமலர், ஜாதிமுல்லை இவற்றை அர்த்தயாமத்திலும் சமர்ப்பிக்கவேண்டும்.

வந்தமல் லிகையி ரண்டு மகிழ்தரு மல்லிகைப் பூக்
கொத்துவேர் சண்ப கப்பூச் சிறியசண் பகங்கொழுந்து
சிந்தைகூ ரட்ட புட்பஞ் சிவன்முடிக் கேறும் போழ்தில்
லந்தியோ டர்த்த யாம மபராணந் தனினு மாமே.

இப்பாடலின்படி மல்லிகை, காட்டுமல்லி, மரமல்லிகை, மகிழம்பூ, வெட்டிவேர், சண்பகம், சிறுசண்முகம், மருக்கொழுந்து என்ற எட்டும், அந்தி, அர்த்தயாமம், பிற்பகல் ஆகிய காலங்களில் சிவன் முடிக்கேற்ற மலர்கள் ஆகும்.

ஆவாஹநார்க்ய பூஜாஸு ஸ்நானேதூபே விலேபநே.
நிவேத்யச விஸர்கேச புஷ்பாஷ்டௌது ஸுயோஜயேத்.

1) ஆவாஹனம், 2) அர்கியம், 3) பூஜை, 4) ஸ்நானம், 5) தூபமிடுதல், 6) நறுமண திரவியம் பூசுதல், 7) நிவேதனம், 8) விடை கொடுத்தல் ஆகிய செய்கைகளின் பொழுது சிறப்பாக **அஷ்டபுஷ்பார்ச்சனம்** செய்தல்வேண்டும்.

மாத புஷ்பங்கள் மற்றும் பத்ரங்கள்

1) **சித்திரை மாதத்தில்** முல்லைப்பூ, கானர்ப்பூ, கடம்பன்பூ, வாழைப்பூ. கோங்குஅறுகு, நாயுருவி, விளா, வில்வம் இவைகளை பூஜித்தால் **லெட்சுமீகரம்** ஏற்படும்.

2) **வைகாசியில்** அரளி, செந்தாமரைப்பூ, பாதிரிப்பூ, நெருஞ்சில்பூ, சிறுவழுதலைப்பூ, செவ்வகந்திப்பூ இவைகளுடன், வன்னிபத்ரம் மற்றும் அறுகு, நாயுருவி, நொச்சி, விளா, வில்வம் இவைகளை அர்ச்சித்தால் **சிவலோகம்** கிட்டும்.

3) **ஆனி மாதத்தில்** கடம்பம்பூ, சிவப்புசெண்பகப்பூ, தாமரைப்பூ, பாதிரிப்பூ, காக்கரட்டான்பூ இப்பூக்களை அர்ச்சிக்கலாம். மேலும் இம்மாதத்தில் விசேஷமாக அபிஷேக திரவியமான புஷ்போதகத்தில், புன்னைப்பூ, நாகமல்லி, நந்தியாவட்டை, கருஊமத்தம்பூ, வெள்ளெருக்கம்பூ, மகிழம்பூ என்பனவாம். இதன்மூலம் **எண்ணியபலன் சித்திக்கும்.**

4) **ஆடி மாதத்தில்,** ஊமத்தம்பூ, கருங்குவளை இவைகளுடன் வில்வபத்ரமும் சேர்த்து அர்ச்சித்தால் பலனாக **சத்ருநாசம்** அடையலாம்.

5) **ஆவணி மாதத்தில்,** விஷ்ணுகிராந்தி, காக்கரட்டான்பூ, மல்லிகை, புன்னைப்பூ, சண்பகம், முல்லை, இவைகளுடன் ஆல்பத்ரம் அர்ச்சித்தால் **பூவுலக மகிழ்ச்சியை** அடையலாம்.

6) **புரட்டாசி மாதத்தில்,** தேவதாரு, விஷ்ணுகிராந்தி, பொன்னூமத்தை, வெள்ளெருக்கு, தாமரை, இவைகளுடன், சிறுசெண்பகபத்ரம் செய்கையில் **செல்வச்சேர்க்கை** ஏற்படும்.

7) **ஐப்பசியில்,** சங்கப்பூஷ்பம், வில்வப்பூஷ்பம், சிறுவழுதலைப்பூ, சரக்கொன்றைப்பூ, மகிழம்பூ, பட்டிப்பூ, முல்லைப்பூ இவைகளுடன் தாமரைபத்ரம் சேர்த்து அர்ச்சித்தலால், **தர்ம அர்த்த காம மோட்சம்** ஆகிய நான்கையும் அடையலாம்.

8) கார்த்திகை மாதத்தில், குடமல்லி, கருநெய்தல், மல்லிகைப்பூ, வில்வப்பூ, பலாசம்பூ, பாக்குப்பூ, இப்பூக்களுடன், குருக்கத்திபத்திரம் பூஜை செய்கையில், பிரம்மஹத்தியாதி தோஷ நிவாரணம் கிடைக்கும்.

9) மார்கழி மாதத்தில், தும்பைப்பூ, வெள்ளருகு, வெண்தாமரை, செந்தாமரை இப்பூக்களுடன் அறுகுபத்ரம் செய்கையில் மோக்ஷம் உண்டாகும்.

10) தை மாதத்தில், ஒத்தை நந்தியாவட்டை, இரட்டை நந்தியாவட்டை இவைகளுடன் அறுகு பத்ரம் செய்தால் ஆயுள்விருத்தி உண்டாகும்.

11) மாசியில், தாமரை, மருதாணி, மல்லிகைப்பூ இவைகளுடன் துளசீபத்ரம் செய்கையில் நல்ஆரோக்யம் ஏற்படும்.

12) பங்குனி மாதத்தில், தாமரைப்பூ, காசித்தும்பைப்பூ, இவ்வகைபூக்களுடன், நாகமல்லி பத்தரம் அர்ச்சனை செய்தால் ஐச்வர்யம் உண்டாகும். மேலும் பங்குனி மாதத்தில் விசேஷமாக புஷ்பபூஜா சொல்லப்படுகிறது.

நானா புஷ்ப ஸமோபேதைர் சம்ப கோத்பல ஜாதிபி :
நீலோத்பல ப்ரகூநைச்ச பூர்வோக்த பூஷ்ப ஜாதிபி:
புஷ்பைர் பத்ரைர் ஸமாஹ்ருத்ய ஸம்பாதம் ஸம்ய காசரேத்.
லிங்கம் ஆபூரயேத் வித்வான் உக்தபுஷ்பைர் விசேஷத:
லிங்க மூர்தாதி பீடாந்தம் ஸ்தலாந்தம்வா ஸமாசரேத். (காரணாகமம்)

எனும் காரணாகம வசனப்படி செண்பகப்பூ, நெய்தல் (அல்லி), நீலோத்பலம், முதலிய புஷ்பங்களையும், பத்திரங்களையும் நன்குசேகரித்து, முறைப்படி, ஸ்நபனம் எனும் முதலான பூசைகளை செய்து சிவாக்னியில் புஷ்பங்களை சம்பாதம் செய்து, லிங்கவடிவிலான மூர்த்தியை புஷ்பங்களாலே அபிஷேகிக்கவேண்டும். அந்தப்புஷ்பஞ்சாலியானது பிரம்மபாகம்வரை அதாவது, பீடம்வரை மறைத்தோ அல்லது ருத்ரபாகம் மட்டில் மறைத்தோ, புஷ்பாஞ்சலியை முறைப்படி செய்து, நிவேதனம் முதலான உபசாரங்கள் செய்தால் விரும்பியபலனை அடையலாம். மாத பூஜையில் ஆணிமாத புஷ்போதகம் மற்றும் பங்குனிமாத புஷ்பபூஜா இவ்விரண்டும் மிகச் சிறப்பாக ஆகமங்களில் புஷ்பத்தின்உயர்வை தெரிவிக்கிறது.

I. துத்தூரம் கரவீர ஜாதி வகுளம் மந்தார புஷ்பம் பகம்.
புன்னாகம் குரவார்க்க நந்தி குடஜ துரோணாதிகம் மாதவீ .
சுப்ரம் ஸாத்விக மேத துக்த மகிலம் மோக்ஷப்ரதம் ஸ்யாத் தத:
கல்ஹா ராம்புஜ பட்டி பாடல சுமம் பாலாச நீபாதி யத். (அஜிதாகமம்)

வெள்ளைஊமத்தம்பூ, வெள்ளை அரளி, பிச்சிப்பூ, சிறுசெண்பகம், மகிழம், வெள்ளை மந்தாரை, வெந்தாமரைப்பூ, வெள்ளைக்கொக்கிறகம்பூ, புன்னை, மருதாணி, வெள்ளெருக்கு, நந்தியாவட்டை, மல்லிகை, குடமல்லிகை, தும்பை, முல்லை முதலியன வெள்ளை புஷ்பங்களை சாத்துவது நன்மை. இவற்றுள் ஸ்ரீமகாதேவருக்கு அர்ச்சனை செய்யின், முகத்தியுண்டாகும். செங்கழுநீர், செந்தாமரை, செவ்வரளி, சிவந்தபட்டி, சிவந்தபாதிரி, சிவந்தபவாசம், செங்கடம்பு முதலிய சிவந்த புஷபங்களனைத்தும் இராஜசபுஷ்பங்களாகும். இவற்றால் ஸ்ரீ மகாதேவருக்கு அர்ச்சனை செய்யின் போகுமுண்டாகும்.

II. ரக்தம் ராஜஸ மேவ முக்த மஜிதே தைரர்ச்சனம் போகதம்
ஸர்வம் கிருஷ்ண சுமம்து தாமஸ மதோ அயோக்யம் விநா சோத்பலம்
பீதம் ஸாத்விக ராஜஸம் ஸகலமப் யாரக்வதம் சம்பகம்
துத்தூராதிச கர்ணிகார மபியத் ஸ்யாத் போகமோக்ஷ ப்ரதம்.
(அஜிதாகமம்)

(i) நீலோத்பலம் நீங்கிய ஏனைய கருநிறமுள்ள புஷ்பங்களனைத்தும் தாமச புஷ்பங்களாகும். இவை சிவனை அர்ச்சித்ததற்கு உரியனவாகா.

(ii) கென்றை, சண்பகம், பொன்னூமத்தம், கர்ணிகாரம் முதலான பொன்மயமான மஞ்சள்நிற புஷ்பங்களனைத்தும் ராஜச சாத்வீக புஷ்பங்களாகும். இவற்றால் ஸ்ரீமகாதேவருக்கு அர்ச்சனை செய்யின் போகம், மோக்ஷம் என்னுமிரண்டும் உண்டாகும்.

III. சியாமம் தாமஸ ராஜஸம்ஹி துளசீ பில்வாதி பத்ரம்ச யத்.
ஹரீபேரம் மருகம்ததா தமனகம் தூர்வாச ஸித்தித்வயாம்.
ஸாஹஸ்ராத் கரவீரமர்க் குசுமான் பில்வம் சுமத்தளம்.
சுவேதாப்ஜம் சதபத்ரமத்ர கமலம் தஸ்மாத் அபாமார்ககம்.

(iii) வில்வபத்திரம், பச்சை, துளசி, வெட்டிவேர், மருக்கொழுந்து, அருகு, கதிர்ப்பச்சை முதலிய புதியபத்திரங்களனைத்தும் தாமச இராஜச பத்திரங்களாகும். இவற்றால் சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்யின் போகம் மோக்ஷம் இரண்டும் உண்டாகும். இவ்வாறு அஜிதாகமத்தில் கூறப்பட்டு இருக்கின்ற முறையினை அறிந்து சிவபெருமானை அர்ச்சித்தால் மேற்கண்ட பலன் உண்டாகும்.

பூக்களின் அதிதேவர்கள், கொங்கம்பூவில் சரஸ்வதியும், அலரிப்பூவில் பிரம்மாவும், வன்னியில் அக்னியும், நந்தியாவர்த்தையில் நந்திதேவரும், புன்னைப்பூவில் வாயுதேவரும், எருக்கில் சூரியனும், செண்பகப்பூவில் சுப்ரமண்யரும், வில்வத்தில் இலக்குமியும், கொக்கிறகம் பூவில் விஷ்ணுவும், மாவிலங்கையில் வருணனும், மகிழில் சரஸ்வதியும், வாகையில் நிருதியும், ஜாதிப்பூவில் ஈசானனும், செங்கழுநீரில் சூரியனும், குமுதம்பூவில்

சந்திரனும், மந்தாரையில் இந்திரனும், மதுமத்தையில் குபேரனும், நாயுருவியில் யமனும், தாமரைப்பூவில் சிவனும், அருகில் விநாயகரும், நீலோற்பலத்திலும், ஏனைய வாசனைப்புஷ்பங்களிலும் உமாதேவியாரும், அதிதேவதைகளாய் இருப்பார்கள். ஆகையால் இவை முதலிய மந்திரபுஷ்பங்களை உண்டு பண்ணியவர்களும், விதிப்படி எடுத்துக்கொடுத்தவர்களும் அவைகளால் அர்ச்சித்தவர்களும் போகமோக்ஷங்களை அடைவார்கள் என்று ஆகமநூல்கள் கூறுகின்றன.

> தஸ்மாத் தர்ப சுமந்து மாலதி சுமம் வ்யாக்ராதி தஸ்மாத் பகம்
> துத்தூரம் து தத்ஸஹஸ்ர மதிகம் துரோணம் ஹி சங்கம் தத:
> பஞ்சாசத் சதபங்க்திதஸ் ஸமதிகம் துரோணம் பிருஹத் சோத்பலம்
> ஸர்வஸ்மாத் அதிகம் ஹி பக்தி குசுமம் ப்ரோக்தம்ச காலோத்தரே.
> (காலோத்தராகமம்)

மேற்கண்ட காலோத்ரசுலோகத்தினால் ஸ்ரீ பரமேஸ்வர் முருகபெருமானுக்கு அருளிய **காலோத்தரம்** மற்றும் அருள்உள்ளம்கொண்டு அருளிய மகுடாகம வசனங்களாலும் மலர்களுக்குஉரிய **புஷ்பதாரதம்மியம்** பின்வருமாறு. சாமான்ய புஷ்பங்களைக்காட்டிலும், ஒரு **அலரிப்பூஷ்பம்** அதிகம். அந்த அலரிப்புஷ்பம் ஆயிரத்தினும் ஒரு **வெள்ளெருக்கம்பூஷ்பம்** அதிகம். அதனினும் அதிகம் **வில்வப்பூஷ்பம்**. அதில் ஆயிரத்தினுமதிகம் மூன்றுகிளையோடு கூடிய ஒரு **வில்வஇலை**. அதன் ஆயிரத்தினுமதிகம் ஒரு **வெண்டாமரைப்புஷ்பம்**. அதில் ஆயிரத்தினுமதிகம் நூறுஇதழோடுகூடிய ஒரு **செந்தாமரைப் புஷ்பம்**. அதில் ஆயிரத்தினும் அதிகம் ஒரு **தர்பைப் புஷ்பம்**. அதில் ஆயிரத்தினும் அதிகம் ஒரு முல்லைப்புஷ்பம். அதன் ஆயிரத்தினும் அதிகம் ஒரு **கண்டங்கத்திரிப் புஷ்பம்**. அதில் ஆயிரத்தினுமதிகம் ஒரு **ஊமத்தம் புஷ்பம்**. அதில் ஆயிரத்தினுமதிகம் ஒரு தும்பை புஷ்பம். அதன் ஆயிரத்தினும் அதிகம் ஒரு **சங்கு புஷ்பம்**. அதில் ஆயிரத்தினுமதிகம் ஒரு பெருந்தும்மை புஷ்பம். அது ஒரு வருடத்திற்கு நிர்மால்யமாவதில்லை. புஷ்பஜாதிக்குள் **நீலோற்பலம்** அதிகம். பத்திரஜாதிக்குள் **மருக்கொழுந்து** அதிகம். அதினுமதிகம் **வில்வபத்திரம்** என்றுஅறிந்துகொள்க.

கருநெய்தல்மலர் மகிமை, (நீலோத்பலபுஷ்பவிசேஷம்)

> ஸர்வேஷாம் புஷ்பஜாதீநாம் ப்ரவரம் நீலமுத்பலம்.
> நீலோத்பல ஸமம் புஷ்பம் ந பூதம் ந ப விஷ்யதி.
> நீலோத்பல ஸஹஸ்ரேப்யோ பக்திரேவ விசிஷ்யதே. (காலோத்தரம்).

என்பதனால், எல்லா புஷ்பங்களைக் காட்டிலும் உயர்ந்தது, **நீலோத்பலமலர்** ஆகும். அதைக்காட்டிலும் மேலானபுஷ்பம் மூவுலகிலும் ஏதுமில்லை. அப்படிப்பூஒன்று உண்டெனில், அது நாம்செலுத்தும் பக்தியே (அன்புமலரே) ஆகும்.

கோயில்களும், நந்தவனங்களும், மன அமைதிக்காகவும், அழகுக்காகவும், ஏற்படுத்தப்பட்டவைஅல்ல. ஒவ்வொரு பகுதியிலும் வாழும், மக்களுக்குத்தோன்றும் நோய்களின் நிலைக்கேற்ப, பல கடவுள் உருவங்கள் ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மூலிகையை, வழிபாட்டு மூலிகையாகப்பயன்படுத்தி, இறைவனின் பெயரால், மக்களுக்கு தொற்றுநோய்கள் ஏற்படாமல் இருந்திட பாதுகாப்பு செய்யப்பட்டன. இவற்றை மூடநம்பிக்கை என ஒதுக்காமல், மருத்துவ அறிவியல் ரிதீயாக ஆய்வுசெய்தல், முன்னோர்களின் அறிவியல்பூர்வ, நம்பிக்கையின் வெளிப்பாடே, கோயில்கள் என நிரூபிக்கமுடியும்.

வாழ்க்கையில், மணம்பரப்பி, மேன்மைதரும் மலர்களுக்கு,நெஞ்சைஅள்ளும் கொள்ளை அழகு, மணம்கமழும் நறுமணம், நோய்தீர்க்கும் மருத்துவகுணம், இறையருளை வாரிவழங்கும் தன்மை என மகத்துவம் ஏராளம்.

அன்பு, பக்தி, நம்பிக்கை, ஆனந்தம் போன்ற நல்லகுணங்களை, நம்மனதில் உண்டாக்கி, ஆன்மீகப்பாதையில் உயர்வுஉள்ளவர்களாக மாற்றும்சக்தி மலர்களுக்கு உண்டு. அதேபோன்று, மூலிகைகளின் மருத்துவகுணங்களுடன், தோல்நோய், மலேரியா, சுரம் போன்றவற்றைக் கட்டுப்படுத்தி குணப்படுத்தும் ஆற்றல்உடையனவாகவும், மலர்கள் விளங்குகின்றன.

சிவார்ச்சனா சந்திரிகை : உயர்ந்தபுஷ்பங்களை மூலமந்திரத்தை யுச்சரித்துக்கொண்டும், மிருகீமுத்திரை செய்துகொண்டும் அர்ச்சிக்கவேண்டும். அவையாவன, தும்பைப்பூ, சுரபுன்னை, மந்தாரம், நந்தியாவர்த்தம், ஸ்ரீயாவர்த்தம், அலரி, எருக்கு, மகிழம்பூ, மருதாணி, வெள்ளை-லொத்தி, நூறுஇதழுடைய தாமரை, ஊமத்தை, பலாசம், பாடலம், சண்பகம், கொன்றை, கர்ணிகாரம், கும்மட்டி, மாதுளை, மருதம், மயிற்கொன்றை, தேவதாரு, பச்சிலைமரம், முன்னை, மருக்கொழுந்து, அசோகம், பத்ரா, அபராஜிதம், ஆயிரம்இதழுடைய தாமரை, செங்கழுநீர், செந்தாமரை, நீலோற்பலம், குசும்பம், குங்குமமரம், மலைமல்லி, தருப்பை, நாயுருவி, கையாந்தரை, கழுகு, சரளம், மலையத்தி, கடம்பம், மா, இலுப்பை, நாகம், ஹேமாகுலி, குன்றிச்- செடி, நிலப்பனை, வேஜிகை, ஜாதிமல்லி, பட்டி, மாலதி, ரித்தி, நொச்சி, விஷ்ணுகிராந்தி, வாழை, நன்னாரி, தேவதாளம், தவிகண்டி, கிரந்தபர்ணி என்னும் இவற்றின் பூசைகளாகும்.

ஒவ்வொரு வர்ணமுடைய புஷ்பங்களாற் தனித்தனியாக கட்டப்பெற்ற மாலைகள் உத்தமம். அநேகவர்ணமுடைய புஷ்பங்களைக்கொண்டு கட்டப்பட்ட மாலைகள் மத்திமம். இலையும், பூவும் கலந்து கட்டப்பட்ட மாலைகள் அதமம்.

எருக்கு, அலரி, வில்வம், கந்தபத்ரிகா,வெண்தாமரை, நூறுஇதழுடையதாமரை, ஆயிரம் இதழுடைய தாமரை, கொக்குமந்தாரை, ஊமத்தை, தும்பை, நாயுருவி, தருப்பை, வன்னி, கொன்றை, சங்கம், கண்டங்கத்திரி, சதாபத்ரா, மிளகுச்செடி, நொச்சிச்செடி,

வெள்ளெருக்கு, பெருந்தும்பை, நீலோத்பலம் என்னுமிவை முறையே ஒன்றிற்கொன்று ஆயிரமடங்கு அதிகமான பலனைத்தருவனவாம். அவற்றுள் எருக்கம்பூ, பத்துச்சுவர்ணத்தைத்தானம் செய்ததோடொக்கும். நீலோற்பலம் ஆயிரம் சுவர்ணபுஷ்பத்தால் அர்ச்சனை செய்ததோடொக்கும். துளசி, கருந்துளசி, இந்திரவல்லி, விஷ்ணுக்கிராந்தி, நன்னாரி, குங்குமம், கரும்பு என்னும் இவற்றின் பூக்கள் எருக்கும்பூவுக்குச் சமமாகும். நந்தியாவர்த்தம், விஜயம், நூறுஇதழுடையதாமரை, மந்தாரம், மா, இலுப்பை, வெள்ளைவிஷ்ணுகிராந்தி, சிறுசண்பகம், கதலி, நன்னாரி என்னும் இவற்றின் பூக்கள் அலரிப்பூவுக்கொப்பாகும். ரித்தி என்னும் ஒஷதி, சகதேவி, நாகநந்தி, செண்பகமென்னுமிவற்றின் பூக்கள் வில்வதளத்திற்கு ஒக்கும், பாதிரிப்பூவும், மகிழம்பூவும், தாமரைப்பூவும், தும்பைப்பூவுக்கு ஒக்கும். ஜாதி, மல்லிகை, இலுப்பை, சங்கம், நாகம், சூரியாவர்த்தம், சிங்ககேசரம், மகாபத்திரம் என்னுமிவை முதலியவற்றின் புஷ்பங்கள் நாயுருவியின் பூவுக்கொப்பாகும். அசோகம், வெள்ளை- மந்தாரம், என்னும் இவற்றின் பூக்களும், ஏழுநாட்களில் விருத்தியடைந்த வால்நெல், கோதுமை, நீவாரம், நெல், மூங்கிலரிசி, மஞ்சாடி, பயறு, மொச்சை, விலாமிச்சை, உளுந்து என்னுமிவற்றின் முளைகளும் கொன்றைப்பூவுக்கொப்பாகும்.

வைரம், பத்மராகம், மரகதம், நல்முத்து, இந்திரநீலம், மகாநீலம், சூரியகாந்தம், சந்திர-காந்தம் ஆகிய இரத்தினபுஷ்பங்களும், ஆயிரம்சுவர்ணபுஷ்பங்களும், அலரி, நீலோத்பலம் என்னும் புஷ்பங்களுக்கொக்கும். நீலோற்பலம் எல்லாப்பூக்களினும் சிறந்ததென்பது எல்லா ஆகமங்களின்றுணிபு. சில ஆகமத்தில் அலரி சிறந்ததென்றும், வேறுசில ஆகமங்களில் கொக்குமந்தாரை சிறந்ததென்றும், இன்னுமோராகமத்தில் மலைப்பூ எல்லாவற்றினும் சிறந்த-தென்றும் கூறப்பட்டிருக்கின்றன. சிலர் எல்லாப்பூக்களினும் தாமரைப்பூவே சிறந்ததெனக் கூறுகின்றனர். ஆனால், காலவிசேடத்தை யநுசரித்து, புஷ்பவிசேடத்துப் பெருமையுண்டு. எவ்வாறெனில்? கூறுகையில், கடம்பம், செண்பகம், செங்கழுநீர், புன்னாகம், தருப்பை, கண்டங்-கத்திரியென்னும் இந்தப்புஷ்பங்களால் அர்ச்சனை செய்யின் அசுவமேதயாகஞ்செய்த பலனைத்- தரும். பாடலில் புஷ்பம், மல்லிகைப்பூ, நூறுஇதழுடைய தாமரைப்புஷ்பம் என்னுமிவற்றல் கிரீஷ்டோமம்செய்த பலனைத்தரும். தாமரை, மல்லிகையென்னும் இவற்றின் புஷ்பங்களால் வருஷருதுவாகிய ஆவணி, புரட்டாசி மாதங்களில் சிவபெருமானை அர்ச்சனை செய்யின் அசுவமேதயாகஞ்செய்த பலனைத்தரும். ஊமத்தை, செங்கழுநீர், சுஜாதம், நீலோத்பலம் என்னுமிவற்றின் புஷ்பங்களால் சரத்ருதுவாகிய ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் சிவபெருமானை அர்ச்சனை செய்யின் சத்திரயாகஞ்செய்த பலனைத்தரும். அலரி, சுஜாதம், நீலோற்பலம் என்னும் இவற்றின் புஷ்பங்களால் ஹேமந்தருதுவான மார்கழி, தை மாதங்களில் சிவபெருமானை அர்ச்சனைசெய்யின் நூறுயாகஞ்செய்த பலனைத்தரும். கர்ணிகாரப் புஷ்பத்தால் சிசிரருதுவாகிய மாசி, பங்குனி மாதங்களில் சிவபெருமானை அரச்சனை செய்யின் எல்லாயாகஞ்செய்த பலனைத்தரும்.

அவ்வாறே, ஆனி முதலிய பன்னிரண்டு மாதங்களிலும் முறையே எருக்கு, வில்வம், நாயுருவி, தும்பை, நீலோற்பலம், தாமரை, கொன்றை, கண்டங்கத்திரி, வியாக்கிரம், வன்னி, சண்பம், பாடலம், என்னுமிவற்றின் பூக்கள் சிறந்தனவாகும். அவ்வாறே நந்தியாவர்த்தம், ஸ்ரீயாவர்த்தம், வெள்ளெருக்கு, வெண்டாமரை, புரசு, புன்னாகம், சிறுசண்பகம், பட்டி, சிவந்த அகஸ்தியம், மகிழம், ரித்தி என்னும் ஒஷதி, திவிகண்டி, வேஜிகை, பாடலம், அசோகம், கதலி, சங்கினியென்னுமிவற்றின் புஷ்பங்கள் பிராதக்காலபூஜையில் மிகவுஞ்சிறந்தனவாகும்.

தும்பை, அலரி, கொன்றை, ஊமத்தம், வியாக்கிரம், கண்டங்கத்திரி, பாடலம், தாமரை, நீலோற்பலம், செண்பகம், குரண்டெமென்னும் இவற்றின் பூக்கள் உச்சிக்காலத்துப்பூஜையில் மிகவுஞ்சிறந்தனவாகும். ஜாதி, நீலோற்பலம், கடம்பம், ரோஜா, தாழை, கமுகு, புன்னாகம், தந்தி என்னும் இவற்றின் பூக்களும், ஊமத்தையின் புஷ்பமும், குருவேரும், வில்வமுமாகிய அவை அர்த்தராத்திரி பூஜையில் மிகவுஞ்சிறந்தனவாகும். கடம்பம், ஊமத்தை, ஜாதியென்னுமிவற்றை இரவிற்றான் சமர்ப்பிக்க வேண்டும். குருக்கத்தி, ஆனந்ததிகா, மதயந்திகை, வாகை, ஆச்சா, உச்சித்திலகம், ஆமல், மாதுளை, தென்னை அல்லது நீர்த்திப்பிலி, குமுழும், பருத்தி, வேம்பு, பசுணி, இலவு, சிந்தித, வோட, மலைஆல், பொன்னாங்கண்ணி,விளா, புளியென்னுமிவற்றின் பூக்கள் விலக்கத்தக்கவை ஆகும். தாழம்பூவை விலக்கிய விலக்கானது அர்த்தராத்திரியிற்றவிர ஏனைய காலங்களிற்றான் உபயோகம். அதாவது அர்த்தராத்திரியில் மாத்திரம் தாழம்பூவை உபயோகிக்கலாம் என்பதாம்.

கடம்பப்பூவைப் பகற்காலத்துபயோகிக்கக்கூடாது. கிரிகர்ணிகையை விலக்கிய விலக்கானது, நீலகிரிகர்ணிகையில் உபயோகம். அதாவது நீலகிரிகர்ணிகை அர்ச்சனைக்கு ஆகாதென்பதாம். பலாசம் கூடாதென்ற விலக்கை முள்ளுள்ள பலாசத்திற்கு மட்டுங்கொள்ளல் வேண்டும். இவ்வாறே ஜவாபுஷ்பம் (செவ்வரத்தம்பூ), மகிழம்பூ என்னுமிவை சில ஆகமங்களில் விதிக்கப்பட்டும், சில ஆகமங்களில் விலக்கப்பட்டுமிருக்கின்றன. கூடும், கூடாதென்ற இவற்றின் முடிவைப்பலத்தின் பேதத்தை யநுசரித்த பூஜையின் பேதத்தாலும், அவரவர்களின் முன்னோர் அநுட்டித்துவந்த ஆகமத்தை யநுசரிக்கும் பூஜையின் பேதத்தாலும், பூஜிக்கப்படும் மூர்த்தியின் பேதத்தாலும் நிர்ணயித்துக்கொள்ளலாம். விலக்கப்பட்ட பூக்களை மண்டபத்தை யலங்கரிப்பதற்கு உபயோகித்துக்கொள்ளவேண்டும்.

புஷ்பம் சாத்தும் முறைகள்

கநிஷ்டா நாமிகா மத்யே நவபுஷ்பம் துஸங்கிரஹேத்.
அங்குஷ்ட தர்ஜநீப்யாம் து நிர்மால்யம்ச விஸர்ஜயேத்.
விஸர்ஜனஸ்ய தத்காலே புஷ்பம் மூர்த்நிச விந்யஸேத். (சூக்ஷ்மாகமம்)

கனிஷ்டை, அனாமிகை விரல்களுடைய மத்தியில் புஷ்பத்தை வைத்துக்கொண்டு, அங்குஷ்டம், தர்ஜனீவிரல்களால் நிர்மால்யத்தை விசர்ஜனம் செய்து, விசர்ஸனம் செய்யும் காலத்தில் முன்விரலில் இடுக்கிக்கொண்ட புஷ்பத்தைச் சாத்தவேண்டும் என கூறுகின்றது.

நறை மலர்ப் பொருட்டுநன் னாளம் போக்கியே
குறையுறக் குற்றமாங் குறைப டாவகை
நிறை வுறச் சாத்துக நீரின போதெலாம்
புறவிதழ் போக்கினும் புனித மென்பவே. (புஷ்பவிதி பாடல்)

என்றபாடலில் பூக்களின் நடுவேயுள்ள, கேசரம், உளை, எனும் பெயர்களையுடைய நூலிழை போன்ற, மலரின் உறுப்புஇல்லாமல் இறைவனுக்குச் சாத்துதல் குற்றமாகும். நீரப் பூக்களை அவற்றைக்கவசம் போல மூடியுள்ள புறஇதழ்களை நீக்கிவிட்டுச் சாத்தவேண்டும்.

சேமித்தமலர்களின் உபயோககாலஅளவு,

பத்மம் து பஞ்ச ராத்ரம் ஸ்யாத் கர வீதம் தினத்ரயம்.
கேதகீ பஞ்சராத்ரம் வைசோத் பலம் ரதுத்ரிராத்ரகம்.
சம்பகம் சைகராத்ரம் ச கிரிமூலம் தினத்ரயம்.
உசீரம் ஸர்வகாலம் து க்ருஹீதம் உபயுஜ்யதே.

மேற்கண்ட ஆகமசுலோகத்தினால் பூஷ்பங்களை பரித்தப்பின்பு, எத்தனை நாட்களுக்குள் இறைவனுக்கு அர்ப்பணிக்கவேண்டும் என்பதை அறிவோம். தாமரை ஐந்துநாட்களும், அரளிப்பூ மூன்றுநாட்கள் வரையிலும், வில்வம் ஆறுமாதம் வரையிலும், துளசி மூன்றுமாதம் வரையிலும், தாழம்பூ ஐந்துநாட்கள்வரையிலும், நெய்தல் (அல்லி) மூன்றுநாட்கள்வரையிலும், விஷ்ணுகிராந்தி மூன்றுநாட்கள் வரையிலும், விலாமிச்சை எப்பொழுதும் பூஜிக்கலாம். கையில் கொண்டுவந்தது, தானாக விழுந்தது, காய்உடன் கூடிய இலை (ஆமணக்கு இலை) எருக்கு இலைகளில்வைத்த புஷ்பங்களை உபயோகிக்கக்கூடாது, அதேபோன்று வாசனைஇல்லாததும், மயிர், புழு இவைகளால் சூழப்பட்டதும், கடும்வாசனைஉடையதும், வாடியனவையும், தகாதவர்களால் தொடப்பட்டதும், அசுத்தமான பாத்திரங்களில் எடுத்துவரப்-பட்டதும், ஈரவஸ்திரத்துடன் கொண்டுவரப்பட்டதும், காய்ந்ததும், பழையதும், பூமியில் விழுந்ததுமான புஷ்பங்கள் கூடா. செண்பக மொக்கு தவிர மற்ற புஷ்பங்களின் மொட்டுகளும் பூஜிக்கஆகாது. இதனை கீழ்காணும் பாடலும் உணர்த்துகிறது.

எடுத்துவைத்தே யலர்ந்தமலர் பழம்பூக்கண் மற்ற
வெருக்கிலையா மணக்கிலை யினிற பொதிந்த பூக்க
ளுடுத்தபுடை வையிற்கரத்தி னமைந்தநறும் பூக்க
ளுதிர்ந்திடுபூ வரையின்கீ ழுற்றவிரைப் பூக்க
ளடுத்தபுழுக் கடியெச்சஞ் சிலந்திமயி ருறுதி
லங்கை யில்லைத் தங்கைகுவித் திடுதல்கங் குறனிலே
யெடுத்தமலர் நீரமிழ்த்தல் புறங்காட்டி லெய்த
லெச்சில்குளி யாதெடுத்த விழிபெனுமா கமமே.

இதன்மூலம் எடுத்துவைத்து உலர்ந்துபோன பூ, பழையபூ, எருக்குஇலை, ஆமணக்கு இலைகளில் வைக்கப்பட்ட பூக்கள், உடுத்திய துணியில் வைக்கப்பட்ட பூக்கள், வெறுங்கையில் சேர்த்துக்கொள்ளுகிற பூக்கள், உதிர்ந்திட்ட பூக்கள், இடுப்பிற்கு கீழாகப்பிடித்து எடுத்து வரப்பட்ட பூக்கள், புழுக்கடி, பறவைகளின் எச்சம், சிலந்தி, தலைமயிர் இவை பொருந்திய பூக்கள், இருகைகளுக்குகிடையில் அஞ்சலியாகக்குவித்துப்பிடித்த பூக்கள், இரவில் எடுக்கப்-பட்டபூக்கள், நீரில் ஆடி அமுக்கி எடுக்கப்பட்ட பூக்கள், சுடுகாட்டிலிருந்து ஆசௌத்துடன் இருக்கும் குளியாதிருந்தும் எடுத்த பூக்கள் இவை பூசைக்கு ஆகா என ஆகமங்கள் விளக்குகின்றன.

பத்ரம் புஷ்பம் பலம் தேவே நப்ரதத்யாத் அதோமுகம்.
புஷ்பாஞ்சலௌ நதத்தோஷ: ததாபர்யுஷிதஸ்யச.

என்பதனால் புஷ்பம், பத்ரம் பழம் இவைகளை அதோமுகமாக சாத்தக்கூடாது ஆனால் புஷ்பாஞ்சலி அந்த தோஷம் இல்லை. பழம் புஷ்பத்திற்கும் அந்த தோஷமில்லை.

புஷ்பம் சயதிவா பத்ரம் பலம் நேஷ்ட மதோ முகம்
துக்கதம் தத் ஸமாக்யாதம் யதோத்பன்னம் ததா அர்ப்பயேத்.
அதோ முகார்ப்பணம் நேஷ்ட்டம் புஷ்பாஞ்ஜலி விதிம் விநா.
லக்ஷபூஜா திஷுபுனர் புஷ்பம் ஏகைக மர்ப்பயேத்.
ஸமுதாயேந சேத் பூஜா லக்ஷபுஷ்பார் ப்பணம்ந தத்.

புஷ்பங்களையாவது, பத்ரங்களையாவது, பழங்களையாவது பூஜையில் அர்ப்பணம் பண்ணும் போது அவற்றை அதோமுகமாகப் போடக்கூடாது. அப்படிப்போட்டால், துக்கத்தை விளைவிக்கும். அவை, ஸ்வபாவத்தில் மரங்களில் அல்லது செடிகளில் (ஊர்த்துவமுகமாக) இருப்பது போலவே அர்ச்சனையிலும் போடவேண்டும். ஆயினும் இந்த நியமமானது புஷ்பாஞ்-சலியில் மட்டும் கிடையாது. அப்போது புஷ்பங்களை இரண்டு கைகளாலும் வாரி எடுத்துப்-போடுவதால் இதை அனுஷ்டிக்கமுடியாது. புஷ்பங்கள் அனேகஜாதிகளாக இருந்தால் அந்தந்த ஜாதியை மற்றவைகளுடன் கலக்காமல் உபயோகித்துவிட்டு, பிறகு மற்றொரு ஜாதி புஷ்பத்தை எடுத்துக்கொள்ளவேண்டும்.

பூக்களின் பயன் (புஷ்பார்சனாபலம்)

தூர்வா பிராத்ருவதம் ஹரேத் திவிஜவதோ நஸ்யேத் திலைர் ரர்ச்சநாத்
துரோணைர் கோவத நாசஏவஜனனீ ஹிம்ஸாக்ந மாரக்வதம்
அன்யஸ்திரீ கமனக்ன மர்க்க குசுமம் நீலோத்பலம் வாக்கிருதம்
ஹன்யாத் தோஷமதோ நவக்ரஹகிருதம் தோஷம் தஹேத் குங்குமம்
(சிந்தியாகமம்)

அருகம்புல்லாலருச்சித்தால் சகோதரனைக்கொன்ற தோஷம் நீங்கும். தும்பைப் பூஷ்பத்தாலருச்சனை செய்யின் பசுக்கொலை செய்த பாவம்நீங்கும். எள்ளுனால் அருச்சித்தால் பிராமணரைக்கொன்ற பாவம்நீங்கும். கொன்றைப்பூவால் அருச்சித்தால் தாயரைக்கொன்ற தோஷம் நீங்கும். வெள்ளெருக்கம் பூவால் அருச்சித்தால் பிறபெண்களைக்கூடின தோஷம் நீங்கும். நீலோத்பல மலரால் அர்ச்சித்தால் வாக்காற் செய்த பாவம்நீங்கும். குங்குமப்பூவால் அர்ச்சனை செய்தால், நவகிருகங்களாலுண்டாகும் பீடைநீங்கும். இவ்வாறு சிந்தியாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. மேலும் மலர்களின் மஹிமைப்பயன்பற்றிய பாடல்,

எள்ளுநெடும் பிரமகத்தி தன்னை நீக்கு
மிதழிதா யாரைக்கொன்ற வேத நீக்கும்
வெள்ளெருக்குப் பரதார வினைத ணிக்கும்
வில்வமது பொய்யுரைத்த வெம்மை நீக்குங்
கள்ளுணவு கோங்கம்பூப் புனைய நீக்குங்
கத்திரியி னிலைபுனையக் குட்ட நீக்கு
முள்ளியதெல் லாமெய்தும் வறுமை நீக்கு
மொண்டுழாய் மலர்களினு முயர்ச்சி தானே. (புஷ்பவிதி)

இப்பாடலில், எள்ளுப்பூ பிரம்மகத்தி தோஷத்தைநீக்கும், தாயாரை கொன்றபாவத்தைக் கொன்றைமலர் போக்கும். பிறன் மனைவிழைத்த பாவத்தை வெள்ளெருக்கு நீக்கும். பொய் சொன்னபாவத்தை வில்வம்போக்கும். கள்ளுண்டபாவத்தை கொங்கும், குட்டரோதத்தை கத்திரிஇலையும், வறுமையைத் துளசியும் போக்கும். பத்திரங்களில் துளசி சிறந்தது.

தும்பைமலர் கோகத்தி தோஷம் நீக்குஞ்
சொன்னநயந் திடுகளவு பலாசு நீக்குஞ்
தம்பிதமை யனைக்கோற லறுகு நீக்குஞ்
சாத்திடுஞ் சந்தனமகா துக்க நீக்கு
மம்புவியிலி லிங்கபின்ன மசோகு நீக்கு
மடைந்தோர்தம் வறுமையெல்லா மான்பா னிக்கும்
வம்பவிழ்நெய் நெல்லியிவை யுரோக நீக்கும்
வளர்நீலோற் பலநீக்கும் வாக்குத்தோஷம். (புஷ்பவிதி)

இப்பாடலில் தும்மைப்பூ கோஹத்தியைப் (பசுவைவதைத்த பாவம்) போக்கும். முருக்கம்பூ களவுசெய்து பாவத்தைக்கழிக்கும், அருகம்புல் உடன்பிறந்தவரைக்கொன்ற பாவத்தைப் போக்கும். சந்தனஇலை சாத்தினால் துன்பமும் போக்கும், அசோகம்பூ

இலிங்கத்தைஉடைத்த பாவத்தை நீக்கும். பால் அபிஷேகம் செய்தால் வறுமை தொலையும், நெய்காப்பும், பிணிகளைப் போக்கும். நீலோற்பலம் சொல்லால் வந்த பாவங்களைப்போக்கும்.

பத்ரங்கள், குந்தாக்ய பத்ரம் சுக பத்ரயுக்தம் பில்வம்ச நிர்குண்டிகபித்த பத்ரம் ஏதாநி பஞ்சாபிச பில்வபத்ரைர் வியோமாத்மமந்த்ரைச் சிவமர்ச்சயதே.

முல்லை, கிளுவை, நொச்சி, வில்வம், விலா எனும் ஐந்துபத்ரங்கள் சூலபத்திரங்கள் என்றும், பஞ்சபில்வம் என்றும் போற்றப்படுபவை. இவற்றால் வியோம வியாபி பதமந்திரத்தால் சிவனை பூசித்திடவேண்டும் என்கிறது ஆகமம்.

காரணாகமத்தில் ஏழுகிழமைக்கும் ஏழுஇலை வாரபத்திரமாக கூறப்படுகிறது. அது, ஞாயிற்றுகிழமையில் வில்வம், திங்கள் கிழமையில் துளசி, செவ்வாய்கிழமையில் விளா, புதன்கிழமையில் மாவிலிங்கம், வியாழன்கிழமையில் மந்தாரை, வெள்ளிக்கிழமையில் நாவற்பத்ரம், சனிக்கிழமையில் விஷ்ணுகிராந்தி என வாரப்பத்ரங்கள் ஆகும். இதனைக் கூறும்பாடல்,

சூரியன் வில்வமே துளசி திங்களே
யாரலில் விளாவிலை யறிவன் மாதுளை
வேரிநா யுருவிபொன் வெள்ளி நாவலே
காரியாஞ் சனியினில் விஷ்ணு காந்தியே.

இப்பாடலில் ஞாயிற்றில் வில்வமும், திங்களில் துளசியும், செவ்வாயில் விளாவும், புதனில் மாதுளையும், வியாழனில் நாயுருவியும், வெள்ளியில் நாவலும், சனியில் விஷ்ணுவும், சிறப்புப்பத்திரங்களகாச் சாத்தத்தக்கன, ஆரல், செவ்வாய் அறிவன் புதன் என்க.

கேதாரநாதர்க்குரிய பத்திரவகைகள் (சிவலிங்கபூசைக்கேற்றவை) :

வில்வமருச் சூதமத்த மாதுளையே நொச்சி
மேவியமுள் நிலந்தைநறுந் கரந்தைசெழு வன்னி
சொல்லிய கத்தரி நெல்லி சண்பகமே சாதி
தும்பையொடு மருதுமா மந்தார மலரி
யெல்லவரும் புகழுமந்த விஷ்ணு காந்தி
யெழிற்தேவ தாருவுட னெருக்கறுகென் றுரைக்கு
நல்லனவாம் பத்திரங்க ளிருபத் தொன்று
நாடரிய கேதார நாதனுக்கரச் சனையே.

இப்பாடல் வில்வம், மருவுகூதம், (மா)ஊமத்தம், மாதுளை, நொச்சி, இலந்தை, கரந்தை, வன்னி, கத்தரி, நெல்லி, சண்பகம், மல்லிகை, தும்பை, மருதம், மந்தாரம், அலரி,

விஷ்ணுகாந்தி, தேவதாரு, எருக்கு, மாவிலை, அருகம்புல் என்ற 21 பத்ரபுஷ்பங்கள் கேதாரநாதருக்குச் சிறப்பானவை என்றுகூறுகிறது.

வில்வஇலையின் தெய்வங்களும், மஹிமைகளும் :

இச்சா ஞான கிரியாசக்தி பில்வபத்ர த்ரயம்விது :I
தர்சநாத் பில்வபத்ரஸ்ய ஸ்பர்சநாத் வதநாதபி I
அஹோராத்ர கிருதம்பாபம் நச்யதே நாத்ரஸம்யச: I
பல்வபத்ரை ரகண்டைச்ச ஸகிருத்லிங்கம் ப்ரபூஜயேத்.
ஸர்வபாப விநிர்முக்த : சிவலோகே மஹீயதே.

வில்வத்தின் மூன்றுதலங்களில் இச்சா, ஞர்ன, கிரியா என மூன்றுசக்திகள் விளங்குகின்றன. எனவே வில்வமரத்தை தரிசிப்பதாலும், ஸ்பரிசிப்பதனாலும், நமஸ்கரிப்ப-தனாலும் ஒருநாள் முழுவதும் செய்தபாவம் அனைத்தும் அழிந்துவிடும் என்பதில் அய்யமில்லை. உத்தமமான வில்வபத்திரங்களை சிவலிங்கத்துக்கு அரச்சித்தால் எல்லா பாவங்களில் இருந்தும் வீடுபட்டு நிறைவான சிவலோகத்தை அடையலாம்.

சிறப்பு பத்திரபுஷ்பமஹிமை, மகுமாகமத்தில் கூறப்படுவதாவது,

ஏகாப்தம் பில்வபத்ரம் ஸ்யாத் ததா சுவேதாதுளஸ்ய பி.
ஷண்மாஸம் சார்க்கபுஷ்பம்து கரவீரம் தினத்ரயம் (மகுடாகமம்).

பொருள் : வில்வம், வெள்ளைதுளசி இவ்விரண்டும் ஒருவருடம் பூஜைசெய்த பலனையும், எருக்கம்பூ, ஆறுமாதம் பூஜைசெய்த பலத்தையும், அலரி மூன்றுநாட்கள் பூஜைசெய்த பலத்தையும் கொடுக்கும் என்பதாம். மேலும் சிலவற்றிற்கு மறுஉபயோக சிறப்புவிதியாக,

துளசீ பில்வபத்ரம்ச பலாசம்ச சுவர்ணகம்.
பிரக்ஷாள்ய பரமேசாநம் அர்ச்சயேத்து புனப்பன :

பொருள் : துளசி, வில்வம், பலாசம், (பொரசம்பூ), சுவர்ணபுஷ்பம் (பொன்னானலானபூ) என்னுமிவற்றை ஸ்ரீமகாதேவருக்குச்சாத்தி, பூசித்து, பின்புஎடுத்து, மீளமீளக்கழுவியபின் மீண்டும் அதனால் அர்ச்சிக்கலாம் என்பதாம். பஞ்சவில்வங்களாலும் இவ்விதம் சிவனை அர்ச்சிக்கலாம்.

செழுத்திடுந் துளபமுஞ் சிறந்த வில்வமும்
வழுத்துபொன் மத்தமு மலரு நீலமு
மழுத்துசெம் பொன்மல ரதனைப் போலவே
கழுத்தநிர் மாரியங் கழுவிச் சாத்தலாம்.

இப்பாடல் துளசி, வில்வம், ஊமத்தம்பூ, நீலோற்பலம் ஆகிய இயற்கையில் உண்டானவை, தங்கத்தால் செய்யப்பட்டவைக்கு சமமாகும். எனவே, இவை நீர்மாலியமாய்விடினும் தூயநீரால் கழுவப்பட்டு புதியன போலவே மீண்டும் இறைவனுக்குச் சாத்தலாம் என்கிறது.

பத்ரச்சேதைஸ்து ஸம்பூஜா ராக்ஷஸாநாம் விநாசனம்.
புஷ்பச்சேதைஸ்து ஸம்பூஜா ஸர்வசித்திஹரீ பவேத் (காலோத்தராகமம்)

எனும் வாக்கியங்களினால் பத்ரத்தை கிள்ளி பூஜித்தால் ராட்சர்கள் அழிவார்கள். ஆனால், புஷபத்தை கிள்ளி பூஜித்தால் எல்லா செல்வங்களும் நம்மைவிட்டு நீங்கிவிடும் என அறிகிறோம்.

சுகந்தயுக்தைர் புஷ்பைஸ் ஸம்யக்லிங்கம் ப்ரபூஜயேத்.
மாலாபிர்வா சுகடிதைர் அனந்தபலமா ப்னுயாத்.
மாலாபிர் வேஸ்டயேத்வேதீம் லிங்கம்ஸம் பூஜயேன்நர:
சிவோதேவ்யாச புத்ரேண மோததே பூஜயா(அ)நயா.
லிங்கவேதிர் பவேத் தேவீ லிங்கம் ஸாக்ஷாத் மஹேச்வர:
தயோஸ் ஸம்பூஜநாத் ஸ்யாதாம் தேவீ தேவச்ச பூஜிதௌ.

நன்கு தொடுக்கப்பட்ட மாலையினால் அனேகபலன் உண்டாகும். மாலைகளை லிங்கத்தின் ருத்ரபாகம் நிறைத்து சாத்தினால் சிவனும், தேவியும், தன்னுடைய குமாரர்களான வியாநகர், முருகன் இவர்களோடு சேர்ந்து திருப்திஅடைவர்.

சிவஸ்யோபரி யக்குர்யாத் சுகதம் புஷ்பமண்டபம்.
சோபிதம் மர்லிகாத்யைர்ச ஆபீடாந்த ப்ரலம்பிபி:
அத்யாச்சர்ய மஹாயாநைர் திவ்ய புஷ்போப சோபிதை:.
ஸர்வைப் பரிவிருதஸ் ஸ்ரீமான்கச்சேத் சிவபுரம் சுகீ.

சிவபெருமானுக்கு புஷ்பமண்டபம் அமைத்தாலோ, புஷ்பமாலைகளால் அவர் பீடத்தை அலங்கரித்தாலோ வாழ்வின் முடிவில் வியதகு புஷ்பகவிமானத்தில் பரிவாரம் புடைசூழ சிவபுரம் சென்று சுகத்தை அடைவர் என்பது திண்ணம். வாழ்க சீரடியர்எல்லாம்.

சுபமஸ்து நித்யம்

மேன்மைக் கொள் சைவநீதி விளங்குக உலகலொம்.

****

வாழ்த்து

வாழ்கவே வாழ்க! என்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க! மல மறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க! மெய்ஞானத்தவன்தாள்
வாழ்கவே வாழ்க! மலமிலாதான் பாதமே. (குருமூர்த்தி)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே. (திருஞானசம்பந்தர்)

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
(கச்சியப்ப சிவாசார்யார்)

ஆறிரு தடந்தோள் வாழ்க, ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க, யானை தன்அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்க சீர் அடியா ரெல்லாம்.
(அருணகிரிநாதர்)

மழை வழங்குக, மன்னவன் ஓங்குக,
பிழையில் பல்வளம் எங்கும் பெருகுக,
தழைக அஞ்செழுத்து ஓசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே. (கோயிற்புராணம்)

வைய நீடுக மாமழை மன்னுக.
மெய் விரும்பிய அன்பர் விளங்குக.
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக.
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.



வாழ்க சைவம்! திருச்சிற்றம்பலம்! வாழ்கசீரடியாரெல்லாம்!

உ
ஸ்ரீகுருப்யோ நம:

சென்னை சிவஸ்ரீ. வி. சோமசேகர சிவாச்சார்யார் தொகுத்து வெளிவந்துள்ள ஸமய நூல்களை ஆஸ்தீக அன்பர்கள் வாங்கிப் பயனடையவும்

வ.எண்	நூல்	பக்கம்-எழுத்து	மொழி	விலை
1.	உருவத்தில் இறைவன்	தமிழ்	தமிழ்	No Stock
2.	விபூதி மஹிமை	தமிழ்	தமிழ்	No Stock
3.	நவராத்திரி தேவியர் துதித்திரட்டு	தமிழ்	தமிழ்	No Stock
4.	புதுக்கோயில் சடங்கு ஐந்து	64–தமிழ்	தமிழ்	Rs.200/-
5.	சிவாகம கட்டுரைத் திரட்டு–1	122–தமிழ்	தமிழ்	Rs.200/-
6.	சிவாகம கட்டுரைத் திரட்டு–2	132–தமிழ்	தமிழ்	Rs.200/-
7.	காக்கும்காளியின் காருண்ய மஹிமை	தமிழ்	தமிழ்	No Stock
8.	சிவாகம கட்டுரைத்திரட்டு–3	தமிழ்	தமிழ்	Rs.200/-
9.	சிவாகம கட்டுரைத் திரட்டு–4	168–தமிழ்	தமிழ்	Rs.200/-
10.	சிவயோகநெறி (சைவாகமத்தில்)	116–தமிழ்	தமிழ்	No Stock
11.	ஆலயாகார அர்த்த விவரணம்	64–தமிழ்	தமிழ்	No Stock
12.	புஷ்பார்ச்சன விதி	124–தமிழ்	தமிழ்	Rs.150/-
13.	திவ்யாபிஷேக விதி	136–தமிழ்	தமிழ்	Rs.200/-
14.	ஹோமலக்ஷண ஸங்கிரஹம்	340–தமிழ்	தமிழ்	Rs.500/-
15.	சண்டீயாக விவேகம்	306–தமிழ்	தமிழ்	Rs.400/-
16.	திவ்ய ஸ்தவ கதம்பம் (கிரந்தம்)	180–கிரந்தம்	ஸம்ஸ்க்ருதம்	Rs.200/-
17.	சிவாகம கட்டுரைத்திரட்டு–5	160–தமிழ்	தமிழ்	Rs.200/-
18.	நக்ஷத்ரசாந்தி விதானம்	124–தமிழ்	தமிழ்	Rs.550/-
19.	உத்ஸவபேத க்ரியாபோதம்	224–தமிழ்	தமிழ்	Rs.350/-

வ.எண்	நூல்	பக்கம்-எழுத்து	மொழி	விலை
20.	நற்கூற்று மணிமாலை	352-தமிழ்	தமிழ்	Rs.400/-
21.	சிவாகம சூக்தி மஞ்ஜரீ	224-தமிழ்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
22.	காளீபூஜாப்ரபாவம்	380-தமிழ்	தமிழ்	Rs.450/-
23.	பிரத்யங்கிரா ஹோமக்ரமம்	48-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.250/-
24.	புவனேச்வரீ பூஜாகல்பம்	202-தமிழ்	தமிழ்	Rs.350/-
25.	சைவநிர்வசன வசனாமிருதம்	நாகரம்	சம்ஸ்க்ருதம்	No Stock
26.	சிவசக்தி ஸ்தோத்ரமாலா	320-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.350/-
27.	பத்ரகாளீ தீபபூஜையும் துதிகளும்	124-தமிழ்	தமிழ்	Rs.200/-
28.	பிரத்யங்கிரா ஸபர்யா ஸர்வஸ்வம்	560-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.600/-
29.	பிரத்யங்கிரா ஸஹஸ்ரநாமம்	150-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.200/-
30.	சிவாகம கட்டுரைத்திரட்டு-6	108-தமிழ்	தமிழ்	Rs.200/-
31.	திவ்யஸ்தவகதம்பம்	180-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-
32.	கோயில்விழாக்களின் வாஹனஉலா	256-தமிழ்	தமிழ்	Rs.400/-
33.	தேர்பவனிப்பெருமை	176-தமிழ்	தமிழ்	Rs.300/-
34.	சிவகாமகட்டுரைத்திரட்டு-13	136-தமிழ்	தமிழ்	Rs.200/-
35.	சிவஸ்தோத்ர முக்தாவளீ	104-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	No Stock
36.	ஆகமச்சான்றுப் பேழை	186-தமிழ்	தமிழ்	Rs.300/-
37.	சண்டீயாக ப்ரயோகம்	300-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	No Stock
38.	ஆகமக்கோயில் அமைப்பு முறை	576-தமிழ்	தமிழ்	Rs.750/-
39.	லக்ஷ்மீ ஆராதன சந்திரிகா	528-நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.800/-
40.	லிங்கஸ்தாபனம் & அஷ்டபந்தனம்	572-தமிழ்	தமிழ்	Rs.500/-
41.	பிரத்யங்கிரா ஹோமக்ரமம்	80-கிரந்தம்	சம்ஸ்க்ருதம்	Rs.200/-
42.	சிவாகமகட்டுரைத்திரட்டு பாகம்-10	262-தமிழ்	தமிழ்	Rs.200/-
43.	ஆகமநிர்வசன வசனாமிருதம்	நாகரம்	சம்ஸ்க்ருதம்	Rs.300/-

யந்திர செப்புத் தகடுகள்

ஆலயதேவதா ப்ரதிஷ்டாயந்திர தகடு ஒன்று கிரந்த எழுத்தில் ரூ.1000/-

சைவ, வைணவக் கோயிலின் அறுசமயத் தெய்வச்சிலைகளுக்கான ஆகம பிரதிஷ்டைக்கான தகட்டு யந்திரங்கள், தாமிரக்தகட்டில்அளவு இஞ்ச் 3 × 3 அல்லது 5 × 5ல் ஆகம விதிமுறைப்படி எழுதியவை, உரிய மந்திரவகைகளுடன் கூடியவை உரியவைக்கு மட்டுமே கிடைக்கும்.

CENTRE FOR ... STUDIES Puducherry